297

அம்பிகாபதி காதல் காப்பியம்

சுந்தர சண்முகனார்

அம்பிகாபதி காதல் காப்பியம்

(அருஞ்சொற் பொருளுடன்)

**
**

ஆசிரியர் :

'அகராதிக்கலை' ஆசிரியர்

இயற்கவி சுந்தர சண்முகனார்

தமிழ்ப் பேராசிரியர்

புதுச்சேரி-11.

**
**

கிடைக்குமிடம் :

திருநெல்வேலி, தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.,

79, பிரகாசம் சாலை, சென்னை-1.

1982

சுந்தர சண்முகனார்

(1982)

குறிப்பு: ஆசிரியர் சுந்தர சண்முகனாரின் ஒப்புதல் இன்றி, இந்த 'அம்பிகாபதி காதல் காப்பியம்' நூலில் அமைந்துள்ள கதைப் போக்கை அடிப்படையாகக் கொண்டு யாரும் கதையோ நாடகமோ எழுதுதலோ, நாடகம் நடித்தலோ அல்லது திரையோவியம் (சினிமா) எடுத்தலோ அறவே கூடாது. மற்றும், இந்தக் காப்பியத்தில் உள்ள பகுதிகளையோ அல்லது கருத்துக்களையோ, ஆசிரியரின் ஒப்புதல் இன்றி, யாரும் தம் நூலில் தம்முடையனபோல் இணைத்துக் கொள்ளலாகாது. இலக்கிய ஆராய்ச்சியாளர்கள், தம் ஆய்வுக்காக, இந்நூற் கருத்துக்களையோ அல்லது பகுதிகளையோ ஆசிரியரின் பெயர் குறித்து எடுத்துக் காட்டலாம்.

அப்பர் அச்சகம், சென்னை-600 001.

காப்பிய ஆசிரியரின் கருத்துரை

இரட்டைக் காப்பியங்கள் :

இரட்டைக் காப்பியங்கள் எனப்படும் சிலப்பதிகாரமும் மணிமேகலையும் தமிழ்க் காப்பியங்கட்குள் மிகவும் சிறந்தனவாகப் போற்றப்பெறுகின்றன. நூற் கதையினைத் தொகுத்துக் கூறும் 'பதிகம்' என்னும் பகுதியும் முப்பது காதைகளும் இவற்றில் உள்ளன; நூல் நடை, அக்காலத்துக்கேற்ப ஓரளவு கடினமாக உள்ளது. மணிமேகலை ஆசிரியப்பாவால் ஆனது; சிலம்பில் ஆசிரியத்தினிடையே வேறினப்பாக்களும் உரைநடையும் விரவியுள்ளன. இந்த இரட்டைக் காப்பியங்களில், நம்பத்தகாத—தணிக்கை (Censor) செய்யவேண்டிய—பல செய்திகள் உள்ளன; சமயம் பரப்பும் நோக்கம் இதற்குக் காரணமா யிருக்கலாம். எப்படியோ, இவை சாலவும் பாராட்டப்பெறுகின்றன.

கான மயிலாட :

கான மயில் ஆடியதைக் கண்ட வான்கோழி தானும் ஆடியதைப்போல், யானும் 'அம்பிகாபதி காதல் காப்பியம்' என்னும் இந்த நூலை எழுதலானேன். இதிலும், பதிகம்—வாழ்த்துப் பகுதி—முப்பது காதைகள் ஆகியவை முறையே உள.

கதைச் சீர்திருத்தம் :

பல நூல்களில் உள்ள கதைப் பகுதிகள் நம்பத்தக்கனவாயில்லை; செவிவழிச் செய்தியைத் தவிரத் தக்க சான்றில்லை. அம்பிகாபதி வரலாறும் இதற்கு விதிவிலக்கு அன்று. எனவே, அம்பிகாபதி வரலாற்றில் போதிய சீர்திருத்தம் செய்து, ஓரளவேனும் பகுத்தறிவுக்குப் பொருந்த யான் நூலினை யாத்துள்ளேன்.

நூல்நடை :

எனது நூல் எளிய நடையினது. எளிய உலக வழக்குச் சொற்கள் சிலவும் திசைச் சொற்கள் சிலவும் நூலில் கலந்துள்ளன. அரிய சொற்கள் சிலவும் இயற்கையாகவே இடம் பெறத் தவறவில்லை.

எனது காப்பியம் ஆசிரியப் பாவால் ஆனது. சில இடங்களில் வேறினப் பாக்களும் இடையிடையே விரவியுள்ளன.

பெயர்க் காரணம் :

மணிமேகலை என வழங்கப்பெறும் காப்பியத்திற்கு ஆசிரியர் சாத்தனார் இட்ட பெயர் 'மணிமேகலை துறவு' என்பதாகும். இது போலவே யான் எனது நூலுக்கு 'அம்பிகாபதி காதல்' என்னும் பெயர் சூட்டினேன். 'அம்பிகாபதி' என்று மட்டுமோ அல்லது 'அம்பிகாபதி காதல்' என்று மட்டுமோ யான் பெயர் சூட்டியிருப்பின், உரைநடையில் ஆராய்ச்சி நூல்கள் பல எழுதியிருக்கும் என்னால் எழுதப்பெற்றுள்ள இந்நூலும் ஓர் ஆய்வு உரைநடை நூலாகவே இருக்கும் என்று நூலின் பெயரை அறிந்தவர்கள் எண்ணக் கூடும். இந்தக் குழப்ப நிலையைப் போக்கவே, "அம்பிகாபதி காதல் காப்பியம்" எனப் பெயர் சூட்டினேன்.

முன்னோர் மொழி :

"முன்னோர் மொழிபொருளே யன்றி யவர் மொழியும்
பொன்னேபோல் போற்றுவம்" (நன்னூல்-9)

என்பதற்கு ஏற்ப, முன்னோர் நூல்களிலுள்ள சில பகுதிகளைப் பெயர் குறிப்பிட்டு எடுத்து இந்நூலில் கையாண்டுள்ளேன். குறள்கள் சில முழுதும் தரப்பெற்றுள்ளன. வேறு சங்க நூல்கள் சிலவற்றினின்றும் சில அடிகள் எடுத்துப் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

இந்நூலில் தரப்பெற்றுள்ள தனித்தனிப் பாடல்களுள் "இட்டடி நோக", "சற்றே பருத்த தனமே"—என்னும்

இரண்டு பாடல்களைத் தவிர, மற்றவை என் சொந்தக் கற்பனைப் பாடல்களே.

படிப்பினைகள் :

மக்களினம் அறிந்து பின்பற்றவேண்டிய படிப்பினைகள் பல, இந் நூலில் அறிமுகப்படுத்தப் பெற்றுள்ளன. இந்தப் படிப்பினைகளைப் பின்பற்றின் பயன்பெறுவது உறுதி. இப் படிப்பினைகள் அமைந்துள்ள பகுதிகளை, பிற்காலத்தில், பாடநூல் குழுவினர், பாட நூல்களில் சேர்த்துப் பயனுறுத்தலாம்.

உரைநடை முன்னுரை :

இஃது செய்யுள் நூலா யிருப்பினும், என்னல் செய்யுட் பகுதிகள் பின்னல் நிரம்ப எழுதப்பெற் றிருத்தலின், உரை நடையும் கலந்ததாக இருக்கவேண்டும் எனக் கருதியே, இந்த முன்னுரையை உரைநடையில் எழுதலானேன்.

உடல் நிலை :

மூளைக் கட்டி (Brain Tumour), உடலை இயக்குவதற்கு மிகவும் இன்றியமையாததான 'பிட்யூடரி சுரப்பி' (Pituitary Gland) ஒழுங்காக இயங்காமை ஆகியவற்ருல் சோர்வு, களைப்பு, செயலற்ற நிலை, தலைவலி, மயக்கம், கண் திறந்து பார்க்க வியலாமை முதலிய தொல்லைகள் எனக்கு எப்போதும் உண்டு. இக் காப்பியத்தைத் தொடங்கி முடிப்பதற்குள், இடையிடையே, செயலற்ற நிலையும் மயக்கமும் பலமுறை ஏற்பட்டதுண்டு. முற்றிலும் செயலற்றுப் போகுமுன்பே அல்லது இறப்பு நெருங்குமுன்பே, இக் காப்பியத்தை எப்படியாவது விரைந்து முடித்துவிடவேண்டு மெனக் கருதிக் கண்ணை மூடிக்கொண்டே விரைந்து விரைந்து எழுதி நூலை ஒருவாறு முடித்துள்ளேன். என் குடும்பத்தினரும் உறவினர்களும் நண்பர்களும் 'ஒன்றும் எழுதவேண்டா' எனப் பலமுறை மறித்துத் தடுத்தும் எப்படியோ எழுதி முடித்துவிட்டேன். உடல்நிலை நன்ரு யிருந்திருப்பின், இன்னும் ஆர அமர எண்ணி இந்நூலினை யாத்திருக்கலாம்.

இயற்கவி :

இந்நூலில் எனது பெயருக்கு முன் 'இயற்கவி' என்னும் பட்டத்தைச் சேர்த்துள்ளேன். 1951ஆம் ஆண்டு புதுச்சேரிக் கல்விக் கழகத்தின் வெள்ளி விழாவின்போது, என்னால் எழுதி அரங்கேற்றம் செய்யப்பெற்ற 'செந்தமிழ் ஆற்றுப்படை' என்னும் நூலைப் பாராட்டி நாவலர் ச. சோமசுந்தர பாரதியாரால் பரிந்துரைக்கப்பெற்ற இந்த 'இயற்கவி' என்னும் பட்டம், புதுவைக் கல்விக் கழகத்தால் எனக்கு அளிக்கப்பெற்றது. இதற்குச் சான்றாக, பாரதியாரின் பரிந்துரைப் பாடலையும் கழகத்தின் சிறப்புப் பட்டமளிப்புச் சான்றிதழையும் பின்னால் சேர்த்துள்ளேன். யான் இதுவரையும் வேறு எந்த நூலிலும் இதனைப் பயன்படுத்திக் கொண்டதில்லையாதலின் இங்கே இதனைத் தெரிவிக்கலானேன். காப்பியமா யிருத்தலின், இந்தப் பழைய பட்டத்தை இந்நூலில் பயன்படுத்தியுள்ளேன்.

அருஞ் சொற் பொருள் :

போதிய அளவு இலக்கியப் பயிற்சி யில்லாதாரும் பொருள் புரிந்து படிப்பதற்கு உதவும் வகையில், யானே, அருஞ்சொற்கட்குப் பொருள் தந்துள்ளேன். சில இடங்களில் தொடர் விளக்கமும் முழு அடிகளின் விளக்கமும் தரப்பெற்றிருக்கும்.

நன்றியுரை :

இந் நூலினை நன்முறையில் அச்சேற்றி வெளியிட்டு விற்பனைப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட—தமிழ் வளர்க்கும் தகைமைசால் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர்க்கு மிகவும் நன்றி செலுத்துகிறேன்.

சுந்தர சண்முகன்

"செந்தமிழ் ஆற்றுப் படை"

சிறப்புப் பாயிரம்

பேராசிரியர், நீதிவாதி, நாவலர், இளசைக் கிழார்,

உயர்திரு ச. சோமசுந்தர பாரதியார், M. A., B. L.

அவர்கள் அருளியது :

"சுதை **இயற்கவி** சுந்தர சண்முகர்
புதுவைப் பாவலர் புதிது புனைந்துள
அதுலச் 'செந்தமிழ் ஆற்றுப் படை'வெகு
மதுர மார்தமிழ் வாய்மைக் கவிதையாம் ;
சதுரம் வாய்ந்தது தமிழொடும் வாழ்கவே."

குறிப்பு : சுதை - அமிழ்து. அதுலம் - இணையின்மை. மதுர கவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் எனக் கவி நான்கு வகையுள் ஒன்று.

நாவலர், ச. சோமசுந்தர பாரதி

(கையொப்பம்)

குறிப்பு : 'அம்பிகாபதி காதல் காப்பியம்' நூலின் ஆசிரியர் சுந்தர சண்முகனுருக்கு அளிக்க, 'இயற்கவி' என்னும் சிறப்புப் பட்டம் நாவலர் ச. சோம சுந்தர பாரதியாரால் பரிந்துரைக்கப்பெற்றது என்பதற்குச் சான்றாக மேலுள்ள பகுதி தரப்பெற்றுள்ளது. ஆசிரியருக்கு இந்தப் பட்டத்தைப் புதுச்சேரி கல்விக் கழகம் அளித்ததை அறிவிக்கும் 'சிறப்புப் பட்டமளிப்புச் சான்றிதழ்' அடுத்த பக்கத்தில் தரப் பெற்றுள்ளது.

கல்விக் கழகம், புதுச்சேரி

சிறப்புப் பட்டமளிப்புச் சான்றிதழ்

புதுச்சேரியில் 1951ஆம் ஆண்டு நடைபெற்ற புதுவைக் கல்விக் கழகத்தின் வெள்ளி விழாக் கொண்டாட்டத்தில் அரங்கேற்றம் செய்யப்பெற்ற **செந்தமிழ் ஆற்றுப் படை** என்னும் சீரிய செய்யுள் நூலின் ஆசிரியராகிய புலவர் **சுந்தர சண்முகனார்** அவர்களின் கவி வன்மையைப் பாராட்டி, பேராசிரியர் **நாவலர் ச. சோமசுந்தர பாரதியார்,** M. A., B. L. அவர்களால் சூட்டப் பெற்ற "**இயற்கவி**" என்னும் சிறப்புப் பட்டம் சுந்தர சண்முகனாருக்கு வழங்கப் பெற்றதற்கு இது சான்றிதழாகும்.

(கையொப்பம்)

புதுச்சேரி — ரா. தேசிகன்

கர-ஆனி — (ரா. தேசிகன்)

1951 — அமைச்சர்,

கல்விக் கழகம்.

பொருளடக்கம்

		பக்கம்
	காலமும் கதை மாந்தரும்	10
	பதிகம்	17
	வாழ்த்துப் பகுதி	20
1.	நாடு நகர் நலங் கூறு காதை	22
2.	காதலர் காட்சிக் காதை	29
3.	அரசன் அம்பிகாபதியை அழைத்த காதை	34
4.	கம்பர் மகனைக் கடிந்த காதை	39
5.	அமைச்சர் மகனின் சூழ்ச்சிக் காதை	44
6.	தாரகை அமராவதியொடு சூழ்ந்த காதை	50
7.	அம்பிகாபதிக்கு மடல் வந்த காதை	54
8.	அமைச்சன் குடும்பொடு சூழ்ந்த காதை	62
9.	காதலர் உரையாடு காதை	65
10.	அமைச்சன் அரசனொடு சூழ்ந்த காதை	71
11.	அரசனும் அமைச்சனும் ஆய்வு செய்த காதை	74
12.	அரசன் அமைச்சனை அழைத்த காதை	81
13.	காதலர் பாராட்டுக் காதை	84
14.	அமராவதி பெற்றோரொடு அளவளாவிய காதை	92
15.	கம்பரும் நண்பரும் உலாப் போந்த காதை	98
16.	காதலர்கள் களிப்புறூஉம் காதை	106
17.	அம்பிகாபதிக்குக் கண்ணனார் அறிவுறுத்திய காதை	116
18.	காதலர்கள் கலந்து மகிழ்ந்த காதை	124
19.	வேந்தன் ஊரலர் உணர்ந்த காதை	134
20.	வேந்தன் புலவோர்க்கு விருந்துசெய் காதை	138
21.	அம்பிகாபதிக்குக் கம்பரின் அறிவுறூஉக் காதை	147
22.	ஆரப் பூச்சால் அரசன் ஆய்வு செய்த காதை	153
23.	அம்பிகாபதியைக் கொல்ல அரசன் சூழ்ந்த காதை	158
24.	கட்டுத் தறி கவி பாடித் தந்த காதை	163
25.	அம்பிகாபதியும் சிம்மனும் அமர் புரிந்த காதை	167
26.	அம்பிகாபதி கடவுள் பாடல் பாடிய காதை	174
27.	அம்பிகாபதி சிறையில் அடைபட்ட காதை	183
28.	கடவுள் வழிபாட்டுக் காதை	191
29.	அனைவரும் ஆற்றாது அரற்றிய காதை	202
30.	அமராவதி மணந்த அருமைக் காதை	212

காலமும் கதை மாந்தரும்

கதை நிகழ்ந்த காலம்:

அம்பிகாபதி காதல் காப்பியக் கதை நடந்த காலம், அம்பிகாபதியின் தந்தையாகிய கம்பரின் காலம் என்பதில் ஐயமில்லை. கம்பரின் காலம் பற்றி இருவேறு கருத்துக்கள் உள்ளன. கம்பர் கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டினர் என ஒரு சாராரும், கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினர் என மற்றொரு சாராரும் கூறுகின்றனர். இவற்றுள், கம்பர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினர் என்னும் கருத்தே சரியானது. இதற்கு உரிய சான்றுகள் வருமாறு:

கம்பர் சோழ நாட்டினர்; சோழ மன்னரின் அவைக்களப் புலமைத் தொடர்பு உடையவர்; சோழ மன்னர் மூவரின் அவைக்களப் புலவராயும் ஆசானுமாயும் இருந்த பெரும் புலவர் ஒட்டக் கூத்தரோடு முரண்பாட்டுத் தொடர்பு கொண்டிருந்தவர்; தம் மகன் அம்பிகாபதியைச் சோழன் கொன்றதாலும் பிற காரணங்களாலும் சோழ மன்னனைப் பகைத்துக்கொண்டு சோழ நாட்டை விட்டு வெளியேறியவர்.

மேற்கூறிய செய்திகளை அடிப்படையாகக் கொண்டு காணுங்கால், கம்பர் கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினர் என்னும் கருத்து வலுப்பெறும். ஆனால், சிலர், கம்பரும் ஒட்டக் கூத்தரும் ஒரு காலத்தவரல்லர்—அம்பிகாபதி கம்பர் மகன் அல்லன்—என்றெல்லாம் கூறுவர். இது சரியன்று. கம்பரையும் கூத்தரையும் தொடர்புறுத்தியும் கம்பரொடு அம்பிகாபதியைத் தொடர்புறுத்தியும் பல நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. "அள்ளாமல் குறையாது; இல்லாமல் பிறக்காது" என்னும் முதுமொழி நூற்றுக்கு நூறு உண்மையில்லாவிடினும் பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளத்

தக்கதே. எனவே, கம்பரும் கூத்தரும் ஒரு காலத்தவரே. மறைமலை அடிகளார், ரா. பி. சேதுப்பிள்ளை, ரா. இராகவையங்கார் முதலிய தமிழ் ஆராய்ச்சி அறிஞர்களின் கருத்து, கம்பர் பன்னிரண்டாம் நூற்றுண்டினர் என்பதே.

ஒட்டக் கூத்தர், விக்கிரம சோழன் (கி. பி. 1120-1135), இரண்டாங் குலோத்துங்கன் (1136-1150), இரண்டாம் இராசராசன் (1151-1163) ஆகிய மூன்று சோழர்க்கும் அவைக்களப் புலவரா யிருந்தவர்; இம் மூவர்மேலும் 'உலா' பாடியவர். இந்த உலா நூல்கள் மூன்றும் "மூவர் உலா" என்னும் பெயரால் வழங்கப் பெறும். இந்தச் செய்தியை அடிப்படையாகக் கொண்டு நோக்குங்கால், கூத்தரும் அவர் காலத்தவராகிய கம்பரும் கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டினர் என்பது தெளிவுறும்.

'கம்பரும் கூத்தரும் ஒரு காலத்தவர் அல்லர்; எனவே, கம்பர் கி. பி. ஒன்பதாம் நூண்ருண்டினரே' என்பவரின் கருத்துப்படி கம்பரையும் கூத்தரையும் காலத்தால் பிரித்துவிடினும், கம்பர் ஒன்பதாம் நூற்றுண்டின ராகார். இதற்கு உரிய சான்றுவது:

கம்பர் சோழ அரசோடு தொடர்பு கொண்டிருந்தார் என்பதையும் இறுதியில் முரண்பாடு கொண்டு சோழ நாட்டை விட்டு வெளியேறினர் என்பதையும் பெரும்பாலும்—பலரும் ஒத்துக்கொள்கின்றனர். கம்பர் தொடர்பு கொண்டிருந்த சோழன் பேரரசனுகத்தான் இருந்திருக்க வேண்டும். எனவே, கம்பர் ஒன்பதாம் நூற்றுண்டினர் எனக் கூற வியலாது. ஏனெனில், கி. பி. ஒன்பதாம் நூற்றுண்டில் சோழ அரசு இருக்கும் இடம் தெரியாமல் எங்கோ ஒரு மூலையில் ஒதுங்கிக் கிடந்தது. கி. பி. 879—897ஆம் ஆண்டுக் காலத்தவனுகிய அபராசித பல்லவன் காலம்வரை சோழநாடு பல்லவ அரசின்கீழ் இருந்தது. ஒன்பதாம் நூற்றுண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவனுகிய விசயாலயச் சோழன் (கி. பி. 850-870) பல்லவர்க்குக் கப்பம் கட்டி ஒரு சிற்றரசனுய் உறையூர்ப் பகுதியில் ஒடுங்கிக் கிடந்தான். அப்போது தஞ்சைப் பகுதியை முத்தரையர் மரபினர் ஆண்டு வந்தனர். நாளடைவில், விசயாலயச் சோழன் முத்தரையரை வென்று தஞ்சைப் பகுதியைக் கைப்பற்றினன்.

விசயாலயனுக்குப் பிறகு அவன் மகனாகிய முதலாம் ஆதித்தச் சோழன் (கி. பி. 871-907) படிப்படியாகப் பல்லவரை வென்று, சோழ நாட்டையும் தொண்டை நாட்டையும் தன்னுடையன வாக்கிக் கொண்டான். இவனுக்குப் பல ஆண்டுகட்குப் பின்னால், முதலாம் இராசராசன் (985-1014) காலத்தில்தான் சோழ அரசு மிகப் பெரிய வல்லரசாகத் திகழத் தொடங்கியது. இது, மூன்றாம் இராசேந்திரச் சோழன் (1247-1279) காலம் வரையும் நிலைத்திருந்து, பின்னர் வீழ்ச்சியுற்றுப் பாண்டியரால் பற்றப் பட்டது. இந்தச் செய்திகளின் அடிப்படையில் ஒரு முடிபு காண்பாம்:

இறுதிப் பல்லவனாகிய அபராசிதன் 897ஆம் ஆண்டுவரை பல்லவ நாட்டையும் சோழ நாட்டையும் ஆண்டிருக்கிறான். அபராசித பல்லவனைக் கொன்ற முதலாம் ஆதித்தச்சோழன் 907ஆம் ஆண்டுவரை ஆண்டிருக்கிறான். எனவே, சோழப் பேரரசு பிற்காலத்தில் மீண்டும் உருவாகத் தொடங்கிய காலம் கி. பி. 897ஆம் ஆண்டுக்கும் 907ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட பத்தாண்டுக் காலத்துக்குள்ளேயாகும். இந்தக் காலக் கணிப்பு சிறிது முன் பின்னாகவும் இருக்கலாம். இந்த அடிப்படையில் நோக்குங்கால், சோழ அரசோடு பெரிய தொடர்பு கொண்டிருந்த கம்பர் சோழ அரசு ஒடுங்கிக் கிடந்த ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவராகத் தோன்றவில்லை. ஆனால், சோழ அரசு சிற்றரசா யிருந்தாலும் அரசு அரசுதானே?—ஏன் அக்காலத்தில் வாழ்ந்திருக்கக் கூடாது?—என்று சிலர் வினவலாம். மற்ற வரலாற்றுச் சூழ்நிலைகளையும் பார்க்க வேண்டுமே! கம்பருக்கும் ஒட்டக் கூத்தருக்கும் இடையே தொடர்புக் கதைகள் பல சொல்லப்படுவதை அவ்வளவு எளிதாகப் புறக்கணித்துவிட முடியாது. கம்பர் வரலாறு முழுவதையும் கூர்ந்து நோக்குங்கால், அவர், பேரரசுச் சோழர் காலத்தவராகவே தென்படுகிறார்.

ஆனால், கம்பர் ஒன்பதாம் நூற்றாண்டினர் என்னும் கொள்கையினர் சிலர், ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் (கி. பி. 871-907) அரசாண்ட ஆதித்தச் சோழன் காலத்தில் கம்பர் வாழ்ந்தார்; அதனால்

அவர், ஆதித்தச் சோழனுக்கு நன்றி தெரிவிக்கும் முறையில், தம் நூலில், இராமனுடைய முன்னோர் 'சூரிய' குலத்தில் வந்தவர்கள் என்பதை அறிவிக்கும் இடத்தில்,

* "ஆதித்தன் குல முதல்வன் மனுவினை யார் அறியாதார்"

என்று பாடி ஆதித்தன் பெயரைச் சுட்டியுள்ளார் என்று கூறுவர். ஆதித்தன் என்பதற்குச் 'சூரியன்' என்ற பொருள் உண்டு. கம்பர் ஆதித்தச் சோழனை நினைவு கூராமல், இயற்கையாக 'ஆதித்தன்' என்று கூறியிருக்கக் கூடாதா? அல்லது தம் தந்தையின் பெயராகிய 'ஆதித்தன்' என்பதைத் தந்தையின் நினைவாகத் தம் நூலில் பெய்திருக்கக் கூடாதா? எனவே, இது பொருத்தமான சான்று ஆகாது.

மற்றும், இக் கொள்கையினரால், கம்பர் ஒன்பதாம் நூற்றுண்டினர் என்பதற்கு அடிப்படைச் சான்றாக எடுத்துக்காட்டப் படுகின்ற,

"எண்ணிய சகாத்தம் எண்ணூற் றேழின்மேல்
சடையன் வாழ்வு
நண்ணிய வெண்ணெய் நல்லூர் தன்னிலே
கம்ப நாடன்
பண்ணிய இராம காதை பங்குனி
அத்த நாளில்
கண்ணிய அரங்கர் முன்னே கவியரங்
கேற்றி னானே"

என்னும் ஊர் பேர் தெரியாத (அநாமதேயப்) பாடலுக்கு, சில கம்ப ராமாயண ஓலைச் சுவடிகளின் ஈற்றில் காணப்படுகிற பின் வரும் பாடல் பதில் இறுக்கும். அப் பாடல்:

"ஆவின் கொடைச்சகரர் ஆயிரத்து நூறொழித்துத்
தேவன் திருவெழுந்தூர் நன்னாட்டு—மூவலூர்ச்

* பால காண்டம்-அரசியற் படலம்-3ஆம் பா - மர்ரே பதிப்பு.

சீரார் குணநித்தன் சேய் அமையப் பாடினன்
காரார்கா குத்தன் கதை"

என்பதாகும். (சகரர் ஆயிரத்து நூறு ஒழித்து - பன்னிரண்டாம் நூற்றாண்டு; குண ஆதித்தன் சேய் - கம்பர்; காகுத்தன் - இராமன்.) இப்பாடல், கம்பர் பன்னிரண்டாம் நூற்றாண்டினர் என்னும் கருத்துடையது.

மற்றொரு சான்று :— சோழ நாட்டை விட்டு வெளியேறிய கம்பர், இறுதியாகப் பாண்டிய நாடு அடைந்து இயற்கை எய்தியதற்கு முன், (தொண்டைநாடு எனப்படும் பல்லவ நாடு சோழர் கைக்கு மாறியதால் அங்கே தங்காமல்) ஆந்திர அரசனாகிய ஓரங்கல் நாட்டுப் பிரதாப ருத்திரனிடம் சென்று சிறிது காலம் தங்கியிருந்ததாக ஒரு வரலாறு கூறப்படுகிறது. இந்தப் பிரதாப ருத்திரனும் ஒட்டக் கூத்தரால் உலாப் பாடப்பெற்ற சோழ மன்னர்களும் பன்னிரண்டாம் நூற்றாண்டினர் எனச் சில கல்வெட்டுகள் கூறுகின்றன. பிரதாப ருத்திரனோடு தொடர்பு கொண்ட கம்பரும் இக்காலத்தவரே. எனவே, கம்பர் மகன் அம்பிகாபதி வரலாறு நிகழ்ந்த காலமும் பன்னிரண்டாம் நூற்றாண்டே என்பது சொல்லாமலே விளங்கும்.

கதை நிகழ்ந்த இடம் :

முதலாம் இராசராசனுக்குப் பின் அவன் மகன் முதலாம் இராசேந்திர சோழன் தலைநகரைத் தஞ்சையிலிருந்து கங்கை கொண்ட சோழபுரத்துக்கு மாற்றிவிட்டதாலும், அவனுக்குப் பின் ஆண்ட சோழர்களும் கங்கைகொண்ட சோழபுரத்தையே தலைநகராகக் கொண்டதாலும், அம்பிகாபதி வரலாறு நிகழ்ந்த இடம் கங்கைகொண்ட சோழபுரம் எனலாம்.

கதை மாந்தர்கள் :

கம்பர் மகன் அம்பிகாபதியால் காதலிக்கப்பெற்ற அமராவதி என்பவள், இரண்டாம் குலோத்துங்கச் சோழ மன்னனின் மகளாக இருக்கலாம் என ஒருவாறு கருதப்படுகிறது ;

கம்பரோடு தொடர்புடைய ஒட்டக்கூத்தர், இம் மன்னனுக்கு அவைக்களப் புலவராய் இருந்ததோடு தமிழ் கற்பித்த ஆசானாகவும் திகழ்ந்தார் என்று சொல்லப்படுகிறது.

அம்பிகாபதி—அமராவதி காதல் வரலாற்றுப் பகுதி இந்தச் சோழ மன்னன் வரலாற்றில் குறிப்பிடப்படவில்லையே எனச் சிலர் எண்ணலாம். அரசர்கட்கு மனைவியர் பலரும் மக்கள் பலரும் இருப்பது இயற்கை. மக்களுள் ஒவ்வொருவரின் வாழ்க்கையைப் பற்றியும் மன்னரின் வரலாற்றில் சேர்க்கவேண்டுமெனின் அதற்கு எல்லையே இல்லாமற் போகும். பேரரசன் ஒருவனது வரலாறாகிய பெருங்கடலில், அவன் மகள் ஒருத்தியின் காதல் வரலாறு ஒரு துளியாகும். எனவே, இந்தக் காதல் வரலாற்றை மன்னரின் வரலாற்றில் எதிர்பார்ப்பதற் கில்லை.

அம்பிகாபதி காதல் காப்பியத்தில் இடம் பெற்றுள்ள கதை மாந்தருள் (கதா பாத்திரங்களுள்) ஒரு சிலரின் பெயர்கள் உண்மையான வரலாற்றில் உள்ளனவாகும். வேறு சிலரின் பெயர்கள், காப்பிய ஆசிரியர் இட்ட கற்பனைப் பெயர்களாகும். காப்பியக் கதை மாந்தர்களின் பெயர்கள் வருமாறு:

குலோத்துங்கன்—சோழ மன்னன், அமராவதியின் தந்தை.

சோழமாதேவி—குலோத்துங்கனின் மனைவி.

அமராவதி (அமரு)—சோழன் மகள், காப்பியத் தலைவி.

கிள்ளி—சோழன் மகன்.

கம்பர்—பாவேந்தர், அம்பிகாபதியின் தந்தை.

கற்பகத் தாச்சி—கம்பரின் மனைவி.

அம்பிகாபதி (அம்பி)—கம்பர் மகன், காப்பியத் தலைவன்.

காவிரி—கம்பர் மகள்.

கண்ணனூர்—கம்பரின் நண்பர்.

காடவன்—சோழனின் அமைச்சன்.

கமலி—காடவனின் மனைவி.

சிம்மன்—காடவனின் மகன், படைத் தலைவருள் ஒருவன்.

தாரகை—காடவன் மகள், அமராவதியின் தோழி.

ஒட்டக்கூத்தர்—சோழனின் அவைக்களப் புலவர்—ஆசான்.

குப்பையா—ஒரு வஞ்சகப் புலவன்.

மற்றும் பலர்.

மேலே குறிப்பிட்டுள்ள கதை மாந்தர் பெயர்களுள், கிள்ளி, கற்பகத் தாச்சி, கண்ணனார், காடவன், கமலி, சிம்மன், தாரகை, குப்பையா ஆகியவை கற்பனைப் பெயர்களாம். காப்பியத்தில், அம்பிகாபதி என்னும் பெயர் 'அம்பி' எனவும், அமராவதி என்னும் பெயர் 'அமரு' எனவும், சில இடங்களில் யாப்பு அமைதிக்காகச் சுருங்கத் தரப்பட்டிருக்கும்.

[குறிப்பு: கம்பரின் காலக் கணிப்பு பற்றிய கருத்து வேற்றுமைக் காக ஒருவர்க் கொருவர் சேப்படைய லாகாது.]

அம்பிகாபதி காதல் காப்பியம்

பதிகம்

[கதை பொதி பாட்டு]

உலகம் பரந்த ஒண்டமிழ் மொழியில்
இலகும் காப்பியம் ஒன்றீ கெனவே
பைந்தமிழ் வளர்க்கும் பரவைசார் புதுச்சேரிச்
செந்தமிழ்ப் புரவலர் சிங்கார குமரேசனார்
தூண்ட, அந்தத் தொண்டினை நிறைத்திட
வேண்டி முயன்று, வியன்றமிழ் மொழியில்
ஈண்டு புகழ்சால் இராம காதையை
விரிந்த நூலாய் விளக்கி யருளிய
பரந்த சீருறு பாவேந்தரின் வேந்தராய்
விளங்கித் திகழ்ந்த வீறுசால் கம்பர்
இலங்கிடப் பயந்த இன்றமிழ்ப் புலவன்,
சொற்போர் புரிவதில் சோராத் திறலோன்,
மற்போர் புரியும் மறத்திலும் விறலோன்,
காதல் பாவல் காதற் கலைஞன்,
ஓத இனித்திடும் உயரிய நூலாம்
'அம்பிகாபதி கோவை' அருளிய செல்வனும்

---

2. இலகும் - விளங்கும்; ஒன்றீ கெனவே - ஒன்று ஈக எனவே - ஒன்று இயற்றித் தருக என்று. 3. பரவைசார் - கடற்கரையைச் சார்ந்த. 4. புரவலர் – காப்பாளர். சிங்கார குமரேசனார்-புதுச்சேரியில், இந் நூலாசிரியர் பல நூல்களை எழுதுமாறு தூண்டியும் பொருளுதவி புரிந்தும் பல நூல்கள் வெளிவரச் செய்த புரவலர். 7. ஈண்டு - மிகுந்த. இராம காதை - இராமன் வரலாறு (இராமாயணம்). 9. பாவேந்தரின் வேந்தர் - கவிச் சக்கரவர்த்தி. 10. வீறு - சிறப்பு. 11. இலங்கிட - விளங்க; பயந்த - பெற்ற. 12. திறலோன் - திறமைசாலி. 13; விறலோன் - வெற்றியன். 14. காதல் பாவல் - காதல் பாடுவதில் வல்ல. 16. அம்பிகாபதி கோவை - அம்பிகாபதி தன் பெயரால் எழுதிய ஒரு நூல்.

அம்பிகா பதிவர லாற்றினை ஆய்ந்தே,
நாடு நகரின் நலங்கூறு காதையும்
காதலர் காட்சிக் காதையும் அரசன்
அம்பிகா பதியை அழைத்த காதையும்
கம்பர் மகனைக் கடிந்த காதையும்
அமைச்சர் மகனின் சூழ்ச்சிக் காதையும்
தாரகை அமராவதி யொடுசூழ்ந்த காதையும்
அம்பிகா பதிக்கு மடல்வந்த காதையும்
அமைச்சர் குடும்பொடு சூழ்ந்த காதையும்
காதலர் உரையாடு காதை தானும்
அமைச்சன் அரசனொடு சூழ்ந்த காதையும்
அரசனும் அமைச்சனும் ஆய்வுசெய்த காதையும்
அரசன் அமைச்சனை அழைத்த காதையும்
காதலர் பாராட்டுக் காதையும் அமராவதி
பெற்றோ ரோடள வளாவிய காதையும்
கம்பரும் நண்பரும் உலாப்போந்த காதையும்
காதலர் களிப்புறூஉம் காதையும் அம்பிகா
பதிக்குக் கண்ணனூர் அறிவுறுத்திய காதையும்
காதலர்கள் கலந்து மகிழ்ந்த காதையும்
வேந்தன் ஊரலர் உணர்ந்த காதையும்
வேந்தன் புலவோர்க்கு விருந்துசெய் காதையும்
அம்பிகா பதிக்குக் கம்பரின் அறிவுறூஉக்
காதையும் ஆரப் பூச்சால் அரசன்
ஆய்வு செய்த காதையும் அம்பிகா
பதியைக் கொல்ல அரசன் சூழ்ந்த
காதையும் கட்டுத் தறிகவி பாடித்
தந்த காதையும் அம்பிகா பதியும்
சிம்மனும் அமர்புரிந்த காதையும் அம்பிகாபதி
கடவுட் பாடல் பாடிய காதையும்
அம்பிகாபதி சிறையில் அடைபட்ட காதையும்

---

25. குடும்பொடு - குடும்பத்தாருடன். 31. அளவளாவிய – கலந்து மகிழ்ந்து பேசிய.

கடவுள் வழிபாட்டுக் காதை தானும்
அனைவரும் ஆற்று தரற்றிய காதையும்
அமராவதி மணத்த அருமைக் காதையும்
என்னும் முப்பான் இனிய பகுதியில்
பன்ன வரிய பன்னலம் கெழீஇய
செந்தமிழ் வளர்க்கும் சீர்மிகு புதுவைச்
சுந்தர சண்முகன், சுவைநயம் பயக்கும்
அந்தமிழ்ப் புலவன் 'அம்பிகாபதி காதல்'
என்னும் காப்பியம் இனியமுதல் நூலாய்
மன்னு தமிழில் மகிழ்ந்தளித் தனனே.

---

50. முப்பான் - முப்பது. 51. பன்ன அரிய - சொல்வதற்கு அரிய; பன்னலம் - பல நலங்கள்; கெழீஇய - மிகுந்த (அளபெடை). 53. பயக்கும் - தருகின்ற. 54. அந்தமிழ் - அம்தமிழ் - அழகிய தமிழ்; அந்தமிழ்ப் புலவன் அம்பிகாபதி எனக் கொள்க. 56. மன்னும் - நிலைத்த.

வாழ்த்துப் பகுதி

தமிழ் வாழ்த்து

(1) "தமிழரின் பெருமை சாற்றும்
தனிப்பெருஞ் சான்றாய் நின்று
இமிழ்கடல் உலக மெங்கும்
இசையினைப் பரப்பி யோங்கும்
அமிழ்தமே! மக்கட் காக்கும்
ஆருயிர் மருந்தே தேனே!
தமிழெனும் ஒப்பில் தாயே!
தழைத்துநீ என்றும் வாழி!"

(2) "மொழிதம்முள் மூத்த முதல்மொழியே! அடுத்த
மொழிகள் பலவும்
அழிவுறவும் அழியா அன்னைமொழியாய் அமர்ந்தே
அரிய குழவி
மொழிகள்பல ஈந்தும் மூப்பில்லாக் குமரியே!
முதிர்ந்த உலக
மொழிகட்கு வேர்ச்சொல் முதலளித்த முத்தமிழ்
மொழியே வாழ்கவே"

(3) "வள்ளுவனை உலகிற் கீந்த
வளமார்ந்த திருவே தேவே!
அள்ளிக்கொள அமிழ்த நயத்தை
அளித்திடுபல் கலையின் அன்னாய்!

முதல் பாட்டு : 2. இமிழ் கடல் - ஒலிக்கும் கடல்; இசை - புகழ்; 'உலகத் தமிழ்' என்னும் புகழுடன் ஓங்குதல். 3. மக்கட் காக்கும் - மக்களைக் காக்கின்ற. **இரண்டாம் பாட்டு :** 1. அடுத்த - தமிழை அடுத்துத் தோன்றிய. 2. குழவி - குழந்தை. **மூன்றாம் பாட்டு :** 2. அன்னாய் - அன்னையே.

உள்ளத்தை ஊனை உருக்கி
உள்ளொளியைப் பெருக்குபே ரொளியே!
வள்ளலாய்நற் பன்னூல் வழங்கும்
வண்டமிழே வளமொடு வாழ்கவே!"

தமிழ் அறிஞர் வாழ்த்து

(4) "மூவாயிரம் ஆண்டாய் மொழிகள்பல வந்து
முற்றுகை யிட்டு
மூவாத கன்னி மொழியான தமிழை
முடிக்க முயன்றும்,
ஓவாதே உஞற்றி உயரியசெந் தமிழை
உயிர்போற் காத்துச்
சாவாது நிலைஇய சான்றோர்தம் நற்புகழ்
சால்பொடு வாழ்கவே!"

உலகப் பொது வாழ்த்து

(5) "உலகம் வறுமையும் பிணியு மின்றி
ஓங்கி வாழ்க!
உலகம் பகையும் போரு மிலாமே
ஒன்றி வாழ்க!
உலகம் எந்தத் தீங்கு மிலாதே
உயர்ந்து வாழ்க!
உலகம் நலமும் வளமும் பெற்றே
உவந்து வாழ்கவே!"

---

3. ஊனை - உடம்பை. 4. நற்பன்னூல் - நல்ல பல நூல்கள். நான்காம் பாட்டு: 2. மூவாத - மூதுமை அடையாத. 3. ஓவாதே - விடாமல் (தொடர்ந்து); உஞற்றி - முயன்று உழைத்து. 4. நிலைஇய - நிலைத்த (அளபெடை); சால்பொடு - சிறப்போடு. ஐந்தாம் பாட்டு: 4. உவந்து - மகிழ்ந்து.

1. நாடு நகர் நலங்கூறு காதை

[சோழ நாட்டு வளம்]

உலகெலாம் அளந்த ஒண்டமிழ்ச் செம்மொழி
குலவும் இனிமை கூர்தமி ழகத்தில்
நீர்வளம் நிலவளம் நெல்வளம் நிறைந்து
ஊர்வளம் குடிவளம் ஒருங்கே சான்று
சோறுடைத் தென்னும் சோழநன் னாட்டின்
வீறுடைப் புகழ்தான் விளம்பற் பாற்றே!

(பெருமக்களால் பெருமை)

தன்னடை உயிரினைத் தகவாய்க் காப்பது
மன்னன் கடனென மதித்து மகிழ்ந்துதன்
பொன்னுடல் ஈந்து புறவினைப் புரந்த
மன்னவன் சிபியின் மரபினர் நாடு;
இந்திர விழாவினை இரும்புகழ்ப் புகாரில்
செந்தமிழ் மணக்கச் சிறப்பொடு தொடங்கியோன்,
தூங்கெயில் எறிந்த தொடித்தோட் செம்பியன்,
வீங்குதோள் அவுணரை வென்றவன் நாடு;
ஒன்றே உயிரெனும் உண்மையை நாட்டக்
கன்றினை யிழந்த கறவையின் கண்ணீர்
காணப் பொறுதக் கன்றினைக் கொன்றதன்
நாணமில் மகனை நசுக்கி மாய்த்தவன்,
அரச வினைஞரும் அரும்பெருஞ் செல்வரும்
வரிசையாய்க் காண வந்துநில் மக்களை

அருஞ்சொற் பொருள்: 9. புறவு - புறா; 13. எயில் - கோட்டை; தொடி - வீரவலயம்; செம்பியன் - சோழன்; 14. அவுணர் - அரக்கர். 16. கறவை - பசு.

உரைசெய உள்ளே விடாதவிவ் வுலகில்
யாரா யினுஞ்சரி என்னிடம் வருகென
ஆராய்ச்சி மணிகட்டி ஆண்ட நாடு;
வலிய இமய வாகை சூடிப்
புலியை யதனிற் பொறித்த புகழோன்,
இளையன் வேந்தனென் றெள்ளிய பெரியரின்
உளமது நிறைவுற உள்ளே போந்து
முதியவர் புரைய முடிமயிர் பூண்டு
புதிய கோலம் புனைந்தே இருவரின்
வழக்கது தீர்த்த கரிகால் வளவன்
இழுக்கமின் றாண்ட இரும்பெரு நாடு;
கற்புக் கடம்பூண்ட இத்தெய்வ மல்லது
பொற்புடைத் தெய்வம் யாங்கண் டிலமெனக்
கவுந்தி யடிகள் கழறிய தாக
இளங்கோ வடிகள் ஏத்திய நங்கை,
கனல்தெறி சொற்களால் கடுவழக் காடிக்
கணவன் களங்கம் களைந்த களத்தி,
பாரெலாம் பத்தினி வணக்கம் பரவக்
காரண மாய கடவுட் கண்ணகி;
மணிமே கலையின் கையில் மன்னிய
அமுத சுரபியில் முதன்முத லாக
அமுதம் வளர அமுதம் இட்டவள்,
கணவன் மடிந்ததாய்க் காதால் மடுத்ததும்
தணலில் புக்க தகைசால் ஆதிரை;
கயவன் ஒருவன் கையசைத் தழைக்க
அயலவன் உளத்தில் அகப்பட் டேனென
மயலாய் வீழ்ந்த மாண்புறு மருதி;
முத்தமிழ்த் திருமணம் முடிக்கு முன்பே
அத்தை மகனும் அன்புறு தரும

---

28. புரைய - ஒப்ப. 31. இழுக்கம் - குற்றம். 34. கழறுதல் - சொல்லுதல். 37. களத்தி - இல்லாள். 40. மன்னுதல் - பொருந்துதல். 43. மடுத்தல் - உட்புகுதல்; கேட்டல். 44. தணல் - நெருப்பு.

தத்தனைப் புணர்ந்ததாய்த் தன்மேல் சாட்டிய
பொல்லாப் பொய்யுரை பொருஅது வாணாள்
எல்லாம் கன்னிமை ஏற்ற விசாகை;
சேற்றில் முளைத்த செந்தா மரையாய்
வேசியாஞ் சிப்பியில் விளைந்த முத்தாய்
இறுதி வரையும் இருநிதிக் கோவலன்
ஒருவன் தனையே உளத்தில் வரித்து
மருவிய கற்புறு மடந்தை மாதவி;
வதியும் பூம்புகார் வளவன் மகனும்
உதய குமரனை உதறி எறிந்தோள்,
மாப்புகழ்ச் சாத்தனார் மாண்புடன் யாத்த
காப்பியத் தலைவியாம் கவின்மணி மேகலை;
தன்னுறு கணவனே தன்னைத் தெய்வமாய்
உன்னி வணங்க, உடல்தசை உதறிக்
கன்னித் தமிழில் கடவுள் நூல்பல
கன்னலாய் வழங்கிய காரைக்கா லம்மையார்;
தேனனை இசையால் தீந்தமிழ் பரப்பிய
ஞானசம் பந்தனும் நற்றமிழ் மதலை;
பூவேந் தனையும் பொருட்படுத் தாத
பாவேந்தன் பைந்தமிழ்ப் பரவை கடந்தவன்,
பெரிய கம்பசூத் திரமோஎனப் பேச
அரிய பாப்பல ஆயிரம் ஈந்தோன்,
கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும்
கவிபாடும் என்னும் கவின்சீர் பெற்றவன்,
கல்வியிற் பெரிய கலைஞன் கம்பன் ;
சங்கரன் பெற்ற சடையன், வளமெலாம்
மங்காது வழங்கி மக்களைக் காத்தலால்
தங்கள் பொறுப்பைத் தட்டிக் கழித்துத்

---

51. வாணாள் - வாழும் நாள். 54. வேசி - விலைமகள். 57. மடந்தை - பெண். 60. யாத்த - இயற்றிய. 65. கன்னல் - கரும்பு. 67. மதலை - சிறு பிள்ளை. 69. பரவை - கடல்.

தில்லைத் தெய்வம் திருநடம் பயிலும்
காவிரி நடுவண் கார்முகில் துயிலும்
என்னும் புகழினை ஏற்றவன், இலங்கை
இன்ன லுற்றபோ தரிசி ஈந்தவன்,
காலங் காலமாய்க் கவிஞன் கம்பனைச்
சாலவும் புரந்த சடையப்ப வள்ளல்;
மூவருலா தந்த மூத்த பெருமகன்,
யாவரும் அதிரும் யாணர்க் கவிஞன்,
வெட்டிப் பேசி வென்றிடும் புலவன்,
ஒட்டக் கூத்தனும் உயர்பா வேந்தன்;
மன்னு உலகில் மன்னுதல் குறித்த
இன்னபல் லோரையும் ஈன்றநன் னாடு.

(காவிரி வளம்)

குடகில் பிறந்து குளிர்கன் னடத்தில்
அடைவே வளர்ந்துபின் அரியசோ ணாட்டில்
வாழ்க்கைப் பட்டு வளமது பெருக்கி
வாழ்க்கை பலர்க்கும் வகுத்துத் தந்து
நீரலைக் கைகளால் நெடுங்கரைக் குழவியை
ஆரத் தழுவி அமிழ்தம் வழங்கிக்
கயலாம் கண்களால் கனிவுடன் நோக்கி
வயலெலாம் வளந்தரு வண்டலூண் ஊட்டி
வீட்டு மக்களை விரும்புந் தாய்போல்
நாட்டு மக்களை நலமுடன் பேணி
உடம்பெலாம் குருதி ஓடுதல் புரைய
இடமெலாம் நீரை நிரப்பி இயங்கும்
காவிரித் தாய்வளம் கணக்கி லடங்குமோ ?

---

78. தில்லைத் தெய்வம் - நடராசர். 79. காவிரி நடுவண் - திருவரங்கம்; கார்முகில் - திருமால். 81. இன்னல் - துன்பம். 85. யாணர் - புதுமை, வளமை. 91. அடைவே - முறையே; சோணாடு - சோழநாடு. 94. குழவி - குழந்தை. 100. குருதி - இரத்தம்.

பூவிரி மணஞ்சால் பொழில்கள் கரையெலாம்;
கோங்கம் மருதம் குரவம் கடம்பு
வேங்கை வாதுமை விளாபலா தெங்குமா
குருந்தம் இலவம் கொன்றை வகுளம்
நரந்தம் பாதிரி நாகம் தில்லைவேய்
நாவல் வன்னி நறுங்கொய்யா மாதுளை
பூவர சத்தி புன்னை கூவிளம்
ஆரம் ஆத்தி அரசால் ஆற்றின்
ஓரம் விண்ணுற ஓங்கித் தோன்றுமால்;
கரும்பு வயலெனக் கருதும் நெல்வயல்
விரும்புங் கமுகென விளங்குங் கரும்பு
தெங்கின் வடிவமாய்த் தெரியுங் கமுகு
தொங்கும் குலைகள் துன்னிய வாழை
வெற்றிலை அகத்தி விரவிய தோட்டம்
வெற்றிடம் இலையென விரிந்த கழனி,
நெல்லின் களையாய் நிற்பன வயலில்
அல்லி தாமரை ஆம்பல் குவளை,
உகுத்த மலரொடு உழவர் கட்டியே
அகத்திக் கீரையால் அடைக்கும் நீர்மடை,
இன்ன பல்வளம் இணைசோ ணாட்டின்
மன்னிய தலைநகர், வடபுல வெற்றியால்
கங்கை கொண்ட சோழ புரமென
எங்கும் போய இசைமிகப் பெற்றது;
இங்கதன் புகழை இயம்பல் ஒண்ணுமோ!

---

103. பொழில் - சோலை. 104 - 110. மர வகைகள். 105. தெங்கு - தென்னை. 106. வகுளம் - மகிழ மரம். 107. நரந்தம் - நாரத்தை; வேய் - மூங்கில். 109. கூவிளம் - வில்வம். 113. கமுகு - பாக்கு மரம். 122. சோணாடு - சோழ நாடு. 123. வடபுலம் - வடநாடு. 126. இயம்புதல் - கூறுதல்; ஒண்ணுமோ - முடியுமோ.

(நகர் வளம்)

அரண்மனை நிகழ்ச்சியை அவ்வஞ் ஞான்று
திரண்முனைக் குணில்கொடு தெருட்டும் முரசொலி,
கனிவொடு வழிபடுங் கடவுட் கோயிலில்
இனிமையா யிசைக்கும் இயங்கள் எழுப்பொலி,
சொற்போர்ப் புலவர் சூழுமாய் வுரையொலி,
மற்போர் பயிலும் மறவரின் இடியொலி,
விற்போர் பழகும் வீரர் விடுப்பொலி,
நெற்போர் குவிப்போர் நிகழ்த்தும் நெட்டொலி,
கரும்பின் பிழிவைக் கனல்கொடு காய்ச்சி
விரும்பும் வெல்லமாய் விளைப்பவர் வினையொலி,
சிறுமியர் செய்யும் சிற்றில் ஆட்டொலி,
சிறுர்விளை யாடும் சிறுதேர் இழுப்பொலி,
மடையில் சேல்கள் பாய மங்கையர்
குடையுஞ் சுனையைக் கூடிக் குழப்பொலி,
கோழி சிவல்பூழ் கொழுதகர் எதிரியை
வீழச் செய்து வென்றிடு போரினை
வீழு மழவரின் விண்ணதிர் வெடியொலி,
பாடல் வென்றி பழகியாழ் வென்றி
ஆடல் வென்றி ஆட்ட வென்றி
ஓடல் வென்றி கொள்வோர் உழக்கொலி
விழாப்பல அயர்வோர் வீதியில் வெளியில்
குழாமாய்க் கூடிக் குலவும் குழுவொலி,
வணிகச் சந்தையில் வாங்குவோர் விற்போர்

---

127. ஞான்று - பொழுது. 128. குணில் - குறுந்தடி; கொடு - கொண்டு; தெருட்டும் - தெரிவிக்கும். 130. இயங்கள் - வாத்தியங்கள். 135. பிழிவு - சாறு. 139. சேல் - மீன். 141. சிவல் - கவுதாரி; பூழ் - காடை; தகர் - ஆட்டுக் கடா. 143. வீழு மழவர் - விரும்பும் வீரர். 145. ஆடல் - நடனம்; ஆட்டம் - விளையாட்டு. 146. உழக்குதல் - குழப்பி எழுப்புதல். 147. அயர்தல் - கொண்டாடுதல். 148. குழாம் - கூட்டம்.

அணுகிப் பொருள்களை அளக்கும் ஆர்ப்பொலி,
தொகுத்த உணவைத் தொல்புகழ் மரபினர்
பகுத்துப் பலரோ டுண்ணும் பண்பொலி
இன்னபல் லோதைகள் இயைந்து மயங்க
மன்னிய குடியெலாம் மகிழ்வொடு வாழுமால்.
நன்னர் நலவளம் நனிதவ நண்ணிய
பொன்னகர்ப் புகழெலாம் புகலுதல் அரிதே!

---

150. ஆர்ப்பு - ஆரவாரம். 153. ஓதை-ஓசை. 154. வாழுமால்— வாழும் + ஆல்; ஆல் - அசை. 155. நன்னர் - நன்மை; நனிதவ - மிகமிக.

2. காதலர் காட்சிக் காதை

தலைநக ரதனில் தன்னே ரில்லாக்
கொலைவேற் குலோத்துங்க சோழன் கோயிலின்
நிலாமுற் றத்து நின்று கீழே
உலாவு வோரை உற்று நோக்குவாள்
அரசன் மகளாம் அமரா வதியெனும்
உரைசால் கற்பின் உயரிய கன்னி
பாங்கியர் பல்லோர் பாங்குற மின்னி;
ஆங்கவள் முகமதி அமிழ்தைப் பொழியுமால்..

(அமராவதியின் தோற்றம்)

கருமை மென்மை கருதிடும் நீட்சி
சுருளும் வளைவு சொலத்தகும் செறிவு
ஐம்பால் தகுதியும் அமைந்துகண் டோரை
வம்பா யீர்க்கும் வசியக் கூந்தல்,
மறலியும் அஞ்ச மாப்படை வெல்லும்
மறவர் தம்மையும் மயக்கும் பிறைநுதல்,
காந்தம் இரும்பைக் கவருதல் நேரக்
காந்தும் காளையர்க் கட்டிடுங் கண்கள்,
பவள உவமை பற்றுமோ வாய்க்கே!
அவளது கன்னம் அழன்று மின்னும்,
பத்தியா யமைந்து பளிச்சொளி வீசி
முத்தைப் பழிக்கும் முறுவல் வெண்ணகை,

---

2. கோயில் - அரண்மனை. 7. பாங்கியர் - தோழிமார்; பாங்கு - பக்கம். 10. செறிவு - அடர்த்தி. 11. ஐம்பால் - கூந்தலின் ஐந்து தன்மை. 12. ஈர்த்தல் - இழுத்தல். 13. மறலி - எமன். 14. நுதல் - நெற்றி. 15. நேர - ஒப்ப. 19. பத்தி - வரிசை. 20. முறுவல் - சிரிப்பு.

இடமது சிறிதே ஈந்ததும் பெரிய
மடமுழு தினையும் மடக்குவோர் மான
எட்டிப் பார்க்க இடஞ்சிறி தளவே
விட்ட மார்பின் வியலிடம் முழுமையும்
தட்டிக் கொண்ட தளதள முலைகள்,
இன்ன தெனும்படி இடையே இன்மையால்
மின்னிடை துடியிடை மெல்லிய கொடியிடை
என்னும் இவைதாம் இல்பொருட் குவமையாம்;
அரசிலை ஆலிலை அல்குலுக் கொப்போ?
உரைசெய ஒல்லா தொருவ ரானுமே.
வேய்க்குறு இலக்கணம் விளக்குவ தோள்கள்,
காந்தள் இலக்கணம் காட்டுவ கைகள்,
துடைக்கு வாழை தோற்ப துறுதி,
நடைக்குநல் லன்னம் சாயற்கு நன்மயில்
அடைவே அடிகளின் மென்மைக் கனிச்சம்
அமைவுறு உவமை யாமென அறைவது
அமரா வதியை அறியார் உளறலாம்;
நமரவள் அழகை நவிலவொண் ணுதே!

(நிலாவின் தோற்றம்)

வையம் சுட்ட வன்பழி துடைக்க
வெய்யோன் தன்கொடு வெய்யில் அடக்கப்
பைய மாலைப் பொழுது படர்ந்தபின்
படைபல சூழப் பாராள் வேந்தன்
நடைபோ டல்போல் தாரகை நடுவுறு
தண்ணிய திங்கள் தகதக ஒளியை
மண்ணில் பரப்பி இருட்பகை மாய்த்துக்

---

22. மான - ஒப்ப. 24. வியல் - அகலம். 27. துடி - உடுக்கை. 29. அல்குல் - பெண்குறி. 30. ஒல்லாது - முடியாது. 32. காந்தள் - கை போன்ற ஒருவகை மலர். 35. அனிச்சம் - மெல்லிய ஒருவகை மலர். 39. வையம் - பூமி. 40 - வெய்யோன் - ஞாயிறு. 41. பைய - மெல்ல. 43. தாரகை - நட்சத்திரம்.

காதலர்ப் பிரிந்தோர் கவன்று வாட
மேதகு பொலிவுடன் மிளிர்ந்தது விண்ணில்.
வெண்ணிலா வீசுமவ் வேளை தன்னில்
நண்ணினன் அவ்வழி நடந்து மெல்ல
கம்பர் மகனும் கல்வியில் வல்லனும்
அம்பிகா பதியெனும் ஆண்மைத் தோன்றல்.

(அம்பிகாபதியின் தோற்றம்)

கொய்து சுருண்ட குஞ்சியன் தலையில்,
செய்துவைத் தாலெனத் திரள்வரைத் தோளினன்,
அடுபடை தாங்கும் அகன்ற மார்பன்,
தொடுமுழங் கால்வரை தொங்குங் கையினன்,
காந்தையர்க் கவரும் கனிந்த கண்ணினன்,
ஏந்தெழில் மிக்க இளைஞன் இசைவலன்,
நயனுடை இன்சொலன், நல்லதன் பெயரால்
பயனுடை 'அம்பிகா பதிகோவை' என்னும்
வியனுறு நூல்தந்து விளங்கும் புலவன்,
ஓதல் வல்ல உயரியோன் எனினும்
காதல் கலைஞன் கட்டிளங் காளை

(காதலர் காணல்)

மேன்மா டத்தில் மேனி மினுக்கித்
தேன்மொழி நின்றதைத் தெரியக் கண்டனன்;
புருவ வில்லின் புறப்படு கண்கணை
உருவ உளத்தை உரைதொடுத் தனனே:
''குலவும் தாரகைக் குழுவிடை மின்னும்

---

46. கவன்று - கவலைப்பட்டு. 47. மிளிர்ந்தது – விளங்கியது. 51. தோன்றல் - ஆண்களுள் சிறந்தோன். 52. குஞ்சி - தலைமயிர். 53. வரை - மலை. 56. காந்தையர் - பெண்கள். 57. எழில் - அழகு. 60 - வியன் - மேன்மை. 63. மேனி - உடம்பு. 64. தேன்மொழி - அமராவதி. 65. கணை – அம்பு.

நிலவே நிலவே நீகீழ் இறங்கி
வருகை தருவையோ வாரா யென்னின்
அருகில் யான்வந் தழகைப் பருகவோ?
மாற்றம் என்கொல் மயக்குதல் முறையோ?
கூற்றமாய் என்னைக் கொல்லல் தகுமோ?''
என்றனன்; அமரா வதியின் எதிரில்
நின்றனன் சிலைபோல் நெட்டுயிர்ப் பெறிந்தே !

(கேட்ட அமராவதியின் நிலை)

கேட்ட அமராவதி கிளர்ச்சி யுற்றனள்,
நாட்டந் திருப்பினள், நாணிக் குனிந்தனள்;
பொன்னிறத் திருமுகம் செந்நிற மாயது;
புதியவன் உளத்தில் புகநேர்ந்த தெண்ணி
மதியது கலங்கி மாழ்கி வீழ்ந்தனள்.
தோழியர் கவன்றனர்; சோழனைக் கண்டனர்;
வாழியர் வேந்தென வணக்கம் செலுத்தினர்;
நடந்தது கூறினர் நாத்தழு தழுக்க.
கிடந்த மகளைக் கிள்ளி கண்டனன்;
விடிந்ததும் இதற்கோர் விடிவு காண்பனென்
றடங்காச் சினத்திற் கடிமைப் பட்டனன்;
மகளைக் கன்னி மாடத் துய்த்தே
அகலாது காக்க ஆவன புரிந்தனன்.
சோழமா தேவி சோர்ந்து வருந்தி
வாழி மகளென வணங்கினள் தெய்வம்.

(அமைச்சர் மகளின் காதல்)

அமரா வதியை அகலாப் பாங்கி
அமைச்சர் மகளாம் அழகு 'தாரகை'

---

71. மாற்றம் - பதில். 72. கூற்றம் - எமன். 74. நெட்டு யிர்ப்பு எறிதல் - பெருமூச்சு விடுதல். 79. மாழ்கி - மயங்கி. 80. கவன்றனர் - கவலைப்பட்டனர். 83. கிள்ளி - சோழன்.

என்னும் பெயரினள் எதிர்பா ராமே
துன்னிய காதலால் துயருற லானாள்;
அம்பிகா பதியின் அழகில் மயங்கி
வம்பாய் அவன்பால் வைத்தனள் நாட்டம்;
'அவனே என்றனக் கமைந்த காதலன்
அவனை அடியேன் அடைந்தே தீர்வல்'
என்றே சூளுரை இயம்பி ஊண்துயில்
ஒன்றும் கொளாமே உயிர்த்தனள் நெடிதே.
கிணறு வெட்டப் பூதம் கிளர்ந்த
கதையே யாகிக் கம்பர் மகன்தலை
விதியே யென்ன விடிந்தது சனியனே!

---

97. தீர்வல் - தீர்வேன். 98. சூளுரை - சபதமொழி; துயில் - தூக்கம். 100. கிளர்ந்த - எழுந்த.

3. அரசன் அம்பிகாபதியை அழைத்த காதை

(ஞாயிறு தோற்றம்)

திருவுடை வியனகர்த் தெருக்களின் காவலில்
ஒருவர் மாறமற் றொருவர் வருகைபோல்
மதியம் மறைய, மறுநாள் விடியலில்
சிதைய அமைதி செறிந்திடும் ஒலிகளாம்
பழவகை தேடப் பறக்கும் புள்ளொலி,
உழவர் ஏர்கொடு உழப்பும் ஓதை,
பாடம் படிக்கும் பள்ளிச் சிறுரொலி,
மாடம் கோலஞ்செய் மங்கையர் எழுப்பொலி,
காரா வின்பால் கறப்பொலி இன்ன
ஆரா ஒலியிடை அலர்கதிர் ஞாயிறு
பாரோர் உவக்கப் பரவையிற் றோன்றினன்.

(மன்னன் நடவடிக்கை)

கம்பர் மகனைக் கடிதின் கொணர்திர்
என்றே ஆட்களை ஏவி யனுப்பி
அரசன் சினமொடு அரியணை அமர்ந்தனன்.
அரச ஆணையை அறிந்த கம்பர்
மகனை அழைப்பதின் மாயம் என்னவோ !
புகழுறு மகன்றன் புலமையை மெச்சி
விருது வழங்க விரும்பினன் கொல்லோ !
பெரிதாம் பட்டம் பெறச்செய் வானோ
என்றுதம் மனையிடம் இனிக்கப் பேசி

---

5. புள் - பறவை. 7. அக் காலத்தில் வைகறையிலேயே மாணாக்கர் ஆசிரியரின் வீட்டிற்குச் சென்று படிப்பது வழக்கம். 8. மாடம் - வீடு. 11. பரவை - கடல். 12. கடிதின் - விரைவில்; கொணர்திர் - கொண்டு வருக. 18. விரும்பினன் கொல்லோ - விரும்பினான் போலும். 20. மனை - மனைவி.

நன்று நன்றென நனிமகிழ் வுற்றே
அம்பிகா பதியை அருகில் அழைத்து,
தம்பி! மன்னனின் தக்க விருப்பைச்
சிறக்க ஏற்றிடச் சென்றுவா என்றனன்.
பறக்கச் சிறகுகள் படைக்கப் பெருமையால்
அம்பி காபதி அரண்மனை நோக்கி
விரைவாய் நடந்தனன் வேந்தன் மகளைத்
தரவே தகுமெனத் தவறு யெண்ணினன்;
காம நோய்க்குக் கருதிடும் கண்ணிலை
ஆமது ஆன்றோர் அறைந்த உண்மையே!

(அம்பிகாபதி வணங்கிக் கூறுதல்)

வேந்தர் வேந்தே வெல்கநும் கொற்றம்
தீந்தமிழ்ப் புலவோர் திறந்தெரிந் தவரைப்
போற்றிடும் உமது புகழ்சால் பண்பு
சாற்றுதற் கரிதோ சாலுமென் வணக்கம்
ஏற்றருள் கென்றனன். எழுந்தனன் மன்னன்

(அம்பிகாபதிக்கு அரசன் கூறுதல்)

புலிக்குப் பிறந்த பூனைக் குட்டியே
அரிமா பெற்ற அற்ப நரியே
கம்பர் மகனுநீ காமப் பெட்டகமே
வம்பப் பேயே வால்குழை நாயே
புலவ னல்லனீ புன்புலால் விரும்பும்
புலையனே யாவைநீ புகன்றிடு கேட்பதை
நேற்றைய இரவில் நிகழ்ந்த தென்னவோ?
மாற்று துண்மையை மறைக்கா துரைத்திடு
அமரா வதியை அழைத்தனை யாமே
எமராங் கிருந்திடின் என்னவாம் உன்தலை?

---

30. அறைதல் - சொல்லுதல். 37. அரிமா - சிங்கம். 38. பெட்டகம் - பெட்டி. 41. புலையன் - கீழ்மகன்.

குற்றம் ஒப்புதி கொலைக்களம் செல்லுதி
மற்றுநின் செயற்கு மாற்று வேறிலை
மற்றவர் மகளை மதிமிக மயங்கிப்
பற்றுவோர்க் கிஃதொரு படிப்பினை யாமென
இறையவன் முழக்கிய இடியொலி கேட்டே
அறைகுவன் மாற்றம் அம்பிகா பதிதான்;

(அம்பிகாபதியின் பதில்)

வாழ்க மன்னவ வளர்கநும் பேரருள்!
தாழ்கிறேன் தலைநும் தாள்களில் அடியேன்;
வெண்ணிலா வீசிய வேளை வீதியில்
எண்ணினேன் இயற்கையின் எழிலைப் பற்றி
'நிலா நிலா ஓடிவா நில்லாமல் ஓடிவா'
என்று நிலாவை அழைப்ப தியற்கையே
அன்றோ ஆண்டவா! அவ்வா றடியேன்
'நிலவே நிலவே நீகீழ் இறங்கி
வருகை தருகென' வாய்விட் டழைத்தேன்
இருகை கூப்புவேன் இதில்பிழை யாதென,

(சோழன் வினவல்)

'குலவும் தாரகைக் குழுவிடை மின்னும்
நிலவே நிலவே' என்று நீ விளித்தனை
அமைச்சர் மகள்பெயர் தாரகை யாகும்
இமையாம் தாரகை, என்மகள் கண்ணும்;
எனவே,
தாரகை தன்னொடு தங்கிநின் றிருந்த
காரிகை அமரா வதியைக் கருதியே

---

50. இறையவன் - அரசன். 53. தாள் - கால். 58. ஆண்டவன் - அரசன். 63. விளித்தனை - அழைத்தாய். 65. இமை - கண் இமை. 67. காரிகை - பெண்.

'நிலவே நிலவே நீவா' என்றனை
பலவும் பேசுவாய் பகர்பதில் இதற்கென,

(அம்பிகாபதியின் அடுத்த பதில்)

தாரகை யின்பொருள் விண்மீன் தானே?
தாரகை நடுவண் தண்மதி யிருப்பதாய்ப்
பாருள புலவோர் பாடுதல் இயல்பே!
சான்று வேண்டுமோ சாற்றுவன் சால:
'பன்மீன் நடுவண் பால்மதி போல'
என்பது சிறுபா ணாற்றுப் படையடி;
'பன்மீன் நடுவண் திங்கள் போலவும்',
என்பது மதுரைக் காஞ்சி யடியாம்;
'நாள்மீன் விராய கோள்மீன் போல'
என்பது பட்டினப் பாலைப் பகுதியாம்;
'பன்மீன் நாப்பண் திங்கள் போல'
என்பது பதிற்றுப் பத்துப் பாவடி;
'பன்மீன் நாப்பண் திங்கள் போலவும்,'
'மீன்நாப் பண்விரி கதிர்வெண் திங்களின்'
என்பன புறநா னூற்றுப் பகுதிகள்;
'மீன்சூழ் குளிர் மாமதித் தோற்றம் ஒத்தே'
என்பது சீவக சிந்தா மணியடி
இன்னணம் பலப்பல இயம்பலாம் என்ன,

(அரசன் அடுத்து வினவல்)

'வருகை தருவையோ வாரா யென்னின்
அருகில் யான்வந் தழகைப் பருகவோ'
என்றனை இதன்பொருள் யாதோ இயம்புதி!
என்றனை ஏய்த்தல் இனியொல் லாதே!
அம்புலி வராதெனின் அதனைநாம் அடைவது
நம்புதற் குரியதோ நவிலுதி விடையென,

---

69. பகர் - சொல்லுவாய். 73. சாற்றுவன் - சொல்லுவேன்; சால - மிகுதியாக. 78. நாள்மீன் - நட்சத்திரம்; கோள்மீன் - நிலா. 92. அம்புலி - நிலா.

(அம்பிகாபதியின் அடுத்த பதில்)

தண்டமிழ் நூல்களுள் பிள்ளைத் தமிழெனும்
ஒண்டமிழ் நூலொன் றுளதைநீர் அறிவீர்
அம்புலிப் பருவமொன் றதனில் உண்டாம்
அம்புலி வருகவென் றதனை அழைப்பர்
அம்புலி வராதெனின் அதனை ஒறுப்பதாய்ப்
பைந்தமிழ்ப் புலவோர் பாடுதல் இயற்கை
நந்தம் முயற்சியால் நண்ணுதல் அரிதெனில்
ஒறுப்ப தெவ்வா றெல்லும்? எனவே,
ஒறுப்பதாய்க் கூறல் ஒருவிளை யாட்டே
அப்படி யேயான் அதனை அடைவதாய்ச்
செப்பிய தும்மொரு சிறுவிளை யாட்டே
சென்று திங்களைச் சேர்திறன் இன்றிலை
என்றே வரலாம் யாரறி வாரிதை!
இப்புவி புரக்கும் ஏந்தலே என்பால்
தப்புக் கணக்குப் போடுதல் தகுமோ?
வணக்கம் கொற்றவ! வளர்கநும் செங்கோல்!
இணக்கமா யெனக்கு நல்விடை ஈகென,

(அரசன் அம்பிகாபதியை அனுப்புதல்)

சோழன் நோக்கினன் சொல்லுதல் அறியான்
ஏழமை கொண்ட இளஞ்சிறு புலவன்
வேழம் வேங்கையை வென்றது மான
என்னைப் பேச்சால் ஏய்த்து வென்றனன்
பின்னர் யானும் பேசவொன் றிலையென
மன்னவன் மனமது மறுகி
இன்னே செல்லுதி என்றனுப் பினனே.

---

98. ஒறுத்தல் - தண்டித்தல். *104.* செப்புதல் - சொல்லுதல். *107.* ஏந்தல்-உயர்ந்த ஆடவர் (அரசர்). *109.* கொற்றவன் - அரசன். *113.* வேழம் - யானை; வேங்கை - புலி. *116.* மறுகி - மயங்கி. *117.* இன்னே - இப்பொழுதே.

4. கம்பர் மகனைக் கடிந்த காதை

கம்பர் தம்மனைக் கற்பகத் தாச்சிபால்
அம்பிகா பதிதனக் கரசன் செயத்தகும்
சிறப்பு குறித்துச் செப்ப இருவரும்
இறப்ப மகிழ்வுற் றிருந்த வேளை,
கண்போல் வளர்த்ததம் காதலற் பற்றியோர்
நண்பர் வந்து நடந்தது கூறினர்.
கேட்ட கம்பர் கிளர்ந்து மகனை
வாட்டவே மன்னன் வம்பு செய்துளான்
அம்பி காபதி அப்பழுக் கிலாதவன்
நம்பலாம் அவன்பால் நவையே யிராது
காலம் வருங்கால் கண்ணஞ் சாமே
காலனும் சோழனைக் கடிந்தே தீர்வல்
என்றே சினங்கொண் டிருக்கச் சோழனை
வென்ற மகனும் வீடுவந் தனனால்.
நடந்ததை விடாஅமே நவிலுக என்றே
அடைந்த மகனை அப்பா வினவினர்.
அம்பி காபதி அனைத்துங் கூறக்
கம்பர் சோர்ந்து காதல் மகனே
வம்பு செய்து வந்துள தறிந்து
வெம்பி யவற்கு விளம்ப லுற்றார்:
கொற்றவன் தன்னிடம் குறும்பாய்ப் பேசி
வெற்றி பெற்றனை வியந்தனன் நின்றிறன்;
ஆயினுங் குடிமகன் அரசன் மகளைத்
தாயினும் சிறப்பாய்ப் போற்றலே தகுமென,

---

4. இறப்ப - மிகவும். 5. காதலன் - மகன். 7. கிளர்ந்து - உணர்ச்சி யெழுந்து. 10. நவை - குற்றம். 11. கண்ணஞ்சுதல் - அஞ்சுதல். 12. காலன் - எமன். 15. நவிலுதல் - சொல்லுதல்.

(அம்பிகாபதி கூறல்)

மராமரம் மாய்த்த மாபெரு மறவனும்
இராமன், சீதை எனுமிவர் குறித்துக்
"கண்ணொடு கண்ணிணை கவ்வி ஒன்றையொன்
றுண்ணவும் நிலைபெரு துணர்வும் ஒன்றிட
அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்"
என்னவே பாடிய எந்தையே! காதற்
கோவை பாடியோன் கொற்றவன் பயந்த
பாவையை விரும்பலில் பழுது யாதென,

(கம்பர் கூறுதல்)

இராமன் சீதை இருவரும் மருவு
விராவும் இருபெரு வேந்தர் மரபினர்
ஆதலின் அண்ணலும் அவளுங் கொண்ட
காதலோ சிறந்ததாய்க் கணிக்கப் பெற்றது.
நாஅமோ பூசனை நடத்தும் ஓச்சர்;
ஆஅ்மோ ஓச்சர்க் கரசர் உறவுதான்?
கற்றநின் தங்கை காவிரி தன்னிடம்
அற்றமா யொருவன் அடாதன செய்யின்
நினக்குச் செற்றம் நேரா தோவுரை!
தனக்கு நீதி தனி,பிறர்க் கொன்றோ?
அரச குற்றம் செய்ய அரசனால்
குறையக வையிலே கொல்லப் படுவாய்
எனவொரு கணியன் என்றோ மொழிந்தது
நினைவிருக் கின்றது நீவிழிப் பாயிரு
எனவே கம்பர் இயம்பிய காலை,

---

31. பயந்த - பெற்ற. 32. பாவை - பெண். 33. மருவு - சம்பந்தம். 37. ஓச்சர் - காளி கோயில் பூசனை நடத்தும் குலத்தவர். 40. அற்றம் - அழிவு, மறைவு. 41. செற்றம் - சினம். 44. அகவை - வயது; 45. கணியன் - சோதிடன்.

(கம்பர் மனைவி குறுக்கிட்டுக் கூறுதல்)

கற்பகத் தாச்சி கடிதவண் குறுகி
பொற்புறு கணியப் புலவன் ஒருவன்
அம்பி காபதிக் ககவை நூஉறு
நம்பு வீரென நவின்றனன் ஒருநாள்;
என்மகன் இருநூ றியாண்டுகள் வாழ்வனென்
றின்முகத் துடனே இயம்பக் கம்பர்
புன்முறு வலுடன் புகல்வார் மகற்கு :

(கம்பர் அம்பிகாபதிக்குக் கூறுதல்)

நன்றே யுனக்கு நன்மணம் நடத்த
என்றூ முயன்றேன் இணங்க வில்லைநீ.
அழகும் புலமையும் அமைந்த நிற்குப்
பழகி யோர்பலர் பயந்த பெண்ணைத்
தரவே விரும்பினர்; தருக்கோ டிசைவு
தரவே யில்லைநீ தக்கதோ நின்செயல்?
அம்மான் மகளுளாள் அத்தை மகளுளாள்
இம்மா நிலத்தில் இனியவர் பலருளர்;
திருவளர் ஒருத்தியைத் தேர்ந்து நமது
திருவமுந் தூரில் திருமணம் முடிக்கலாம்
விரைவிலுன் விருப்பம் யாதென விளம்பென,

(அம்பிகாபதியின் விடை)

நமர்பயந் தளிக்கும் நங்கையர் வேண்டேன்
அமரா வதியே ஆருயிர்க் காதலி
நலவழி நாடும் நல்லோர் நடுவண்
குலவழி வேற்றுமை குறுக்கிட வொல்லுமோ?
'ஒன்றே குல'மெனும் உயர்திரு மந்திரம்
நன்றே நவின்றுளார் நற்றிரு மூலர்;

---

48. அவண் - அவ்விடம். 59. தருக்கு - இறுமாப்பு.

'சாத்தி ரம்பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமுங் கொண்டென் செய்வீர்?'
என்பது அப்பரின் ஏற்றம் மிகுவினு;
"சாதிகுலம் பிறப்பென்னும் சுழிப்பட்டுத் தடுமாறும்
ஆதமிலி" என்பது அருந்திரு வாசகம்;
"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படு'மென
புறத்திலோர் அரசப் புலவனே புகன்றுளான்;
கல்வியிற் சிறந்தநாம் கருதிடின் மேலோம்;
"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"என் பதுகுறள்;
நம்தொழில் நன்னூல் நல்கிடும் நற்றொழில்;
செந்தமிழ் வல்லநாம் சிறந்த குலத்தோம்;
எந்தையே நீயிவை எல்லாம் அறிவையே!
அமரா வதியும் அரசன் மகளாம்,
அம்பிகா பதியும் அரசன் மகனும்;
பூவர சன்மகள் பூவை அமராவதி,
பாவர சன்மகன் பாவலன் அம்பிகாபதி.
காவலன் பெயரோ கடிதில் மறையும்
பாவலன் பெயரோ பாரில் நிலைத்திடும்
ஆதலின் அடியேன் அமரா வதியைக்
காதலிப் பதிலே கருதின் பிழையிலே;
ஆவது எந்தையே அறிந்தே சொல்கிறேன்
சாவது வரினும் சரியே! என்ற
மகனது மாற்றம் மடுத்த கம்பர்

---

72. சழக்கர் - ஒழுங்கிலாதார், மடவோர். 74. ஏற்றம்-உயர்வு. 76. ஆதம் – அன்பு. 80. புறம் - புறநானூறு என்னும் நூல்; அரசப் புலவன் - பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன். 89. பூவை - பெண். 91. காவலன் - அரசன்; கடிதில் - விரைவில். 97. மாற்றம் - பதில்.

(கம்பர் மகனைக் கடிதல்)

அகமது மாழ்கி அதிர்ச்சி யுற்றார்;
'ஒன்றே குல'மெனும் உயர்ந்தோர் கொள்கையை
நன்றே வேந்தன் நயக்க வேண்டுமே!
'விரலுக் கேற்ற வீக்கம்' என்ப,
'வரவுக் கேற்ற வாழ்'வென மொழிப;
அவரவர் தகுதிக் கமைந்ததே வாழ்க்கை
முடவன் கொம்புத் தேன்பெற முயன்ற
மடமை போன்றதே மைந்தநின் செயலெனக்
கம்பர் மகனைக் கடிந்துரைத் தாரரோ.

---

98. மாழ்குதல் - மயங்குதல். 100. நயத்தல் - நயமாய் விரும்புதல். 101. என்ப - என்று சொல்லுவர். 102. மொழிப - மொழிவார்கள்.

5. அமைச்சர் மகனின் சூழ்ச்சிக் காதை

சோழனுக் கமைச்சன் சூழ்ச்சிவல் காடவன்
ஆழமாய்ச் சூழ்ந்தான் அகத்துள் சிலவே.
காடவன் மைந்தன் களவுளச் சிம்மன்
ஈடில் படைகளின் தலைவருள் ஒருவன்.
பல்லவர் மரபினர் இவர்கள், பண்பில்
நல்லவ ரல்லர் நயவஞ்ச நரிகள்.
அமரா வதியை மருமக ளாக்க
அமைச்சன் கருதினன்; அன்றியும் தன்மகள்
தாரகையை அம்பிகா பதிக்குத் தரவே
ஓரக மாக உள்ளினன் சூழ்ந்தே.
தந்தையின் உளத்துள் தங்கிய விருப்பை
மைந்தனும் மகளும் அறிந்து மகிழ்ந்தனர்.
மன்னன் மகளை மணக்கச் சிம்மனும்
எண்ணி யிடர்தருஞ் சூழ்ச்சியில் இறங்கினன்.
அம்பிகா பதியைக் கணவனா யடைய
நம்பியே தாரகை நாளெலாம் நோற்றனள்.

(சிம்மன் தாரகையோடு சூழ்தல்)

அன்புத் தங்காய் அம்பிகா பதிக்குனை
இன்புடன் தரவே இசைந்துளோம் யாமே.
அம்பி காபதி அமரா வதியாம்
கொம்புத் தேன்பெறக் கொண்டுளான் வேணவா.
அவனினி யவளை அறமறந் தாலே
இவனுன் திருமணம் இனிதாய் நடைபெறும்.

---

10. ஓரகம் - மற்றவர் வெறுக்கத் தான்மட்டும் விரும்பும் மனம். 14. இடர் - துன்பம். 20. வேணவா - பேராசை. 21. அற - முற்றிலும்.

அவளை மணக்கயான் ஆவல் கொண்டுளேன்.
இருபெருந் திருமணம் இசைவாய் நிறைவுற
ஒருபெருஞ் சூழ்ச்சி உனக்கறி விப்பல்:
இன்றுமுன் னிரவுநீ ஏந்திழை யவள்பால்
சென்றுரை யாடல் செய்து கொண்டிரு.
குறுக்கே வந்தியான் குழப்பிநம் அன்னை
இறக்கும் நிலையில் இருப்பதாய்க் கூறி
உன்னை உடனே ஏகென உரைப்பேன்;
அன்னையே என்றுநீ அலறிப் புடைத்தே
ஓடிய பின்பியான் உரைதொடுத் தவளை
நாடி வந்ததை நயமொ டுரைத்தே
எனது தூண்டிலில் எளிதாய்ச் சிக்கி
எனையவள் மணக்க இசையச் செய்வேன்
பின்னை யெல்லாம் பேசிக் கொள்ளலாம்
என்னவே சிம்மன் தங்கைக் கியம்ப,
அன்ன வாறே அவள்சென் றிருக்க,
சிம்மன் கன்னி மாடம் சென்று
விம்மி நடித்து விளம்ப லுற்றான் :
தங்கையே நந்தாய் தாங்கொணாப் பிணிவர
மங்கி விரைவில் மடியும் நிலையில்
உள்ளாள் உடனே ஓடுநீ என்ன,
தள்ளையே யென்று தாரகை ஓடிட,
நமனாய் அன்னைக் கடுத்ததை நவில்கென
அமராவதி யஞ்சி அவனை வினவ,
அமர ஒப்புதல் அவனும் கேட்க,
அமரலாம் என்றே அவளும் உடன்பட,

(சிம்மன் கூறல்)

மாரடைப் பென்னும் மாளும் பிணியில்
சீருடை அன்னை சிக்கினள் என்ன,

---

26. ஏந்திழை - அணிபூண்ட அமராவதி. 44. தள்ளை - தாய். 45. நமன் - எமன்.

(அமராவதி வினவல்)

தங்கை யோடியும் தனியொரு மகனீர்
இங்கே யின்னும் இருப்ப தேனென,

(சிம்மன்)

மங்கலம் சான்ற மங்கை யுனைப்போல்
எங்கெலாம் தேடினும் எவரும் இலரே!
இங்கு நின்னொடு இருப்பின் அன்னையால்
தங்கிய கவலை தானே பறந்திடும்
இங்குத் தங்கிய காரணம் இதுவென,

(அமராவதி)

தாயார் இறக்குந் தறுவா யாகில்
சேயாம் நீரவண் சேரலே முறையென,

(சிம்மன்)

'இடுக்கண் வருங்கால் நகுக'வென் பதுகுறள்
இடுக்கண் வரினே இனியவர் தம்மொடு
நடுக்க மின்றி நகைத்துரை யாடல்
இடுக்கணுக் கிடுக்கண் ஈதலா மாதலின்
நின்னொடு சிறிது நெகிழ்ந்துரை யாடவே
இன்னும் இவணியான் இருப்ப தாமென,

(அமராவதி)

அன்னையின் நிலையை அறவே மறந்து
பின்னவே றென்ன பேச வுளதென,

(சிம்மன்)

அன்னை யொருகால் மாளின் அதன்பின்
என்னைப் புரப்பவர் யாரென அறியேன்

59. சேய் - குழந்தை, பிள்ளை; **அவண் - அவ்விடம்.** 60. **இடுக்கண் - துன்பம்.** 65. **இவண் - இவ்விடம்.**

'தாய்க்குப் பின்னர்த் தாரம்' என்பவென்
தாய்க்குப் பின்னரென் தாரமாய் வருபவர்
யாஅரோ என்ப தறியேன் யானென,

(அமராவதி)

தாய்க்குப் பின்னர்த் தாரம் என்கிறீர்
தாய்க்குயிர் போனபின் தாரம் தேடலாம்
போய்க்கண் டன்னையைப் பொறுப்பொடு காக்கென,

(சிம்மன்)

அன்னையிற் சிறந்தாய் அமரா வதிநீ;
உன்னை முதலில் ஓம்புதல் என்கடன்;
அம்பிகா பதிநரி அன்றொரு நாளுனை
வம்புக் கிழுத்த தறிந்து வருந்தினேன்
கயவனாய் நிற்குக் களங்கம் செய்தவந்
நயவஞ் சகனை நசுக்கிடு வேனென,

(அமராவதி)

ஆடு நனைவதாய் அழும்ஓ நாய்போல்
கேடு சூழநும் கிளவி யுள்ளதே;
பெண்களை வம்புக் கிழுக்கும் பேடியர்
எண்கள் மிகுதி, இதனையின் றறிகிறேன்;
கயவர்க் குலகில் கணக்கே யில்லை
நயவஞ் சகம்புரி நரிகள் பலவுள
நங்கையர் முன்னே வால்குழை நாய்கள்
இங்குள வாறுபோல் எங்கும் உளவென,

(சிம்மன்)

நினது பேச்சென் நெஞ்சை யுறுத்தும்
எனது கருத்தை எடுத்தியம் புவலியான் :

---

70. தாரம் - மனைவி. 77. ஓம்புதல் - பேணிக்காத்தல். 83. கிளவி - பேச்சு.

அயலவர் பெண்ணை அம்பிகா பதிபோல்
மயல்கொண் டழைக்கும் வன்முறை மறுப்பல்;
உள்ளம் நனிகலந் துடன்படு மாதையே
தள்ளா தேற்பேன் தக்கதே யிஃதென,

(அமராவதி)

உதவும் வாழையில் ஊசியேற் றல்போல்
இதனை யென்பால் இயம்புங் குறிக்கோள்
அதனை ஒல்லை அறிவிப் பீரென,

(சிம்மன்)

சோழர் மரபிற் றோன்றினை நீயே
தோழமைப் பல்லவர் குலத்தியான் தோன்றினேன்
அரச மரபின ரல்லமோ நாஅமே!
உரைசெயத் தயக்கமேன் உனக்கியான் கணவனாய்
வரச்செய நீயும் வழிவகுப் பாயென,

(அமராவதி)

பல்லவர் குலந்தான் பட்டுப் போனதே,
நல்ல தன்றுநின் நயவஞ் சகவுரை.
அரசிளங் குமரன் அல்லனோ நீயும்!
பரசும் எந்தம் படைத்தலைவ னன்றோ?
பாராள் வேந்தர்க்குப் படைஞர் அடிமையே!
ஓரா தேதோ உளறுகின் றனைநீ;
தாய்க்குப் பிணியெனத் தங்கையைப் பிரித்தனை;
நாய்க்கு நனியுள நன்றியும் உனக்கிலை
உண்ட வீட்டிற் கிரண்டகம் செயுமுனைக்
கண்டால் எந்தை காலனாய் மாறுவார்
உயிர்வேண் டுதியேல் ஒல்லை ஓடிடு
மயிரிழை தவறினும் மாளுவாய் என்ன,

---

93. மயல்-காமமயக்கம். 96. வாழை - வாழைப்பழம். 98. ஒல்லை - விரைவில். 107. பரசுதல் - போற்றுதல். 109. ஓராது - ஆய்ந்தறியாமல். 113. எந்தை - எம் தந்தை.

(சோழமா தேவியும் அமைச்சன் மனைவி கமலியும் ஆங்கு வருதல்)

அமராவதி அன்னை அரசமா தேவியும்
அமராச் சிம்மனின் அன்னை கமலியும்
அமரா வதியைக் காணவங் கடைந்தனர்.

(அமராவதி சிம்மனைக் கடிதல்)

சிம்மநின் னன்னை செறிந்த மகிழ்வொடு
செம்மையா யிருப்பதைச் சிறிது காணீ !
உனது வஞ்சகம் ஊரறி ஒன்றும்;
இனமும் இங்கா இருக்கிறுய் மடவோய் ? .
எனவே கடிந்தபின், இப்பால் தன்னை
அடைந்ததன் அன்னையை, கமலியை நோக்கி
நடந்ததைக் கூறவே, நழுவினன் சிம்மன்.

(கமலியின் வேண்டுகோள்)

கமலி அமராவதி காலில் விழுந்தே
அமளி செயாதிதை அடக்கிட வேண்டுவல் ;
மன்னர் அறியினென் மகன் தலை உருளும் ;
அன்னைமா தேவியே! அமரா வதியே !
சிம்மனைக் காத்தல்உம் சிறந்தபே ரருளென,
சிம்மனைப் பொறுத்ததாய்ச் செப்பினர் இருவரும்.
விம்மிய கமலியின் வேதனை குறைந்ததே.
ஆங்குநின் றகன்றபின் அலமருங் கமலி
தாங்கொணுத் துயரொடு தன்மனை ஏகிக்
கணவன் காடவற் கண்டு நடந்ததை
உணவு கொள்கையில் உரைத்தனள் அஞ்சியே.

---

117. அமரா - பொருந்தாத. 119. செறிந்த - மிகுந்த. 122. இனமும் - இன்னமும் (இடைக்குறை). 127. அமளி - ஆரவாரம், ஆர்ப்பரிப்பு. 133. அலமருதல் - கலங்குதல்.

6. தாரகை அமராவதியொடு சூழ்ந்த காதை

அம்பிகா பதியை அடைய விரும்பிய
தாரகை யுன்னித் தனக்குள் சூழ்ந்தாள் :
அவனைக் காண்டல் வேண்டுமாயின்
அவன் கன்னி மாடம் அடிக்கடி அடையச்
செய்தலே நன்று; சீரியோன் அங்கண்
எய்தல் வேண்டின் அமராவதி யிசைவு
தரச்செய வேண்டுமத் தலைவியே யவனை
வரச்செயு மாறு வழிசெய வேண்டும்.
அம்பிகா பதியின் அளவில் புலமையை
நம்பச் செயினம ராவதி நயப்பாள்
என்று சூழ்ந்தே ஏகிய தாரகை
அமரா வதியின் அடிபணிந் திட்டென்

(தாரகை கூறல்)

தமையன் இழைத்த தவற்றை யெண்ணி
அமைதி யிலாஅமே அலமரு வலியான்
பொறுத்தருள் கென்று பொய்யாய் வேண்டப்
பொறுத்ததா யவளும் புகலத் தாரகை
அம்பிகா பதியின் அழகும் அறிவும்
உம்பரும் பெற்றிலர்; உயர்புலத் தவரைக்
காணநாம் பெற்றது கருதினற் பேறே ;
மாணநாம் அவரை மகிழ்ந்திங் கழைத்துத்
தமிழின் சுவையைத் தரச்செயப் பெறினே
அமிழ்த மாந்தின ராவோம் என்ன,

---

2. உன்னி - எண்ணி 5. சீரியோன் - சிறந்தவன்; அங்கண் - அவ்விடம். 6. எய்தல் - அடைதல். 16. புகல - சொல்ல. 18. உம்பர் - தேவர்; புலத்தவர் - அறிஞர். 20. மாண - சிறப்புற. 22. மாந்துதல் - உட்கொள்ளல்.

(அமராவதி கூறல்)

அம்பி காபதி அயலவர் பெண்ணை
வம்புக் கிழுத்த வஞ்சக னல்லனோ ?
அவனையிங் கழைப்பதை அறியின் எந்தை
அவனொடு நம்மையும் அவ்வுல கனுப்புவார்.
குறும்பு செய்த கொடியவன் அவனையான்
விரும்புதல் செய்யேன் வெறுக்கின் றேனென,

(தாரகை)

ஆடவர் சிறந்தவோர் அழகியைக் காணின்
பேடிய ரல்லரோ பெறமுய லாவிடின் ?
தங்கச் சிலையாம் தலைவியே உன்றனைத்
தங்கச் செய்தார் தமதுளந் தனிலே.
நின்னை நெஞ்சில் நிறுவிய ஒருவரைக்
கொன்னே பழித்தலே குறும்பு செய்தலாம்.
அவரை மணக்க அழைக்க வேண்டா ;
அவரது புலமையை அருந்த அழைப்போம்.
''நவிறொறும் நூல்நயம் போலும் பயிறொறும்
பண்புடை யாளர் தொடர்பு''என் பதுகுறள்.
அம்பிகா பதியை அழைத்துரை யாடின்
இம்பர் இருபே ரின்பமும் எய்தலாம்.
கோவை பாடிய கூர்மதிப் புலவரை
பாவைநீ யழைத்துப் பாராட்ட வேண்டுமால்.
நுந்தை யவரை நுடங்கச் செய்தார் ;
எந்தையோ அவரை ஏத்துதல் செய்வர்.
மன்னர் செய்த மாணாப் பிழைக்கு
நன்னர் மாற்று நாம்செயல் கடனென,

26. அவ் வுலகு - மேலுலகம். 34. கொன்னே - வீணே. 40. இம்பர் - இவ் வுலகம் ; இரு பேரின்பம் - இம்மை யின்பமும் மறுமை யின்பமும் 42. வேண்டுமால் - ஆல் - ஆசை. 43. நுந்தை - உம் தந்தை ; நுடங்குதல் - துவளல், வருந்தல். 44. ஏத்துதல் - போற்றுதல். 45. மாணா - சிறப்பில்லாத.

(அமராவதி)

எந்தையின் செயலை ஏத முடைத்தென
நொந்துநீ கூறலின் நோக்கம் யாதென,

(தாரகை)

நிலவரை யதனில் நீள்புகழ் பெற்ற
புலவரைப் போற்றுதல் புரவலர் கடனென
நலமுறக் கற்றதை நனிமறந் தனையோ ?
அரசர் அழியினும் அருந்தமிழ்ப் புலவோர்
ஒருசொட்டுக் குருதி உள்ள வரையிலும்
உயிர்தந்து காப்பர் உயர்தமிழ் என்றே
அயர்வின் றுணர்ந்த அதியமான் ஔவைக்கு
உயிர்தரு நெல்லி உவந்தளித் தானரோ ;
காதலி நோக்கும் கடைக்கணில் சொக்கிக்
காதல் பணிபுரி காதலன் மான,
மோசி கீரற்கு முன்னொரு சேரன்
வீசினன் விசிறி வியன்றமிழ் விருப்பால் ;
கூடல் கொற்றவன் குறைவு செய்ததால்
வாடி வண்டமிழ்ப் புலவன் இடைக்காடன்
நீடு மதுரையின் நீங்கவே, சிவனும்
தேவி தன்னொடு திருநகர் நீங்கி
இடைக்கா டன்பின் ஏகினன் என்பர் ;
காஞ்சிப் பல்லவன் கணிகண்ணனை விரட்ட
அவன்றன் தலைவர் மழிசை யாழ்வாரும்
அவன்பின் சென்றதை அறிந்த மாலவன்
செந்தமிழ் ஆழ்வார் பின்னே சென்றனன் ;

---

47. ஏதம் - குற்றம். 49. நிலவரை—பூவுலகம். 50 புரவலர் - காப்பாற்றுபவர் (அரசர்). 59. மோசிகீரன் - ஒரு தமிழ்ப் புலவர் ; சேரன் - சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்னும் மன்னன். 61. கூடல் - மதுரை. 63. நீடு - நெடுங்காலம் நிலையுடைமை. 66. கணிகண்ணன் - திருமழிசையாழ்வாரின் அடியவன. 68. மாலவன் - திருமால்.

அந்தமிழ்ப் புலவோர் பெருமை யனைத்தும்
நந்தம் நாவால் நவிலவொண் ணுதே!
ஆதலின் புலவர் அம்பிகா பதியைக்
காதலோ டழைத்துக் கனிந்துரை யாடின்
மன்னர் பிழைக்கு மாற்று மருந்தாம்
என்னவே தாரகை இயம்ப, அமராவதி
ஆழ எண்ணினள்; அம்பிகா பதியைத்
தோழமை கொள்ளத் துவங்கினள் நெஞ்சில்.

(அமராவதி கூறல்)

எவரும் அறியா இடந்தனில் இரவில்
அவர்வரு கைதர ஆவன செய்குவம்.
மன்னரும் அணுகா மறைவிடம் உடுத்தும்
கன்னி மாடக் கள்ளக்காப் பறையே.
பின்னர்ப் பேசுவம் பெதும்பைநீ உறங்கெனக்
கொற்றவன் பாவை கூறிடத் தாரகை
வெற்றி யுயிர்ப்பு விட்டனள் பெரிதே!
கரைப்பார் கரைப்பின் கல்லுங் கரையுமென்
றுரைப்பதோர் வகையில் உண்மை போலுமே!

---

73. காதல் - அன்பு. 82. பெதும்பை - பெண். 84. உயிர்ப்பு - மூச்சு.

7. அம்பிகாபதிக்கு மடல் வந்த காதை

வீட்டுமுற் றத்து வெளியில் ஒருநாள்
பாட்டோன் றிசைத்த படியம் பிகாபதி
நின்ற வேளையில் நீள்குழல் ஒருத்தி
சென்றங் கமராவதி சேர்க்க ஏவியதாய்க்
கூறி யொருமடல் கொடுத்துப் போந்தனள்.
அம்பிகா பதிதன் அறைக்குள் சென்று
மகிழ்ச்சி யோடு மடலைப் படித்துளம்
நெகிழ்ச்சி யுற்றனன் நீடவா வுடனே
படித்தனன் மீண்டும் படித்தனன் மேலும்;
துடித்தனன் நெஞ்சம் துள்ளினன் குதித்தனன்.
"அற்றைநள் ளிரவில் ஆரு மறியாமே
புற்றரைக் கன்னி மாடப் பொதும்பரில்
காண விரும்புவல் காலத் தோடவண்
மாண வருகென" மடலில் இருந்ததைப்
படித்துப் படித்துப் பரபரப் பெய்தினன்
அடுத்துச் செய்வ தறியா தாடினன்.
ஞாயிறே ஒல்லை மறைகென நவின்றனன்
காரிருள் கடிதில் வருகெனக் கரைந்தனன்
இன்னமும் மெல்ல இயங்கலா மோவெனக்
கன்னல் வட்டிலைக் கடிந்து கொண்டனன்
என்ன உடையணிந் தேகலாம், அவட்கே
என்ன நிறவுடை இனிக்குமென் றெண்ணினன்;
முதலில் பேசுதல் மொய்குழல் நங்கையா?
முதலில் வழங்கும் முத்தம் எவரது

---

3. குழல் - கூந்தல். 5. மடல் - கடிதம். 11. அற்றை - அன்றைய; நள்ளிரவு - நடு இரவு. 12. புற்றரை - புல்தரை; பொதும்பர் - சோலை. 18. கரைந்தனன் - அழைத்தனன். 20. கன்னல் வட்டில் - நேரம் அறிவிக்கும் கருவி (கடிகாரம்).

அழைப்பு விடுத்த அவளே முதன்முதல்
குழைப்பொடு தழுவிக் கொஞ்ச வேண்டுமால்;
இல்லை யில்லை ஏந்திழை முந்துதல்
நல்ல தன்று நானே முதலாள்
என்றெலாம் என்னவோ எண்ணிக் குழறுவான்:
ஞாயிறு நந்துபோல் மெல்ல நகர்வதோ!
தீயரும் இன்னணம் தீமைசெய் யாரே!
நண்பகல் நமற்கு நான்செய் கெடுதியென்?
வன்பக லாக வளருமால் நெடிதே;
மாலை செய்யும் மாலை வந்தும்
காலை ஏய்ப்பக் கால்கொண் டுள்ளதே!
அப்பா! இருளும் அடைந்ததிப் போதுதான்!
எப்போது நள்ளிருள் எய்துமோ அறியேன்;
ஓகோ ஊரொலி ஒடுங்கி விட்டதே
ஆகா நள்ளிரா ஆமாம் இஃதென
இன்ன பிதற்றியோன் இரும்பே ரரண்மனைக்
கன்னி மாடக் காவினை நோக்கி
நெடிய நகர்முழு துறங்கும் நேரம்
கடிது பறந்தனன் கால்களாம் சிறகால்.
ஊர்க்கா வலர்குழல் ஊதொலி யொருசார்
கூர்ப்பல் நாய்கள் குரைப்பொலி யொருசார்;
இன்ன வன்றி எங்கணும் அமைதி
துன்னக் கன்னி மாடத் தோட்டம்
அடைந்தனன் ஒருவரும் அறியா வண்ணம்
நடந்தனன் மெல்ல நறுமலர்க் காவினுள்.
புதியவ ளுதலின் பொதும்பர்க் குள்ளே
எதுவழி எங்கே யாரைக் காண்பது
என்ப தறியாது ஏந்தல் திகைத்தான்.

---

29. குழறுவான் - குழம்பிக் குளறுவான். 30. நந்து - நத்தை. 32. நமன் - எமன். 34. மாலை - மயக்கத்தை; மாலை - மாலைநேரம். 35. ஏய்ப்ப - போல; கால் கொள்ளுதல் - அழுந்த நிலைத்தல். 41. கா - சோலை. 47. துன்ன - பொருந்த. 50. பொதும்பர் - சோலை. 52. ஏந்தல் - அம்பிகாபதி.

இன்பம் நல்கும் இனியவப் பொழிலின்
சிறப்பு முழுதும் செப்புதல் எளிதோ?
மறப்பரு பயனுறு மரவகை பற்பல
தேனினும் இனிய தீங்கனி பயந்து
வானுற வோங்கி வயங்கி நிற்குமால்.
இயற்கையின் அறைகூவலை ஏற்றுவென் றாற்போல்
செயற்கையா யமைத்த செய்குன்று ஒருசார்;
இஞ்ஞா லத்தில் இருட்கொரு வெற்றியாய்
செஞ்ஞா யிற்றொளி சிறிதும் புகாத
அஞ்செம் மரங்களின் அடர்செறி வொருசார்;
வேங்கையின் தோலை விரித்துவைத் தாலெனப்
பாங்குறு பன்மலர்ப் பரப்பது மறுசார்;
கன்னி வேம்பும் காளை அரசும்
மன்னு காதலர் மயங்கிறாற் போலப்
பின்னு கிளைகளாம் கைகளாற் பிணைந்து
துன்னி யிருக்கும் தோற்றம் ஒருபால்;
கொழுநரோ டிணைந்த குலப்பெண் நிகரக்
கொழுகொம்பு சுற்றிய கொடிவகை யொருபால்;
காதலர்ப் பிரிந்தோர் கவன்று வாடவும்
சாதலை யவர்க்குச் சாற்றுதல் போலவும்
அன்றிற் பேடையும் சேவலும் அணைந்தே
ஒன்றி யெழுப்பும் உருக்கொலி மறுபால்;
பல்வகை மலர்க்கொடி பரவிய வாவியில்
சில்வகை மலர்கள் சிரிப்பாய்ச் சிரிக்கும்;
அகலிதழ் குவிந்துதாம் அயர்வுற் றிருந்த

---

57. வயங்கி - விளங்கி. 58. அறைகூவல் - சவால். 59. ஒரு சார் - ஒரு பக்கம். 60. ஞாலம் - பூமி, உலகம்; இருட்கொரு - இருளுக்கு ஒரு. 62. அஞ்செம் - அம்செம் - அழகிய செம்மையான. 63. வேங்கை - புலி. 64. பாங்கு - நல்லியல்பு. 65. வேம்பு - வேப்ப மரம்; அரசு - அரசமரம். 69. கொழுநர் - கணவர். 72. சாற்றுதல் - அறிவித்தல். 73. அன்றில் - ஆணும் பெண்ணும் இணைபிரியாத ஒருவகைப் பறவை இனம். 75. வாவி - குளம்.

பகலெல்லாம் தம்மைப் பார்த்துச் சிரித்த
தாமரை குவிந்து தருக்கடங் கிடவே
ஏமம் இலாமே இருந்தவவ் விரவில்,
அல்லியும் நெய்தலும் ஆம்பலும் மலர்ந்தே
எள்ளி மரையை இன்பமாய்ச் சிரிக்கும்;
பரத்தையர் பலரொடு பயின்றே அழியும்
கருத்தே யில்லாக் கயவரே போல,
பகலில் மலரும் பல்வகை மலர்களை
அகலா திருந்தே அருந்தேன் உறிஞ்சி
இரவில் வெவ்வே றினத்து மலர்களில்
மருவுகள் ளருந்தி மயங்கும் ஞிமிறுகள்.
கன்னி மாடக் காவகம் ஆளும்
கன்னியர்க் கெதிர்ப்புக் கட்சிகள் பலவுள;
ஆடலில் தோற்ற அணிமயில் ஒருபகை
பாடலில் தோற்ற பண்குயில் மறுபகை
நடையில் தோற்ற அன்னம் நனிபகை
நாட்டம் தோற்ற நவ்விகள் கடும்பகை
முகத்திற்குத் தாமரை முற்றும் தோற்றதே
கண்ணுக்குத் தோற்றது கருங்குவளை யாகும்
கைக்குத் தோற்றது காந்தள் ஐயமென்!
தோட்கு மூங்கில் தோற்றது பழங்கதை
இன்னபல் கட்சிகள், காட்சிக ளிடையே
கன்னியர் ஆளுமக் காவின் ஒருபால்
முக்கா டிட்ட முழுநிலா ஒன்று
புக்கது கண்டனன் பூரிப்பு கொண்டனன்;

---

78. சிரித்த - பரிகசித்த. 80. ஏமம் - இன்பம். 81. நெய்தல்- ஒருவகை நீர்ப்பூ. 82. மரை - தாமரை (முதற் குறை); சிரித்தன - பரிகசித்தன. 83. பரத்தையர் - விலை மகளிர். 88. கள் - தேன்; ஞிமிறு - வண்டு. 90. எதிர்ப்புக் கட்சிகள் - எதிர்க் கட்சிகள். 94. நாட்டம் - பார்வை; நவ்விகள் - மான்கள். 97. காந்தள் - கை போன்ற ஒருவகை மலர்; ஐயம்என் - சந்தேகம் என்ன. 98. தோட்கு - தோளுக்கு.

அமரா வதியே அவ்வுரு வென்று
நினைந்து காவிடை நின்றனன் சிலைபோல்.
குனிந்த தலையொடு குறுகிற் றவ்வுரு.
அமரா வதியென் றழைத்தனன் மெல்ல;
அம்பிகா பதியென் றழைத்தவவ் வுருவம்
அவனைக் கட்டி யணைத்துக் கொண்டது.
அவனெதிர் பாரா ததிர்ச்சி யுற்றனன்.
நங்கையர் நாணம் நனிமிக உடைமையில்
இங்ஙனம் முதலில் தழுவல் இயல்பிலை
எங்ஙனம் இப்பெண் என்னைத் தழுவினள்
என்ப தறியேன்; இவளது செய்கை
மன்பதை யுலகின் மாறு யுளதென
எண்ணிமுக் காட்டை எடுத்தனன் மெல்ல;
கண்ணி தாரகை நிற்கக் கண்டனன்.
சீய வேட்டையில் சிறுநரி சிக்கவே
காயுமம் பிகாபதி கனன்று கடிவான்:
அமராவதி பெயரால் அழைப்பு விடுத்து
நமன்போல் இங்ஙனம் நடந்து கொண்டனை
தரமினீ தாரகை யல்லையோ? இன்னொரு
தரமிவ் வாறு தவறுசெய் யற்க.
நரிமா வலையில் அரிமா விழுமா?
கயலுறுந் தூண்டிலில் களிறு சிக்குமா?
தாரகை கண்ணியில் தடுக்கி விழேனியான்;
அரசிளங் குமரி அமரா வதியையே
முரசு முழங்கயான் முடிப்பேன் திருமணம்;
ஒல்லை யிவணின் றேடிடு மாயக்
கள்ளி யினியென் கண்ணில் படற்க;
நல்லதன் றிதுவென நனிகடிந் துரைத்தான்.
கன்னி தாரகை கனிவொடு மொழிவாள்:

---

114. மன்பதை - மக்கள் சமூகம். 117. சீயம் - சிங்கம். 118. கனன்று - சினந்து. 121. தரமினீ - தரம் இல்லாத நீ. 124. களிறு - ஆண் யானை.

பொன்னிற் சிறந்த புலவ ரேறே
என்னைக் கைவிடா தேற்க வேண்டுவல்
தாணுவருந் திருவைத் தாளால் உதைப்பதா?
மாணும் அமராவதி மன்னன் மகளாம்
கானலை நீரெனக் கருதுதல் அறிவோ?
எட்டாக் கனிக்குக் கொட்டாவி விடுவதா?
திட்டமா யுமக்குத் தெரிவிப் பலியான்
அரச குமரி அறவே நும்மைப்
பரச லின்றிப் பழிப்ப தறியீர்!
“அம்பி காபதி அயலவர் பெண்ணிடம்
வம்பு செய்யும் வஞ்சக நாயாம்;
குறும்பு செய்த கொடியவன் அவனை
விரும்புதல் செய்யேன் வெறுப்ப லியானென”
அமராவதி என்னிடம் அறிவித்த துண்மை.
அரும்பெரும் புலவர் அம்பிகா பதியை
விரும்பா விடினும், அவர்தம் வியன்றமிழ்
அறிவைச் சுவைக்க அழைத்தல் கடனென
அடியேன் பரிந்துரைத் தவளைத் திருத்தினேன்;
துடியிடை யவளுமைத் தொலைக்கும் மறலியாம்;
எனவே என்னை ஏற்பீர் என்றுதீ
வினைபோல் தாளில் வீழ்ந்தனள் பற்றியே.
அஞ்ஞான் றங்கணோர் அரிவை வந்தனள்
செஞ்ஞா யிறுமுன் செந்தா மரைபோல்
அம்பிகா பதிமுன் அகமிக மலர்ந்து
நம்பியே வணக்கம் நல்வர வென்றபின்,
தண்டிங் கள்முன் தாமரை மானக்
கண்டுதா ரகையைக் கவின்முகம் குவிந்து

---

134. திரு - இலக்குமி. 135. மாணும் - மான் போன்றவளாகிய. 136. கானல் - வெய்யிலில் நீர்போல் தெரியும் ஒருவகை ஒளியலை. 150. துடியிடை - உடுக்கை போன்ற இடுப்பு; மறலி - எமன் 153. அஞ்ஞான்று - அப்பொழுது; அரிவை - பெண். 158. கவின் அழகு.

என்னடி பிதற்றினாய் என்னையேன் ஏசினாய்?
கன்னி மாடம் கடந்துநீ காவினுள்
புக்கதைக் கண்டியான் புலப்படா தெவர்க்கும்
புக்கனன் ஈண்டுநீ புகன்றவை யனைத்தும்
பின்னே மறைந்து பேதுறக் கேட்டனன்.
என்னே நின்செயல்! என்னையும் அவரையும்
கொன்னே ஏய்த்தனை குள்ள நரிநீ!
'தன்னையே தன்வினை தகிக்கும்' என்ப;
இன்னே யிவணின் றேகுதி என்றாள்
அவளே அமரா வதியாம் அரிவை.
துவளுங் கொடியெனத் தொழுது தாரகை
பொறுத்தருள் கென்றவள் பொன்னடி வீழ்ந்தாள்.
வெறுத்தவள் விரைவில் செல்கென விரட்டக்
கைக்கெட் டியது வாய்க்கெட் டாதுளம்
தைக்கும் துயரொடு தாரகை போந்தனள்.
அமரா வதியும் அம்பிகா பதியும்
அமைவொடு சிறுபொழு தசையாது நின்றபின்
அம்பி காபதி யவளை நோக்கி
நம்பவோ தாரகை நவின்றதை யென்ன,

(அமராவதி கூறுதல்)

அமரா வதியவற் கன்புடன் கூறுவாள்:
நுதலா தும்மை நொய்வொடு வைது
முதலில் வெறுத்தது முற்றும் உண்மை.
பின்னர்உம் புலமையின் பெற்றி யறிந்ததும்
நன்னர்ப் பழக நச்சினேன் என்ன,

163. பேது - வருத்தம். 167. ஏகுதி - செல்வாய். 179. நுதலாது - கருதாது; நொய்வு - எளிமை. 181. பெற்றி - இயல்பு, தன்மை. 182. நச்சினேன் - விரும்பினேன்.

(அம்பிகாபதி)

நச்சுதல் என்பது நட்பொடு நிற்குமோ?
மெச்சும் காதலாய் மேலும் வளருமோ?
அச்ச மின்றிதை யறிவிப் பாயென,

(அமராவதி)

நட்பாம் மொக்குள் நாளை காதலாய்ப்
பெட்பொடு மலர்ந்து பெருமணம் வீசுமிக்
காவகம் வந்து காலம் நீண்டது;
காவலர் காணின் கடுந்துயர் நேரும்;
நாளை யீண்டிதே நள்ளிருள் செறியும்
வேளை வருகென வேண்டி மறைந்தனள்.
வறிஞன் பெற்ற வைப்பிழந் தாலென
அறிஞன் அம்பிகாபதி அயர்ந்துசென் றனனே

---

186. மொக்குள் - அரும்பு, மொட்டு. *187.* பெட்பு - அன்பு, ஆசை, விருப்பம். *188.* காவகம் - சோலை. *192.* வைப்பு - நிதி.

8. அமைச்சன் குடும்பொடு சூழ்ந்த காதை

தன்மகன் படைஞரின் தலைவ னாகிய
சிம்மனோ டமரா வதியைச் சேர்த்து
நன்மணம் வல்லே நடத்த விரும்பிய
காடவன் தன்மனை கமலி கூறிய
வாட வைக்கும் வன்செயல் ஓர்ந்தனன் ;
ஈடில் என்மகன் சிம்மனை இழித்தே
ஓடச் செய்வதா ஒருத்தி ! அவளே
நாடச் செய்வேன் நய்ந்து சிம்மனை ;
அம்பிகா பதியவ் வமரா வதியை
நம்புதல் மறந்து நயமொ டென்மகள்
தாரகை தன்னைத் தண்மணம் புரிந்து
சீரது பெற்றுச் சிறப்புடன் வாழ
ஆவன சூழ்வனென் றையமில் லெண்ணம்
மேவச் சூளுரை மேற்கொண் டனன்பின்
சிம்மனை யழைத்துச் செப்புவான் : மைந்த !
நம்மனை அமராவதி நண்ணச் செய்வேன்
உமது திருமணம் ஒல்லை நடைபெறும்
நமது தூண்டிலின் நழுவ இயலுமோ ?
கன்னி மாடக் காவின் பக்கம்
இன்னொரு முறைநீ ஏகுதல் வேண்டா.
வேந்தனே நின்னை விரும்பி மகளை
ஈந்திடச் செய்வேன்; இனியநம் தாரகை
அம்பிகா பதியை அடையச் செய்வேன் ;
நம்பு வீரென நவின்ற வேளையில், .

---

3. வல்லே - விரைவில். 4. தன்மனை - தன் மனைவி. 16. நம்மனை - நம் வீடு. 17. ஒல்லை - விரைவில்.

(கமலி வருதல்)

கமலி வந்து கணவற் குரைப்பாள் :
ஞமலியின் ஞரலென ஞயமே யின்றியும்
பெண்மணி யென்று பெட்பு செயாதும்
கண்மணி தாரகை கலங்கக் கடிந்துரைத்து
அம்பிகாபதி நெருநல் அலறச் செய்ததாய்த்
தாரகை என்னிடம் தனித்துக் கூறினள்.
யாரது பொறுப்பர் மறிவினை யாதென
வெந்த புண்ணில் வேலினைப் பாய்ச்ச
நொந்த வுளத்தனாய் நொடித்துக் கூறுவான் :

(காடவன் கூறுதல்)

எந்தம் மக்கள் இருவரும் காதல்
தந்த துயரால் தவநனி வாடுவர்.
இவர்தமை ஏய்த்தே இழிவு செய்த
அவர்தமைச் செக்கின் எள்ளென ஆட்டுவல் ;
சிம்மனுக் கமரா வதியாம் சிறுக்கியும்
தாரகைக் கம்பிகா பதியாம் தருக்கனும்
கிடைத்தில ரேனும் கிடக்க ஒருபால் ;
மடைத்தலைக் கயலென மாட்டுவர் ஒருநாள்.
இம்மையில் இருவரும் மணப்ப தேது ?
அம்மையில் ஒருகால் ஆகலாம் இவர்மணம்
என்றுதன் மக்கள் மனையிடம் இயம்பிச்
சென்றனன் எழுந்து சினத்தொடு வெளியே.
கன்னி மாடக் காவிற் கினிநீ

---

26. ஞமலி - நாய்; ஞரல் - ஒலி (குரைத்தல்); ஞயம் - நயம். 29. நெருநல் - நேற்று. 31. மறிவினை - பதிலுக்குச் செய்யும் செயல். 35. தவ நனி - மிக மிக. 38. சிறுக்கி - சிறிய குணம் படைத்தவள், சிறு பெண். 39. தருக்கன் - இறுமாப்பு உடையவன். 40. கிடக்க ஒரு பால் - கிடக்கட்டும் ஒரு பக்கம். 42. இம்மை - இப் பிறப்பு. 43. அம்மை - மறு பிறப்பு; ஒரு கால் - ஒரு வேளை.

துன்னற் கென்றே தந்தை சொல்லினும்
சிம்மன் அதனைச் செவியிற் கொள்ளான்;
எம்மனோர் இன்னதற் கென்றும் அஞ்சார்;
தான்கனி யாததைத் தடியா லடித்தே
யான்கனி விப்பேன் என்றுநம் பினனே.
'அவன் தம்பி அங்கதன்' எனுமாப் போல
அவன்பின் பிறந்த அரிவை தாரகையும்
அம்பிகா பதியை அடைதலை உறுதியாய்
நம்பி யிருந்தனள் நாளெதிர் பார்த்தே.

---

47. துன்னற்க - செல்லாதே. 49. எம்மனோர் - எம்மைப் போன்றவர்.

9. காதலர் உரையாடு காதை

மறுநாள், நடுவிரா மன்னன் மகளை
இறுகத் தழுவும் எண்ண அலையில்
தத்தளித் தம்பிகாபதி தனக்குள் பேசுவான் :
இத்தனை நாள்வரை எந்தவோர் பெண்ணையும்
தொட்டது மில்லை தோய முத்தம்
இட்டது மில்லையென் மார்பில் முலைகள்
பட்டது மில்லை பவள இதழ்சுவைத்
திட்டது மில்லை ; இன்றிரா எல்லாம்
பொய்த்த லின்றிப் புலர்வதன் முன்னே
துய்த்தல் நிகழும் ; தூமொழி யின்கைப்
பற்றும் போதியான் பதற்றம் உறுவனோ !
மற்றவள் கன்ன மாங்கனி சுவைப்பனோ !
மார்பொடு மார்பு மயங்கும் போதவள்
கூர்முலைக் கொம்பால் குத்துப் படுவனோ !
"பாலொடு தேன்கலந் தற்றே பனிமொழி
வாலெயி றூறிய நீர்"என் பதுகுறள் ;
ஞாலும் உதட்டை உறிஞ்சு ஞான்று
பாலும் தேனும் பருகு வேனோ !
தழுவிப் பிணைந்து தரையில் புரள்கையில்
நழுவி யுடைகள் நகர்ந்து விழுமோ !
என்று மறியா இன்பச் சுனையில்
இன்று குளித்தியான் ஏறுவ னோகரை !
என்றெலாம் பற்பல எண்ணியம் பிகாபதி
தயிரிடை மத்தாய்ச் சுழன்று தவிக்கும்

7. இதழ் - உதடு. 9. புலர்வது - விடிவது. 10. துய்த்தல் - அனுபவித்தல் ; தூமொழி - தூய மொழி பேசும் அமராவதி 15. பனிமொழி - குளிர்ந்த மொழி பேசும் பெண். 16, வால் எயிறு - வெண்பல். 17. ஞாலும் - தொங்கும் ; ஞான்று - பொழுது.

உயிரொடு சென்றே உரியநே ரத்தில்
கன்னி மாடக் காவினை யடைந்து
கன்னி வரும்வரை காத்து நின்றனன்.
அங்கஞ் ஞான்றவன் அமரா வதியாம்
தங்க மேனியாள் தளர்நடை யிட்டு
வந்ததைக் கண்டதும் 'வருக' என்றனன்.
செந்தமிழ்த் தேன்மொழி செய்தனள் வணக்கம்.
அங்கண் ஓரிடம் அமர்ந்தனர் இருவரும்
எங்கணும் அமைதி இவருளும் அமைதியே!
ஒருவர் மாறிமற் றொருவரை நோக்கியே
இருவரும் மாறிமாறி இதயம் எய்தினர்.
அதிர்தலே யிலாத அம்பிகா பதியை
எதிர்பாரா அதிர்ச்சியொன் றெதிர்நோக் கிற்றே.
கட்செவி புகுதலா? காவலர் வருகையா?
உட்கலின் பொருட்டுவே றுளவா? இல்லையில்லை.
அமரா வதியை அம்பி காபதி
'அமரு' என்றே அழைத்த படியப்
பாவையின் கையைப் பற்ற முயன்றனன்.
'ஆ' வென அலறியே 'அமரு' மறுத்தனள்.
அலறிய காரணம் அறைகென நம்பி
உலறிய நெஞ்சொடு வினவ, உரைப்பாள்:

(அமராவதி கூறுதல்)

'அம்பி' எனைப்பொறுத் தருள வேண்டுவல்
இம்பர் இருவரும் இணைந்த துறுதி
மறுமையும் இணைவோம் மாற்றம் வேறிலை
பொறுமைப் பண்பைநாம் போற்ற வேண்டுமால்
கிணற்று நீரைக் கொள்ளுமோ வெள்ளம்?

---

28. அஞ்ஞான்று - அப்போது. 31. தேனமொழி - அமராவதி. 38. கட்செவி - பாம்பு. 39. உட்கல் - அஞ்சுதல்; பொருட்டு - காரணம். 41. அமரு - அமராவதி. 45. உலறிய - கோபக் குறிப் புக்கொண்ட 46. அம்பி - அம்பிகாபதி. 47. இம்பர் - இவ்வுலகம்.

இருமனம் ஒன்று யிணைந்த போதினும்
திருமணம் முடித்துடல் தீண்டலே நன்றென,

(அம்பிகாபதி)

எம்மொழி யிலுமிலா அகப்பொருள் இலக்கணம்
நம்மொழி பெற்றதை நனிமறந் தனையோ?
களவு முன்னதாய்க் கற்புப் பின்னதாய்
அளவு செய்துநம் அகப்பொருள் கூறும்.
களவிற் பெற்றிடும் காதற் சுவையினைக்
குலவு கற்பிற் பெறுதல் கூடுமோ?
என்றவன் வினவ, இன்மொழி விடுப்பாள்:

(அமராவதி)

''புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்'' என்பது குறள்.
உணர்ச்சி யொன்றே உருக்கம் தருமால்
புணர்ச்சி செய்திடின் போய்விடும் ஆர்வம்
எட்டி யிருப்பினே எழுச்சியும் இருக்கும்
கிட்டி விடினே கிளர்ச்சி மங்கிடும்
கட்டித் தழுவினே கவர்ச்சியும் குறைந்திடும்.
பழகப் பழகப் பாலும் புளிக்குமென்
றழகாய்ப் பெரியோர் அறைந்ததோ ரீரென,

(அம்பிகாபதி)

புணர்ச்சி பழகுதல் வேண்டுமோ, பொருந்தும்
உணர்ச்சி போதுமென் றுரைத்து வள்ளுவர்
நட்புக் கிலக்கணம் நவின்றுளார்; காதல்
பெட்புக் கிஃது பேதாய் பொருந்துமோ?

---

55. களவு - களவுப் புணர்ச்சி; கற்பு - மணந்தபின் புணர்ச்சி. 59. இன்மொழி - அமராவதி. 61. கிழமை - உரிமை, 68. அறைந்தது ஓரீர் - சொல்லியிருப்பதை ஆய்ந்துணர்க. 72. பேதாய் - பெண்ணே.

காமத்துப் பாலில் களவியல் பகுதியில்
'புணர்ச்சி மகிழ்தல்' எனுந்தலைப் புள்ளது;
75 களவிற் புணர்ந்து மகிழ்ந்த காதலன்
அளவில் சுவையினை அடைந்து மொழிவதாய்க்
குறட்பா டல்சில கூறினர் வள்ளுவர்
குறள்களும் உரைகளும் கூறுவல் முறையே:

(குறள்)

79 "வேட்ட பொழுதின் அவையவை போலுமே
80 தோட்டார் கதுப்பினாள் தோள்"

(உரை)

81 "பூச் சூடிய கூந்தலை யுடைய இவள் தோள்கள் எவ்வெப்போது எவ்வெப் பொருளை விரும்பினோமோ அவ்வப்போது அவ்வப் பொருள்கள் போலவே இன்புறுத்திக் கொண்டேயிருக்கும்".

(குறள்)

82 "உறுதோறு உயிர்தளிர்ப்பத் தீண்டலால் பேதைக்கு
83 அமிழ்தின் இயன்றன தோள்"

(உரை)

84 "மேலே படுந்தோறும் என் உயிர் தழைக்கும்படி தீண்டுவதனாலே, இப் பெண்ணுக்குத் தோள்கள், அமிழ்தத்தினால் ஆக்கப்பட்டிருக்க வேண்டும்".

(குறள்)

85 "அறிதோறு அறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு".

(உரை)

"பல கலைகளை அறிய அறிய இன்னும் அறியாதவையே மிகுதி என உணர்வதுபோல, சிவந்த அணிகள் பூண்ட இவளைத் தழுவத் தழுவ, இவளிடம் பெறவேண்டிய இன்பங்கள் இன்னும் உள்ளமை அறியப்படும்.''

அதாஅன்று,
தேரத் தேரத் தித்திக்கும் தமிழ்போல்
ஆர ஆர அமிழ்தாம் இவளது
சீரார் வாயெனச் சிறப்பாய்க் காதலன்
பாராட் டியதாய்ப் பாடினன் ஒருகவி.
வள்ளுவம் முதலிய வாய்மொழி அறிதியோ?
கொள்ளக் கொள்ளக் கூர்வது காமம்
பழகப் பழகப் புளிப்பது ஆன்பால்
பழகப் பழகக் காமத்துப் பாலோ
இனித்த வாறே இருக்கும் என்ப;
நுனித்துணர் வோர்க்கே நுட்பம் தெரியுமாம்;
எனவே இருவரும் இன்பம் துய்ப்பதில்
இனியோர் தடையும் இல்லை யென்ன,

(அமராவதி)

அன்னது சரிபொறுத் தருளுக அம்பி!
மன்னன் மகளியான் மானம் பெரிதால்,
இன்னும் சின்னுள் தள்ளி இணையலாம்.
நம்மைக் கெடுக்க நயவஞ் சகருளர்;
சிம்மன் என்னிடம் செய்துளான் வம்பு;
நும்மைத் தாரகை நோகச் செய்துளாள்.
இன்ன இருவர்க் கேற்ற பாடம்
முன்னர்க் கற்பிக்க முயலுதும் என்ன,

---

87. அதாஅன்று - அதுவல்லாமலும். 88. தேரத் தேர - ஆராய ஆராய. 89 ஆர ஆர - அனுபவிக்க அனுபவிக்க. 93. கூர்வது - மிகுவது. 94. ஆன்பால் - பசுவின்பால். 97. நுனித்து - கூர்ந்து.

நன்னர் ஆகென நம்பி நவில,
ஆண்டவ் விருவரும் ஆவன சூழ்ந்தபின்
ஈண்டு மீண்டும் இருவரும் வந்து
காண்டு மென்று கட்டினர் நடையை.
இலவங் காத்தே ஏமாந்த கிள்ளைபோல்
புலவன் அம்பிகாபதி போக நேர்ந்ததே.
படர்ந்திடக் காமம் பாய்ச்சும் கருவேள்
தொடர்ந்ததன் முயற்சியில் தோல்வி கண்டதால்
கருப்பு வில்லையும் கணைமலர் கணையும்
வெறுப்பொடு கீழே வீசி யெறிந்தனனே.

111. *காண்டும் - காண்போம்; கட்டினர் நடையை - நடையைக் கட்டினர் - சென்றனர்.* ***112.*** *இலவம் - இலவம் பஞ்சுக் காய்; கிள்ளை - கிளி.* ***114.*** *கருவேள் - மன்மதன்.* ***116.*** *கருப்பு - கரும்பு; கணை - அம்பு.*

10. அமைச்சன் அரசனொடு சூழ்ந்த காதை

அம்பிகா பதியும் அமராவதியும்
கொம்பும் சுற்றிய கொடியும் ஏய்ப்பக்
கன்னி மாடக் காவினுள் மறைவாய்த்
துன்னிக் கலப்பதாய்த் தாரகை தூற்றக்
காடவன் கேட்டுக் கனன்று, காதல்
வேடுவன் அம்பிகா பதியை வீழ்த்துவன்
என்று சூளுரைத் தேகினன் அரண்மனை;
வென்றி வேலுடை வேந்தனைக் கண்டு
தாரகை தந்த தகவலைப் பெருக்கி
ஓர உரைத்தே உணர்ச்சியைக் கிளறினன்.

(மன்னன் உரைத்தல்)

மன்னன் கேட்டு மாற்றான் அம்பிகாபதி
இன்னும் உயிரோ டிருப்பதைப் பொறேஎன்;
முன்னர் அவர்தம் முயக்கம் ஆய்ந்த
பின்னரே இருவரும் கொலைசெயப் பெறுவர்.
காடவ! என்மகள் களங்கம் இலாதாள்
ஆடவன் ஒருவற் கடிமைப் படாஅள்
கொன்னே அவள்மேல் குற்றம் சாட்டுதல்
என்னை வாட்டுமால் என்னினிச் செய்குவல்!
எதனைச் சான்றாய் ஏற்றுநாம் முற்றும்
இதனை நம்புதல் இயலும் என்ன,

(காடவன் கூறுதல்)

அண்ணலே நும்மகள் அமரா வதியைக்
கண்ணை யிமைபோற் காக்கும் என்மகள்

---

2. ஏய்ப்ப - போல. 10. ஓர - உணர. 13. முயக்கம் - புணர்ச்சி.

சொன்னதே சான்று சூளுரைப் பேணியான்;
மாட்சி யுறும்நும் மகளின் செயலைக்
காட்சி யளவையிற் கண்டே கூறினள்.
ஐயம் உளதேல் ஆய்வுசெய் திடுவோம்;
வையம் உறங்கும் வேளை வந்ததும்
பையக் கன்னி மாடக் காவினுள்
இன்று நள்ளிரா இருவரும் செல்வோம்;
நன்று காண்போம் நடப்பதை யென்ன,

(வேந்தன் விளம்புதல்)

நல்லது, செய்வோம், நாமே ஆய்வோம்;
இல்லதும் உள்ளதும் இன்றிரா விளங்கிடும்.
தாரகை மொழிந்தது தவறு யிருப்பினும்
நீரதை மெய்யென நிறுவவே முயலுவீர்
முயற்சி தோற்பின் முழுப்பெரும் பழிக்குப்
பொறுப்பு நீருமும் பொல்லா மகளுமே!
தாரகை தலையொடு நுமது தலையும்
பாரக மீது பதைபதைத் துருளும்
இந்த ஆணையை ஏற்ப தாகச்
செந்தமிழ் ஆணையாய்ச் செப்பிடு வீரென,

(காடவன் கழறல்)

என்மகள் தாரகை இல்லாப் பழிநும்
பொன்மகள் மீது பொருத்திக் கூஉறுள்.
தமிழ்மீ தாணை தமிழர்மீ தாணை
இமிழ்கடல் உலகின் இறைமீ தாணை
சென்றுநாம் இன்றிராச் செய்குவம் ஆய்வு.
கன்றுந் தவறு காண விலையெனின்

25. காட்சியளவை - நேரில் கண்டு அளந்து தீர்மானிப்பது. 26. ஐயம் - சந்தேகம். 27. வையம் - உலகம் – உலகத்தார். 34. நிறுவவே - நிலைநாட்டவே. 38. பாரகம் - தரை. 44. இறை - கடவுள். 46. கன்றும் - சினங் கொள்ளத்தக்க.

விரைவிலெந் தலைகளை வீழ்த்த வேண்டா;
அரைகுறை ஆய்வோ அல்லல் தருமால்;
மேலுஞ் சின்முறை மேவி ஆய்வம்;
ஏலுஞ் சான்றுகள் எட்டா வாயின்
காலன் கைக்குக் கடிதெனைச் சேர்க்கென,

(வேந்தன் செயல்)

அரண்செய் தவரை ஆய வேண்டுமேல்
அரண்மனை விட்டுநீர் அகலல் வேண்டா;
எங்கணும் எவரொடும் யாதுஞ் சூழா
திங்கணே என்னோ டிருத்தல் வேண்டுமால்
என்றே ஆணையிட் டிருத்திய பின்னர்,
கன்னி மாடக் காவலை முடுக்கினன்;
அமராவதி எங்கும் அகலா திருக்கத்
தமரை நிறுவித் தாரகை தனதகம்
செல்லச் செய்தனன்; செல்லல் தந்திடும்
வல்லிருள் வருகையை வலியநோக் கினனே.

---

48. அல்லல் - துன்பம். 50. ஏலும் - ஏற்கக் கூடிய. 52. அரண் செய்து - காவல் செய்து. 59. தமர் - தம்மைச் சேர்ந்தவர். 60. செல்லல் - துன்பம்.

11. அரசனும் அமைச்சனும் ஆய்வு செய்த காதை

நள்ளிரா வேளை நண்ண ஐயம்
கொள்ளும் அமைச்சனும் கொற்றவன் சோழனும்
புதியரேய் மாற்றுக் கோலம் புனைந்து
பதியும் காலடி ஒலியும் படாமல்
கன்னி மாடக் காவகப் பக்கல்
நண்ணினர் மிகவும் மெல்ல நடந்தே.
ஆங்கொரு புதரை அமைச்சன் காட்டி
ஈங்குநாம் மறைவா யிருக்கலா மென்று
குறிப்பா யுணர்த்தக் கொற்றவன் அவனொடு
மறுப்பே யின்றி மறைந்திருந் தனனே.
குடக்கி லிருந்தோர் உருவம் குறுக
வடக்கி லிருந்தொரு வடிவம் வந்தது.
இரண்டும் போர்த்தும் முக்கா டிட்டும்
மிரண்டு மிரண்டு மெல்ல நடந்தன.
கண்கள் மட்டும் காணத் தெரியத்
தண்டலை நோக்கித் தரையில் நகர்ந்தன.
நெருங்கிய நிலையில் நின்ற போது
மருங்குறு அமைச்சன் மன்னனை நோக்கி,

(அமைச்சன் கூறுதல்)

அடியேன் கூறிய அனைத்தும் உள்ள
படியே நடப்பதைப் பாரீர் இனியுமெந்
தலைகள் உருளத் தகுமோ கூறீர்
தலைதனைத் தாழ்த்தி வணங்குவல் என்ன,

---

3. ஏய் - போன்ற. 5. பக்கல் - பக்கம். 11. குடக்கு - மேற்கு.
16. தண்டலை - சோலை. 18. மருங்கு - பக்கம்.

(அரசன் கூறுதல்)

அமைச்சரே எனைப்பொறுத் தருள்க கொன்னே
நுமைச்சிறி தளவும் நோகேன் எனது
மாட்சியை என்மகள் மாய்க்குஞ் செயலைக்
காட்சி யளவையிற் கண்டனன் யானும்;
நீட்சியா யிவர்செயல் நிகழ விடுவனோ?
நெருங்கும் இவர்தம் நிலையைக் காணின்
ஒருங்குட லூடலோ டொன்றுவர் போலும்!
அம்பி காபதி அமரா வதியைத்
தொடுமுன் அவனைத் தொலைக்க வேண்டுமால்;
விடுமெனை யவனை வெட்டிடு வேனெனும்
கடுஞ்சொல் மடுத்த காடவன் கூறுவான்:

(அமைச்சன் கூறுதல்)

அம்பி காபதி அமராவதி யுடலைத்
தொடுதலும் பொருஅதீர் தோய்ந்ததை நம்பிடின்
அடுதலும் செய்வீர் அடாத அவனை.
இன்னுஞ் சிறிது பொறுத்தீண் டிருப்போம்;
அன்னவர் இருவரும் அணைத்துக் கொள்ளின்
முன்னுடல் உறவு கொண்டது முற்றும்
உண்மை யெனநாம் உணரலா மென்ன,
அண்மையில் காதலர் அணுகியபோது
அமரா வதியென ஆணுரு விளித்தபின்
அம்பிகா பதியெனப் பெண்ணுரு அழைக்கவே
உருவம் இரண்டும் ஒன்றி யணைத்து
மருவக் கண்டனர் மன்னனும் அமைச்சனும்.
காய்ந்த மாடு கம்புபாய்ந் தாற்போல்

---

29. ஒன்றுவர் போலும் - பொருந்திப் புணர்வர் போலும். 33. மடுத்த – கேட்ட. 35. தோய்தல் - புணர்தல். 36. அடுதல்-கொல்லுதல். 42. விளித்தல் - அழைத்தல். 45. மருவ - தழுவ. 46. கம்பு - கம்பில் - கம்பங் கொல்லையில்.

வாய்ந்த வாய்ப்பை வழுவ விடாஅமே
அஞ்சு மணித்துளி நேரம் ஆகியும்
அஞ்சுத லின்றி அணைத்தே யிருக்கவே,
மஞ்சுறு மன்னவன் மானம் பொறாஅனாய்ப்
பழித்த படியே பாய்ந்தவர் தலையின்
இழுத்துமுக் காட்டை எறிந்தனன் கீழே.
அமைச்சர் மக்கள் அண்ணனும் தங்கையும்
அமைத்த சிலைபோல் ஆங்குநின் றிருந்தனர்.
'அண்ணா' என்றே அலறினள் தாரகை;
'தங்கையே' என்று தவித்தனன் சிம்மன்.
தேளது கொட்டிய திருடனைப் போலவும்
ஆடு திருடிய கள்ளி ஆரவும்
இருவரும் பெரியோர் இருவரைக் கண்டதும்
அருவருத் தஞ்சி அழுதனர் தேம்பி.
நாடி தளர்ந்துடல் நடுங்க நாணொடு
காடவன் கண்டு தன்தலை கவிழ்த்தனன்;
மூடரும் இப்பழி மூண்டதெவ் வாறெனத்
தேடினன் பொருட்டு; தெரியாது திகைத்தனள்;
மன்னனைத் தொழுதனன்; மானமீக் கூர
என்ன செய்வேன் என்று தேம்பினன்.
அழுவதா சிரிப்பதா? அறியா அரசன்
தழுவி யமைச்சனைத் தணிவு செய்தனன்.

(அரசன் கூறுதல்)

அணைக்கு முன்பே அவர்தம் உறவைத்
துணிக்க முயன்றேன் துணிவு பெறாஅநீர்
தடுத்தீர் அதனால் தழுவினர் இருவரும்;

---

50. மஞ்சு - மைந்து - வலிமை. 51. தலையின் - தலையிலிருந்து. 58. ஆரவும் - போலவும். 61. நாணொடு - நாணத்துடன். 64. பொருட்டு - காரணம். 65. மீக்கூர - அதிகப்பட. 68. தணிவு - ஆறுதல்.

தடுக்கா திருப்பின் தங்கையும் அண்ணனும்
நடுக்கா தணைத்தல் நடந்திரா தென்ன,

(அமைச்சன் கூறுதல்)

பொறுத்தருள் கென்று பொன்னடி பணிந்துளம்
கறுத்த காடவன் கக்குவான் கடுவினை:
சூதோ வல்ல சூழ்ச்சியோ மற்றும்
ஏதோ இதனில் இருப்ப துறுதி.
இதற்குக் காரணம் எவரென ஆய்ந்தே
வதக்க வேண்டுமவ் வஞ்சக ரையென,

(மன்னன் கூறுதல்)

நெஞ்சகம் இவர்க்கு நேரிய தாயின்
வஞ்சகர் விரித்த வலையில் வீழ்ந்ததேன்?
தவறு செய்ததில் தக்க பங்கினை
இவர்களும் ஏற்றுளர் என்ப துறுதி.
கையில் வெண்ணெய்க் கட்டி யிருக்க
நெய்யிற் கலைவதேன் நினைத்துப் பாரீர்!
இவரை விட்டுவிட் டேய்த்த வஞ்சகர்
எவரென ஆய்வ தெற்றுக் கோரீர்!
இவரை வினவினே எல்லாம் புலப்படும்
என்று மன்னன் எடுத்துரைத் தனன்பின்
நின்ற சிம்மனை நோக்கி நீயிவண்
வந்த வரலாறு வகையா யுரையென,
நொந்த சிம்மன் நுவலுவன் நிகழ்ந்ததை:

(சிம்மன் கூறுதல்)

இன்று மாலை, அமராவதி ஈந்தாள்
என்று கூறி என்னிடம் ஒருத்தி

74. உளம் - உள்ளம் - மனம். 75. கடுவினை - நஞ்சை. 87. ஓரீர் - உணர்ந்து பார்க்கவும். 92. நுவலுவன் - சொல்லுவான்.

மடலொன் றீந்து மறைந்தனள்; பின்பியான்
மடலைப் பிரித்து மகிழ்வொடு படித்தேன்:
"மறவ ரேறே மைந்துடைச் சிம்ம!
உறவு கொளயான் உள்ளந் துடிப்பல்;
முன்னர் நும்மொடு முரணியது தவறெனப்
பின்னர் உணர்ந்தேன் பிழைபொறுத் தருள்க.
இனியுமைக் கணவரா யேற்றுக் கொள்ள
நனிமிக விரும்புவல் இன்று நடுவிரா
ஒருவரு மறியாது உடலது போர்த்து
வருவது காவலர் அறியா வண்ணம்
கன்னி மாடக் காவகம் வரினே
என்னைக் காணலாம் யானவண் இருப்பேன்" —
என்பதாய் மடலில் இருக்கப் படித்தே
இன்பமா யிவ்விடம் எய்தினேன் என்றான்.

(வேந்தன் தாரகையை வினவல்)

தாரகைக் குழந்தாய் தனியாய் இவ்விடம்
யாரு மறியா தியாங்ஙனம் வந்தனை?
கூறு கென்னக் கொற்றவன் வினவத்
தாரகை கூறுவாள் தழுதழுப் புடனே:

(தாரகை கூறுதல்)

அம்பி காபதி அளித்தா ரென்று
நம்பச் செய்து நண்பகல் ஒருத்தி
தந்தாள் ஒருமடல் தனித்துப் படித்தேன்:
"செந்தமிழ்த் தேனே செழும்பசும் பொன்னே!
தாரகையிற் சிறந்த தாரகைக் கண்ணே!
ஓர விலாதியான் ஒருமுறை யுன்னை
வைதலை யுளத்தில் வைத்துக் கொன்னே

---

97. ஏறே - சிங்கமே; மைந்து-வலிமை. 99. முரணியது - மாறுபட்டது. 117. தாரகையிற் சிறந்த - நட்சத்திரங்களினும் சிறந்த. 119. கொன்னே - வீணே.

பைதல் கொளற்க பாவாய் நின்னைத்
தணக்கும் எண்ணம் தவறெனா உணர்ந்தேன்
மணக்க விரும்புவல் மாற்றம் இனியிலை.
இன்று நடுவிரா எவரும் அறியாமே
ஒன்ற உடலை உடையால் போர்த்துக்
கன்னி மாடக் காவகம் வருக!
என்னை அங்கணே எளிதாய்ப் பெறலாம்"
எனவும் மடலில் எழுதி யிருந்ததால்
மனமகிழ்ந் தீண்டு மன்னினன் என்றான்.

(வேந்தன் வினவல்)

அமராவதி யென்றும் அம்பிகாபதி யென்றும்
ஒருவரை யொருவர் விளித்த குரலால்
ஒருவரை யொருவர் உணராது வெறியில்
இருவரும் இறுகத் தழுவிய தேனென
வெருவ வேந்தன் வினவி மடக்க,

(அண்ணனும் தங்கையும் அறிவித்தல்)

கொழுதிக் குரலை மாற்றிக் குலவுமா
றெழுதி யிருந்ததால் இருவேறு குரலில்
மாற்றிப் பேசவிம் மாற்றம் நேர்ந்ததாய்ச்
சாற்றி யிருவரும் சாய்ந்தனர் தரையில்.
தினையை விதைத்தவர் தினையே யறுப்பர்
வினையை விதைத்தவர் வினையையே அறுத்தனர்.

---

120. பைதல் - துன்பம்; பாவாய் - பெண்ணே. *121.* தணைத்தல் - பிரித்தல். *122.* மாற்றம் - மாறுதல். *124.* ஒன்ற - பொருந்த. *128.* மன்னினன் - அடைந்தேன். *130.* விளித்த - அழைத்த. *133.* வெருவ - அஞ்ச. *134.* கொழுதி - (இயற்கைக்கு மாறுகச்) திருத்தி. *137.* சாற்றி - சொல்லி.

(மன்னன் செயல்)

140 மன்னன் இருவரும் மனையுறச் செய்து
பின்னர்க் காடவன் பிதற்றிய தடக்கி
நாளை யரண்மனை நண்ணுக என்றவன்
தோளைத் தட்டத், துவண்டு காடவன்
தாளைத் தொழுதங் கிருந்து தணந்தனனே.

12. அரசன் அமைச்சனை அழைத்த காதை

தன்னுறு மக்களாம் தாரகையும் சிம்மனும்
இன்னலும் இழிவும் ஏற்கும் வண்ணம்
அமரா வதியும் அம்பிகா பதியும்
ஓர்ந்து திட்டம் உளவாய்த் தீட்டிச்
சேர்ந்து புரிந்த செயலே யிஃதாம்;
பழிக்குப் பழியான் வாங்குவன் பார்க்கென
அழிகுணக் காடவ அமைச்சன் சூழ்ந்துழி
அரசன் அழைப்பதாய் ஆள்வந் துரைப்ப
உரைசெய ஒன்றிலை ஓடி வருவனென்
றமைச்சன் வேந்தனை அடைந்து வணங்க,
அமைச்சனை நோக்கி அரசன் அறைவான்:

(அரசன் கூறல்)

கன்னி மாடக் காவகந் தன்னில்
முன்னிராக் கண்டது முற்றும் எண்ணுக.
தாரகை அம்பிகா பதியை அடையவும்
சிம்மன் அமரா வதியைச் சேரவும்
உளத்தில் வரித்தது உண்மை யென்பதைக்
களத்தில் நின்றே கண்டனம் நாமே.
அண்ணனும் தங்கையும் அணைத்துச் சுவைத்தது
விண்ணுறு வியப்பாம்; விளம்புதி மாற்றம்
இருவரும் இங்ஙனம் இயற்றிய இழிசெயல்
ஒருவத் தக்கது ஓர்ந்து காண்கென,

---

2. இன்னல் - துன்பம். 4. ஓர்ந்து - ஆராய்ந்து. 16. வரித்தது - மணக்க எண்ணியது. 19. விளம்புதி - சொல்லுவாய்; மாற்றம் - பதில். 21. ஒருவத்தக்கது - நீக்கவேண்டியது.

(அமைச்சன் கூறல்)

பொம்மையென் மக்கள்; பொருத்தமாய்ப் பின்னால்
பொம்ம லாட்டம் புரிந்துளார் எவரோ;
அவரைச் சிறையில் அடைக்க வேண்டுமால்;
தவறென் மக்கள் தம்பால் இலையென,

(அரசன் கூறல்)

பொம்ம லாட்டம் எவரோ புரிதல்
நம்முடை ஒப்புதல் இலாது நடக்குமோ?
நமது குற்றமும் ஏற்றலே நன்றாம்.
"ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ" என்னும் திருக்குறள் காண்கென,

(அமைச்சன்)

எய்தவர் இருக்க அம்பை நோவதா?
செய்தவர் இருக்கவென் மக்களைச் சீறின்
உய்தல் யாங்ஙனம் உரைத்தருள் கென்ன,

(அரசன்)

காவகம் வரும்படி கண்டவர் அழைப்பின்
சேவகர் தம்மையும் செம்மையாய் ஏய்த்தே
உம்மிரு மக்கள் உறலா மோவவண்?
நம்மிரு வருமே நமக்குள் பேசுவோம்:
மண்ணைத் தின்கென மற்றவர் கூறின்
உண்ணுவ ரோமண் உம்முடை மக்கள்?
எரியில் விழும்படி ஏவினும் மக்கள்

---

23. பொம்மலாட்டம் - பின்னால் மறைவாயிருந்துகொண்டு, கயிற்றால் பொம்மைகளை இயங்கச் செய்யும் ஒருவகை ஆட்டம். 29. ஏதிலார் - அயலார். 35. ஏய்த்து - ஏமாற்றி. 36. அவண் - அவ்விடம்.

எரியில் மகிழ்ச்சியா யிறங்குவ ரோசொலும்?
'சொல்லுவார் சொல்லினும் கேட்பவர்க் கறிவுதான்
இல்லாது போனதேன்' என்பது பழமொழி.
பிறர்பொருள் விரும்பல் பெரும்பிழை யன்றோ?
திறல்படை மறவன் தீச்செயல் புரிவதோ!
நாட்டைக் காக்கும் நற்படைத் தலைவன்
வீட்டிலும் நற்பெயர் எடுக்க வேண்டுமே!
வேலியே பயிரை மேய்வது முறையோ?
உண்ட வீட்டிற் கிரண்டகம் செய்வதோ !
கன்னி தாரகை காரிரா நடுவண்
கன்னி மாடக் காவகம் செல்வதா!
எனவே சிம்மன் தாரகை யென்னும்
இருவர் பாலும் இரும்பிழை யுளதால்;
அறிவு கொளுத்திநீர் அவர்தமைத் திருத்துவீர்
என்று கூறி இன்னொரு நாள்நாம்
சென்று காவகம் செய்குவம் ஆய்வு
போய்வரு கென்று புரவலன் கூற,
நாய்போல் குழைந்து நழுவினன் அமைச்சனே.

45. திறல் - திறமை. 49. இரண்டகம் - இரண்டு மனம் - வெளியில் ஒருமனம், உள்ளே ஒருமனம்; நம்பிக்கைக் கேடு. 50. காரிரா - கரிய இரவு 54. அறிவு கொளுத்துதல் - அறிவு புகட்டுதல். 57. புரவலன் - அரசன்.

13. காதலர் பாராட்டுக் காதை

அரிவையர் ஆண்மையை அவாவும் வண்ணம்
தெரிவுறும் பேரெழில் திகழ்ந்து சிரிக்கும்
அமரா வதிதன் அகத்துள் எண்ணினள்:
இன்றிராக் காண்பதா யம்பிகா பதியிடம்
அன்றுநாள் குறித்தேன் அவ்வணம் இன்றிரா
சேவகர் எவரும் சிறிதும் அறியாமே
காவகம் போந்து காண்டல் வேண்டுமால்.
அன்றென் கையை அவர்தொட முயன்றார்
கொன்றாற் போலக் கூவி அலறினேன்.
அதனால் அவர்முகம் கறுத்த தறிந்தேன்
முதனாள் முயற்சியில் முற்றும் தோற்றார்.
என்னைக் குறித்தவர் என்ன நினைப்பரோ!
தன்னை ஏய்க்கும் தாடகை என்பரோ!
'ஆசை காட்டி மோசம் செய்தல்'
என்னும் பழமொழி இதற்குப் பொருந்துமே.
மோக்கக் குழையனிச் சத்தினும் முரணாய்
நோக்கக் குழையும் விருந்தெனும் நுண்மையை
நோக்கிலேன் அவரை நோகச் செய்தேன்.
நற்றமிழ் அறிஞரை நானன் றேய்த்தது
குற்றம் குற்றம் பெரிய குற்றமே!
இன்றுயான் அவர்தொட இசைவது உறுதி.
அன்றுயான் மறுத்ததால் அவரெனை முதலில்
தொடுதல் செய்யார் தோல்விக் கஞ்சுவர்.
கெடுதல் ஒன்றிலை கிட்டியான் தொடுவேன்.
ஆமது! முதலில் அவரை யான்தொடின்

---

1. அரிவையர் - பெண்கள்; அவாவுதல் - விரும்புதல். 2. பேரெழில் - பேரழகு. 3. அகம் - மனம். 16. அனிச்சம் - மோந்தாலே வாடும் ஒருவகை மலர்.

காமுகி யென்று கருது வாரோ?
அட்டி யின்றி அவரையான் புல்லின்
கட்டி அணைத்துக் கன்னஞ் சுவைப்பரோ!
கன்னத்தில் முத்தம் 'கடகட' என்றவர்
எண்ணிக்கை யின்றி ஈந்துகொண் டிருப்பரோ!
கன்னங் கடித்துக் காயமுண் டாக்கின்
என்னடி காயம் என்றென் அன்னை
வினவிடின் யான்பதில் என்ன விடுப்பனோ.
நினைவுறுங் காலையென் நெஞ்சம் நடுங்கும்.
அச்சார முத்தம் அளிக்கவோ யானும்?
எச்சார்பு மின்றி எங்ஙனம் இயங்குவேன்
அச்சங் கொள்கிறேன் அனைத்தும் எண்ணி.
இதழோ டிதழ்சுவைத் தின்பவூற் றுறிஞ்சின்
இதழ்தான் சிதையின் என்ன செய்குவேன்.
அணைக்கையில் முலைகள் ஆடவர் ஒருவரின்
பிணிக்கும் மார்பில் பிணைபடல் கொடுமை!
துவர்மணி பூண்டவென் தூய மார்பில்
அவர்கை படினென் அரையுயிர் போய்விடும்;
உறுப்புறவு கொளுங்கால் உடையது விலக
உறுப்புத் தெரியவே உயிர்முழு தேகிடும்.
பெண்ணாய்ப் பிறந்து பீடிழப் பதனினும்
மண்ணாய் மடிந்து மக்குதல் நன்றே.
எனினும் ஆணும் பெண்ணும் இணைந்து
நனியில் வாழ்க்கை நடத்துதல் மரபே.
இதற்கியான் விதிவிலக் கில்லை யாதலின்
முதற்கண் கணவரைத் தேர்தல் முறையே
அதற்குத் தக்கவர் அம்பிகா பதியே.

27. அட்டி - தடை; புல்லின் - தழுவினால். 38. இதழ் - உதடு; இன்ப ஊற்று - உதட்டில் ஊறிக் கசியும் இன்ப அமிழ்தம். 40. ஆடவர் - ஆண். 41. பிணிக்கும் - தழுவிக் கட்டிடும்; பிணைபடல் - இறுக்கமாய் இணைதல். 42. துவர்மணி - பவளமணி. 46. பீடு - பெருமை. 49. நனி - மிக; இல்வாழ்க்கை - குடும்ப வாழ்க்கை. 51. தேர்தல் - தேர்ந்தெடுத்தல்.

எதற்கும் அவரை இன்றுதுய்த் தறிவேன்.
என்ன உடையினை இன்றுயான் அணிவது?
பொன்னின் இழைநூல் பொதிந்தபொற் புடவை
மின்ன நடக்கின் மேனியில் அஃது
'மொரமொர' என்று முணுமுணுத் திடுமே;
கைவளை அணியின் கட்டி அணைக்கையில்
'கலகல' ஒலிப்பால் காட்டிக் கொடுத்திடும்;
மேகலை பூட்டி மெல்ல நடப்பினும்
ஞகிலும் அதனெலி அறியச் செய்திடும்;
காலில் சிலம்பு கட்டி நடக்கின்
ஓலமிட் டுரெலாம் உணரச் செய்திடும்;
அணியும் ஆடையும் எளிமையாய் அணியினே
துணிவொடு இன்பந் துய்த்து வரலாம்;
என்றெலாம் எண்ணி ஏற்ப அணிந்து
துன்றநள் ளிரவு துணிந்து சென்றனள்.
காவகத் துள்ளே காதலன் முன்னே
தூவகத் துடனே தோன்றக் கண்டனள்.
வணக்கம் செய்தனள்; வருக என்றனன்.
இணக்கமா யிருவரும் இனியதோர் இலஞ்சியின்
கரையி லமர்ந்து கலந்துரை யாடினர்.
தரையில் ஊன்றிய தன்வலக் கையில்
நெருஞ்சிமுள் ளொன்று நேருறத் தைத்ததை
வருந்தினள் போல வனிதை காட்டி
அம்பிகா பதியை அகற்றச் சொன்னாள்.

(அம்பிகாபதி)

நினதுகை யான்தொடல் நேரிய தன்று
மணமது நிகழுறுங் காலை மகிழ்ந்து

53. துய்த்தல் - அனுபவித்தல். 60. மேகலை - பொன்னால் செய்யப்பெற்றுச் சுற்றிலும் மணிகள் தொங்க ஒருவகை ஒலிசெய்யும் 'ஒட்டியாணம்' என்னும் இடுப்பு அணி. 63. ஓலமிடுதல் - முறையிட்டு ஒலித்தல். 67. துன்ற - பொருந்த. 69. தூவகம்-தூய்மையான மனம். 71. இலஞ்சி - குளம். 75. வனிதை - பெண்.

இணையாய்க் கையை இறுகப் பிடிப்பேன்;
கன்னி யொருத்தியின் கையைத் தொடுதல்
உன்னின் தெரியும் உகந்த தன்றென;
என்னைப் பொறுக்க என்றவன் இயம்ப,

(அமராவதி)

அமரா வதிதான் அயர்ந்து கூறுவாள்:
அன்றென் கையை அறிஞராம் நீவிர்
நன்றாய்ப் பற்ற முயல நானதைத்
தடுத்ததை யெண்ணித் தயங்குகின் றீரோ?
அடுத்தது போக; அடுத்தது காண்பம்.
கன்னியா யிருக்குங் காலை ஆடவர்
என்னைத் தொடுதல் ஏற்ற தன்றென
நாண வுணர்வொடு நடந்துகொண் டேனியான்
காண வந்த காதல ராமுமைப்
புண்படச் செய்ததைப் பொறுத்தருள் கென்று
பண்பட வேண்டினள் பத்தினிப் பாவை.

(அம்பிகாபதி)

அன்றுநீ மறுத்ததை அகத்தில் எண்ணி
இன்றுயான் வருந்துவல் என்று வருந்திநீ
ஆறுதல் எனக்கே அளிக்க எண்ணியிம்
மாறுதல் செய்து மகிழச் செய்கிறாய்.
உண்மையில் ஆடவர் உன்னைத் தீண்டலைத்
திண்மையாய் வெறுப்பதைத் தெரிந்துகொண் டேனியான்;
எனவே எட்டி யிருப்பதே நன்றென
நினைவில் கொண்டேன் நீயெனைப் பொறுக்கென,

---

81. உன்னின் - நினைத்துப் பார்த்தால்; உகந்தது - விரும்பத் தக்கது. 87. அடுத்தது - நடந்துபோனது; அடுத்தது - அடுத்து நடக்க விருப்பது.

(அமராவதி)

உண்மை நீவிர் உரைப்பன யாவும்
பெண்மைக் கற்பால் பேதுற் றேனியான்;
இன்றென் உடலையே ஈந்தேன் உமக்கே
ஒன்றி யென்னொடு உவகைகொள் வீரென,

(அம்பிகாபதி)

அம்பி காபதி அடுத்து மொழிவான்:
அமராவதி ஒன் றுனக் கறிவிப் பேனியான்
உன்னைக் குறித்துநீ ஒன்றும் அறியாய்
நன்னர் நினக்கு நானறி விப்பேன்:
மன்னர் மகணீ மாப்பே ரழகிநீ
நற்பண் பதனை நகையணி யாய்க்கொள்
சிற்பி செதுக்காச் செம்பொற் சிலைநீ
கடல்குளித் தெடுக்காக் கட்டாணி முத்துநீ
அடலுறு சுரங்கம் அகழா வைரம்நீ
வதிய முருகன் வளர்க்காத் தமிழ்நீ
பொதியிற் பிறவாப் புகழ்மிகு தென்றல்நீ
பூவிடைத் தோன்றாப் பொன்னிறத் தேன்நீ
நாவிடைத் தோன்றா நயக்கும் பாநீ
மயலுடைத் தேவர் மடுக்கா அமிழ்துநீ
வயலிடை விளையா வளவிய கரும்புநீ
குழலிடைத் தோன்றாக் குளிர்ந்த இசைநீ
எழிலுடை மலரின் எழாத மணம்நீ
சொல்லா ததையும் சொல்லும் கிள்ளைநீ
துள்ளா தியங்கும் தூய மான்நீ
விண்ணிடைத் தோன்றா வியத்தகு நிலவுநீ
மண்ணிடை முளையா அனிச்ச மலர்நீ

---

103. பேதுறல் - கலங்குதல், மயங்குதல் 105. உவகை - மகிழ்ச்சி. 114. அடல் - வலிமை. 116. பொதியில் - பொதியமலை. 119. மயல் - ஆசை மயக்கம்; மடுக்கா - அருந்தாத 122. மலரின் - மலரிலிருந்து. 123. கிள்ளை - கிளி.

மலரைக் கசக்குதல் மாண்பா காது
மலரைப் பார்த்தே மகிழ வேண்டுமால்.
உனதுடல் கசக்கலோ உடலுறவு கொள்ளலோ
எனதுளம் மடமையென் றெண்ணல் செய்யுமே.
வாடாது வருந்தாது வண்ணத் திருமேனி
ஆடா தசையா தமைதியா யழகாய்
கண்கள் உறுநிலைக் கண்ணாடிப் பேழையில்
உண்கண் உன்னை உள்ளே வைத்துக்
காட்சிப் பொருளாய்க் காணச் செய்வதே
மாட்சி யுள்ள மக்கட் பண்பாம்.
அத்துணை உடலமைப் பழகாய் வாய்த்துள
வித்தகக் கலைகளின் வியன்கரு வூலம்நீ
உன்னைக் கண்டுகண் டுள்ளம் சுவைத்தலே
என்னை வினவின் ஏற்றதாம் என்ன,

(அமராவதி)

அமரா வதியவற் கறைய லுற்றாள்:
இத்துணைப் புகழ்ச்சி ஏலா தெற்கு
வித்தை காட்டி வேடிக்கை செய்கிறீர்
என்னைத் தொடுதல் இயலா தாயின்
பின்னர்ப் பேசுவம் பிரிந்து செல்வம்;
வனிதை யொருத்தி வலிந்து விரும்பியும்
இனிது நயவா தெடுத்தெறிந்து விட்டீர்
இந்த மானம் என்னைக் கொல்லுமால்
எந்த உயிரோ டினியான் வாழ்வேன்?
தற்கொலை யொன்று தவிரவிவ் வுலகில்
எற்கு வழிவே றில்லையென் றறைய,

---

133. கண்கள் - துவாரங்கள்; உறு - பொருந்திய; பேழை - பெட்டி; நிலைப்பேழை - அலமாரி. 133. முழுதும் காற்றுக்காகத் துவாரங்கள் உள்ள கண்ணாடி அலமாரி. 134. உண்கண் - மையுண்ட (மைபூசிய) கண். 138. வித்தகம் - வியப்பு, அறிவு; கருவூலம் - பொக்கிஷம். 142. ஏலாது - ஏற்காது; பொருந்தாது; எற்கு - எனக்கு. 151. அறைய - அறிவிக்க.

(அம்பிகாபதி)

அன்றுனை யான்தொட அறவே மறுத்தனை
சென்றியான் தற்கொலை செய்துகொண் டேனு?
இருவரும் ஒருவராய் இணைந்துளோம்; எனவே,
ஒருவரை யொருவர் உளமுறப் பொறுப்பம்;
நின்னைத் தொடற்கு நீண்டநாள் இல்லை;
இன்னே மணத்திற் கேற்பது தொடங்குவம்
என்றம் பிகாபதி இனிதே தேற்ற,

(அமராவதி)

நன்றி வணக்கம் நான்போய் வருகிறேன்
நின்றினி யிருப்பின் நேடுவர் என்னை;
அடுத்த முழுநிலா நாளிவண் அடைவம்
எடுத்துப் பேசுவம் மற்றவை யெல்லாம்
என்றம ராவதி ஏற்ப மொழிந்து,

(மனத்திற்குள்)

நன்று நடந்து கொண்டார் நானவர்
பண்பைப் பெரிதும் பாராட்டு கின்றேன்.
கண்டதும் காதல் கொண்டதும் பிரிவென,
ஆடு மாடுகள் அரிப்பு தீர்ந்ததும்
ஓடி விடுதல் ஒப்ப, மாந்தருள்
எவள்கிடைத் தாலும் இன்பந் துய்த்தபின்
அவள்தனி வருந்த அகன்று மறைந்திடும்
கயவர் போன்றவ ரல்லரென் காதலர்
நயமுறு ஒழுக்கம் நண்ணிய என்றன்
காதலர் தொடாதென் கற்பினைக் காத்தார்
ஓதலிற் சிறந்தது ஒழுக்க மன்றோ?

---

157. மணத்திற்கு - திருமணத்திற்கு. 160. நேடுவர் - தேடுவர். 167. அரிப்பு - புணர்ச்சி வேட்கை; அரித்தல். 168. கொண்டதும் - புணர்ச்சி கொண்டபின். 171. கயவர் - கீழ்மக்கள்.

முன்னர் அவரையான் மறுத்து மொழிந்ததால்
பின்னர் மழுப்பித் தொடும்வணம் பேசினேன்;
உண்மையில் அவரெனைத் தொடுதற் கொருப்படேன்.
நன்மையாய் முடிந்தது நடித்த நாடகம்.
பெற்றோர் அறியாப் பிழைபடு வழியில்
மற்றவர் ஒருவரை மறைவாய்ப் புணர்தல்
எத்திறத் தானும் ஏற்கவொல் லாதென
எத்திறத் தாரும் எண்ணுதல் கூடும்.
முதலில் தவறும் முறையில் ஒழுகியோர்
அதர்தான் என்றும் அவ்வா றேயாம்.
விளையும் பயிர்நிலை முளையிலே தெரியுமே
என்றவர் எண்ணலாம்! என்செயல் நன்றே!
என்றுதன் உளத்துள் எண்ணிய வாறு
நின்றவள் நம்பியின் நினைவக லாமே
சென்றனள் மாடம் சேர்ந்தடைந் தனளே.
நன்றென நம்பியும் நடந்தனன் வெளியே.
இன்றும் தோல்வியே இனிப்புவில் லோற்கே.

---

177. ஒருப்படேன் - உடன்பட மாட்டேன். 181. எத்திறத் தானும் - எந்த வகையிலும்; ஒல்லாது - முடியாது. 183-184. ஒழுகியோர் அதர் - கடந்து கொண்டவர் செல்லும் வழி; அதர் - வழி. 188. நம்பி - அம்பிகாபதி. 191. இனிப்பு வில்லோன் - இனிக்கும் கரும்பை வில்லாக உடைய மன்மதன்.

14. அமராவதி பெற்றோரொடு அளவளாவிய காதை

பரசும் பல்புகழ்ப் பாராள் சோழ
அரசனும் அரசியும் அமரா வதியைக்
கன்னி மாடம் சென்று காண
எண்ணிப் பன்மலர் எடுத்துப் போந்து
அருமை மகளுக் கன்பொடு சூட்டிப்
பெருமையும் வளமும் பெறுகென வாழ்த்தினர்.
அம்மை யப்பராம் தெய்வம் அடுத்ததாய்
அமரா வதிதன் அரியபெற் றோரைத்
தக்க இருமணித் தவிசில் இருத்தி
ஒக்க இருவரின் ஒண்டாள் வணங்கிப்
பருப்பும் பழமும் பாலுந் தேனும்
விருப்பொ டீந்து விசிறி நின்றாள்.
கொற்றவன் மகளைக் குறும்பாய் வினவினன் :
அமரா வதி!உனக் கன்பு மிகுதி
அம்மா மீதா அப்பா மீதா
என்ற வேந்தற் கிறுப்பாள் வினாவிடை:
நன்று தந்தாய்! நானா அண்ணா
உம்பெரு விருப்பிற் குரியவர் யாரென,

---

1. பரசும் - போற்றத் தக்க. 7. அம்மையப்பராம் தெய்வம் - உமையொரு பாகம் கொண்ட சிவன். 9. தவிசு - இருக்கை. 10. ஒக்க - ஒருசேர ; ஒண்டாள் - ஒண் தாள் - விளங்கும் திருவடி. 11. பருப்பு - முந்திரிப் பருப்பு, வாதுமைப் பருப்பு போன்ற பருப்பு வகை. 13. கொற்றவன் - அரசன். 16. இறுப்பாள் - பதில் கூறுவாள் ; வினா விடை - மறு கேள்வி வாயிலாகத் தரும் விடை - விடையாக வினவுவது.

(அரசன்)

மக்கள் மீது மடுத்த அன்போ
ஒக்க ஒருநிகர் சமனென உரைப்ப,

(அமராவதி)

பெற்றோர் மீதியான் கொண்ட பெட்பிலும்
மற்றோர் வேற்றுமை மருந்துக்கும் இலையென,
பெற்றோர் இருவரும் பெருநகை புரிந்தனர்.
மன்னன் உடனே மகளை நோக்கி
இன்னல் தீர்க்கும் இனிய யாழினை
இன்னே எடுத்துநீ இசையினைத் தொடுத்து
மிழற்றி ஒருபா மெல்லப் பாடுதி
அழற்சி தீர ஆர்ந்திடு வோமென,
அன்னையும் விரும்பி ஆர்வமாய்க் கேட்க,
மின்னொளி மேனியாள் மேதகு யாழினை
மீட்டி நரம்பில் மெல்லிய விரல்களை
ஓட்டி இனியபா ஒன்று நல்குவாள் :

எடுப்பு

"தெய்வமும் வேறும் உண்டோ—
பெற்றோரினும் பெரிய
தெய்வமும் வேறும் உண்டோ

உடன் எடுப்பு

உய்யும் வழியறிந்தே உயிர்க்குயிராய்க் காத்துப்
பெய்யும் வழிதெரிந்தே பேரன்பினைப் பொழியும்
தெய்வமும் வேறும் உண்டோ
பெற்றோரினும் பெரிய (தெய்வமும்)

19. மடுத்த - மிக்குள்ள. 21. பெட்பு - அன்பு. 26. இன்னே - இப்போதே. 27. மிழற்றுதல் - மெல்லென ஒலி எழுப்பல். 28. அழற்சி - வெம்மை; ஆர்ந்திடல் - அனுபவித்தல். 30. மின்னொளி மேனியாள் - அமராவதி; மேதகு - மேன்மையான.

தொடுப்பு

(1) அல்லும் பகலுமே அயராது கண் விழித்தே
செல்லல் பாராது சேயினைக் காத்தே
நல்ல மகவாய் நலமுற உருவாக்கும்
தெய்வமும் வேறும் உண்டோ
பெற்றோரினும் பெரிய (தெய்வமும்)

(2) குழந்தையின் மேனியில் கொசுகொன்று மொய்க்கினும்
தழைந்ததம் கண்ணில்முள் தைத்ததாய் நொந்திட்டே
குழைந்துளம் விசிறிகைக் கொண்டே விசிறிடும்
தெய்வமும் வேறும் உண்டோ
பெற்றோரினும் பெரிய (தெய்வமும்)

(3) மகவின் நலத்துக்காக மருந்து தானுண்டு
தகவாய்ப் பத்தியமும் தான் பிடித்தே வருந்தி
மகவின் நோய் போக்கி மகிழ்ந்து கொஞ்சிடும்
தெய்வமும் வேறும் உண்டோ
பெற்றோரினும் பெரிய (தெய்வமும்)

(4) குழவியின் மெய்தீண்டிக் 'குளுகுளு' என மகிழ்ந்தும்
மழலை மொழிகேட்டும் மக்கள் பிசைந்ததுண்டும்
குழலையும் அமிழ்தையும் குறைவாய்க் கருதிடும்
தெய்வமும் வேறும் உண்டோ
பெற்றோரினும் பெரிய (தெய்வமும்)

(5) அவையதிலே முந்தி அமரச் செய்திடவே
நவையறு நற்கல்வியை நல்கி முன்னேற்றியே
புவியெல்லாம் பிள்ளையின் புகழ்மணக்கச் செய்திடும்
தெய்வமும் வேறும் உண்டோ
பெற்றோரினும் பெரிய (தெய்வமும்)

---

40. அல் – இரவு. 41. செல்லல் - துன்பம். 47. உளம் – மனம். 50. மகவு - குழந்தை. 55 குழவி - குழந்தை. 56. மழலை மொழி - குழந்தையின் நிரம்பாத கொஞ்சும் பேச்சு 57. குழல் – புல்லாங் குழல். 60. அவை - சபை. 61. நவை - குற்றம். 62. புவி - பூமி.

(6) மக்கள் மகிழும் வண்ணம் மணமது செய்வித்தே
மிக்கநல் லறங்களை மேதினியில் புரிய வைத்தே
மக்க ளெனும் பெயர்க்கே மாண்பொருள் தரச்செய்யும்
தெய்வமும் வேறும் உண்டோ
பெற்றோரினும் பெரிய
தெய்வமும் வேறும் உண்டோ.”

என்ற பாவினை இனிக்கப் பாடினள்.
இசையைச் சுவைத்தபின் இனியதம் மகட்கே
இசையைச் சேர்த்துப் பெற்றோர் இருவரும்
வாழ்த்திய பின்னர், வகையாய் நகைப்பில்
ஆழ்த்த எண்ணி அரசன் கூறுவான் :
அமரா வதிநீ அறியாப் பிள்ளையாய்
அழுதபோ தெலாமுன் அன்னை தாலாட்டு
அழுது பாடுவாள் ; அதற்குநீ அஞ்சி
அன்னையே பாடுதல் அறவே வேண்டா
என்னை அமைதியாய் இருக்க விட்டிடு ;
பாடல் இன்றியே படுத்துயான் உறங்குவேன் ;
ஓடச் செயாதே உனதுபாட் டாலென
அன்னைக் குரைப்பாய் ; அத்துணை இனிமையாய்
உன்னைத் தாலாட்டி உறங்கவைப் பாளென
மொழிந்து மன்னன் முடித்திட, அனைவரும்
விழுந்து விழுந்து வெடிநகை புரிந்தனர்.

(அன்னை கூறல்)

என்றும் கேலி என்பால் செய்தலே
உன்றன் தந்தைக் குரிய வழக்கம்
என்று மாதேவி இயம்பிய பின்னர்,
இன்பம் இன்பம் இன்பம் அதன்பின்
துன்பம் துன்பம் துன்பம் என்னும்

---

66. மேதினி - உலகம். 67. மாண் பொருள் - சிறந்த அர்த்தம்.
73. இசை - புகழ். 74. நகைப்பு - சிரிப்பு. 79. அறவே - முற்றிலும்.
86. வெடி நகை - வெடிப்பது போன்ற பெருஞ் சிரிப்பு.

உண்மையை வேந்தன் உரைப்பவன் போலத்
திண்மையாய் உள்ளம் திறந்து பேசுவான் :
அமரா வதியே அன்றெரு நாளிரா
சிம்மனும் தாரகைச் சிறுக்கியும் வந்து
நம்முடைக் கன்னி மாடக் காவினுள்
ஒருவரை யொருவர் மாறி ஓர்ந்தே
இருவரும் ஒருவராய் இறுகத் தழுவினர்;
அஃதுன் திருவிளை யாட லாமென
அறிந்தேன்; இச்செயல் ஆற்றுதல் முறையோ?
தெரிந்திடக் காரணம் தேர்ந்து கூறென,

(அமராவதி)

சிம்மன் ஓரிரா வந்து செய்ததை
விம்மக் கூறி, விளக்கும் சான்றாய்
அன்னையைக் காட்டிட, அவளும் சிம்மனின்
அன்னையொடு கண்டதாய் அறிவித் தனளே.
பாலுக்குங் காவலாய்ப் பூனைக்கும் தோழியாம்
தாரகை யொழுகும் தரமும் நன்றில; எனவே,
தந்தையே! சிம்மனும் தாரகைச் சனியனும்
வெந்து வெதும்ப வேடிக்கை செய்தேன்
எந்தாய்! இதில்பிழை இருப்பின் பொறுக்கென,

(அரசன்)

அரசன் கூறுவான்: அஃது கிடக்க!
அம்பிகா பதியும் அமரா வதியும்
உடலுறவு கொண்டனர் என்பதாய்ச் சில்லோர்
சுடலுறக் கூறுவ துண்மையோ சொல்லென,

---

97. ஓர்ந்து - உணர்ந்து. 110. எந்தாய் - எம்தந்தையே. 114. சுடல் உற - உள்ளம் சுடும்படி.

(அமராவதி)

எந்தாய்! பெரும்பழி இதற்கென் செய்குவல்;
அந்த அம்பிகா பதியின் உடலே
என்னுடல் தொட்டது இல்லவே யில்லே;
என்னுடைப் பெற்ருேர் ஆணையென் றியம்ப,

(அரசன்)

உடல்தொட் டதில்லே உள்ளம் தொட்டதோ?
மக்கள் மகிழ மணஞ்செய் விப்பதாய்ப்
பாடிய பாப்பொருள் யாதோ பகரென,

(அமராவதி அன்னேயை நோக்கி)

பாரம்மா அப்பாவை என்று பசப்பினள்.

(அரசி)

குழந்தை யின்மேல் குற்றம் ஏதாவது
அழுந்தக் காண்பது அழகோ நமக்கென
அன்னே கடியவே அரசன் சிரித்தனன்.
பின்னர் இருவரும் பெரிதும் வாழ்த்திக்
கன்னி மாடம் கடந்துசென் றனரே.

---

115. செய்குவல் - செய்வேன். 121. பாப் பொருள் - பாட்டின் பொருள்.

15. கம்பரும் நண்பரும் உலாப் போந்த காதை

அம்பிகா பதியின் அழிசெயல் எண்ணிக்
கம்பர் ஒருநாள் பிற்பகல் கவன்று
வீட்டில் சோர்வோ டிருந்த வேளை,
ஈட்டரு நிதியென இரும்புகழ்ப் பண்பினர்
கம்பரின் நண்பர் கண்ணனுர் வந்தார்.
நண்பர் இருவரும் நனிமகிழ் வுற்றே
என்பும் உருக இறுகப் புல்லி
ஒருவரை யொருவர் உளங்கொளத் தழுவினர்.
கம்பரின் தோற்றம் நண்பர் நோக்கினுர்;
முகத்தில் தெளிவிலே முதலதற் கென்னென
அகத்தில் உள்ளதை அவர்நனி வினவினுர்.

(கம்பர்)

அம்பிகா பதியின் அடாச்செயல் நினைத்து
நண்பரே உள்ளம் நனிமிக வருந்துவல்
திறந்த வெளிமனைத் திண்ணையில் படுக்கிருன்
மறைந்து விடுகிருன் மையிருள் நள்ளிரா
இதனைப் பொறுக்க என்னுல் இயலுமோ?
மதன்கணை தொடுத்து மயக்குவான் போலும்!
இதனுல் கவல்கிறேன் என்ருர் கம்பர்.

(நண்பர்)

பசித்தால் உணவு புசிக்கத் தருவோம்
நசித்தால் உடம்பு நல்குவோம் மருந்து

---

2. கவன்று - கவலைப்பட்டு 4. ஈட்டரு - தேடுதற்குஅரிய. 7. என்பு - எலும்பு; புல்லி - அணைத்து. 10. முதல் - காரணம். 15. மையிருள் - கரிய இருள். 17. மதன் - மன்மதன்; கணை - மயக்கும் மலராகிய அம்பு. 20. நசித்தால் - கெட்டால்.

திருமணம் முடிக்கின் தீரும் கவலை
ஒருமன மாக உம்மோ டொத்துப்
பண்பொடு வாழ்வான் பாரும் என்று
நண்பர் கூற, நவில்வார் கம்பர்:

(கம்பர்)

திருமணம் முடிப்பதாய்த் தெரிவித் தும்மவன்
மறுமனத் தோடு மாற்றம் விடுத்துத்
திரிமனத் தோடு திரிகிறான் என்ன,

(நண்பர்)

கரும்பு தின்னக் கூலியா! கடிமணம்
விரும்பிய பெண்ணொடு முடிக்கென விளம்ப,

(கம்பர்)

அரசன் மகளாம் அமரா வதியை
முரசம் முழங்க முடித்திடு என்கிறான்.
நடப்ப தாவிது? நண்பரே உரைக்கென
விடுப்ப ஒருவினா, வியந்தார் நண்பர்.
அன்ன வேளை கற்பகத் தாச்சி
பண்ணியத் தோடு பருப்பும் பாலும்
உண்ணக் கொடுக்க உண்டனர் இருவரும்.
பின்னர்க் கம்பர் பீடுசால் நண்பரை
உலாவ அழைக்க, இருவரும் உள்ளம்
குலாவ நடந்தனர் குடதிசை நோக்கி.
தாய்வீ டேகும் புதுப்பெண் தானென,
ஆய்வுறு நூல்களை ஆசா னிடத்துப்

---

26. மறுமனம் - மறுக்கும் உள்ளம்; மாற்றம் - பதில். 28. கடிமணம் - திருமணம். 35. பண்ணியம் - இனிப்பு அப்ப வகை. 39. குடதிசை - மேற்கு. 41. ஆசான் - ஆசிரியர்.

பாடங் கேட்டபின் பள்ளியின் வீட்டிற்கு
ஓடும் இளைஞரின் உவப்பொலி கேட்டனர்;
பாலினைந் தூட்டும் பண்புறு தாய்போல்
ஆனினம் கன்றினை அகத்துள் நினைந்து
கானெனப் பாலினைக் கான்று கொண்டே
மந்தையி னின்றும் மனையை நோக்கிப்
பந்தி பந்தியாய் வருவதைப் பார்த்தனர்;
கம்பரும் கண்ணரும் காய்ந்து கருகி
வெம்பி விடுவர் வெய்யிலில் என்று
மப்பு பரவி மந்தாரம் போட்டதால்
தப்பி வெயிலின் தண்ணெண நடந்தனர்;
ஊரின் பாங்கர் உள்ளதோர் பொதும்பரில்
நீரின் கரையில் நின்றனர் இருவரும்;
ஓடும் ஓடைநீர் ஒலிக்க முழவென,
பாடுபுள் பூவை பரப்ப இசையினை,
ஆடும் மயிலின் ஆட்டம் சுவைத்தனர்.
கம்பர் நண்பரை நோக்கிக் கழறுவார்; இஃது
அன்னமோ மஞ்ஞையோ ஆடுவ தாக
முன்னைப் புலவோர் மொழிந்துள செய்தியே.
ஏத்தும் 'மணிமேகலை' என்னும் நூலில்
கூத்தாட் டொன்று கூறப்பட் டுளதால் :
"குழலிசை தும்பி கொளுத்திக் காட்ட
மழலை வண்டினம் நல்லியாழ் செய்ய
மயிலா டரங்கின் மந்தி காண்பனக ண்"
என்று சாத்தனுர் இனிக்க எழுதினார்.

---

42. பள்ளியின் - பள்ளிக்கூடத்திலிருந்து. 44. பாலினைந்து - பால் இனைந்து. 45. ஆனினம் - பசு இனம். 46. கான் - நீர்வருங் குழாய்; கான்று - சொரிந்து. 47. மந்தை - மந்தைவெளி. 48. பந்தி பந்தியாய் - வரிசை வரிசையாய். 52 வெயிலின் - வெய்யிலி லிருந்து; தண்ணென - குளிர்ச்சியாக, 55. முழவு - மத்தளம். 56. பூவை - பாடும் பறவை. 58. கழறுவார் - சொல்லுவார். 59. மஞ்ஞை- மயில். 61. ஏத்தும் - போற்றும். 62. கூத்தாட்டு - நடனம். 63. தும்பி - வண்டு. 65. அரங்கு - கலை நிகழிடம்.

நன்றவ் வாறே நடந்துள திங்களும்;
பாட்டும் முழவுமாம் பக்க இசைகள்
ஆட்டுக் கேற்ப அமைந்தன காண்கென,

(நண்பர்)

மந்தி காண்பதாய் மணிமேகலை கூறும்
இந்த ஆட்டம் காணுநாம் இருவேமும்
மந்தி களோவென மற்றவர் வினவ,
'கலகல' நகைப்பு கான்றே இருவரும்
அலகிலா உவகை ஆழியுள் ஆழ்ந்தனர்.

(கம்பர்)

இயற்கைக் காட்சியில் இன்புறூஉம் கம்பர்,
செயற்கையில் இந்நிலை சிறிதும் அமையுமோ?
கடவுள் படைப்பின் கற்பனை நம்மால்
தொடவோ உலகைத் தோற்றவோ இயலுமோ?
என்று கம்பர் இயம்ப, நண்பர்,
நன்று நன்று நீவிர் நவில்வது!
உலகையேன் கடவுள் உண்டாக்க வேண்டும்?
அலகில் உயிர்களை ஆக்குதல் எதற்கோ?
என்று வினவ, இறுப்பார் கம்பர்:
உயிர்கள் உய்ய உலகம் படைத்தார்
செயிர்தீர் பொருள்களும் செவ்விதின் அருளினர்.
நல்வினை யாற்றின் நல்வீடு பெறலாம்
அல்வினை புரியின் அளறே கிடைக்கும்;
என்ற கம்பர்க் கினிய நண்பர்,
உயிர்கள் உய்ய உலகம் எதற்கு?

---

69. ஆட்டு - ஆட்டம். 73. கான்று - வெளிப்படுத்தி. 74. அலகிலா - அளவில்லாத; ஆழி - கடல். 85. செயிர் - குற்றம். 86. வீடு - மோட்சம். 87. அல்வினை - நல்வினை அல்லாத தீவினை; அளறு - நரகம்.

உயிர்தமைப் படைத்ததா லன்றோ உலகம்
வேண்டி யுள்ளது; வேண்டுமோ உயிர்கள்?
உயிர்களை உலகிற் கனுப்புவ தேனோ?
உயிர்களை அவர்தம் முடனிருத் தலாமே!
அனைவரும் வீடுபே றடையச் செய்ய
நினையின் கடவுள் நேர்த்தியாய் முடிக்கலாம்;
என்று மொழிய, இறுப்பார் கம்பர்:
தெய்வம் தொழாஅரும் தீவினை யாளரும்
எய்தல் வீடுபே றெங்ஙனம்? சொல்கென,

(நண்பர்)

தாயின் பாலைத் தான்பெறு தற்குச்
சேயும் கையூட்டு செய்ய வேண்டுமோ?
எல்லாம் வல்லவர் எம்பெரு மானென
எல்லாரும் உளறுவ தியற்கையாய் விட்டது
எல்லாம் வல்ல இறைவர் உலகில்
சில்லோர் தீவினை செய்ய வைப்பதேன்?
எல்லாரும் நல்வினை இயற்றச் செயலாமே!
"உலகம் யாவையும் தாமுள வாக்கலும்
நிலைபெ றுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட் டுடையார் அவர்"
என்றும் இராம காதை நூலில்
நன்குய்ப் பாடி வைத்துளீர்; நல்லது!
ஆக்கிய உலகை அழித்தல் ஏனோ?
அழிக்கும் பொருளை ஆக்குதல் எதற்கோ?
வேண்டா உலகில் வேண்டா உயிர்களை
வேண்டா தேபடைத் திருத்தல் வேண்டா.
இளமையும் யாக்கையும் என்றும் நில்லா
வளமை யோடு வாழ்வும் நில்லாது
ஒவ்வோர் உயிரும் வாழ்க்கையில் படூஉம்

100. கையூட்டு - இலஞ்சம். 109. இராம காதை - இராமாயணம்.

அவ்வத் துன்பிற் களவே யில்லை
கானலை நீரெனக் கருதித் தவறாய்
மானினம் ஓடுதல் மான மாந்தரும்
இன்பம் தேடி என்றும் அலைவர்
இன்பம் கானலை ஏய்ப்ப தாகும்
துன்பமே வாழ்க்கை முழுவதும் தோய்வது
இதற்கா கடவுள் எல்லாம் படைத்தார்?
முதற்கண் இதற்கு முதலது மொழிகெனக்
கண்ணனார் வினவக் கம்பர் கூறுவார்:
கடவுள் செயலில் காண்கிறீர் நவைகள்;
கடவுள் நம்பகக் கருத்துண் டோவென,
இறைவர் எங்கேன் எப்படி யிருக்கிறார்?
இறைவர் ஒருவர் இருப்பதும் உண்மையோ?
அறைவிரோ அவர்தாம் இருக்கும் இடத்தை?
காட்டு வீரோ காணும் படியெனக்
காட்டமாய்க் கண்ணனார் கழற, கம்பர்,
பெற்றோ ரின்றிப் பிள்ளைகள் ஏது?
கற்றோ ரின்றிக் கல்விநூல் ஏது?
கட்டுவோ ரிலாது கட்டடம் ஏது?
நட்டுவர் இலாது நாட்டியம் ஏது?
நெய்வோர் இலாமே நெசவுடை ஏது?
செய்வோர் இலாமே செயற்கைகள் ஏது?
எனவே,
கடவுள் இன்றிக் காசினி ஏது?
புகையால் நெருப்பைப் புரிந்து கொளல்போல்
காணும் உலகால் கடவுளை நம்பலே
மாணும் செயலாம் மாற்றம் இலையென,
கேட்ட கண்ணனார் கிளத்துவார் மேலும்:

---

118. துன்பு - துன்பம். 122. ஏய்ப்பது-ஒப்பது. 125. முதல்-காரணம். 127. நவைகள் - குற்றங்கள். 128. நம்பகம் - நம்பிக்கை. 133. காட்டமாய் - உறைப்பாய். 137. நட்டுவர் - நடனம் கற்றுத்தருபவர். 140. காசினி - உலகம். 143. மாணும் - சிறப்புடைய; மாற்றம் - மாறுதல். 144. கிளத்துவார் - சொல்லுவார்

ஒன்றின்றி மற்றென் றில்லையென் பீரேல்
நன்றென் வினாவிற்கு நவிலுதிர் நல்விடை
இறைவர் எங்ஙனம் இயன்று தோன்றினர்?
ஒருவரும் இலாதவர் உண்டான தெப்படி?
இறைவர் தாமே தோன்றினர் என்னின்,
முறையே உலகமும் உயிர்களும் முகிழ்த்துத்
தாமே தோன்றின என்னின் தகாதோ?
என்ற நண்பர்க் கிறுப்பார் கம்பர்:
கண்ணனா ரேநீர் கருதவொன் றுளதால்;
திண்ணிய உமக்குத் தேர்ந்த விடைதரல்
ஒண்ணா துமக்கொன் றுரைப்பல் கேண்மின்!
"நம்பினோர்க்கு நடராசா நம்பாதார்க்கு எமராசா"
என்னும் பழமொழி எங்கும் வழங்குவது
இன்னும் அறியீரோ? ஏனித் தடைவிடை?
என்ற கம்பர்க் கிறுப்பார் நண்பர்:
விளையாட் டாயிதை வினவினேன் கம்பரே!
உளையா தீருளம் இன்னுமொன் றுரைப்பல்
அம்பிகா பதியெனை அடுத்தே ஒருநாள்
நம்பகம் மறுப்பவன் போல நடித்திதை
வம்பாய் வினவினன்; வாய் வா ளாமே,
கம்பரைக் கேட்டுக் கழறுவேன் விடையென
அம்பி காபதிக் கன்றுயான் அறைந்தேன்
அதன்வினை வேயிஃ தன்றிமற் றிலையென,
அதன்பின் இருவரும் அவணின் றகன்றே
இல்லம் நோக்கி ஏகிய போது
பல்வகை நிகழ்ச்சிகள் பார்த்துப் போந்தனர்:
பல்லி பாங்கர்ப் படுதொறும் பரவி

---

147. இயன்று - இயலக் கூடியதாகி - முடியக் கூடியதாகி. 150. முகிழ்த்து - உண்டாக்கி. 155. ஒண்ணாது - முடியாது; கேண்மின் - கேளுங்கள். 161. உளையாதீர் - நோகாதீர்; உளம் - உள்ளம். 164. வாளாமே - பேசாமல். 168. அவணின்று - அங்கிருந்து. 169. ஏகியபோது - சென்றபோது. 171. படுதொறும் - ஒலிக்குந் தோறும்; பரவி - கடவுளைத் துதித்து.

நல்லதே யாகுக என்று நவின்று
மெல்லியல் நல்லார் மின்விளக் கேற்றினர்;
ஞாயிறு மெல்ல நழுவிய ஞான்று
கோயிலுக் குச்சிலர் கும்பிடப் போந்தார்;
தொழிலகந் தன்னில் தொழிலை முடித்தபின்
எழிலுற மண்ண ஏகினர் சிலரே;
அரும்பொருள் விற்கும் அங்காடி நோக்கிப்
பொருள்பல வாங்கப் போயினர் சில்லோர்;
வேலை முடித்தபின் விரும்பிக் குடிக்க
மாலை மதுக்கடை மன்னினர் சிலரே;
பல்வகை அரங்கில் பாங்குறு கலைதமை
நல்வகை சுவைக்க நண்ணினர் சில்லோர்;
கம்பரும் நண்பரும் காட்சிகள் கண்டே
இன்புறூஉம் உளத்தொடு ஏகினர் இல்லமே

173. மெல்லியல் நல்லார்-மென்மைத் தன்மையுடைய மகளிர்; மின் விளக்கு - ஒளிதரும் விளக்கு. 177. மண்ண - ஒப்பனை (அலங்காரம்) செய்து கொள்ள. 178. அங்காடி - கடைத்தெரு.

16. காதலர்கள் களிப்புறாஉம் காதை

உருக்கும் ஞாயிறு ஓடி மறைந்தபின்
இருட்குச் சிறிதும் இடமே தராமே
உடுக்கள் சூழ உயரிய வானில்
மிடுக்காய் முழுநிலா மேதினி மினுக்கும்
பருவ நாளது பளிச்சென வந்தது.
இன்றிரா காதலர் இருவரும் இணைவர்
என்று தாரகை இயம்ப அறிந்த
காடவன் மன்னனைக் கண்டு கூறிட
ஓடினன்; செய்தி ஓதினன் செவியில்.
நள்ளிரா இருவரும் நடப்பதை யறியக்
கள்ளூறும் கவின்மலர் களிப்பொடு காணிய
புள்ளூறும் பூங்காப் புறப்பட லாயினர்.
அமரா வதிதான் அம்பிகா பதிக்குமுன்
அந்நாள் வருமா றறிவித் திருந்ததால்
பொன்னு ளதிலே புறப்பட் டனரவர்
எந்நா ளுமிலா இன்பக் களிப்பொடு;
ஒழுங்குற மேனி ஒப்பனை செய்து
முழங்கும் நகரொலி முற்றும் அடங்கிடப்
பன்ன வரிய பல்வளம் பழுநிய
கன்னி மாடக் காவகஞ் சார்ந்தனர்.
கன்னி வணங்கக் காளை வருகென,
பச்சைப் பூம்படாம் பரப்பிய தென்னப்

---

2. இருட்கு - இருளுக்கு. 3. உடுக்கள் - நட்சத்திரங்கள். 4. மேதினி - பூவுலகம். 5. பருவம் - பௌர்ணமி. 6. இன்றிரா - இன்று இரவு. 11. கள் - தேன்; காணிய - காண்பதற்காக. 12. புள் - வண்டு. (பூக்களில் தேன் காண வண்டுகள் செல்லும்). 19. பன்னவரிய - சொல்லுதற்கு அரிய; பழுநிய - முதிர்ந்து நிறைந்த. 22. பூம்படாம் - பூக்களைப்போல் இழை பின்னியுள்ள விரிப்புத் துணி.

பச்சைப் புன்மேல் பன்மலர் பரவிய
தென்றல் வீசும் திருவிடம் ஒன்றில்
அன்றிலா யிருவரும் அமர்ந்தனர் நெருங்கி.
என்ன பேசுதல்? யார்முதல் தொடங்குதல்?
என்ன அறியா திருக்கையில் சிறுபோது
அமைதி ஆண்டபின் அகத்துளே நகைத்தனர்.
காளை நோக்கின் கனிமொழி குனிவாள்;
அணியிழை நோக்கின் 'அம்பி' குனிவான்.
இந்த நாடகம் இனிது முடிந்தபின்,
உந்த எழுச்சி, ஒருவரை யொருவர்
எதிரெதி ராக ஏறிட்டு நகைத்தனர்.
புதிரொன்று போடப் புலவன் சூழ்ந்தான்:
மேலும் கீழும் மாறி மாறிச்
சால நோக்கினன் சால்பொடு பேசினன்;
விண்ணில் உள்ளது மண்ணில் வந்திடும்
மண்ணில் உள்ளது விண்ணுக் கேகிடும்
என்ன வியப்போ என்று மொழிந்தான்.
புரிய வில்லைநீர் புகலுவ தென்றே
அரிவை கூறிட, அம்பி விளக்குவான்:
விண்ணில் கண்ட வெண்ணிலா வதனை
மண்ணில் காண்கிறேன்; மற்றவ் வெண்ணிலா
விண்ணிலே மீண்டும் விளங்கக் காண்கிறேன்
என்று கூறிட, ஏந்திழை வினவுவாள்:
விண்ணிலும் மண்ணிலும் எந்த வெண்ணிலா
நண்ணும் மாறி மாறி நவில்கென,

(அம்பிகாபதி)

விண்ணை நோக்கும் வேளை நின்முகம்
கண்ணில் தெரியும்உன் கவின்முகம் நோக்கின்

---

23. புனமேல் - புல்லின் மேல். 28. அகத்துளே - மனத்திற்குள். 29, 30. கனிமொழி, அணியிழை - அமராவதி. 32. உந்த - தள்ள, மேற்பட. 34. புதிர் - புரியாத புதுமை. 40. புகலுவது - சொல்வது. 45. ஏந்திழை - அமராவதி.

வெண்ணிலா தெரியுமிவ் வியப்பை என்சொல
என்னவே, மெல்லிடை இணைந்தனள் போல,
என்முகம் மதியை ஏய்ப்ப உளதென
என்முகம் பழித்தனிர் என்செய் வேனென,
உன்முகம் பழித்ததாய் உரைப்பதெவ் வாறென,
விண்ணுறு திங்களில் வியன்கறை யுள்ளது
என்னுறு முகத்தில் களங்கம் என்னென,
புரியா துரைத்தேன் பொறுத்தருள் புரிகென,
இருவரும் 'கலகல' என்று நகைத்தபின்,
பொருவரும் எழிலாள் புன்னகை புரிந்தே
பகற்பொழு தாயின் பகலவன் தனோடும்
முகத்திற் கொப்பாய் மொழிந்திடு வேனென,

(அம்பிகாபதி)

அங்ஙன மாயின் அடுகதிர் ஞாயிறும்
திங்களாம் தண்கதிர் தானும் திரிந்தே
ஒன்றி நெருங்கி ஓரிடந் தன்னில்
துன்றி யிருப்பதாய்ச் சொல்லலாம் என்ன,

(அமராவதி)

இருவேறு கதிர்களும் இயைந்திணைந் திருப்பதோ
ஒருபோதும் இலையென ஒண்டொடி உரைக்க,

(அம்பிகாபதி)

இதுபோ தியான்நம் இளங்கோ இயற்றிய
மதுபோ தைதரும் மாண்புறு நூலாம்

---

51. மெல்லிடை - அமராவதி; இணைந்தனள் - வருந்தினள். 52. ஏய்ப்ப - ஒப்ப. 55. வியன்கறை - பெரிய கறுப்புக் கறை. 59. பொருவரும் - ஒப்பு சொல்ல முடியாத. 60. பகலவன் - ஞாயிறு. 62. அடுகதிர் - சுடும் ஞாயிறு. 63. திங்கள் - நிலா; தண்கதிர் - குளிர்ந்த கோள்; திரிந்து - நிலைமாறி. 67. ஒண்டொடி - அமராவதி.

சிலப்பதி காரச் செய்யுட் பகுதி
ஒலிப்பதென் காதில் உணரு கின்றேன்.
பொருவருங் கோவலனும் பொற்புறு கண்ணகியும்
இருவேறு கதிர்போல் இணைந்ததாம் பொருளில்
"முதிர்கடல் ஞால முழுவதும் விளக்கும்
கதிர்ஒருங் கிருந்த காட்சி போல",
என்றவர் காட்சி இல்பொருள் உவமையாய்த்
துன்றிய நிலையைத் துளக்கினர் இளங்கோ.
அன்றவர் தமைப்போல் இன்றுநாம் அணுகி
ஒன்றி யுளோமென அம்பி உரைத்திட,

(அமராவதி)

ஒப்பில் கண்ணகி கோவலன் ஒக்கும்
ஒப்புமை நமக்கோ ஒன்றும் வேண்டா.
குறையக வையிலே கொல்லப் பட்ட
குறையுடைக் கோவலன் குறுவர லாற்றொடு
இளைய வயதில் இம்பர் நீத்த
களையுறு கண்ணகி கதையும் அறிந்ததே
உளையும் நெஞ்சம் அவர்தமை உள்ளின்.
ஒருப்படும் வாழ்க்கையில் ஒன்று தவர்தாம்
உருப்படா தொழிந்தது உலகறி செய்தியாம்.
நாமும் அவர்போல் நடுவக வையிலே
தோமில் நம்முயிர் தொலையச் செய்வமோ
என்பதை எண்ணின் என்னுளம் நடுங்கும்;
மன்பதை யுலகினும் மன்னி வாழ்ந்தே
இன்பம் எய்துவம் என்றவள் இயம்பிட,

---

75. கதிர் ஒருங்கு இருந்த - இரு கதிர்களும் ஒன்று சேர்ந்திருந்த. 76. இல்பொருள் உவமை - இல்லாத பொருளை உவமித்தல். 77. துளக்கினர் - விளக்கினர். 82. அகவை-வயது. 84. இம்பர் - இவ்வுலகம். 85. களை - முகக்களை. 86. உளையும் - வருந்தும்; உள்ளின் - நினைத்தால். 90. தோம் - குற்றம். 92. மன்பதை - மக்கள் சமூகம்; உலகினும் - உலகில் நாம்.

(அம்பிகாபதி)

உண்மைநீ யுரைப்பது முற்றும் உண்மை
அண்மையில் அழிவிலை அன்றிலா யிணைவோம்;
முழுநிலா நிகர அகவை முழுவதும்
முழுவாழ்வு வாழ்வம் என்றவன் மொழிந்திட,

(அமராவதி)

சென்ற முழுநிலா நாளில், சேர்வம்
என்று சிறிதும் எண்ணினோ மல்லோம்
இந்த முழுநிலா நாளில் ஈண்டு
வந்து சேர்ந்தனம் வாழத் துடிக்கிறோம்
அடுத்த முழுநிலா நாட்குள் அடுப்பதை
எடுத்து மொழிய எவரால் இயலும்?
நமைப்போல் இத்தகு முழுநிலா நாளில்
அமைப்பாய்ப் பலபட் டறிவு பெற்றோர்,
இன்று வந்ததும் அதேநிலா இல்லையோ?
அன்று வந்ததும் இதேநிலா அல்லவா?
என்று பாடுவோர் எத்துணை யோரோ?
என்று பூங்குழல் இயம்ப, அம்பி,
நன்று, கூறுவேன் நானொரு மாக்கதை:
புறநா னூறெனும் புறப்பொருள் நூலில்
மறலியும் இரங்கி மருளும் வண்ணம்
பாரி மகளிர் பாடி யுள்ள
நேரில் ஒருபா நெஞ்சை யள்ளுமால்;
தந்தை பாரியைத் தாக்கிக் கொன்று

---

96. நிகர - ஒப்ப. 104. முழுநிலா நாள் - பௌர்ணமி. 105. பட்டறிவு - அனுபவம். 109 பூங்குழல் - அமராவதி. 111. புறப்பொருள் - காதல் வாழ்க்கையாம் அகப்பொருளுக்குப் புறம்பான மற்ற வாழ்க்கைநிலை. 112. மறலி - எமன்; மருளுதல் - மிரளுதல், மயங்குதல். 114. நேரில் - நேர் இல் - ஒப்பில்லாத.

மைந்துறு பறம்பு மலையையும் பற்றி
வெந்திறல் வேற்று வேந்தர் வென்றபின்
வந்த முழுநிலா நாளில் வருந்தி
நொந்தவர் பாடிய நுண்பா வருக:
"அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்
எந்தையும் உடையேம் எங்குன்றும் பிறர்கொளார்
இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்
வென்றெறி முரசின் வேந்தரெம்
குன்றும் கொண்டார்யாம் எந்தையும் இலமே"
என்பது அப்பா; இதனை எண்ணின்
மன்பதை முழுதும் மாழ்கும் மாதோ!
என்றறி விக்க, எழிற்றொடி கூறுவாள்:
முன்னர் வந்த முழுநிலா நாளில்
நன்னர் வாழ்ந்த பாரியின் நாரியர்
பின்னர் வந்த பெருநிலா நாளில்
இன்ன லுற்ற இவ்வர லாற்றினை
இன்னொரு முறையெற் கியம்பல் வேண்டா.
இன்றைய முழுநிலா நாளில் இருவேமும்
ஒன்றி உள்ளம் உவப்புடன் இருப்பினும்,
அடுத்த முழுநிலா நாட்குள் அல்லல்
அடுத்து விடுமோவென அஞ்சுவல் யானென
எடுத்து மொழிய, ஏந்தல் கூறுவான்:
கொஞ்சிக் குலவ வேண்டிய நேரம்
அஞ்ச வேண்டா அதனை யெண்ணி;
அடுத்த முழுநிலா அடுக்கும் நாளில்

116. மைந்து - திண்மை, வலிமை. 117. வெந்திறல் - கொடிய வலிமை. 120. முழுதும் - அந்த மாதத்து முழுநிலா நாளில். 121. எந்தை - எம் தந்தை. 122. முழுதும் - இந்த மாதத்து முழுநிலா நாளில்; திங்கள் - மாதம். 126. மாழ்கும் - மயங்கும்; மாதோ - முன்னிலை யசை. 127. எழில்தொடி - அமராவதி. 129. நாரியர் - மகளிர். 130. பெருநிலா - முழுநிலா. 132. எற்கு - எனக்கு. 137. ஏந்தல் - அம்பிகாபதி.

விடுத்திடு வாயில் வியலரண் மனையை;
என்னுடை இருப்பிடம் எதுவோ அங்கண்
நின்னையும் காணலாம் நினைவில் கொள்கென,

(அமராவதி)

இதன்பொருள் என்னென எழில்மொழி உசாவ,

(அம்பிகாபதி)

அடுத்த முழுநிலா நாட்குள், ஆமாம்,
கொடுத்திடு வாருனைக் கொற்றவன் எனக்கு;
நமது திருமணம் நன்னார் முடிந்தபின்
எமதிடத் திலேயே இருப்பைநீ யென்ன,

(அமராவதி)

எந்தை யுமக்கே எனைத்தரு வாரென
எந்த வகையில் இயம்புகின் றீரென

(அம்பிகாபதி)

தருமாறு செய்யத் தகுதியுண் டென்னிடம்
வருமா றுனைச்செய வழிவகை உண்டென,

(அமராவதி)

திருமணம் முடிந்திடின் தீருநம் கவலை
பெருமணம் வீசப் பீடுறும் வாழ்வென,
நம்பி, ஆங்கவள் நயககவொன் றுரைப்பான்:
ஒருதிருக் குறளின் உண்மையைக் கெடுக்கிறாய்;

---

141. வியல் - பெரிய, அகன்ற. *142.* அங்கண் - அவ்விடம். *144.* எழில்மொழி - அமராவதி; உசாவ - கேட்க. *146.* கொற்றவன் - அரசன். *148.* இருப்பை - இருப்பாய். *154.* பெருமணம் - பெரியபுகழ்மணம்.

"நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்
தீயாண்டுப் பெற்றாள் இவள்"என்பது குறள்.
இதன் பொருள் தன்னை இயம்பக் கேணீ.
"(உலகியலுக்கு மாறாக) விட்டு நீங்கினால் சுடுவதும்
கிட்ட நெருங்கினால் குளிர்வது மாகிய (காமத்) தீயை
இவள் எங்குப் பெற்றாளோ?"
என்பது பொருளாம்; இதற்கு மாறாக,
யானுனைக் குறுகி யிருக்குங் காலையே
நீயெனைச் சுடுகிறாய்! நெருங்கின் சுடுவது
உலக உண்மையென் னுடம்பெலாம் கொதிக்குமால்;
இதுதான் காமத் தீயோ என்னவோ!
இதுபோ தாதென எனைச்சுடும் திங்களும்:
விலகி யிருப்போர்க்கு வெப்பந் தந்திடும்
குலவி மகிழ்வோர்க்குக் குளிர்ச்சி நல்கிடும்
என்பதாய் இலக்கிய ஏட்டில் படித்துளேன்
தின்பதா யுள்ளது திங்களோ என்னை!
கட்டித் தழுவின் காமத் தீச்சுடர்
எட்டி விலகுமென் றெண்ணு வலியான்
என்றம் பிகாபதி இயம்பிய வேளையில்,
வெடியொலி யோவென வெருளும் வண்ணம்
திடுமெனும் பேரொலி திடீரெனக் கேட்கவே,
அஞ்சி அமராவதி அதிர்ச்சியுற் றெழுந்தாள்;
மஞ்சுறு அம்பியும் மருண்டே எழுந்தான்.
அமரா வதிதன் அச்சம் நீக்கவும்
அம்பி அவளுறு அச்சம் போக்கவும்
எண்ணினர் ஒருமித் திறுகத் தழுவ;
அண்ணலும் புல்லினான் அவளும் புல்லினாள்.
முன்னர்ப் புல்லியோர் யாரென மொழிவது

159. கேணீ - கேள்நீ. 166. திங்களும் – சந்திரனும். 174. வெருளுதல் - மருளுதல், அஞ்சுதல். 177. மஞ்சு - வலிமை, 180. ஒருமித்து - ஒருசேர இறுக்கமாய்த் தழுவ எண்ணினர். 181. புல்லுதல்- அணைத்தல்.

ஒண்ணுதல் தங்ஙனம் ஒன்றித் தழுவினர்.
பின்னர் அறிந்தனர் பேரொலி யாதென:
தெங்கங் காயொன்று திடீரென விழுந்தே
அங்ஙனம் அவர்தமை அச்சுறுத் தியதால்.
தெங்குதரு தழுவல் தித்திக்கத் தித்திக்க
அங்குநின் றகலா தணைத்தே யிருந்தனர்;
இதழோ டிதழ்சுவைத் திப்புவி மறந்தனர்;
இதழினின் றிதழை இழுத்துப் பிரித்தே
அகத்துறு ஆவல் அடங்க அவளது
முகத்துக் கன்னம் முழுவதும் அம்பி
முத்த மாரியை முகிலாய்ப் பொழிந்தான்.
மெத்தவும் நாணிய மின்னிடை வேண்டுவாள்:
கன்னம் கவ்வாதீர் காட்டிக் கொடுத்திடும்;
இன்னமும் முத்தம் ஈதல் வேண்டா;
அளவு மீறின் அமிழ்தும் நஞ்சாம்
உளவாய் நாளை உண்ணு துறுக
அம்பியின் புணர்ச்சி வேட்கை அறிகிறேன்
தும்பிசூழ் இக்கா தோய்தல் வேண்டா
கன்னி மாடக் கள்ளக் காப்பறை
துன்னி நாளை தோய்வம் நாமே
என்று கூறி இலங்கிழை வலிந்து
கருமி கையின் காசுபறித் தாற்போல்
அருமையின் தன்னுடல் அம்பியின் பிரித்துச்
சென்று வருவதாய்ச் செப்பி விடைபெற,
நன்று நன்றென நம்பியும் போந்தனன்.

---

185. தெங்கங் காய் - தேங்காய். 187. தெங்கு தரு தழுவல் - தேங்காயால் நேர்ந்த தழுவல். 189. இதழ் - உதடு; புவி - பூவுலகம். 192. அம்பி - அம்பிகாபதி. 193. மாரி மழை; முகில் - மேகம். 194. மின்னிடை - அமராவதி. 199. வேட்கை - அவா. 200. தும்பி - வண்டு; தோய்தல் - புணர்தல். 201. காப்பறை - பாதுகாப்பான அறை. 203. இலங்கிழை - அமராவதி. 204. கையின் - கையிலிருந்து. 205. அம்பியின் - அம்பிகாபதியினிடமிருந்து.

புரையறு காதலர்ப் புல்லச் செய்த
அரைகுறை வென்றியோ டகன்றனன் காமனும்.
காதலர் இருவரும் களிப்பொடு சென்றபின்
சூதுறு அமைச்சொடு சோழன் வந்தனன்
சோலை முழுதும் சுற்றிச் சுற்றி
வேலைதே டுவோர்போல் வீணாய் அலைந்தனர்
நீண்ட நேரம் நேடித் திரிந்தும்
காண்டல் இன்றிக் கடிந்தனன் சோழன்;
என்னுடை மகள்மேல் ஏற்றினை வீண்பழி
உன்னை நம்புதல் ஒண்ணா தினியென
மன்னன் கடிந்திட, மயங்கினான் காடவன்;
இஞ்சி தின்ற இருங்குரங் காயினான்
அஞ்சி மன்னனின் அடியிணை பணிந்தான்.
கன்னியும் காளையும் காடவன் போட்ட
தூண்டிலில் விழாமல் துள்ளி மறைந்ததால்
வேண்டா வெறுப்பொடு வேந்தன் சென்றனன்
மைய இரவில் மன்னர் வந்து
பைய வேவு பார்ப்பதால், அமராவதி
முன்னிர வதனில் வரும்படி மொழிந்ததால்
நன்னர் அம்பி நண்ணினன் அங்ஙனே;
காதலர் இருவரும் முன்னிராக் களித்துப்
போதல் செய்தனர் பூரிப் புடனே.
அவர்தாம் சென்றபின் நடுவிரா வதனில்
இவர்தாம் வந்ததால் ஏமாந் தனரே.
"கள்ளன் பெரியனா? காப்பான் பெரியனா?"
கள்ளனே பெரியன் என்றிது காட்டுமே!

---

208. புரையறு காதலர் - மாசற்ற தூய்மையான காதல்கொண்டவர்களை; புல்லச் செய்த - ஒருவரையொருவர் தழுவச்செய்த. 209. காமன் - மன்மதன். 211. அமைச்சு - அமைச்சன். 219. இருங்குரங்கு - பெரிய குரங்கு. 224. மைய இரவு - நடு இரவு. 225. பைய - மெள்ள; வேவு - உளவு, ஒற்று. 226. முன்னிரவு - இரவின் முற்பகுதி (இரவு சுமார் 10 மணிக்குள்). 227. அங்ஙனே - அவ்வாறே. 232. முழுதும் - ஒரு பழமொழி.

17. அம்பிகாபதிக்குக் கண்ணனார் அறிவுறுத்திய காதை

அடுத்தநாள் பிற்பகல் அளவளாவி மகிழக்
கம்பர் இல்லம் கண்ணனார் போந்தார்
வீட்டில் உரையாடி விட்ட பின்னர்,
ஏட்டை வைத்து, வெளியே ஏகலாம்
என்று கம்பர் இயம்ப, இருவரும்
துன்று மாமரத் தோப்பை நோக்கிச்
சென்றுகொண் டிருந்தனர் தெருவில் சேர்ந்தே.
ஆங்கொரு களிமகன் அவர்தமை நோக்கிப்
பாங்கிலா மொழிபல பகர லானான்:
கம்ப ரடிகாள் கள்ளின் பெருமையை
வம்பாய்ப் பழிப்பவர் வாழ வியலுமோ?
கள்ளே உணவு! கள்ளே உயிரும்!
கள்ளே உலகம்! கள்ளே தெய்வமும்!
ஈது மறுப்பவர் என்னொடு துணிந்து
வாது செய்ய வருவர் கொல்லோ!
திருக்குறள் தன்னைத் திரிபறப் படித்துளேன்
திருவள் ளுவரதில் தெரியா துளறினார்.
படிப்பு வேறு பழக்கம் வேறும்
நடிப்புப் போதுமோ நடைமுறை வேண்டுமே
ஒருதுளிக் கள்ளை உவந்து சுவைப்பின்
மறுதுளி கேட்பீர்; மறுபடி மறுபடி
மாந்தி மகிழ்வீர் மாண்பொடு திகழ்வீர்;
வாந்தி எடுத்துச் 'சாந்தி' பெறுவீர்
இப்போது கால்களே இத்தரை படுமால்;

---

8. களிமகன் - கள்குடியன். 9. பாங்கு - நற்பண்பு. 22. மாந்தி - அருந்தி, உண்டு.

தப்பாது கலயம் தாங்கிக் குடித்திடின்
தடம்புரள் வண்டியின் தன்மை மான
உடம்பு முழுதும் உருளும் தரையில்
திடம்படக் கூறுவல் தெரிந்து கொண்மின்.
மோட்சம் வேண்டின் மூழ்கிக் கள்ளில்
நீச்சல் அடிப்பின் நிச்சயம் கிடைக்கும்.
என்னிடம் பாடம் இனிதுகேட் பீரோ
என்னை ஆசானாய் ஏற்றுக் கொள்வீரோ?
கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும்
கவிபாடும் என்று கதைப்பர் உலகோர்.
கள்ளுக் கடவுளின் ‘கருணை’ கிடைத்திடின்
பள்ளு பாடும் பார்க்கும் பொருளெலாம்.
வஞ்ச மிலாஎன் வளமார் பாடல்உம்
நெஞ்சை யள்ளும் நீரதைக் கேட்பீர்:
“இப்போ தருந்தினேன் ஈந்தின் கள்ளொடு
பனையின் கள்ளும்
தப்பிலாத் தெங்கின் கள்ளே தாள்களை
வணங்குகின்றேன்
அப்பனே ஆட்டுக் கறியே அன்புறு
ஆரு மீனே
எப்பொழு தும்மைக் காண்பேன் இருல்பொடி
எம்பி ரானே”
ஒருபாட் டுரைத்தேன் ஒப்பிலாக் கம்பரே
மறுபாட் டுவேண்டா; மதுவினை அருந்தின்
ராமா யணக்கவி ராட்சசர் நீரும்
கீமா யணமொன்று கிடுகிடெனப் பாடுவீர்!
இரண்டு கம்பரும் இரண்டு நண்பரும்
மிரண்டு மிரண்டென் மேனியை நோக்குவிர்;
நீங்கள் நால்வரும் நில்லாது செல்வதை
நாங்கள் இருவரும் நனிதடுத் திடுவோம்;

26. தடம் புரள் - வழி தவறிய. 34. கதைப்பர் - கதையளப் பார்கள். 39. ஈந்து - ஈச்ச மரம். 42. இருல் - இரு.

என்று குறுக்கே இடறி வீழ்ந்த
பன்றிப் பயலைப் பார்த்துநெட் டுயிர்த்துக்
கம்பரும் நண்பரும் கவன்றனர் பெரிதும்;
வம்பப் பயலிடம் வாய்கொடுத் திலரே.
"களித்தானைக் காரணம் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று"என் பதுகுறள்
குடியால் குடிப்புகழ் கொல்லப் படுதலும்
மிடிவந் துறுதலும் மேனி கெடுதலும்
இன்னபிற தீங்குகள் எல்லாம் அடுத்தலும்
உன்னுதல் இலரோ உலகக் குடியர்!
குடியன் ஒருவன் குடிக்காப் போழ்து
குடித்துள பிறரின் கொடுமை பாரானோ!
என்றெலாம் நண்பர் இருவரும் பேசிச்
சென்றனர் மாமரச் செறிவினை நோக்கி;
அவ்விடம் அடைந்ததும் அமர்ந்தனர் ஓரிடம்;
செவ்விதின் கம்பர் செப்ப லானார்:
நண்பரே உம்மை நானிங் கழைத்தது
பண்பறு அம்பிகா பதியின் செயலை
அறிவித் தும்மிடம் அவன்குறை யனைத்தும்
தெரிவித் தவனைத் திருத்தச் செயற்கே.
நாடொறும் இக்கா நண்ணிநூல் எழுதும்
பீடுறும் வழக்கம் பெரிதுமுண் டவற்கே.
அவன்வரின் யானோ அகன்று விடுவல்.
இவணவன் தங்கி யிருக்குங் காலை

---

52. பயல் - சிறுமகன், கீழ்மகன்; நெட்டுயிர்த்தல்-பெருமூச் செறிதல். 53. கவன்றனர் - கவலைப்பட்டனர். 55-56. குறளின் உரை: கள்ளுண்டு மயங்கினவனுக்குப் பல காரணங்கள் காட்டி அறிவு புகட்டுதல், நீரின் அடியில் மூழ்கியவனை எரியும் விளக்கால் துருவித் தேடுதல் போன்றதாம். 57. குடிப்புகழ்-குடும்பப் புகழ். 58. மிடி-வறுமை. 60. உன்னுதல் - கருதுதல். 64. மாமரச் செறிவு - மாமரம் அடர்ந்த தோப்பு. 71. இக்கா - இந்தச் சோலை. 72. பீடுறும் - பெருமை பொருந்திய.

அரசன் மகளாம் அமரா வதியை
விரும்பா தேயென விளம்புக அவற்கே.
உமது திறமுள உரையால் என்மகன்
அமரா வதியை அறவே மறக்கச்
செய்தல் வேண்டும்; செய்யா தொழியின்
உய்தல் இல்லை உறுதியாய்க் கூறும்;
என்றுசொல் லிக்கொண் டிருக்கும் வேளை
அம்பி காபதி அருகே வருவதைக்
கம்பர் கண்டு கட்டினார் நடையை.
கண்ணனார் அமர்ந்துள காவிடம் அம்பி
நண்ணி வணக்கம் நவின்றமர்ந் தனனே.
பெரியவர் கண்ணனார் பேச்சுத் தொடுத்தார்;
உரிய முறையில் உடல்நலம் உசாவினார்;
என்னநூல் இப்பொழு தெழுது கிறாயென
முன்னர்ப் பற்பல பேசி முடித்துப்
பின்னர்க் குறித்த பேச்சை எடுத்தார்;
அம்பி! ஒன்றுனக் கறிவிக்க விரும்புவல்;
நம்பியென் உரையை நன்கு கேட்க.
மண்ணாசை பெண்ணாசை பொன்னாசை என்னும்
திண்ணிய ஆசைகள் தேருங் காலைப்
பெண்ணாசை என்பது பெரிதுங் கொடியது.
கன்னி யொருத்தியைக் களவிற் புணர்தலோ
பிறன்மனை விழைந்து பெண்டாடல் புரிதலோ
அறனில்லை என்பதை அறிகுவை நீயே!
என்று கண்ணனார் இயம்பிய போதே,
நன்று நவின்றீர்! நானிலம் தூற்றப்
பிறனில் விழைவதும் பெண்டாடல் செய்வதும்
அறனில்லை என்பதை அறிவேன்; ஆயின்,

---

80. உய்தல் - பிழைத்தல். 84. காவிடம் - சோலையில் குறிப்பிட்ட இடம். 87. உசாவுதல்-கேட்டறிதல். 97. பெண்டாடல்-பிறன் மனைவியை விரும்பிப் பெண்டாட்டி யாக்குதல். 100. நானிலம் - உலகம்.

கன்னி யொருத்தியைக் காதலிப் பதிலே
என்ன தவறென இளைஞன் கடாவ,

(கண்ணனார்)

பெற்றோர் அறியாது கன்னிப் பெண்ணை
மற்றவர் கெடுத்தல் மாபெருங் குற்றமாம்.
இதனால்,
இருபெருங் குடிக்கும் ஏலாப் பழிவரும்
மரபும் அன்றிது மாண்பும் அன்றெனக்
கண்ணனார் கழறக் காளை கூறுவான்:
அண்ணலே நந்தமிழ் அகப்பொருள் இலக்கணம்
எந்த மொழியிலும் இல்லா ஒன்றாம்.
இந்த அகப்பொருள் இலக்கணம் கூறும்:
காதலர் களவிற் காண்டலும் புணர்தலும்
ஏதிலார் அறியாது இல்லம் விட்டுத்
தணந்து சென்று தாமே தமியராய்
மணந்து கொள்ளலும் மரபு வழியெனும்.
இலக்கியம் கண்டதற் கிலக்கணம் என்ப.
அளக்க லாகா அகப்பொருள் இலக்கியம்
தமிழில் உள்ளமை தகவா யறிவீர்.
தமிழ்மர பின்படி தக்க கன்னியைக்
காதலிப் பதிலும் களவிற் புணர்விலும்
ஏத மிலையென இயம்ப, கண்ணனார்,
கன்னித் தமிழைக் கற்றுளேன் யானும்
சொன்ன யாவும் சோரா தறிவேன்;
தொல்காப் பியமெனும் தொல்பெரு நூலில்
ஒல்காக் கருத்தொன் றுள்ளமை உரைப்பல்:

---

104. கடாவ - வினவ. 107. ஏலா - ஏற்க முடியாத. 110. அகப்பொருள் - காதல் துறை. 114. ஏதிலார் - அயலார். 115. தணந்து - பிரிந்து; தமியராய் - தாமே தனித்தவராய். 122. ஏதம் - தவறு. 126. ஒல்கா - குறைவில்லாத.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்"
என்னுமோர் பகுதியந் நூலில் இருப்பதாம்.
கன்னியைக் களவிற் காண்டலும் புணர்தலும்
உண்மையாய் நடைபெறும் உலகியல் அன்று.
நாடக வழக்கென நவிலும் அந்நூல்
நாடக வழக்கு நடைமுறைக் கொவ்வுமோ? மற்றும்,
காதல் என்பது கருதற் பாற்று
காதல் வாழ்க்கை காணின் வியப்பாம்
காதலர் பல்லோர் கண்டனர் தோல்வி
காதலர் சிலரே கண்டனர் வெற்றி;
இந்த வெற்றியும் எதிர்பா ராததாம்
எந்தக் காதலும் ஏற்கத் தகுமோ?
அழகை அடிப்படை யாகக் கொண்டு
விழைகுவர் காதலர் ஒருவரை யொருவர்.
ஈன்றவர் தேர்வோ எதிர்கால வாழ்விற்கு
ஆன்ற அடிப்படை யாக அமையும்.
இந்த நுட்பம் இளைஞர் அறியாமே
சொந்த வாழ்வைச் சோர்வுறச் செய்வதா?
காதல் என்பது கடிமணம் புரிந்தபின்
போதல் புரிந்திடும் பொருத்தமாம் சான்றுள
என்னை மடவார் ஏசினும் ஏசுக
என்னுடைக் கருத்தை இயம்புவல் யானே:
கொழுநன் செல்வனுய்க் கொழுத்திருந் தாலே
விழுமம் பெறலாம் வேட்டவள் தன்னிடம்.
தன்தாய் வீட்டினும் தகுதி குறைந்து
நொந்த கணவனை நொய்ம்மையாய் நடத்தும்
தோமுறு மகளிரின் தொகைபல; மற்றும்,

141. விழைதவர் - விரும்புவர். 142. ஈன்றவர் - பெற்றோர். 143. ஆன்ற - சிறந்த. 148. மடவார் - பெண்டிர். 150. கொழுநன் - கணவன். 151. விழுமம் - உயர்வு; வேட்டவள் - மனைவி. 153. நொய்ம்மையாய் - சிறுமையாய், அற்பமாய். 154. தோம் - குற்றம்.

மாமனர் வீட்டில் மண்டி யிட்டே
ஏமம் பெறூஉம் ஏழைக் கணவரைக்
காமம் செய்யாது கண்டபடி நடாத்தும்
வாமப் பெண்டிரின் வகைக்கோர் அளவிலை
இவையெலாம் அறிவையோ என்ன, அம்பி,
இவையெலாம் என்னிடம் இயம்பும் நோக்கினை
நவையிலா தின்னே நவிலுதிர் என்ன,
வேந்தன் மகளை விரும்பல் அவன்குடி
மாந்தன் தனக்கு மாண்புடைத் தாகுமோ?
மன்னர் குடியில் மகளைக் கொடுத்தலே
மன்னர்க் குரிய மரபாம் அறிமதி!
சோழன் மகளைச் சுற்றிக்கொண் டிருத்தல்
ஏழைமைப் புலவற் கேலாச் செயலாம்;
அமரா வதியைநீ அவாவித் திரிதல்
நமரால் ஒப்பத் தக்கதோ நவிலுதி!
ஏணி வைப்பினும் எட்டாத் தொலைவில்
மாணிழை யுள்ளாள்; மற்றும், உன்செயல்
மொட்டைத் தலையையும் முழங்கால் தனையும்
கட்டி முடிப்பதைக் கடுக்கும் செயலாம்.
உவச்சர் குலத்தில் தோன்றிய உனக்கிது
அவச்சொல் லாகும் அகன்றிடு அவளை.
பொருந்தாக் காதல் புரிவது மடமை
திருந்தி யுளத்தைத் திருப்புக மறுபால்.
அரண்மனை வாழும் அவளை நீ மணக்கின்
அரண்மனை ஏவல் ஆளாய் விடுவாய்
முரண்மிக நேரும் முற்றும் உணர்மதி
என்றுநல் லறிவுரை இயம்பக் கேட்டபின்,

---

156. ஏமம் - பாதுகாப்பு. 157. காமம் - விருப்பம். 158. வாமம் - தீய குணம். 161. நவை - தவறு; இன்னே - இப்போதே. 162-163. குடிமாந்தன் - குடிமகன். 168. அவாவி - விரும்பி. 169. நமர் - நம்மவர். 171. மாணிழை - அமராவதி. 173. கடுக்கும் - ஒக்கும். 175. அவச்சொல் - பழிச்சொல். 180. முரண் - மாறுபாடு.

அம்பி காபதி தன்கருத் தறைவான்:
எனக்கும் அவட்கும் இடையுள காதல்
தனக்குநல் லொப்பித் தரையில் இல்லை
தெய்வக் காதலெம் தொடர்பு தெரிவீர்
தெய்வமாய் எனையவள் தேர்ந்து வணங்குவள்
அவளை மணக்கின் அரண்மனை யாளாய்
அவணிரேன் யானும்; அவளும் அங்கிராள்.
இராமர் இருக்கும் இடமயோத் தியாமால்;
நானுள இடமே அவளுள நல்லிடம்
நான்செலும் வழியே நல்லாள் வருவாள்;
உவச்சர் குலத்தனும் உலகை யோம்பும்
தவப்பெருங் குலத்தளும் தாமாய் இணைந்தது
உலகவர லாற்றிலோர் உயர்ந்த இடம்பெறும்;
அலகில் மக்கள் அறைவரெங் கதையை!
புல்லிய எம்மைப் போழ்க்க முயல்வது
கல்லில்நார் உரிப்பதைக் கடுப்ப தாகும்.
காதல் காதல் காதல் இலையேல்
சாதல் சாதல் சாதல் என்பதே
என்னுடை முழக்கம் என்றனன் அம்பி.
உன்னையான் திருத்துதல் ஒல்லுமோ வாழ்கென
நன்னர் வாழ்த்தி நடந்தார் அவரே.
உறங்கு வோனையே எழுப்ப ஒல்லும்;
உறங்குவோன் போல நடிக்கும் ஒருவனைப்
பிறங்கச் செய்தல் பெரிதும் அரிதரோ.

---

184. ஒப்பித் தரையில் - ஒப்பு இத்தரையில்; தரை - பூவுலகம். 188. அவண் - அங்கு. 191. நல்லாள்-அமராவதி. 192. ஓம்பும்-காக்கும். 193 தவப்பெருங் குலத்தள்-மிகஉயர்ந்த அரசகுலத்தாள். 196. புல்லிய - இணைந்த; போழ்க்க - பிளக்க, பிரிக்க. 197. கடுப்பது - ஒப்பது. 203. ஒல்லும் - இயலும், முடியும். 205. பிறங்கச் செய்வது - (எழுப்பித்) தெளிவு பெறச்செய்வது; அரிதரோ - அரிது அரோ; அரோ - அசைச்சொல்.

18. காதலர்கள் கலந்து மகிழ்ந்த காதை

இன்ப இரவை எதிர்பார்த் திருந்த
அம்பி காபதிக் கானநண் பன்போல்
தங்கம் உருக்கிய தட்டேய் ஞாயிறு
திங்கள் வருமுன் திகழும் குடபால்
மங்கி மறைந்தான்; மாலையும் கழிந்தது.
முன்னிர விலேயே முற்றும் உண்ணுமே
கன்னி மாடக் காவகம் வருகெனக்
கூறியும் அம்பிக் குழகன் வராமையால்
மாறி மாறி வருந்திசை நோக்கிப்
பெண்டிருட் சிறந்த பெதும்பை அமராவதி
வண்டல் அயர்ந்த வளம்பல கெழீஇய
தண்டலை தன்னில் தனியாய்த் தவித்தே
உளத்துள் பற்பல உன்ன லானாள்:
காவகம் வருகையில் காவலர் பிடித்துக்
காவலன் எந்தைபால் கட்டிச் சென்றனரோ!
மன்னன் தன்னிடம் மாட்டிக் கொண்டவர்
என்ன படுவாரோ! ஏழையென் செய்வேன்!
அன்றே முயங்க அவாவிய அவரை
இன்று வருமா றியம்பி யனுப்பினேன்.
வாய்க்கும் என்றே வந்த அவர்க்கு
வாய்க்கெட் டியது வழுக்கி வீழ்ந்ததே.
ஒருவேளை,
மறைந்திருந் தென்னை மயங்க வைத்துத்

---

3. ஏய் - போன்ற. 4. குடபால் - மேற்கு. 8. குழகன் - அழகன், இளைஞன். 10. பெதும்பை - பெண். 11. வண்டல் - பெண்களின் விளையாட்டு; அயர்தல் - விளையாடுதல்; கெழீஇய - நிறைந்த. 12. தண்டலை - சோலை. 15. காவலன் - அரசன்; எந்தை - எம் தந்தை. 18. முயங்க - புணர. 20. வாய்க்கும் - கைகூடும்.

திறந்தெரிந் திங்கண் திடீரென வருவரோ?
களியாட் டயரும் கயவர் நேர
விளையாட் டயரும் வீணரோ யாமும்!
என்று நினைத்தே ஏங்கித் தவித்தாள்
சென்றுபல் பாங்கரும் செம்மலைத் தேடினள்
ஆட்டனத்தியைத் தேடிய ஆதி மந்திபோல்.
அஞ்ஞான்று,
காவலன் ஒருவன் கஞ்சுக உடையொடு
காவகத் துள்ளே கடுகி வருவதைக்
கண்டனள் உள்ளம் கலங்கி அச்சங்
கொண்டனள்; அவன்வரும் குறிக்கோள் யாதெனக்
கண்டிலள்; அம்பியைக் காவலன் வேந்திடம்
கொண்டுபோய் விட்டதைக் கூறி என்னை
விழிப்படை யச்செய வேண்டிவந் தனன்கொலோ!
பழிப்போ டியானினி பாரினில் வாழ்வதோ!
ஒருவேளை,
என்கற் பழிக்க இவன்வரு கிறானோ!
எனப்பல எண்ணி யிருக்கையில் அவளது
நினைப்பு போலவே நெடிதவன் உரைத்தான்:
அம்பி காபதி அரண்மனைப் பொழிற்கு
வந்ததைக் கண்ட வலியுறு நுந்தை
சிந்தை சினந்து சிறையில் அடைத்தார்
இதனைக் கூறவே இவணியான் வந்தேன்
மதன்செயல் அவரை மாட்டிய தென்ன,
அமரா வதிகேட் டவனிடம் உரைப்பாள்:

---

24. நேர - போல. 27. செம்மல் - சிறந்தோனாகிய அம்பிகாபதி. 28. முழுதும் - சோழ இளவரசியாகிய ஆதி மந்தி என்பவள், தன் கணவனும் சேர இளவரசனுமாகிய ஆட்டனத்தி என்பவன் காவிரியில் மூழ்கியபோது அவனைத் தேடியதாக வரலாறு கூறும். அஞ்ஞான்று - அப்போது. 29. கஞ்சுக உடை : சட்டை போட்ட சீருடை. 30. கடுகி - விரைந்து. 33. காவலன் - சேவகன்; வேந்து - வேந்தன். 35. கொலோ - கொல் + ஓ = ஐயப் பொருள் தரும் இடைச் சொற்கள். 41. நுந்தை - உம் தந்தை. 44. மதன் - மன்மதன்.

கன்னி யொருத்திபால் காமங் கொண்ட
அன்ன வனைச்சிறை அடைத்தது நன்றே!
இன்னும் கேட்க! இதுபோ தாது;
கொலைசெய் குற்றம் அவன்மேற் சுமத்தி
தலைகொய் வதுவே தக்க ஒறுப்பாம்
என்றவள் இயம்ப, இருவரும் சேர்ந்தே
ஒன்றி நகைத்து உவகை யுற்றனர்.
அம்பி காபதி அந்த உருவில்
வந்ததை நங்கை வகையா யறிந்தனள்;
அந்தக் கணமே அவளறிந் துளாளென
எந்த விதமோ ஏந்தலும் அறிந்தான்
இருவரும் ஒன்றி இளித்தனர்; இதன்பின்,
மருவுறும் உளத்தொடு மகிழ்ச்சியில் திளைத்து
வேறு கோலம் வேய்ந்ததன் காரணம்
கூறு கென்று குளிர்மொழி வினவ,
அம்பி காபதி அறைய லுற்றான்:
கன்னி மாடக் காவகப் பாங்கர்
என்னைக் கண்ட ஏவலாள் ஒருவன்,
வேந்தனின் காவலர் தவிர வேறு
மாந்தர் இவ்விடம் மன்னலா காதென
வேந்தன் ஆணை விடுத்துள் ளமையால்
இவ்விடம் வராதே என்று விரட்டவே,
அவ்விடம் விட்டியான் அறிந்த காவலன்
ஒருவன் வீடுபோய் உடையெலாம் பெற்று
மருவினன் ஈண்டு மன்னரின் ஆள்போல்;
இதுதான் நடந்த கதையென இயம்பினான்.
எதுவா யினுஞ்சரி, இனியிரு வேமும்
கன்னி மாடக் கள்ளக் காப்பறை

---

50. ஒறுப்பு - தண்டனை. 56. ஏந்தல் - அம்பிகாபதி. 59. வேய்தல் - அணிதல், பூணுதல். 60. குளிர் மொழி - அமராவதி. 65. மன்னல் - பொருந்துதல் (வருதல்). 72. இருவேமும் - இருவரும்.

தன்னை யடையத் தக்க வழியிது
என்று கூறி இனிய நம்பியை
அள்ளிப் பருகும் அழகுறு நங்கை
உள்ளுக் கழைத்துச் சென்றனள் உவந்தே.
இந்த அறையினுள் எவரும் வாரார்;
எந்த நிகழ்ச்சி ஈண்டு நடப்பினும்
வெளியில் தெரியா விதமாய் அமைத்துளர்.
ஒளியும் வளியுமே உட்புக வியலும்
என்று மொழிந்தோர் இருக்கையில் அமர்த்தினள்.
நன்றிவ் வறையென நம்பி வியந்தனன்;
திண்ணிய தரையும் திகழும் சுவரும்
வண்ண வண்ணப் பளிங்குக் கற்களால்
மண்ணி யுள்ளதை மகிழ்வொடு கண்டனன்;
வண்ண ஓவியங்கள் வாழும் சிலைகள்
ஓங்கும் அழகுடை ஒப்பனைப் பொருள்கள்
ஆங்காங்கு கண்டே ஆழ்ந்து சுவைத்தபின்,
தேக்கு நூக்கால் திண்ணிதின் குயிற்றி,
ஆக்கிய ஆரப் பலகைமேல் பரப்பி
மென்மையார் இலவ மெத்தை விரித்துப்
பன்மலர் தூவிப் பரப்பிய கட்டிலில்
அம்பிகா பதியை அமராவதி அமர்த்திச்
சிற்றுண்டி வகைபல செவ்விதின் ஊட்டி
முற்றும் பதமொடு முதிர்ந்தபல் கனிவகை
கண்டும் தேனும் கலந்த பாலொடு
உண்டற் கீந்துகண் டுவகை யுற்றனள்.
இருவிருந் துண்ட ஏந்தல் பின்னர்,
இருஇரு அசையா திப்படி யேயிரு
என்று நங்கைபால் இயம்ப, மற்றதன்

---

81. ஒளி - வெளிச்சம்; வளி - காற்று. 86. மண்ணி - ஒப்பனை (அலங்கரித்து) செய்து. 88. ஒப்பனைப் பொருள்கள் - அலங்காரப் பொருள்கள். 90. தேக்கு, நூக்கு - மரவகைகள்; குயிற்றி - (கட்டிலைச்) செய்து. 91. ஆரப்பலகை - சந்தனப் பலகை. 97. கண்டு - கற்கண்டு. 99. ஏந்தல் - அம்பிகாபதி.

காரணங் கூறுகெனக் காதலி வினவ,
ஆரணங் கேயுன் னழகிய பளிங்குக்
கன்னத்தில் என் முகம் காண்கிறே னுதலின்
இன்னும் அசையா திருந்திடு! மற்றும்,
பாங்குள பளிங்குக் கற்கள் தமக்கே
ஈங்குநின் கன்னம் ஈயும் பேரொளி;
அதோவுள முத்தால் ஆயதொங் கற்கே
இதோவுன் பற்கள் இலங்கொளி ஈந்திடும்;
ஈங்குள பவளச் சிலைக்குன் இதழ்கள்
ஓங்கு செந்நிற ஒளியை மிகுக்கும்;
யாங்ஙனம் மொழிவதுன் நலங்கள் யாவையும்
என்றவன் கூற, ஏந்திழை நாணி,
இத்தகு கிண்டலை இனியான் பொறேஎன்;
வித்தையா யுள்ளது விளம்புமும் கற்பனை;
என்று மொழிய இருவரும் நகைத்தபின்,
ஆங்கொரு பக்கல் அமைவுறு யாழினை
வீங்கு புகழோன் விருப்பொடு கண்டதைக்
கண்டு கனிமொழி பாடக் கருதினள்;
எத்தகு குற்றமும் இல்லா யாழினை
மெத்தெனும் கையால் மெல்ல எடுத்துக்
காந்தளை வென்ற கைவிரல் தம்மால்
ஏந்திசை யாழின் நரம்பினை இயக்கிப்
பண்ணல் பரிவட் டணைமுத லாய
எண்வகைத் தொழிலால் இசையினை எழுப்பிப்
பண்வகைக் குற்றம் படாஅமல் பாடுவாள்:

---

108. தொங்கல் - மாலை. 109. இலங்குஒளி-விளங்கும் ஒளி. 110. இதழ்கள் - உதடுகள். 113. ஏந்திழை - அமராவதி. 118. வீங்கு - மிகுந்த. 119. கனிமொழி - அமராவதி. 124. பண்ணல், பரிவட்டணை-இசைக்கலைச் செயல்வகைகள். 126. படாஅமல் - உண்டாகாதபடி (உயிரளபெடை)

(1) பெண்டி ராகப் பிறந்த வரேநனி
பெரிய பேறு பெற்றவ ராவார்
மண்டிணி ஞாலம் மாண்புற வேயுயர்
மக்களைப் பெற்றுத் தருபவர் யாரோ?
கண்டினும் இனிய கண்மணி மக்களைக்
கட்டிக் காத்து வளர்ப்பவர் யாரோ?
மண்டிய நோய்க்குத் தாம்மருந் துண்டு
மக்கட் குநற்பால் ஊட்டுவோர் யாரோ?

(2) இரப்பவர்க் குணவினை இன்முகத் துடனே
ஈந்திட் டவர்பசி இரிப்பவர் அவர்தாம்.
நிரப்பும் அன்பொடு நித்தம் கொழுநரின்
நீள்புகழ் காத்து நிற்பவர் அவரே!
கரப்பிலா உளத்தொடு விருந்தைக் கண்டே
களிப்பொடு பணிவிடை செய்பவர் அவரே!
புரப்பவர் உலகைப் பூரிப் புடனே
பூவைய ரேயெனில் பொருத்தம் ஆமே!

(3) கணவ ரின்பசி கண்ணுறும் போதெலாம்
கரிசனத் தாயாய்க் காணலாம் அவரை;
கணவர்க் குப்பிணி கண்டிடுங் காலை
கண்ணும் மருத்துவத் தாதியும் ஆவார்;
கணவரின் உள்ளம் கலங்கும் போதெலாம்
கருத்துரை வழங்கும் அமைச்சரு மாவார்;
கணவ ரின்பிழை காணப் பொருஅமே
கடிந்திடும் கல்வி ஆசான் அவரே!

(4) மங்கைய ரின்றி மற்றவர் ஆடவர்
மாநிலந் தன்னில் வாழ்வ தேது?
நங்கையர் காதலுக் கேங்கிக் கிடந்தே
நற்றவம் புரிபவர் நம்பிய ராவார்;

---

128. மண்டிணி - மண்திணி. *129.* கண்டினும் - கற்கண்டினும். *131.* இரிப்பவர் - போக்குபவர். *132.* கொழுநர் - கணவர். *133.* கரப்பு - மறைப்பு. *134.* பூவையர் - பெண்கள். *135.* கரிசனம் - அன்பு, அக்கறை. *136.* தாதி-செவிலித் தாய். *138.* ஆசான்-குரு, ஆசிரியன். *140.* நம்பியர் - ஆண்கள்.

கொங்கையர் பின்னே குலவித் திரிந்தே
குழைந்து நிற்பவர் குமரர் தாமே!
நங்கையர்க் கடிமை ஆவார் என்றே
நவில வுந்தகும் ஆடவர் தமையே!

(5) பெண்பிறப்பே பெருமைய தாகும்
பேசுங்கால் பிறிதொப் பில்லை
பெண்ணின்பமே பேரின் பமாகும்
பிறவெல்லாம் பிணையா கும்மோ?
பெண்ணழகே பேரழ காகும்
பிறிதொன்றும் பிணையா காதே
பெண்ணுக்கோர் இணைகூ றென்னின்
பெண்ணொருத்தியே பேரிணை யாவளே!

என்றுபா டிக்கொண் டிருக்கும் போதே
நன்றுன் பாவென நம்பியாழ் வாங்கிக்
கொன்றாற் போலக் குறும்பாய்ப் பாடுவான்:

(1) ஆடவ ரின்றி அரிவையர் வாழ்வது
அரிதாம் என்பது அறிந்த உண்மை
ஈடிலாக் காளையர் இல்லா விடினே
இரும்பெருந் தொழில்கள் இழைப்பவர் யாரோ?
பீடுறு கலைதமைப் பிள்ளைகள் நன்கு
பெற்றிடச் செய்யும் பெரியவர் யாரோ?
காடுறும் வரையும் காரிகை யாரைக்
கண்ணை யிமைபோல் காப்பவர் அவரே!

(2) அரிவையர் பின்னே அலகையாய்ச் சுற்றி
அலைபவர் ஆடவர் அனைவரும் அல்லர்
தெரிவுறின் காமம் தெரிவையர் தமக்கும்
தெவிட்டா ஒன்றெனத் தெரிகுவர் யாரும்

---

141. கொங்கையர் - பெண்கள். 144. பிணை - ஒப்பு. 146 இணை - ஒப்பு. 148. நம்பி - அம்பிகாபதி. 151. இழைப்பவர் - செய்பவர். 153. காடு - சுடுகாடு; காரிகையார் - பெண்கள். 154. அலகை - பேய். 155. தெரிவையர் - பெண்கள்.

அறிவுறின் மானம் அகன்று விடுமென
ஆட்டியர் காமம் அகத்துள் வைப்பர்
அரிவையர் போலவே ஆண்களும் கற்பை
அருமையாய்ப் போற்றி ஆள்பவர் அல்லரோ?

(3) பாவையர் இன்பமே பாரில் பெரிதெனப்
பசப்புதல் வெற்றுப் பகட்டுப் பேச்சாம்
பூவையர் இன்பினும் பூவுல கதனில்
போற்றப் பெறுவது புகழ்சால் தமிழே!
நாவினுல் தமிழை நயமறிந் தோதியோர்
நங்கையர் யாரையும் நாட மாட்டார்
வாவிநீர் இருக்க வறட்டுக் கானலை
வவ்வுவோர் வடித்த மடவோ ரல்லரோ?

என்றுபா டிக்கொண் டிருக்கும் போதே
நன்றுநும் பாவென நங்கை கூறுவாள்:
தமிழ்ப்பெரு நூல்களைத் தகவாய்க் கற்றே
அமிழ்தாம் சுவையினை அறிந்தீர் அதனுல்
வறட்டுக் கானலென வைதீர் எனையும்;
முரட்டுப் பாக்கள் முனிவுறச் செய்தன
இனியெனைத் தீண்டுதல் இம்மியும் வேண்டா;
நனியும் தமிழையே நன்கு சுவைப்பீர்!
எனஅவள் ஊட, எழிலோன் கூறுவான்:
கூடல் அறியாமே ஊடல் கொண்டாய்;
நீட விடலிதை நிற்கழ கன்று;
குறளி லுள்ள முதற்பா கூறென,
மறுதலை யின்றி மங்கை கூறுவாள்:
“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி

---

156. ஆட்டியர் - பெண்கள். 161. வாவி-குளம்; வவ்வுவோர்-பற்றுவோர்; வடித்த - வடிகட்டிய; மடவோர் - மடையர். 167. முனிவு - சினம். 170. ஊடல் - போலியான சிறு சினம் கொள்ளல்; எழிலோன் - அம்பிகாபதி. 171. கூடல் - புணர்தல். 172. நிற்கு - நினக்கு. 174. மறுதலை - மறுப்பு.

பகவன் முதற்றே உலகு"
என்றவள் கூற, இறுதியும் கூறென,
இறுதியை நீரே இயம்புக என்ன,
"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்"
என்பது இறுதிக் குறளாம்; இதன்பொருள்
அன்புடன் கூறென அம்பி வினவ,
அன்புடை நீரே அறிவிப் பீரென,
இன்புடன் பொருளை இனிது கூறுவான்;

"ஊடுவது காமத்திற்குப் பேரின்பம்; பின் தழுவிப் புணரப்பெற்றால், அஃது, அப் பேரின்பத்திற்கு மிகவும் பேரின்ப மாகும்."

என்பது இதன்பொருள் என்று மொழிந்து,
ஊடல் தீர்ந்ததோ? உப்பால் இருவேமும்
கூடல் தகுமோ என்றவன் கூற,
வாடல் கொண்ட வனிதை உடனே
மூடி வாயை முறுவல் பூத்தாள்.
அம்பி அதன்பின் அவள்மடி படுத்தான்;
அம்பியின் தலையை அவள்தன் கையால்
அணைத்துக் கொண்டாள்; அதன்பின் என்ன!
இணைத்த நிலையில் இருபெருங் காதல்
அன்றில் புள்ளென அகவுணர் வுந்த
ஒன்றி முயங்கினர் உலகை மறந்தனர்;
மதுவுண் ஞிமிறென மயங்கித் திளைத்தே
இதுவரை யறியா இன்பச் சுவையினை
முதன்முதல் கண்டனர் முதலிர வினிலே.
சுவைகண்ட பூனை சோம்பி இருக்குமா?

---

187. உப்பால் - இனிமேல். 190. முறுவல் பூத்தாள் - புன்முறுவல் செய்தாள். 195. அன்றில் புள் - அன்றில் பறவை. 197. மது - தேன்; ஞிமிறு-வண்டு.

அடுத்துத் தொடர்வதாய் அறிவித் தம்பி
விடுத்தே அவ்விடம் விடைகொண் டனனே
குனிப்பு செய்து கொடுங்கணை தொடுத்த
இனிப்பு வில்லோன் இன்றுவென் றனனே!

---

203. குனிப்பு செய்து - (வில்லை) வளைத்தல் செய்து; கொடுங் கணை - கொடிய மலர் அம்பு. *204.* இனிப்பு வில்லோன் - இனிக்கும் கரும்பை வில்லாக உடைய மன்மதன்.

19. வேந்தன் ஊரலர் உணர்ந்த காதை

தும்பியும் மலருமாய்த் தொடர்ந்து துய்க்கும்
அம்பிகாபதி பற்றியும் அமராவதி குறித்தும்
வம்பலர் நகரில் வழங்குவ தாக
ஒற்றரால் அறிந்தே உண்மை காணக்
கொற்றவன் மாறு கோலம் பூண்டு
நகர மறுகில் நகர்க்கா வலரை
நிகரச் சுற்ற நினைந்து போந்தான்.
மெய்க்கா வலரை மிக்க தொலைவில்
எய்க்காது வரும்படி ஏவித் தானோர்
உழவன் போல உருவம் பூண்டு
கிழவன் நேரக் கிடுகிடு நடுக்கங்
கொண்டு கையில் கோலை ஊன்றிக்
கொண்டு நடக்கையில், குறுக்கிலோர் பித்தன்
வந்து நின்று வழியை மறித்தனன் ;
தண்ணீர் இயையாத் தாமரை மானத்
தண்ணீர் நனையாத் தானை சுற்றியோன்,
இழையெனச் சுள்ளியும் என்பும் அணிந்தவன்,
தழையும் வேரும் கட்டிய தாரன்,
தண்ணீர் காணாத் தலையன், உடலெலாம்
மண்ணைப் பூசியோன், மரத்த தோலினன்,

தலைப்பு : அலர் - பரவும் பழிச் சொல். 1. தும்பி - வண்டு. 3. வம்பலர் - வம்பு அலர் - வம்பான அலர் ; வழங்குவது - பலராலும் பேசப்படுவது. 5. கொற்றவன் - அரசன். 6. மறுகு - தெரு. 7. நிகர - போல. 9. எய்க்காது - இளைக்காது, சளைக்காது. 11. நேர - போல. 13. பித்தன்-பைத்தியக்காரன். 15. இயையா-ஒட்டாத. 16. தானை - துணி. 17. இழை - அணிகலம்; என்பு-எலும்பு. 18. தாரன் - மாலையன். 20. மரத்த - உணர்ச்சியற்ற.

அழுவான் சிரிப்பான் அடியறு மரம்போல்
விழுவான் எழுவான் வெகுண்டு பேசுவான்
அம்பிகா பதியும் அமரா வதியும்
காதலிப் பதாகக் காதால் கேட்டுத்
தன்னை அம்பிகா பதியெனச் சாற்று வோன்
தன்னுறு நிழலை அமராவதி யாக்கியோன் ;
நிலவொளி யிலேதன் நிழலை நோக்கிப்
பலபல காதல் உரைகள் பகர்வான் ;
எனது கண்ணே இனிய கண் மணியே
கனியே தேனே கன்னலே கண்டே
அழகிற் சிறந்த அமரா வதியே !
அழகன் இதோவீண் டம்பிகா பதியுளேன்.
வாய்திற வாயோ வருத்தமோ என்மேல்!
நாய்போல் நினக்கு நான்பணி புரிவேன்
என்னை மணக்க என்ன தடையோ
உன்னைத் தழுவ உடன்படு வாயோ ?
யான்கை யசைப்பின் நீயும் அசைப்பை
யான்செய் வனவெலாம் நீயும் செய்குவை.
வாய்திற வாது வாளா இருப்பதேன் ?
நோய்செய் யாதே நுவலுதி வாயால் ;
என்று கூறி இறுகத் தன்னிழல்
நன்றே தழுவி நக்கு மகிழ்வான் ;
தானணி சுள்ளி தழைகொள் தாரினைப்
பூணணி எனவே பூட்டுவான் நிழற்கு ;
நமது மணம்நிகழ் நன்னாள் யாதோ ?
உனது கருத்தை உரை யென வினவுவான் ;
இன்னணம் குழறியோன், இறைவனும் கிழவனை

---

22. வெகுண்டு - சினந்து. 25. சாற்றுவோன் - சொல்லுபவன். 30. கன்னல் - கரும்பு ; கண்டு - கற்கண்டு. 37. அசைப்பை - அசைப்பாய். 39. வாளா - வாய் பேசாமல். 40. நுவலுதி - சொல்லுவாய். 42. நக்கு - சிரித்து. 43. தாரினை - மாலையை. 44. பூணணி - பூணும் அணிகலம். 47. குழறியோன் - குளறினவன் ; இறைவன் - அரசன்.

நன்னர் நோக்கி நலமில கிளத்துவான் :
பெரியீர் என்றன் பெட்புறு காதலி
இரியா தென்னை ஈண்டுளாள் பாரீர் !
சோழன் மகளாம் அமரா வதியொடு
தோழமை கொண்டேன் தோல்வி கண்டேன்.
வாய்திறந் தேதும் வகையாய்ப் பேசாள்
மாய்வுற என்னை மயக்குதல் செய்வாள்.
இவளை மணக்க ஏற்ற தோர்வழி
துவளும் எனக்குச் சொற்றிடு வீரென
வேந்தனும் கிழவனின் கால்களில் வீழ்ந்தனன் ;
காந்தும் உளத்தனாய்க் கலுழ்ந்தனன் கதறி.
சோழன் நோக்கிச் சோர்ந்து காலில்
வீழும் பித்தனை விரட்டிமேற் செல்வான்.
வழியிலோர் மனையில் கணவனும் மனைவியும்
இழிவாய்த் தமக்குள் ஏசிப் பேசுவர் :
நேரம் கழித்து நிசியில் வந்ததன்
காரணம் மனைவி கணவனைக் கேட்க,

(கணவன் கூறல்)

உனதரு கிலேயே உட்கார்ந் திருக்க
அமரா வதியெனும் அழகியோ நீயென,

(மனைவி கூறல்)

அம்பிகா பதியெனும் அழகன் நீதான்
எனது பக்கலில் இருப்பா யோவென
அம்பிகா பதியையும் அமரா வதியையும்
இருவரும் இணைத்துப் பேசும் இழிவுரை

---

48. நலமில - நல்லதல்லாத பேச்சுக்கள் ; கிளத்துவான் - பேசுவான். 49. பெட்பு - அன்பு. 50. இரியாது - பிரியாது. 56. சொற்றிடுவீர்-சொல்லுவீர். 58. காந்தும் - எரியும்; கலுழ்ந்தனன்- அழுதான். 63. நிசி - (நடு) இரவு.

கறுவச் செய்தது காவலன் உளத்தை.
ஆங்கு நின் றகன்றவன் அப்பாற் சென்றனன்.
ஆங்கொரு வீட்டில் அகமுடை யானைப்
பாங்குறு மனைவி பண்பொடு வினவுவாள் :

(மனைவி வினவல்)

நந்தம் மகட்கு நாயகன் பார்த்து
வந்தனை ; மணமகன் வளமெப் படியென,

(கணவன் கூறல்)

மகளுக் கேற்ற மணாளன் அவனே.
அம்பிகா பதியும் அமரா வதியும்
போன்ற இணைப்புப் பொருத்தம் உளதென,

(மன்னன் செயல்)

நகர மறுகில் நடப்பன வெல்லாம்
நிகரில் வேந்தன் நின்றுநின் றறிந்தபின்,
ஊரெலாம் பேரலர் பரவி யுள்ளது
பாரெலாம் என் புகழ் பாழாய்ப் போனது
ஆவது சூழ்ந்தியான் அம்பிகா பதியைச்
சாவச் செய்வதே சால நன்றென
எண்ணி மன்னன் இரும்பே ரரண்மனை
நண்ணி அமளியில் நைந்து சாய்ந்து,
"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்"என் பதுகுறள் ;
என்னுயிர் ஏனினும் ஏகவில் லையெனத்
தன்னுடல் உறுப்பெலாம் தாழ்வாய் நோக்கினனே.

---

71. கறுவ - சினக்க; காவலன் - மன்னன். 73. அகமுடையான் - கணவன். 74. பாங்கு - கல்வியல்பு. 75. நாயகன் - கணவன் (மாப்பிள்ளை). 77. மணாளன் - கணவன் (மாப்பிள்ளை) 80. மறுகு - தெரு. 81. நிகரில் - ஒப்பில்லாத. 82 பேரலர் - பெரும பழிச் சொல். 85. சால - மிகவும். 87. அமளி - படுக்கை. 88. கவரிமா - கவரிமா என்னும் ஒருவகை விலங்கு. 90. ஏனினும் - ஏன் இனும் - ஏன் இன்னும் (இடைக் குறை).

20. வேந்தன் புலவோர்க்கு விருந்துசெய் காதை

அரசன் அமைச்சனை அழைத்துக் கூறுவான்:
அம்பிகாபதி குறித்தும் அமராவதி பற்றியும்
ஊரில் வம்பலர் உரைக்கப் படுவதை
நேரில் கேட்டு நேற்றிரா அறிந்தேன்
அம்பிகா பதியும் அமரா வதியும்
தும்பியும் பூவுமாய்த் தொடர்ந்து துய்ப்பதாய்
நம்பச் சான்று நம்மிடம் இல்லை.
பன்முறை சென்று வேவு பார்த்தும்
நன்முறை யாயென் மகளும் நடப்பதாய்
அறிந்துளோம் ஆதலின் அவர்தம் களவைத்
தெரிந்து கொள்ளத் திட்டம் யாதென,
அமைச்சன் மொழிவான்: அலருள துண்மை;
நமைச்சார்ந் துநிற்கும் நாட்பழி தீரத்
திட்டம் ஒன்று தெரிவிப் பேனியான்;
எட்டுப் பக்கலும் இசையது போய
இந்த நகருள இன்றமிழ்ப் புலவோர்
நந்தம் அரண்மனை நண்ணி உயர்ந்த
விருந்தொன் றருந்த வேண்டி யவர்க்கே
சிறந்த அழைப்பினைச் செவ்விதின் விடுப்போம்.
விருந்தில் படைப்பவர் விரும்புமும் மகளே!
அருந்தும் போழ்தில் அனைவர்க்கும் நடுவண்
அம்பிகா பதியும் அமரா வதியும்
நடந்து கொள்ளும் நடைமுறை கண்டு

---

13. நாட்பழி - நெடு நாளாய் இருந்து வரும் பழி. 15. பக்கல் - திசை; இசை - புகழ். இசையது போய - புகழ் பரவிய. 20. படைப்பவர் - பரிமாறுபவர்.

முடிந்த முடிபினை முறையே செய்யலாம்
என்றறி விக்க, ஏற்று மன்னன்
நன்றுநும் திட்டம் நடத்திடு வோம்நாம்;
செந்தமிழ்ப் புலவோர்க்குச் சீர்சால் அழைப்பினை
இந்த நேரமே இனிதனுப் பிடுகென,
கம்பர் முதலாம் கலைவல் புலவரொடு
அம்பிகா பதிக்கும் அழைப்புச் சென்றது.
உரியநே ரத்தில் உரிய இடத்தினை
அரிய புலவர் அனைவரும் அடைந்தனர்.
அமர்ந்த பண்புடை அமரா வதிதான்
அமர்ந்தனை வர்க்கும் அமுது படைப்பவள்.
அமைந்த ஊண்வகை அளக்கற் பாலவோ?
தயிரின் பச்சடி, தகவுறு மாங்காய்ப்
பச்சடி, நல்ல பாகல் பச்சடி,
இஞ்சிப் பச்சடி, இலந்தைப் பச்சடி,
வெல்லக்காய்ப் பச்சடி, வெங்காயப் பச்சடி;
மாங்காய் ஊறுகாய், மாணரி நெல்லி
ஊறு காய்,எலு மிச்சம் ஊறுகாய்,
நரந்தம் ஊறுகாய், நல்லிஞ்சி ஊறுகாய்,
தோப்பு நெல்லித் துவளுறும் ஊறுகாய்;
கார்ப்பே யின்றி உவர்ப்புமட் டுமிட்ட
துவர்ப்பு மாவடு, துவட்டிய வாழைப்பூ;
இஞ்சித் துவையல், இனிய தேங்காய்த்
துவையல், கொத்த மல்லித் துவையல்,
கறிவேப்பிலைத் துவையல், புதினாத் துவையல்,
திருவாட் சியிலைத் தெவிட்டாத் துவையல்,
வெல்லங் கலந்த வேப்பம்பூத் துவையல்,
பருப்புத் துவையலொடு பல்வகைத் துவையல்;
கொழீஇய பல்வகைக் காய்களின் கூட்டு;

---

33. அமர்ந்த - அமைதியான. 34. அமர்ந்து - விரும்பி. 35. ஊண் - உணவு; அளக்கற் பாலவோ - அளவிடும் தன்மையினவோ? 42. நரந்தம் - நாரத்தை. 52 கொழீஇய - கொழுத்த, வளமான.

பல்வேறு காய்களால் பதமுறும் அவியல்;
அரியல் வகைபல, பொரியல் வகைபல,
வறுவல் வகைபல, வகைவகைச் சீவல்;
வாதுமைப் பருப்பு, வன்சாரப் பருப்பு,
முந்திரிப் பருப்பின் முதிர்ந்தநெய் வறுவல்;
அப்பளம், அரிய முறுக்கு வற்றல்,
பப்பளம், காசி வற்றல், பதமுறு
குண்டுவற் றலொடு கூர்பல் வறுவல்;
பயறுச் சுண்டல் வகைகள் பலவாம்;
பல்வகைப் பண்ணியம், பல்வே றப்பம்,
பூசனி வெல்லம் பூத்த இனிப்பு,
எள்ளு ருண்டை, எருக்கங் கொழுக்கட்டை,
பால்கொழுக் கட்டை, பருப்புக் கொழுக்கட்டை,
பொரிவிள உருண்டை, பூம்பால் கட்டி,
இனிப்புநெய் யுருண்டை, இன்சுவைக் கட்டி,
இனிப்புக் கிண்டல், இன்னபிற இனிப்புகள்;
திருகு முறுக்கு, தெவிட்டாத் தேன் குழல்;
உளுத்தம் வடையொடு கடலை வடைவகை,
வாழையும் உருளையும் வைத்த வடைவகை,
தயிரில் ஊறிய தளதள மெதுவடை,
மோர்க்கு ழம்பில் மூழ்கிய வடைவகை,
பல்வேறு சாற்றில் ஊறிய பல்வடை;
தேனு யினிக்கும் தேமாங் கனிவகை,
தேனில் ஊறிய தீம்பலாச் சுளைவகை,
வாழ வைக்கும் வாழைக் கனிவகை,

---

60. கூர் - மிகுந்த 63. முழுதும்-இக்காலத்துக் 'காசி அல்வா' போன்றது. 64. எருக்கங் கொழுக்கட்டை - எருக்கங்காய் வடிவத்தில் செய்யும் கொழுக்கட்டை. 66. பூம்பால் கட்டி - 'பால்கோவா' போன்றது. 67. இன்சுவைக்கட்டி - இக்கால 'கேக்' போன்றது. 68. இனிப்புக் கிண்டல் - இக்கால 'சொஜ்ஜி' போன்றது. 71. வாழை - வாழைக்காய்; உருளை - உருளைக்கிழங்கு; முழுதும் - இக்கால 'பஜ்ஜி' வகை.

மாதுளை, கொய்யா மகிழ்விளா, அன்னாசி,
பப்பளி, முலாம்பழம், பயன் தரும் கிச்சிலி,
பேரீந்து பேரிலந்தை, பெருங்கொடி முந்திரி;
வெல்லப் பொங்கல், வெண்பொங்கல், சோறு,
தேங்காய்ப் புழுக்கல், தெவிட்டுநெய் மூரல்,
மிளகுச் சொன்றி, பல்குழம்பு மிதவை,
புளியம் புன்கம், எலுமிச்ச அமலை,
தயிரும் வெண்ணெயும் நறும்பும் அயினி;
அக்கார அடிசில், அரிய கொம்புத்தேன்;
புத்துருக்கு நெய்யுறு புதுப்பருப்புக் கடையல்
வெண்டையும் அன்னாசியும் விரவுமோர்க் குழம்பு,
பொரித்த குழம்பு, புளியிடு குழம்பு,
பருப்புக் குழம்பு, பல்காரக் குழம்பு,
வற்றல் குழம்பொடு வகைவகைக் குழம்புகள்;
கொத்தமல்லிச் சாறு, கொடிமிளகுச் சாறு,
எலுமிச்சஞ் சாறு, இன்புளிச் சாறு,
பல்வகைப் பழங்களின் பன்னிறச் சாறு;
பால்தேன் பாயசம், பருப்புப் பாயசம்,
தெவிட்டா தினிக்கும் தேங்காய்ப் பாயசம்,
சேமியாப் பாயசம், சவ்வரிசிப் பாயசம்;
தைத்திங்கள் நிலாநிறம் தான்மிகக் கொண்ட
கத்தியால் வெட்டும் கட்டி யாந்தயிர்;
இன்னபல் வகைய: இனிப்பு, புளிப்பு,
கைப்பு, உவர்ப்பு, கார்ப்பு, துவர்ப்பாம்
அறுவகைச் சுவைகளும் அமைந்த உண்டி;

82-86. புழுக்கல், மூரல், சொன்றி, மிதவை, புன்கம், அமலை, அயினி, அடிசில் – இவை 'சோறு' என்னும் பொருள் உடையன. *86.* அக்காரம் - சர்க்கரை. *88.* விரவு - கலந்த. *91.* வற்றல் - கத்தரிக்காய், அவரை, கொத்தவரை, சுண்டை, சுக்கங்காய், மணத்தக்காளி, வெண்டை முதலிய காய்களைப் பதம் செய்து காய வைத்த வற்றல் வகை. *92-93.* சாறு - ரச வகை. *98.* தைத்திங்கள் - தை மாதம். *101.* கைப்பு - கசப்பு; உவர்ப்பு - உப்பு; கார்ப்பு - உறைப்பு.

உண்டல், தின்றல், உறிஞ்சல், பருகல்
என்னும் நால்வகை இயைந்தவூண் பொருள்கள்
மன்னும் மலையென மண்டி யிருந்தன.
மிக்க நீளமும் மிகுந்த அகலமும்
தக்கவா யமைந்த தலைவாழை இலைகள்
பரப்பி உண்டிகள் படைக்கப் பட்டன;
உண்டியோ டிலையில் ஒருநீள் கரண்டியும்
கண்டவர் அதற்குக் காரணம் வினவ,
இலைகள் பெரிதா யிருத்தலின் எட்டி
யிருக்கும் பொருள்கள் எட்டா வாதலின்
கரண்டியா லிழுத்துக் களிப்பொ டுண்ணலாம்
என்னும் நோக்கொடு இலையில் கரண்டி
வைக்கப் பட்டதாய் வளவன் கூற,
எட்டா தாயின் எழுந்தெழுந் தேகி
எடுத்துவந் துண்ணலாம் என்று கம்பர்
அடுத்துக் கூற அனைவரும் நகைத்தனர்.
நீண்ட வரிசையாய் நீள்புகழ்ப் புலவோர்
ஆண்டு நண்ணி அமர்ந்தனர் மகிழ்ந்து;
கம்பர் பக்கலில் கவின்மிகு புலவன்
அம்பி காபதி அமர்ந்திருந் தனனே.
அமரா வதிவந் தனைவரும் உண்ணப்
படைத்துக் கொண்டே பரிவுடன் சென்றாள்.
அடுத்துள புலவோர் அனைவரும் தலைக்கொரு
பாடல் இயற்றிப் பாடவேண் டுமெனத்
தேடரும் புகழ்சால் வேந்தன் தெரிவிக்க,
ஒவ்வொரு புலவரும் ஒவ்வொரு பாடல்
செவ்விதின் பாடினர்; செறிந்த வரிசையில்
அம்பிகா பதிமுறை அடுத்த போழ்தில்
அமராவதி இயற்கையாய் அவற்குப் படைத்தாள்.

---

104. ஊண் பொருள்கள் - உணவு வகைகள். 115. வளவன்- சோழன். 124. படைத்துக்கொண்டே - பரிமாறிக் கொண்டே; பரிவு - அன்பு. 129. செறிந்த - நெருங்கிட.

அப்போ தம்பிகாபதி அருமையாய்ப் பாடுவான்:
"இட்டடி நோக எடுத்தடி கொப்புளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய ......"
என்றுபா டிக்கொண் டிருக்கும் போதே
கம்பர் வயிறு கலங்கலா யிற்று;
அம்பி காபதி அமரா வதிமேல்
காதல் பாடுவதாய்க் கருதிய கம்பர்
சாதல் நேர்வது சால உறுதி
எனமிக அஞ்சி, இருந்தசூழ் நிலையை
நனிமிக மாற்ற நாடி துடிக்கையில்,
"கொட்டிக் கிழங்கோ கொட்டிக் கிழங்கு
கொட்டிக் கிழங்கு வாங்க வில்லையோ"
என்றுபெண் ணொருத்தி இரும்பெருந் தெருவில்
சென்று கூவியதைச் செவியில் மடுத்தே
அம்பியின் பாடலை அடுத்துப் பாடுவார்:
................................"கொட்டிக்
கிழங்கோ கிழங்கென்று கூறுவாள் நாவில்
வழங்கோதை வையம் பெறும்."
என்றுவெண் பாவை இனிது முடித்தார்.
முழுப்பா டலையும் முற்றும் நோக்கின்,
"இட்டடி நோக எடுத்தடி கொப்புளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய—கொட்டிக்
கிழங்கோ கிழங்கென்று கூறுவாள் நாவில்
வழங்கோதை வையம் பெறும்."
என்றே அமையும்; இதனால், அம்பி
நன்றே பாடினன் நங்கைவே றொருத்தியை
என்னுங் கருத்தங் கினிதுரு வானது.
நாடகம் நடப்பதை நன்கு வேந்தனும்
காடவன் தானும் கவனிக்க லாயினர்.
அம்பிகாபதி நோக்கிலும் அமராவதி நோக்கிலும்

---

152. வட்டில் - பாத்திரம்; மருங்கு - இடுப்பு. 154. ஓதை - ஓசை; வையம் - பூவுலகம்.

புதுமை யிருந்ததாய்ப் புலப்பட்ட தவர்க்கே.
விருந்து முடிந்தபின் வெற்றிலைத் தாம்பூலம்
அருந்த அனைவர்க்கும் அளிக்கப் பெற்றபின்,
ஆடை அணிகலன் அரும்பொருள் பலவும்
நாடறி புலவோர்க்கு நல்கப் பட்டன.
கம்பரும் அம்பியும் தவிர, மற்றவர்
இம்பர் நீங்க விடையும் ஈந்தே
அமைச்சோ டிருந்த அரசன் கடாவுவான் :
கம்பரே ! உம்மகன் கவிபாடுங் காலை
வம்பாய் மறித்துநீர் வழிதிருப் பியதேன் ?
இதிலொரு மறைபொருள் இருப்ப துணர்கிறேன்
பதிலிதற் கென்ன பகருவீர் என்ன,
கம்பர் மாழ்கிக் கழற லானார் :
அவனும் யானும் இணைந்தே அமைத்த
நவையில் ஒருபா நானில மதனில்
இலங்கிட வேண்டுமென் றெண்ணினே னதனால்
நலங்கிளர் பாடலை நானே முடித்தேன்
என்று கூறிட, இசையான் வேந்தன் ;
காம வெறியன் கள்ளச் செயலன்
அம்பி காபதி அமரா வதியைக்
கருதியே அந்தக் கவிபாட லானான் ;
குருதிப் பற்றால் குறுக்கிட்டு நீவிர்
அதனை மறைக்க அவனைத் தொடர்ந்தீர்
என்று கூறி, இப்பால் அம்பியைக்
கன்றி நோக்கிக் காய லானான் :
அம்பிகா பதிநீ அமரா வதியைக்
குறித்தே சொற்களைக் கொட்டினா யன்றோ ?

---

167. இம்பர் - இவ்விடத்திலிருந்து. *168.* கடாவுவான் - வினவுவான் *173.* மாழ்கி - மயங்கி. *175.* நவை - குற்றம். *176.* இலங்கிட - விளங்கிட. *177.* நலம் கிளர் - நலம் மிகுந்த. *178.* இசையான் - ஒத்துக் கொள்ளான். *182.* குருதிப் பற்று - இரத்த பாசம். *185.* கன்றி - சினந்து ; காய்தல் - சுடுசொல் கூறல்.

மறுத்தே உண்மையை மறைக்கா துரையென,
அம்பி காபதி அஞ்சா தறைவான் :
வேந்தே வணக்கம்! விருந்துண வினையான்
மாந்தும் போதென் அன்னையின் மாண்பு
நினைவு வரவே நெடிது புகழ்ந்தேன்.
அன்னையின் அன்பை அவண்பாடுங் காலை
என்னை மறித்திட் டெந்தை தொடர்ந்தார்
இதற்கியான் யாது செய்வேன் என்ன,
எதற்கும் ஏற்ற இறைதர முயல்கிறாய்
தந்தையுன் பாடலைத் தடுக்கா திருப்பின்
எந்த வகையில் இதைமுடிப் பாயென
வேந்தன் வினவ, விடுப்பான் அம்பி:
அமரா வதியெற் கமுது படைக்கையில்
அமர நோக்கியென் அன்னையைப் போல
உணவு படைக்கிறாய் என்றியான் உரைக்கப்
பாடல் தொடுத்தேன் பாடவோ முழுப்பா?
இதோ!
"இட்டடி நோக எடுத்தடி கொப்புளிக்க
வட்டில் சுமந்து மருங்கசைய—அட்ட
அறுசுவையுண் நல்கிடுமென் அன்னைக் கடுத்துன்
நறுசுவையூண் பெற்றிடுவேன் நான்."
என்பது முழுப்பா; இதன்பொருள் அறிவீர்
என்ன குற்றம் இதிலுள தென்ன,
மன்னன் மயங்கி மாற்றங் கூறான்.
அம்பியின் பாடல் அப்பா வயிற்றில்
இன்பால் வார்க்கப் பெருமூச் செறிந்தார்.

---

193. அவண் - அவ்விடம். 194. மறித்தல் - குறுக்கிட்டுத் தடுத்தல்; எந்தை - எம் தந்தை. 196. இறை - பதில். 199. விடுப்பான் - பதில் கூறுவான். 200. எற்கு - எனக்கு. 201. அமர - அமைதியாக. 205. அட்ட - சமைத்த. 206. அன்னைக் கடுத்துன் - அன்னைக்கு அடுத்து உன். 207. நறுசுவை - நன்மணச்சுவை. 210. மாற்றம் - மறுபதில். 211. அப்பா - தந்தை கம்பர்.

இன்னும் அம்பி இறையவற் கியம்புவான்:
அடுத்த படியென் அன்னையை வைப்போம்;
எடுத்துக் கொள்வோம் இனியநும் மகளையே!
பல்வகை உணவையும் பரவிய பலர்க்கும்
நல்வகை யாக நங்கை யொருத்தியே
வட்டில் சுமந்து வழங்குதல் செய்யின்
இட்டடி நோவதும் இடுப்பும் ஒடிவதும்
இயற்கையே யதனால் இரங்கிப் பாடலும்
இயற்கையே; இதில்பிழை என்ன உளதென,
'அப்பா' எனவே அரசன் அதிர,
அப்பா வருகெனக் கம்பரை அழைத்தான்;
இப்பால் இருவரும் விடைபெற் றேக,
வெப்பால் வதங்கி வேந்துசென் றனனே.
''சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது''
எனுங்குறட் கம்பிகாபதி இலக்கியம் ஆவனே.

---

213. இறையவன் - அரசன். 216. பரவிய - பரவி அமர்ந்திருந்த. 222. அப்பா - அப்பாடா, ஐயோ; அதிர - அதிர்ச்சியடைய. 223. அப்பா - தந்தையே. 224. இப்பால் - இதன் பிறகு; இருவரும் - கம்பரும் அம்பிகாபதியும். 225. வெப்பால் - (உள்ளக்) கொதிப்பால். 227. இகல் - பகை, எதிர்ப்பு. 228. இலக்கியம் - எற்ற எடுத்துக்காட்டு.

21. அம்பிகாபதிக்குக் கம்பரின் அறிவுறாஉக் காதை

மறுநாள் கம்பர் மகற்கு மனையில்
அறிவுரை அளித்துத் திருத்த லானார்:
அம்பிகா பதியே வருகென அழைத்துத்
தம்பக் கலிலே தகவுற அமர்த்தி
நென்னல் மன்னனின் நிறைவிருந் ததனில்
என்ன புரிந்தாய்! ஏற்குமோ நமக்கே?
மின்னுவ எல்லாம் பொன்னல்ல தம்பி!
அமரா வதியை அறவே மறந்திடு
நமருள் ஒருத்தியை நன்மணம் புரிந்துகொள்.
எல்லாப் பெண்ணிடமும் இருக்கும் உறுப்புகள்
எல்லாம் ஒத்தன இதைநீ உணர்மதி.
இரவில் இவளவள் என்ற வேற்றுமை
அறவே யில்லை அறிதியிந் நுட்பம்.
செப்பக் கூடாச் செய்தி யிதனையும்
தப்பில் புலத்தொடு தரம்பிரித் துணரும்
பகுத்தறி வுடைய பாவல னாதலின்
தொகுத்திங் குனக்குத் தோன்றச் சொல்கிறேன்.
மேனி மினுக்கில் ஏமாந்து மயங்கல்
மான மிலார்செயல்; மகனே ஓர்தி!
இருபதாம் அகவையில் இருக்கும் ஒருத்தி
அறுபதாம் ஆண்டிலும் அவ்வா றிருப்பளோ?
அணிபெறச் சாத்தனார் அருளி யுள்ள

தலைப்பு: அறிவுறாஉ - அறிவுரை கூறுதல். 1. மகற்கு - மகனுக்கு. 5. நென்னல் - நேற்று. 9. நமருள் - நம்மவருள். 11. உணர்மதி - மதி - முன்னிலை அசை. 15. புலம் - புலமை. 20. அகவை - வயது.

மணிமே கலையெனும் மாண்புறு காப்பியம்
படித்துளாய் அதிலொரு நிகழ்ச்சி பகர்வேன்:
உதய குமரனும் ஒழுங்கிலாச் சோழ
மன்னன் மகன்றன் மணிமே கலையாம்
பெண்ணின் அழகில் பேதுற்று முயங்க
விரும்பிக் காம வெறிகொண் டலைந்தான்.
கரும்பினும் இனியவக் கன்னியின் தோழி
சுதமதி யென்பாள் சொல்லுவாள் அறிவுரை
மதிமயங் கிட்ட மன்னன் மகற்கே!
இளைய அரசே இயம்புவன் கேளீ!
அலைய வேண்டா அவளை விரும்பி.
காக்கைக் கேயிரை யாகிக் கழிவதாம்
யாக்கையின் இழிவு யாதும் அறியாய்.
"வினையின் வந்தது வினைக்குவிளை வாயது
புனைவன நீங்கில் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவின் செற்றச் சேர்க்கை..."
என்று சுதமதி இயம்புவ தாகக்
கம்பர் கழறிக்கொண் டிருக்குங் காலை,
அம்பி குறுக்கிட் டறைய லானன்:
அப்பா நிறுத்துக அதன்மேல் எச்சம்
தப்பா மலியான் தகவாய்த் தொடர்வேன்:

---

25. உதயகுமரன் - சோழ இளவரசன். 27. பேதுற்று - மயங்கி; முயங்க-புணர. 32 கேளீ கேள்நீ. 35. யாக்கை-உடம்பு. 37. புனைவன - அணிந்திருக்கும் ஆடை அணிகலம் முதலியன. புலால் - மாமிசத் தோல்; புறத்திடுவது - வெளிக்காட்டுவது; நறுமணப் பொருள்கள் புனையாவிடின் புலால் நாற்றம் வீசுவது என்றும் பொருள் கொள்ளலாம். 38. விளிவு - சாவு. 40. புற்றடங்கரவு - புற்றிலுள்ள பாம்பு; செற்றம் - சினம்; சேர்க்கை - இருப்பிடம். 44. அப்பா - தந்தையே; எச்சம் - மீதி.

"அவலக் கவலை கையா றழுங்கல்
தவலா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறிப் பாராய்"
என்று சுதமதி இயம்பினள் அன்றோ?
நன்று யிதனை நானும் அறிகுவல்.
மேகலை துறவு மேற்கொண் டதனால்
ஆகல் ஒண்ணுமோ அவள்மேல் காதல்?
அதனால் சுதமதி அரசன் மகற்கொரு
விதமாய்க் கூறி விரட்டி விட்டாள்.
அமரா வதியோ அன்னள் அல்லளே;
தரமாய் என்னைத் தான்மிகக் கருதுவாள்.
வன்மையாய் ஒருத்தியை வம்புசெயல் தகாது.
என்மேற் காதலாய் இருக்கும் ஒருத்தியை
மணக்கயான் விரும்புதல் மாண்புடைச் செயலே
தணக்கநீர் முயல்வது தகுதி யாமோ?
என்றம் பிகாபதி இயம்ப, கம்பர்,
நன்றுன் பேச்சு! நமது தகுதியொடு
ஒன்றிய நங்கை ஒருத்திபால் காதல்
கொள்ளலை ஏற்றுக் கொள்ளலாம் ஒருகால்;
உள்ளின் மலையொடு ஒவ்வுமோ மடுதான்!
வேந்தர் தகுதியோ வியன்மலை; வாழ்குடி
மாந்தர் தகுதியோ மடுபோல் தாழ்ந்தது.
எட்டாப் பழமது இனிக்கா தெனவிடு
கிட்டாப் பொருட்காக் கீழ்ப்படல் அறிவோ?
எனவே அவளை மணக்கலாம் என்பதை

---

46. அவலம் - துன்ப நிலை; கையாறு - செயலற்ற நிலை; அழுங்கல் - அழுகை. 47. தவலா - நீங்காத. 49. மிக்கோய் - மேலானவனே; புறமறிப் பாராய் - உடம்பை, உள்ளிருப்பவை வெளியிலும் வெளியிலிருப்பவை உள்ளேயும் மாறும்படி திருப்பிப் பார்ப்பாய். 52. மேகலை - மணிமேகலை. 57 தமராய் - தம்மவராய். 61. தணக்க-பிரிக்க. 65. ஒருகால் - ஒருவேளை. 66. உள்ளின் - நினைத்துப் பார்க்கின்; ஒவ்வுமோ - ஒக்குமோ. 67-68. குடிமாந்தர் - குடிமக்கள்.

நினைவின் அகற்றினே நீயுய்வு பெறலாம்
துளக்குமுன் செயலால் தொல்லை யடைந்து
விளக்கில் வீழ்ந்த விட்டிலா காதே
உன்றன் தங்கைபால் ஒருவன் வந்தே
ஒன்றுதல் இல்லா உரைதொடுத் திடினே
உனக்குப் பெருஞ்சினம் உறுவ துறுதி.
தனக்கு வருவது தான்பிறர்க் கென்றும்
நினைக்க வேண்டும் நெடிதிதை யுணர்கென,

(காவிரி கூறுதல்)

கம்பர் மகளாம் காவிரிப் பெயராள்
இம்பர் வந்து இயம்புவாள் ஒன்று:
எந்தாய் நெருநல் விருந்துக் கேகினீர்
எந்தாய் தானும் வெளிச்சென் றிருந்தாள்
அந்த வேளையான் தனியாய் அமர்ந்தே
சிறந்த குறள்நூல் செவ்விதின் ஓதினேன்.
திறந்த வீட்டில் தெருநாய் நுழைந்ததென
அப்போ திளைய அரசாம் கிள்ளி
தப்பாம் முறையில் தனித்து வந்தே
என்னைக் கெடுக்க எண்ணி முயன்றான்.
மன்னன் மகனை மறுத்தியான் கடிய,
உன்னுடை அண்ணன் ஒவ்வா முறையில்
என்னுடைத் தங்கை அமரா வதியை
விரும்பும் போதியான் நின்னை விரும்புதல்
பெரும்பழி யாமோ பேசுக என்ன,
உன்னுடைத் தங்கையும் உறுதியாய் விரும்பின்
என்னுடை அண்ணன் காதல் இயைவதாம்;

---

73. துளக்கும் - கலக்குகின்ற. 74. விட்டில் - ஒருவகைப் பூச்சி 76. ஒன்றுதல் - பொருந்துதல். 82. எந்தாய் - எம் தந்தையே; நெருநல் - நேற்று. 83. எந்தாய் - எம் அன்னை. 87. கிள்ளி - சோழ இளவரசன். 91. ஒவ்வா - பொருந்தாத.

யானோ காதல் யாதும் கொள்ளேன்
வீணாய் என்னை நீ விரும்புதல் தகாதென
எடுத்தியான் மொழியவே, இன்னொரு நாளிவண்
அடுத்திடு வேனென் றவனும் ஏகினான்.
என்று கூற, இனைந்தார் கம்பர்.
எள்ளவென் தங்கையோ டிணைய முயன்ற
கிள்ளியின் தலையைக் கிள்ளுவன் யானென
அம்பி சினத்தோ டறைய, கம்பர்,
உனக்கிவ் வேளை யிருக்கும் உணர்வவன்
தனக்கும் இருக்குமென் றறிதலே தக்கதாம்
என்று கூற, இயம்புவான் அம்பி:
எந்தையே நந்தம் இறையவ னிடம்போய்,
எந்த வகையேனும், எனக்குப் பெண்தர
இசையச் செய்வது ஏற்ற செயலாம்
வசையிலிவ் வழியில் வாழ்வு பெறுவேன்;
முயல்வீ ரென்று மொழிய,வஞ் ஞான்று
அயலே அம்பியின் அன்னை வந்து
கணவரை வேண்டிக் கழற லானாள்:
மணவினை முடிக்க மறுப்ப தேனோ?
அரசிளங் குமரன் அரியநம் மகளிடம்
உரைசெய் துளானெனின் உற்றவன் தங்கையை
நம்மகன் மணப்பதும் நடைபெறுஞ் செயலென
என்மனம் எண்ணும்; எழுந்து சென்றுநீர்
மன்னன் மகளை மணம்பேசி வருக
என்னவே, கம்பர் எடுத்து மொழிவார்:
கிள்ளிநம் மகள்மேல் கிஞ்சமும் காதல்

---

99. இவண் - இவ்விடம். *101.* இனைந்தார் - வருந்தினார். *102.* எள்ள - (பலரும்) இகழும்படி; இணைய - புணர. *108.* இறையவன் - மன்னன். *111.* வசையிலிவ் - வசைஇல் இவ்வழி - வசை - பழி. *112.* அஞ்ஞான்று - அப்போது. *113.* அயலே - பக்கத்தில். *117.* உரைசெய்துளான் (என்னென்னவோ) பேசிச் சென்றுள்ளான். *122.* கிஞ்சமும் - கொஞ்சமும்.

கொள்ளுதல் இலன்கற் பழித்தலே குறிக்கோள்;
மதுவுண்ட தேனீ மலரின் நீங்கிடும்;
இதுவும் அன்னதே; இன்பந் துய்த்தபின்
மெதுவாய் நழுவுவான் மீளான் பிறகே
என்பதை யறிவீர் என்று மொழிய,

(கம்பர் மனைவி கூறல்)

மன்பதை யறிய மணமுடித் தலையே
விரும்புவன் யானும் வீண்பழி தனக்கிடம்
தரும்படி யான்விடேன் தக்கதைச் செய்கென,

(கம்பர் கூறல்)

மன்னன் சோழனை, மரபு முறையில்,
கன்னல் மொழியைக் களிப்பொடு தருகெனக்
கேட்டுப் பார்ப்பேன்; கிட்டா தாயின்
தேட்டம் விடுத்துத் திரும்புவல் நம்மனை
வாட்டம் வேண்டாவென வழங்கினர் மாற்றமே.

123. குறிக்கோள் - நோக்கம். 124. மது-தேன். 128. மன்பதை-மக்கள்குழு. 132. கன்னல் மொழி - அமராவதி. 134. தேட்டம்-பேரவா. 135. மாற்றம் - பதில்.

22. ஆரப் பூச்சால் அரசன் ஆய்வு செய்த காதை

மன்னன் அமைச்சனை மறுபடி அழைத்தே
என்ன உளவால் இவர்தம் களவை
அறிய வியலுமென் றமைச்சரே ஒருவழி
தெரியக் கூறுமின் தெள்ளிதின் என்ன,
காடவன் ஒருவழி கண்டு கூறுவான்:
நாடரும் புலவர் நல்லவை யொன்று
வெட்டிக் கூறி வெல்லும் அறிஞராம்
ஒட்டக் கூத்தரின் உயரிய தலைமையில்
கூட்டித் திருக்குறள் கூடி ஆய
நாட்டங் கொண்டதாய் நவின்றனை வரையும்
சொற்பொழி வாற்றச் சொல்லுவம்; கம்பரின்
அற்புறு மகற்கும் அழைப்பு விடுப்போம்;
அனைவரும் அமர்ந்தபின் அவர்தமக் காரம்
நனையப் பூசி நல்வரவு கூறுவம்;
அமரா வதியிடம் அரிய திருக்குறள்
படியொன் றுளதாய்ப் பகர்ந்தும் பிகாபதியை
நொடியில் சென்று நூல்பெற்று வருகென
அனுப்புவம்; அவன்செலின் அங்கே இருவரும்
அணைப்பதும் செய்யலாம்; அதனால் ஆரம்
மார்பில் கலந்து மாண்பற் றிருப்பின்
தேர்வம் அவர்தம் திருட்டினை நன்கென,

---

4. தெள்ளிதின்-தெளிவாக. 6. நல்லவை-நல்லசபை. 12. அற்புறு-அன்பு பொருந்திய. 13. ஆரம் - சந்தனக் குழம்பு. 16. படி - பிரதி. 20. மாண்பற்று - அழகற்று (கலைந்து). 21. தேர்வம் - தெளிவாய்த் தெரிந்துகொள்வோம்.

அரசனவ் வாறே அனைத்தும் செய்தபின்,
மறைநூல் படியென் மகள்பால் உள்ளது;
அம்பிகா பதிநீ அவளிடம் போந்து
எம்பிரான் குறள்படி கொணருமா றேவினன்
என்று கூறி இணையிலா வதனை
நன்றே பெற்று வருகென நவில,
அம்பி காபதி அவ்விடம் பெயர்ந்தான்.
நம்பவே யில்லை நங்கைதன் கண்களை.
கும்பிடப் போனதெய்வம் குறுக்கே வந்ததென
எதிர்பாராக் காட்சியால் இருவரும் அணைத்ததால்
அம்பியின் ஆரப் பூச்சது அழிந்தது.
திருக்குறள் தரும்படி தெரிவிக் கவேயவள்
ஒருகுறள் தானும் இல்லையென் றுரைக்க,
வியந்த அம்பி வேத்தவை சென்றான்.
நயந்த நண்பர் ஒருவர் நண்ணினர்;
அம்பிகா பதியை ஆரத் தழுவினர்;
சால அழிந்தது சந்தனப் பூச்சு.
மேலும், வேந்தன் மேனிப் பூச்சால்
களவினை யறிவது கடினமா யிற்று.
கொளவே சென்றும் குறள்படி யிலையெனக்
கூறினள் நும்மகள் என்றவன் கூறினன்.
அதன்பின் அரசன் அவைநடை பெறுகெனப்
பதமாய்ப் பகர்ந்துதன் பாவையை அடைந்தான்.
அவளது மார்பின் ஆடை மேலே

---

22. அனைத்தும் செய்தல் - அம்பிகாபதி உட்படப் புலவர்கட்கு அழைப்புவிடுத்தல், ஒட்டக்கூத்தர் தலைமையில் திருக்குறள் பேரவை கூட்டுதல், அனைவர் மார்பிலும் சந்தனக் குழம்பு பூசி வரவேற்றல் ஆகிய அனைத்தும் செய்தல். 23. மறைநூல் படி - தமிழ் மறையாகிய திருக்குறள் பிரதி. 25. எம்பிரான் - எம்தலைவனாகிய மன்னன். 35. வேத்தவை - அரச சபை. 38. சால - மிகவும். 41. கொளவே - திருக்குறள் பிரதியைப் பெற்றுக்கொண்டுவர. 43. அவை - சபை. 44. பாவை - அமராவதி.

துவளுறச் சாந்து தோய்ந்திருப் பதனைக்
கண்டு சாந்து வந்த காரணம்
விண்டு விளம்புக என்று வினவ,
தோழி வந்துமேல் துணியின் மீதே
கேழுறு சாந்தினைக் கேளிக்கை யாகப்
பூசினள் என்றவள் புகல, வேந்தன்,
ஆசிலுன் தோழி ஆணுரு வத்தில்
வம்பாய் வந்தனளோ? வனிதை யவள்பெயர்
அம்பிகா பதியோ? அறிவிலாப் பேதாய்?
ஈரமில் அம்பிகாபதி இவ்விடம் வந்தே
ஆர மார்பால் அணைத்தனன் உன்னை;
அதனால் ஆடை அடைந்த திந்நிலை;
இதனையொப் புவையோ இல்லென மறுப்பையோ!
குலத்தைக் கெடுக்குங் கோடரி யானாய்
உளத்தில் என்ன உறுதி உனக்கு?
புலிக்குப் பிறந்த பூனை என்றும்
அரிமா பெற்ற நரிமா என்றும்
அம்பிகா பதியை அன்று வைதேன்
நம்ப வியலா நங்கை யுன்னையும்
இன்றதே விதமாய் இழிவு படுத்தி
ஏசியும் என்ன பயனுறும்! இழிந்த
வேசியுன் முகத்தில் விழிப்பதும் தீதென
நமன்போல் நவின்று நடுங்கச் செய்தனன்.
அமரா வதிதான் அழுது கொண்டே
எந்தையே என்பிழை பொறுத்தருள் கென்று
தந்தையின் தாள்களைத் தாழ்ந்து பற்றினள்.
உற்ற பாம்பினை உதறுதல் மானப்

---

46. சாந்து - சந்தனச் சாந்து 48 விண்டு - மனம் திறந்து. 50. கேழ் - நிறம்; கேளிக்கை - விளையாட்டு, வேடிக்கை. 51. புகல - சொல்ல. 52. ஆசிலுன் - ஆசு இல் உன்; குற்றம் இல்லாத உன்னுடைய. ஆசு - குற்றம். 55. ஈரமில் - ஈரம் இல்லாத; ஈரம் - குளிர்ச்சி, பண்பு. 67. வேசி - விலைமகள். 68. நமன் - எமன்.

பற்றிய மகளைப் பதைக்கத் தள்ளி,
இறைக்க வியலும் எளிதாய் எதையும்
பொறுக்கல் அரிதெனப் புகன்று மகட்கு,
பின்வரு மாறு பேசுற் றெண்ணினன்:
புன்செயல் இதனைப் பொறேனென் சிறிதும்
களவுப் புணர்ச்சியைக் கண்டு பிடித்தேன்
உளவுறு அமைச்சர்க்கும் உரைக்க வேண்டா.
உண்மைக் களவை உணர்ந்திடின் காடவன்
தன்மகன் றனக்கும் கட்டத் தயங்குவான்.
அம்பிகா பதியைக் கொன்றபின் அடுத்தே
அமரா வதியை அமைச்சன் மகற்கு
மணமது முடித்து மானம் மீட்கலாம்;
இனுஞ்செயற் பால எத்தனை யோவுள
என்றே மன்னன் எண்ணித் தனதகம்
சென்றொரு குறள்படி சீராய்க் கொணர்ந்தே
அரங்கம் போந்துதன் அரியணை அமர்ந்தான்.
சுரங்கம் அகழ்ந்து சுடர்தரு வைரம்
கொணர்வார் போலக் குறளினுட் புக்கவ்
வணுவுள் அமைந்துள ஆர்கலி ஏழையும்
திறந்து விட்டுத் திறலுறு புலவோர்
சிறந்த முறையில் திறனாய்வு செய்வதைக்
கண்டு மன்னன் கரையிலாக் களிப்பு
கொண்டவன் போலக் கூர்ந்து கேட்டனன்.
மட்டில் சுவையுறு மாண்பாய் வின்பின்

---

79. உளவு-தந்திரம். 81 கட்ட-மணமுடிக்க. 85. இனும்-இன்னும். 86. தனது அகம் - தனது அரண்மனையின் உள்ளிடம். 88. அரங்கம் - சபை. 89. அகழ்ந்து-தோண்டி. 90. புக்கவ்-புக்கு அ-புகுந்து அந்த. 91. அணுவுள் - குறளாகிய அணுவுக்குள்; ஆர்கலி - கடல். 92. திறல் உறு - திறமை மிக்க. 93. திறனாய்வு - தரமான நயங்களை எடுத்துக் கூறி ஆய்வு செய்தல், விமரிசனம் செய்தல். 96 மட்டில் - மட்டு இல் - அளவில்லாத; மாண்பாய்வு - மாண்பு ஆய்வு - சிறந்த ஆராய்ச்சி.

பட்டி மன்றம் பாங்குறத் தொடங்கினர்;
அனைவரும் பிரிந்திரண் டணியாய் அமர்ந்தனர்;
திருக்குறள் தெளிந்த அறநூல் என்பதும்
திருக்குறள் தெளிநய இலக்கியம் என்பதும்
இரண்டுபே ரணியினர் எடுத்துள தலைப்பாம்;
அரண்செயும் குறள்களை அவரவர்கூறித்
தத்தம் கொள்கையைத் தகவொடு நாட்டினர்.
மொத்தப் பேச்சும் முடிந்ததும் திருக்குறள்
இலக்கிய நயஞ்செறி இன்னற நூலென
விளக்கிக் கூத்தர் விளம்பினர் முடிபினை.
மன்னன் கேட்டு மகிழாது மகிழ்ந்தனன்
தன்னெஞ் சிலேமுள் தைத்துக்கொண் டிருப்பதால்.
பின்னர்ப் பேரவை பிரிந்து கலைந்தது.
மானம் போனதை மன்னன்அறிந்ததால்
ஊன முற்ற ஒள்ளிழை நைந்து
போனமா னத்தைப் பொருந்த மீட்கும்
சிறந்ததோர் வழியைத் தேடினள் உளத்துளே.
கறந்தபால் ஆன்முலைக் காம்புக் கேறுமோ!

---

97. பட்டி மன்றம் - வாது செய்யும் பேச்சரங்கம். 98. அணி - கட்சி. 102. அரண்செயும் - தத்தம் கருத்துக்கு வன்மையூட்டுகின்ற. 105 இன்னற நூல் - இனிய அற நூல். 108. நெஞ்சிலே முள் தைத்தல் – மகளது மானம் பறிபோன செய்தி உள்ளத்தை உறுத்துதல் 111. ஊனம் – குறைவு; ஒள்ளிழை - அமராவதி. 114. ஆன் - பசு; முலைக் காம்பு - பால்மடிக் காம்பு

23. அம்பிகாபதியைக் கொல்ல அரசன் சூழ்ந்த காதை

அடுத்தநாள் அரசனும் அமைச்சனும் சூழ்ச்சி
தொடுத்தனர்; மன்னன் துயரொடு கூறுவான்:
அமைச்சரே அம்பிகா பதியைக் கொன்றே
அமரா வதியை நும் அருமகற் கீய
எடுத்தனன் முடிவு; என்மகள் கற்பு
விடுத்தவள் அல்லள் வீறுடைக் கற்பினள்.
அம்பிகா பதிதான் அவளை யடைய
நம்பி முயல்வதால் நமனுல கேகுவான்;
உமது கருத்தை உரைத்திடு வீரென,
உமது கருத்தே ஒப்பிலா ஏழை
அடியவன் கருத்தும் ஆகும்; அன்றியும்,
குடிமக னுமியான் கொற்றவன் கருத்தை
மறுத்தல் வல்லனோ? மாற்றம் இலையென
இறுத்தனன் விடையும் இழிகுண வமைச்சன்;
உள்ளுக் குள்ளே ஒப்பிலா உவகை
கொள்ளும் மனத்தொடு கொற்றவற் பணிந்தான்.
சிவபூ சனையில் கரடி விடல்போல்
கம்பர் வந்து காவலற் றொழுதார்.
இம்பரிங் கொன்றுநீர் எய்திய காரணம்
கூறுமின் என்று கொற்றவன் கடாவ,
மங்கல வினையினை மகிழ்வொடு கூற
இங்கு வந்தனன் இயம்புவன் அதனை:

---

4. அருமகற்கு ஈய - அருமையான மகனுக்கு மணமுடிக்க. 6. வீறு - பெருமை, பொலிவு. 13. மாற்றம் - மாறுதல். 16. கொற்றவன் - அரசனை. 18. காவலன் - அரசனை. 21. மங்கல வினை - திருமணம் பற்றிய செய்தி.

யானுமென் மனைவியும் எம்மகன் தனக்கே
உம்மகள் அமரா வதியை உவந்து
மணமது முடிக்க மனமது கொண்டதால்
மணம்பேச வந்துளேன் மாற்றம் யாதெனக்
குணம்பெறு கம்பர் கூறிட, வேந்தன்,
'கடகட' என்று கடுமையாய் நகைத்துச்
'சுடசுட' பதிலும் சொல்ல லுற்றான்:
யானையும் பூனையும் யாங்ஙனம் ஒக்கும்?
வீணெனக் கூறுவல் உமது விருப்பம்.
அடுப்பதோ உமக்கிது ஆரிடம் கேட்கிறீர்?
துடைப்பந் தனக்குத் தூய பட்டுக்
குஞ்சமா வேண்டும்? கொதிக்கிற துள்ளம்.
நஞ்சமாய் வந்தெனை நாணச் செய்கிறீர்.
மாண்பிலாப் புலவரே மரபு யாதும்
காண்ப தில்லையோ கண்மூடிக் கொண்டே
எதுவும் பேசலாம் என்பது முறையோ?
இதுவும் மறிவிற் கெட்டாத தேனோ?
கத்தரிக் காயைக் கடையில் கொளல்போல்
இத்தையும் நினைத்திரோ இயல்பிலாப் புலவரே!
மன்ன ரொடுகுடி மக்கள் ஒப்பரோ?
மன்னர் குலத்தொடு மன்னர் குலமே
கொண்டு கொடுப்பது மரபெனக் கொள்வீர்.
எனவே எங்குலம் ஏற்கலாம் என்று
கனவுங் காணீர் கடுகிச் செல்கென
விரட்டியும் கம்பர் விடாது வேண்டுவார்:
திரட்டி நுங் கருத்தைத் தெரிவித்து விட்டீர்
எனது கருத்தை இயம்புவன் கேண்மின்:
இனிதே ஒருவனும் ஒருத்தியும் இணைந்தபின்
சாதியோ சமயமோ சாட்டுதல் தகுமோ!
நீதி யென்னெனின் நிலைத்த காதலரை

---

25. மணமது - திருமணம்; மனமது - உள்ளத்தில். 26. மாற்றம் - பதில். 46. காணீர் - காணுதீர்; கடுகி - விரைந்து.

ஒன்று விப்பதே யாகுமிஃ துறுதி
என்று கூற, இயம்புவான் வேந்தன்:
உமக்குப் பித்தம் தலைக்கேறி யுள்ளதாய்
எமக்குத் தோன்றுமால்; என்ன மொழிவது!
அம்பிகா பதியும் அமரா வதியும்
இணையிலாக் காதலர் என்றுபொய் புளுகி
இணையிலா இருவரை இணைக்க முயல்வது
கடும்பெருங் குற்றமாம்; கழறுவேன் உமக்கு;
சுடுஞ்சொல் இனியும் சொலாதீர் என்றிட,
செந்தமிழ்ப் புலவர் செப்புவார் அவற்கே:
இந்த மணத்திற் கிசையீ ராயின்
நந்தம் மக்கள் நமனுல கெய்துதல்
திண்ணம் என்று தெரிந்தே உமக்கென்
எண்ணந் தன்னை எடுத்துரைத் தேனியான்;
முன்னம் உணர்ந்து முடிப்பீர் திருமணம்
பின்னர் இவணியான் பேசவொன் றிலையென,

(அரசன்)

எண்ணி யுரைப்பேன்; இனிநீர் நந்தம்
விருந்தினர் விடுதியில் தங்கி யிருப்பின்,
பொருந்த ஆய்ந்து பொருத்தம் பார்த்துத்
தெரிந்தபின் உம்மைத் தேடி யழைத்து
முடிவு கூறுவல் முனியாது சென்மெனக்
காவலன் உரைப்ப, கம்பர் சென்றபின்,
அரண்மனை ஆசான் ஒட்டக் கூத்தர்
வரவழைக்கப் பெற்றார் வாழ்த்தி யமர்ந்தார்.
அரசன் எழுந்தே ஆசாற் றொழுது
உரைசெய லானன்: உம்மையிங் கழைத்த
நோக்கங் கூறுவல் நுண்ணிதின் கேண்மின்.

67. முன்னம் - முன்னதாக. 73. முனியாது - சினக்காது; சென்மென - செல்லுவீர் என்று. 77. ஆசாற்றொழுது - ஆசானைத் தொழுது.

ஆக்கமில் புலவன் அம்பி காபதி
அமரா வதியை அடைய நினைக்கிறான்;
கம்பர் வந்து கன்னியைக் கேட்டுளார்;
வம்பாம் இதற்கு வழியொன்று கூறுகென,
ஒட்டக் கூத்தர் உரைக்க லானார்:
கம்பர் மகனோ கவைக்குத வாதவன்,
காதல் கலைஞன், காம வெறியன்,
காதல் பாட்டே கதைப்பான் என்றும்;
அகப்பொருள் தழுவாப் பாடல் ஆக்கும்
உகப்பிலா னாதலின் உமக்கொன் றுரைப்பல்:
அம்பிகை யின்மேல் அகப்பொருள் தழுவாச்
செம்பொருள் சிறக்க அமைத்துச் செவ்விதின்
பாடல் நூறு பாடித் தரினே
நாடருங் கன்னியை நல்கிடு வேனெனக்
கம்பர்க் குரைப்பின் கதையும் முடிந்திடும்;
நம்பியென் கூற்றை நயமாய்ச் செயல்படின்
அம்பி காபதி அறவே தோற்பனென்
றொட்டக் கூத்தர் உரைத்தே கியபின்,
காடவன் எழுந்து காவலற் குரைப்பான்:
ஈடில் கன்னியைக் கொள்ள எண்ணின்
அம்பி காபதி அகப்பொருள் தழுவாது
அம்பிகை யின்மேல் நூறுபா ஆக்கித்
தருவான் என்னில் தருவேன் கன்னியை;
மருவிடின் அகப்பொருள் மாய்ப்பேன் அவனை;
என்று கம்பர்பால் எடுத்துக் கூறுகென,
அரசனவ் வாறே கம்பரை அழைத்தே
உரைசெயக் கம்பரும் ஒப்பிய வர்போல்
அம்பி காபதி அகப்பொருள் தழுவாது

80. ஆக்கம் - வளர்ச்சி, முன்னேற்றம். *85.* கவை - தேவை, வேலை. *89.* உகப்பிலான் - விருப்பம் இல்லாதவன். *95.* கூற்றை - பேச்சை. *96.* அறவே - முற்றிலும். *103.* மருவிடின் - கலந்தால்.

எப்பொருள் மேலும் இயற்றுவான் பாடல்;
நூறு பாடல் என்பது நொய்ம்மை;
நூறா யிரமும் நொடியில் இயற்றுவான்.
கயற்கு நீச்சல் கற்பிக்க வேண்டுமோ?
முயற்கு விரைவு முடியாத ஒன்றோ?
எப்போழ் தெம்மை அழைக்கின் றீரோ
அப்போழ் தவனொடு அடைவன் ஈண்டெனப்
புலவர் புகன்று போயினர் தமதகம்.
நன்றிம் முடிவு நாளொன்று கூறுவேன்
என்று காதில் என்னவோ ஓதிச்
சென்றனன் காடவன் சிரித்த முகத்தொடு.
அரசன் அதன்பின் அகத்துள் சென்றான்.
அரசி கண்டே அவனிடம் மொழிவாள்:
அரியநங் குழந்தை அமரா வதியைப்
பெரிதும் வைது பேதுறச் செய்திராம்.
இருவர் உள்ளமும் இணைந்தபின் அவர்தமை
மருவச் செய்வதே மாண்புடைத் தாகும்.
அயர்வு கொளற்கிதில் அணுவும் தடையிலை.
உயர்வுதாழ் வொன்றும் ஓரா தவற்குத்
திருமணம் செய்தலே திருவுடைச் செயலாம்.
இருமனம் ஒன்றி இயைவதே மணமெனத்
திருவுறு நல்லாள் தெரிவித்து வேண்ட,
பலசரக்குக் காரனைப் பைத்தியம் பிடித்தாற்போல்
பலசெய் திகளும் படாதன படுத்த
'ஆகுக பார்க்கலாம்' எனவேந் தறைந்தே
ஏகினன் தனியிடம் எடுக்க ஓய்வே.

---

109. நொய்ம்மை - சிறு அளவு. 111. கயற்கு - மீனுக்கு. 112. முயற்கு - முயலுக்கு. 131. படாதன - படமுடியாத பாடு. 132. வேந்து - வேந்தன்.

24. கட்டுத் தறி கவி பாடித் தந்த காதை

அம்பிகாபதி ஒருநாள் அகத்தில் அமர்ந்தே
அம்பொருள் பாப்பல ஆய்ந்த காலை,
உண்மைப் புலவன் நான் என்றுரைத் தொருவன்
அண்மையில் வந்தே அமர்ந்து கொண்டனன்.
அம்பி காபதி அவனை நோக்கி
நீயார் நின்பெயர் என்னென வினவ,
உள்ளதே உரைக்கும் உண்மைப் புலவனான்;
கொள்ளுவர் என்பெயர் 'குப்பையா' என்று.
கம்பர் வீட்டுக் கட்டுத் தறியும்
கவிபாடும் என்று கழறக் கேட்டுளேன்
ஆகவே உம்மிடம் அரியபாப் பெற்றுப்
போகவே வந்துளேன் என்றவன் புகல,
உண்மைப் புலவனென் றுரைக்கின் றாயே
உண்மைப் பாச்சில உரையென, அவனும்,
வெண்மைப் பாச்சில விளம்ப லானான்:

(குப்பையா)

(1) "பாக்காவது கமுங்காய், பழமாவது கனியாம்,
நாக்காவது நரம்பிலாதது, நாய்வால்நிமி ராது,
வாக்காவது வாய்திறப்பின் வந்துபேரொலி செய்யும்,
மூக்காவது கண்களின்கீழ் முகத்தினிலே தெரியும்."

ஆகா ஆகா! உண்மை உண்மையென
அம்பிகா பதிசொல, அதன்மேல் பாடுவான்:

---

2. அம்பொருள் - அழகிய சிறந்த கருத்து. 15. வெண்மை - எளிமை.

(குப்பையா)

(2) "கண்டுதான் இனிக்குங் கண்டாய்,
காடிதான் புளிங்குங் கண்டாய்,
சுண்டைதான் கசக்குங் கண்டாய்,
சுண்ணும் புவேகுங் கண்டாய்,
குண்டுதான் உருளுங் கண்டாய்,
குடைமழை தடுக்குங் கண்டாய்,
வண்டுதேன் குடிக்குங் கண்டாய்,
வாடைதான் நடுக்குங் கண்டாய்."

அம்பி காபதி அவனைப் பார்த்துப்
பலேபலே உண்மை! பாடெனப் பாடுவான்:

(குப்பையா)

(3) "பாட்டியுங் கிழவி யாவாள், பாப்பா குமரி யாவாள்,
பாட்டனும் கிழவ னாவான், பையனும் குமர னாவான்,
சேட்டனும் அண்ண னாவான், சிறுவனும் தம்பியாவான்,
நாட்டுளோர் இவற்றில் தப்பு நவிலவே முடியா
[தன்றோ?"

என்று பாடவே, இயம்புவான் அம்பி:
நன்று நன்று நயமிகு பாக்கள்;
குப்பையா! ஒன்று கூறுவன் கேளாய்
தப்பாது பாடு வாயோ தருவதை?
'குப்பன்' என்பதை முதற்சொலாக் கொண்டும்
'குடித்திட்டான்' என்பதை ஈறுக் கொண்டும்
வடித்திடு ஒருபா வளமாய் என்ன,
அன்னவன் அதனை அங்ஙனே ஏற்றே
எண்ணிச் சிறுபோழ் தியற்றிப் பாடுவான்:

---

22. கண்டு - கற்கண்டு. 25. வாடை - வாடைக்காற்று. 30. சேட்டன் - மூத்த பிள்ளை. 38. வடித்திடு - தேர்ந்து பாடு.

(குப்பையா)

‘குப்பனும் குதித்தெழுந்தான் கோழி கூவுங் காலை,
அப்பமோ டிட்டிலி தோசை அனைத்தையும் அமுக்கிப் [பின்னர்
உப்புமா பொங்கல் உழுத்தம் வடையையும் ஒருகை [பார்த்தே
குப்புறக் குனிந்து குண்டான் கூழையும் குடித்திட் [டானே.’’
எனவே பாடிட, இசைமாரி பொழிந்தே
உனையான் விரும்புவல் உனக்கெது வேண்டும்
விளம்பென அம்பி வினவ, குப்பையா,
வளம்பெற ஒருபா வழங்குக பாடி;
‘ஒருமகன்’ என்பதை ஒன்றாஞ் சொலாகவும்
‘கத்தி’ என்பதைக் கடைச்சொல் லாகவும்
அமைத்தே ஒருபா அளித்திடு கென்ன,
இமைத்திடு முன்னர் அம்பி இசைப்பான்:

(அம்பிகாபதி)

“ஒருமகன் ஈட்டி யுள்ள உயர்பொரு ளதனிற் பங்கு
தெருமகன் கேட்கான் பற்றான் திருடனைத் தவிர, தாயார்
தருமகன் மட்டும் பங்கு தாவெனத் தருவான் தொல்லை
ஒருவயி றதிலே பிறந்த உறவவன் காட்டுங் கத்தி.”
என்றே அம்பி இசைத்திட, குப்பையா,
நன்றுநும் பாவென நவில்வான் மேலும்:
காதல் கலைஞர் நீரெனும் கவின்புகழ்
போதல் செய்தது புதுப்புது இடமெலாம்;
அகப்பொருள் பாடல் ஆக்கலில் நீவிர்
மிகப்பெருந் தேர்ச்சி மேவியோர் என்று
பலரும் பன்னப் பன்முறை கேட்டதால்

45. இசை மாரி - புகழ்மழை. 54-55. தாயார் தருமகன் - உடன் பிறந்தவன். 56. உறவவன் - உறவு அவன். 63. பன்ன - சொல்ல.

மலரும் என்னுளம் மகிழ்ச்சிப் பெருக்கால்.
அகப்பொருள் சுவைநனி அமைந்த ஒருபா
உகப்புற இயற்றி உதவுகென வேண்ட,
ஓலை யொன்றில் அம்பி எழுதுங்
காலை, குப்பையா கருத்தொடு தடுத்தே,
இந்த ஓலையில் எழுதாது யான்கொடு
வந்தவிவ் வோலையில் வரைவீர் என்று
அணியுறு ஓலை நறுக்கொன் றளித்தான். அதிலே,
இனிய அகப்பொருள் பாவொன் றியற்றிக்
கனிவுடன் அம்பி கையில் கொடுக்க,
அம்பொருள் அமைந்த அகப்பா நோக்கி,
கம்பர் வீட்டுக் கட்டுத்தறி தந்த
காதல் கவிநனி நன்றெனக் கழறிப்
போதல் செய்தனன் பொய்மைப் புலவன்.
பொய்யாம் புலவனை உண்மைப் புலவனென்
றையோ உரைத்தற் கரிய உவமை
ஓரா துலக வழக்கின் மரபிலே
காராடு வெள்ளாடெனக் கழறப் படுதலே.

66. உகப்பு - மகிழ்வு. 69-70. கொடு வந்த - கொண்டுவந்த. 71. ஓலைநறுக்கு - அழகாக நறுக்கிய ஓலை. 81. காராடு - கறுப்பு ஆடு.

25. அம்பிகாபதியும் சிம்மனும் அமர் புரிந்த காதை

குப்பையா வுக்குப் பாடல் கொடுத்தபின்
தப்பா துநாளும் தான்சென் றெழுதும்
மாமரத் தோப்பின் மையம் அடைந்து
பாமர ரும்புகழ் பைந்தமிழ்ப் புலவன்
அம்பி காபதி அமர்ந்தெழு தலானான்.
அம்மாந் தோப்பினை அரும்படைத் தலைவன்
சிம்மனுஞ் சேர்ந்து செந்தமிழ் எழுதும்
அம்பியை வம்புக் கழைக்க லானான்:
புலவரே பொழுது போக்க அமைதி
நிலவுமிவ் விடத்தை நீரடைந் தீரோ!
"நாய்கெட்ட கேட்டுக்கு மாநிழலா" என்ப;
நாய்தனின் சிறந்த நல்லவ ராதலின்
உமக்கிச் சோலை உரியதே யாகும்.
நமக்குள் பேசுவம் நானொன்று கேட்பல்:
புளியங் கொம்பினைப் பிடித்தாற் போல
எளியராம் நீவிர் இந்நாட் டரசனின்
அருமை மகளாம் அமரா வதியைத்
திருமணங் கொள்ளத் திருவுளங் கொண்டதாய்ச்
செவிமடுத் தேனியான் செப்புவ துண்மையோ?
கவிமடு புலவரே கழறுவீர் இறையென,
அம்பி காபதி அவற்கிறை விடுப்பான்:
வம்பு செய்ய வந்துளீர் என்னிடம்
என்மணம் பற்றி ஏன்நீர் கவல்கிறீர்?

---

11. என்ப - என்பர். 19. செவி மடுத்து - காதால் கேட்டு. 20. கவி மடு - கவிவன்மை மிகுந்த; 21. இறை - பதில். 23. கவல்கிறீர் - கவலைப்படுகிறீர்.

நன்மணம் புரிய நப்பாசை கொண்டே
அமரா வதியை அடைந்து நீவிர்
மூக்குடை பட்ட முழுக்கதை அறிவேன்
நாக்கில் நரம்பிலாது கண்டது நவில்வதோ?
போக்குவே றில்லெனின் போவீர் நும்மனை
நாய்நிகர் உமக்கிம் மாநிழல் நன்றிலை;
போய்விடும் இவண்வீண் பொழுதுபோக் காதீர்
என்றிட, சிம்மன் இயம்புவான் சினந்து:
வென்றிட என்னை விரும்புகின் றுயோ?
விட்டுக் கெண்டையை விரால்பிடித் தாற்போல்
ஒட்டுற வுவிடுத் துமக்கே லாத
மன்னன் மகளை மணக்க விரும்ப
என்ன கொழுப்புனக் கென்பதை யறியேன்.
"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து" எனுங் குறளைப்
பின்பற் றுதியோ பேதாய் உனக்குத்
துன்பந் தருமவள் தோதிலை உணர்கென,

(அம்பிகாபதி)

"கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது" எனுங் குறளை
அகத்துள் கொண்டே ஆற்றுதி யோசெயல்?
மகத்துள் புக்க சனியென வந்தாய்
அகத்தைத் திருத்தென அம்பி கடிய,

---

33. கெண்டை - கெண்டைமீன்; விரால் - விரால்மீன்; கெண்டை மீனினும் விரால்மீன் சிறந்ததாகச் சொல்லப்படும். 37. உள்ளுவது- எண்ணுவது; உள்ளல் - எண்ணுக. 38. தள்ளினும் - தவறினும். 39. பேதாய் - அறிவிலியே. 41. அம்பினில் - அம்பைக் காட்டிலும். 44. மகத்துள் புக்க சனி - மகநட்சத்திரத்துக்கு உரிய வீடாகிய சிம்மத்துக்குள் சனி பெயர்ந்து வந்து புகின் கெடுதியாம். 45. அகத்தை- மனத்தை.

(சிம்மன்)

கொற்றவன் உன்னைக் கொல்வ துறுதி
மற்றது வரையும் வாழ விடுவதேன்?
தும்பை விட்டுக் கொம்பைப் பிடிப்பதோ?
கொற்றவன் உன்னைக் கொல்லு முன்பே
நற்றவர் உலகுக்கு நானே அனுப்புவேன்
என்ற சிம்மன் எடுத்தான் கத்தியை;
அம்பியின் அகலமே குறியா யாக்கி
வெம்புஞ் சினத்தொடு வீசினான் அதனை.
அம்பிதன் ஓலைக் கட்டால் அதனைத்
தடுத்து வீழ்த்தித் தானதை ஒல்லே
எடுத்துச் சிம்மன் எதிர்த்து வருமுன்
பக்கலில் உள்ள பாழ்ங்கிணற் றுக்குள்
புக்கிட எறிந்தான், போக்குவே றிலாத
சிம்மன் வந்து செந்தமிழ்ப் புலவனை
விம்மத் தூக்கிக் கிணற்றில் வீசியோர்
பாறையைப் போட்டுப் பதமாய்க் கொல்ல
வீறொடு முயலுமுன், அம்பி வெளியே
ஏறி வந்து சிம்மனை எடுத்தே
பாழ்ங்கிண றதனில் பதற எறிந்தான்.
வீழ்ந்தவன் கிணற்றில் வெறுந்தண் ணீரும்
இலாமையால் வல்லே ஏறிவந் திட்டான்;
வெலாமல் நின்னையான் வீடு திரும்பேன்;
தானைத் தலைவனைத் தமிழ்மொழிப் புலவனீ
ஏனையோர் போல எண்ணி வெல்ல
முயல்வது முற்றும் முட்டாள் தனமாம்.
படையின் தலைவனைப் பகைத்துக் கொண்டு

---

48. தும்பு - கயிறு. 50. நற்றவர் உலகு - மோட்சம். 52. அகலம் - மார்பு. 55. ஒல்லே - விரைவில். 62. வீறொடு - வேகத்தோடு. 66. வல்லே - விரைவில். 67. வெலாமல் - வெல்லாமல். 68. தானை - சேனை.

தடையிலாது வாழத் தகுமோ நினக்கே?
என்றவன் கூற, இயம்புவான் புலவன்:

(அம்பிகாபதி)

"வில்லே ருழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை" எனுங் குறளை
அறியா யோநீ? அழிந்து போக
வெறியோ டென்னை வெல்ல முயல்கிருய்
என்ற அம்பிக்கு எதிர்விடை தருவான்:

(சிம்மன்)

சொல்லால் என்னைநீ சுளுவாய் வெல்லலாம்
மல்லால் வெல்ல மாட்டாய் என்றுணர்
என்ற சிம்மற்கே இறுப்பான் அம்பி:
அம்பி : மற்போ ருமியான் மாணக் கற்றுளேன்
நிற்பொரு தின்னே நிற்கா தோட்டுவோனென,
சிம்மன் : மற்போர் புரிந்துனை மடியச் செய்வேன்
எற்பொரு துன்னல் வெல்ல இயலாதென,
அ : சராசந்தன் நீஎனும் எண்ணமோ உனக்கு?
சி : வென்றவனை வீழ்த்திய வீம னேநீ?
அ : கண்ணனை வெல்லக் கம்சன் அனுப்பிய
மல்ல ரெனவுனை மாணவெண் ணுதியோ?
சி : கம்சனின் மல்லரைக் கொன்ற கண்ணனோநீ?
அ : மல்லில் வல்ல வாண அவுணனோநீ?
சி : மல்லில் அவனை மாய்த்தகண் ணனோநீ?
அ : அரியமல் வல்ல ஆமூர் மல்லனோநீ
சி : பொருதவற் கொன்ற போர்வைக்கோக் கிள்ளியோநீ

---

74. வில் ஏர் உழவர் - வில் வல்ல வீரர். 75. சொல் ஏர் உழவர் - சொல் வல்ல புலவர் 80. மல்லால் - மற்போரால். 81. இறுப்பான் - விடை சொல்லுவான். 83. நிற்பொருது - நின்னைப் பொருது; இன்னே - இப்போதே. 85. எற்பொருது - என்னைப் பொருது. 91. அவுணன் - அரக்கன். 94. பொருதவற் கொன்ற - பொருது அவனைக் கொன்ற. 86-94: சரா

எனமாறி மாறி இருவரும் வினவினர்.
சிம்மனைப் போலவே செந்நாப் புலவனும்
இம்மியும் குறைந்திலன் இரும்பெரு மல்லில்;
இளமை யிலேயே இப்போர்ப் பயிற்சியை
வளமாய்ப் பெற்றவன் வல்லமை யுற்றவன்;
வல்லே எண்ணி வல்லே முடிக்கும்
நல்ல செயற்றிறன் நண்ணப் பெற்றவன்;
தன்னம் பிக்கையொடு தகவாய்த் துணிவும்
மன்னப் பெற்றவன்; மற்போர்க் குரிய
இன்னபிற தகுதிகள் எல்லாம் உடையவன்.
இவனைச் சிம்மன் தூக்கி எறிய,
அவனை அம்பியும் அங்ஙனே செய்தான்;
ஒருவரை யொருவர் உயரே தூக்கி
எறிவதும் வீழ்வதும் எழுவது மாயினர்;
அடிபல போட்டு வீடு கட்டிப்
பிடிபல போட்டுப் பெரும்போர் புரிந்தனர்;
குத்துவர் இடறுவர் குப்புறக் கீழே
பொத்தென வீழ்வர்; பொருக்கென எழுந்து
கட்டிப் புரள்வர்; கைகால் முறுக்குவர்.
ஒருகால் அம்பி ஒழிவதுபோல் தோன்றும்
மறுகால் சிம்மன் மாள்வதுபோல் தெரியும்.

சந்தன் என்பவனை மற்போரில் வீமன் வென்றான்; கம்சன் அனுப்பிய மல்லரைக் கண்ணன் (கிருஷ்ணன்) வென்றான்; வாணன் என்னும் அரக்கனை (வாணாசுரனை) மற்போரில் கண்ணன் வென்றான்; பண்டு தமிழ்நாட்டில், சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி என்னும் மன்னன், முக்காவல் நாட்டு ஆமூர் மல்லனை மற்போரில் வென்று கொன்றான் என்பது புறநானூற்று வரலாறு.

96. செந்நாப் புலவன் - அம்பிகாபதி. 100. வல்லே-விரைந்து. 101. செயற்றிறன் - செயல் திறன். 106. அங்ஙனே - அவ்வாறே. 112. பொருக்கென - (விரைவுக் குறிப்பு) விரைவாக. 114. ஒருகால் - ஒருமுறை. 115. மறுகால்-மறுமுறை.

வெற்றி யார்க்கென விளம்பொறு வகையில்
வெற்றித் திருமகள் ‘விடுவிடென’ மாறுவாள்.
அக்கம் பக்கம் ஆடுமாடு மேய்ப்பவர்,
ஒக்க வயலில் உழுதொழில் புரிபவர்
அனைவரும் வந்தவண் அமர்புரி கடும்போர்
முனைதனைச் சுற்றி மொய்த்துக் கொண்டனர்;
சிம்மன் அம்பியைச் செறிக்க முயலின்
ஐயோ ஐயோவென் றலறுவர் அனைவரும்;
அம்பிசிம் மனைக்கீழ் அடிக்குங் காலை
நம்பி வெல்க நம்பி வாழ்கென
வளமாய் அம்பியை வாழ்த்துவர் அனைவரும்;
உளமதில் அச்சமும் உவகையும் மாறிடும்.
இறுதியில் சிம்மனை ஏந்தல் வீழ்த்தி
உறுதியாய் மார்பில் ஒருகால் ஊன்றிமற்
றொருகா லாலவன் கைகளை உதறித்
தன்கை களாலவன் தலையையும் காலையும்
வன்மையாய் இறுக்கி வளைத்து முதுகை
முறிக்க முயல்கையில் முன்னுளோர் பலரும்
குறுக்கே வந்து கும்பிட்டுத் தடுத்திட,
அம்பி தூக்கிக் குப்புற ஆழ்த்த
சிம்மனின் இரண்டு தோள்களும் சேர
மண்ணிலே பதியவாய் மண்ணைக் கவ்வ,
நினது வெற்றி நிலைத்து விட்டது
எனது தோல்வியை ஏற்கிறேன் யானெனச்
சிம்மன் பணிய, செற்றம் நீங்கி

117. விடுவிடென - (விரைவுக் குறிப்பு) விரைந்து விரைந்து. 119. ஒக்க - ஒருமிக்க. 120. அவண் - அவ்விடம். 122. செறிக்க- அழிக்க, கொல்ல. 125. நம்பி - அம்பிகாபதி. 128. இறுதியில் - முடிவில்; ஏந்தல் - அம்பிகாபதி. 133. முன்னுளோர் - முன்னே உள்ள பார்வையாளர்கள். 140. செற்றம் - சினம்.

அம்பிகாபதி அவனை அணைத்துக் கொண்டனன்.
நம்பும் நண்பன்போல் நடித்துச் சிம்மன்
வெம்பும் உளத்தொடு விரைந்துசென் றனனே.
வளம்பெற அம்பிகாபதி வாழ்கென ஆங்குளோர்
விளம்பிய பேரொலி விண்ணைப் பிளந்ததே!

26. அம்பிகாபதி கடவுள் பாடல் பாடிய காதை

அகப்பொருள் சிற்றின்பக் கருத்தணு வளவும்
புகப்பெரு தரிய பேரின்பம் பொருந்த
ஈறில் அம்பிகை இறைவி மீது
நூறு பாடல் நுண்மாண் நுழைபுல
வீறுடன் புலவோர் வியக்க இயற்றிப்
பலரும் கேட்கப் பாடினே உள்ளம்
மலர அமரா வதியை மணக்கலாம்;
சிற்றின்பக் கருத்து சிறிது கலக்கினும்
மற்றிவ் வுலகை மறக்கவேண் டுமெனக்
கொற்றவன் குறித்தநாள் குறுகக் கம்பரொடு
அம்பி காபதி அரசவை நோக்கிப்
போகை யிலேவழிப் போக்கர் இருவருள்,
'போகவேண் டா'வென ஒருவன் புகல,
அம்பி அவனை நோக்க, அவன்றான்
உம்மை நோக்கியான் உரைத்திலேன் என்ன,
அம்பி அதன்பின் அரசவை அடைந்தான்.
செம்புல மாந்தரும் செறிந்தனர் அவையில்.
அரசன் வந்துதன் அரியணை யமர்ந்தான்.
பரசப் பலரும், பாவியற் றலாமென
அரசன் ஆணை அறிவிக்கப் பெற்றது.
அணிபெறும் பாடல் அம்பி காபதி

---

3. ஈறில் - ஈறு இல்-அழிவில்லாத. 4. நுண்மாண் நுழைபுலம்- நுட்பமான மாட்சிமையுள்ள கூரிய அறிவு. 12-13. வழிப்போக்கர் இருவருள் ஒருவன் 'போக வேண்டா' எனப் புகல - என்று கொண்டு பொருள் காண்க. 17. செம்புல மாந்தர் - செம்மையான அறிஞர்கள்; செறிந்தனர் - நிறைந்தனர். 19. பரச - போற்ற.

இனிமைப் பண்ணோ டிசைக்கத் தொடங்கினன்.
வேந்தன் தடுத்து விளம்ப லானன்:
மாந்த இசையை மறுக்க வில்லை;
இனிய நூறுபா எழுதி முதலில்
கனிவொடு என்னிடம் காட்டிடல் வேண்டும்;
மற்றதன் பின்னரே மாணவை கேட்டுச்
சொற்றிறம் பொருளொடு சுவைக்கப் பாடலாம்
என்றே இயம்ப, இனிதென அம்பி
நன்றே ஓலை நறுக்குகள் எடுத்தே
இறைமீ தினியபா எழுத லானன்.
மன்னன் அதையும் மறுத்து நிறுத்தி
இன்ன ஓலையில் எழுத வேண்டா;
என்னிடமவ் வோலைகள் ஈகெனப் பெற்றபின்
நன்னரிவ் வோலையில் நலமுற எழுதெனத்
தன்னிட மிருந்த தால வோலையை
முன்னுற நீட்டி முறைப்போ டளித்தான்.
வாங்கி அம்பி வளவிய கருத்தொடு
பாங்குற ஒவ்வொரு பாடலாய் எழுதி
ஈந்துகொண் டிருந்தான் இறையவன் தன்னிடம்.
போந்த புலவர்கள் பூரித்து மகிழ்ந்தனர்.
முற்பகல் காப்பும் ஐம்பதும் முடித்தபின்
பிற்பகல் ஐம்பது பீடுற முடித்துநூல்
கொடுத்தபின் அவையில் கொற்றவன் கூறுவான்:
இன்றுநூற் றொருபா எழுதிக் களைத்ததால்
சென்று நாளை சிறப்பொடு வந்து
ஈங்குளோர் கேட்க இசைப்பாய் என்ன,
ஆங்கவ் வாறே அம்பி மறுநாள்

---

24. மாந்த - நுகர. 27. மாணவை - சிறந்த சபை. 28. சொற்றிறம் - சொல்திறம். 31. இறை - தெய்வம். 33. இன்ன - (உன்னிடம் உள்ள) இந்த. 36. தால ஓலை - பனையோலை. 42. காப்பு - காப்புப்பாட்டு; ஐம்பது - முதல் ஐம்பது பாடல்கள். 48. ஆங்கவ்வாறே - ஆங்குக் கூறப்பட்ட அவ்விதமே.

ஓங்குறும் பேரவைக் குவப்பொடு வந்தான்
நூற்றொரு பாக்கள் அடங்கிய நூலினை
ஏற்ற மன்னன் எடுத்துக் கொடுத்தான்.
இருகையால் அம்பி இறைஞ்சி வாங்கி
உருகப் பாடினன் ஒவ்வொன் றுக;
காப்பும் தொண்ணூற் றொன்பது கவிகளும்
மாப்புக ழோடு பாடி மற்றோர்
ஈற்றுப் பாடலை இசைக்கத் தொடங்கினன்;
வேற்றுப் பாடல் விரவக் கண்டான்.
"சற்றே பருத்த தனமே குலுங்கத் தரளவடம்"
என்றப் பாடலின் முதலடி யிருந்தது.
இந்தவீற் றுப்பா இவணியான் எழுதித்
தந்த தன்று; தவறாய் இதிலே
சேர்த்துவைத் துள்ளனர் சிறிதும் ஒவ்வேன்.
சீர்த்தியோ டென்பா செப்புவன் கேண்மின்:
"இம்மையில் ஒருதாய் ஈன்றவோர் மகவையும்
புரத்தல் எளிதிலை;
மும்மை யுலகையும் முகிழ்வித் தோம்பும்
முழுமுதல் தேவிநீ!
அம்மையே! உன்றன் அருள்முழு தியம்பும்
ஆற்றல் இல்லேன்;
வெம்மைச் சாவினை விலக்கிக் காக்கென
வேண்டு வேனே."
என்பதிந் நூலின் இறுதிப் பா ; சிற்
றின்பம் விரவா திருச்குமிப் பாடலை
மன்பதைப் புலவோர் மறுக்க வொண்ணுமோ
என்பதா யம்பி இயம்பி மறுத்தான்.
மன்னவன் அவனை அறவே மறுத்தே

52. இறைஞ்சி - தொழுது. 57. விரவ - கலந்திருக்க. 60. இவண் - இவ்விடம். 63. சீர்த்தி - புகழ். 64. இம்மை - இவ்வுலகம், இப்பிறப்பு; புரத்தல் - காத்தல். 65. மும்மை - மூன்று; முகிழ்வித்து - தோற்றுவித்து. 67. வெம்மை - கொடுமை.

இன்னவன் பாடலே இஃதெனக் கூறிச்
"சற்றே பருத்த தனமே" என்னுமிப்
பாடலை முதலில் பாடிக் காட்டென,
பாட லானன் அம்பியப் பாடலை:

"சற்றே பருத்த தனமே குலுங்கத் தரளவடம்
துற்றே யசையக் குழையூ சலாடத் துவர்கொள் செவ்வாய்
நற்றேன் ஒழுக நடன சிங்கார நடையழகின்
பொற்றேர் இருக்கத் தலையலங் காரம் புறப்பட்டதே"

என்று முடிக்க, இறையவன் கூறுவான்:
இறுதி யிப்பா இவரெழு தியதே
உறுதி கூறுவேன் உண்மை உண்மை!
இந்தப் பாச்சிற் றின்பமே உடைத்திதை
எந்தப் புலவரும் மறுக்க வியலுமோ?
கடவுட் பாவொடு காமங் கலந்தவர்
தொடவுந் தகுமோ தூயவென் மகளை.
கொலையொறுப் பிவர்க்குக் கொடுக்கத் துணிகிறேன்
இலைமறுப் பிதனில் என்று கூற,

(அம்பிகாபதி)

இப்பா இவணியான் எழுதிய தன்றென
அப்பால் மீண்டும் அம்பி மறுக்க,

(அரசன் செயல்)

"சற்றே பருத்த தனமே" என்னும்
பாட்டமைந் துள்ள பனையோலை யதனைக்
காட்டி அவையில், கையெழுத் தனதே ;
இந்தப் பாவுள ஓலை நினது

73. இன்னவன் - இந்த அம்பிகாபதியின். 77. தனம் - முலை; தாள் வடம் - முத்து மாலை. 78. துற்றே - நெருங்கி; குழை - காதணி; ஊசலாட - ஊஞ்சலாட; துவர் - பவள நிறம். 88. ஒறுப்பு - தண்டனை.

சொந்த ஓலை யில்லெனச் சொல்கிறேன் ;
நேற்றுநீ கொணர்ந்த நெட்டோலை பழையது
ஈற்றுப் பாவுள இஃதோ அழகிது.
காப்புப் பாவொடு தொண்ணூற் றொன்பது
யாப்பும் நூலும் யாப்பும் எழுதிய
ஓலைகள் அனைத்தும் ஒத்திருத் தலைநீ
சாலவும் நோக்கிச் சாற்றுவாய் உண்மை
என்றே அம்பியை இறையவன் கடாவ,

(அம்பிகாபதி)

ஈற்றுப் பாவிங் கெழுதிய வோலை
நேற்றிங் கிறையவர் நேர்ந்தீந் ததேயாம் ;
இதிலுள கையெழுத் தெனதே ; மற்றும்
எதில்சூ துளதென இயம்புவன் கேண்மின் :
அரசரும் அமைச்சரும் ஆரச் சூழ்ந்தே
உரைசெய வொண்ணு வஞ்சம் ஒன்றினை
எனது தலையில் ஏற்றிக் கட்டினர் ;
இனிது விளக்குவல் இப்பெருஞ் சூழ்ச்சியை :
'குப்பையா' எனும் பெயர் கூறிக் கொண்டும்
உண்மைப் புலவனென் றுரைத்துக் கொண்டும்
ஒருவன் என் மனை ஒருநாள் வந்து
மருவும் அகப்பொருள் பாவொன்று மாண்புற
எழுதித் தருகென என்னை வேண்டினன் ;
எழுதும் ஓலையும் ஈந்தான் அவனே.
எழுதித் தருவதாய் இசைந்தேன் யானும்.
அவன்வரும் போழ்தில் அகல்தெரு முற்றத்து
எவனோ வருகிறான் என்றுநின் றிருந்தேன் ;
வண்டி யொன்றிலோர் வனிதை யமர்ந்து
கொண்டு போனதைக் கூர்ந்து நோக்கினேன் ;

---

100. யாப்பு - பாட்டு. *108.* ஆர - பொருந்த. *115.* மருவும் அகப் பொருள் - அகப் பொருள் காதல் தழுவிய. *119.* அகல் - அகன்ற, விசாலமான. *121.* வனிதை - பெண்.

வண்டி குலுங்கிய போதெலாம் வனிதையின்
தண்டரள மாலையும் தனங்களும் குழைகளும்
குலுங்கி யசைந்து கொண்டே யிருந்தன.
நலங்கிளர் அலங்காரத் தலையையந் நங்கை
வெளியில் நீட்டி வேடிக்கை பார்த்தாள் ;
நெளியும் அவள்தலை நெஞ்சில் பதிந்தது.
உள்ளே வந்ததும் உண்மைப் புலவனும்
கள்ளனும் வந்தகக் கவியொன்று கேட்டான்.
உளமதில் பதிந்த ஒப்பில் காட்சியை
வளமுறப் பாடலாய் வடித்தேன் அஃதிதோ ;

"சற்றே பருத்த தனமே குலுங்கத் தரளவடம்
துற்றே யசையக் குழையூ சலாடத் துவர்கொள் செவ்வாய்
நற்றேன் ஒழுக நடன சிங்கார நடையழகின்
பொற்றேர் இருக்கத் தலையலங் காரம் புறப்பட்டதே".

என்று பாடி ஈந்தேன் அவற்கு.
நன்றெனா வாங்கி நடையைக் கட்டினன்.
அரசர் செய்த சூழ்ச்சி அஃதெனா
உரைசெய வேண்டுமோ வுண்மை யிஃதே.
ஈங்கியான் எழுதி ஈந்த நூறும்
பாங்குறு பாடலின் ஓலையைக் கிழித்தனர் ;
ஆங்கியான் எழுதிய அகப்பா அமைந்த
ஓலைகுப் பையாவால் உவந்து பெற்றே
ஈற்றுப் பாடலாய் இணைத்துத் தந்தனர் :
மாற்றிதில் வேறிலை மறுக்கவொண் ணாதே.
இன்னும் நற்சான் றியம்புவன் கேண்மின் :
நுண்ணிதின் இயற்றிய நூறும் பாடலில்
என்னுடை வேண்டுகோள் இருக்கக் காணலாம்.
தொண்ணூற் றொன்பது தொடர்பா டல்களில்

130. வந்தகக்கவி - வந்து அகக் கவி; அகக் கவி – அகப் பொருள் கருத்து அமைந்த பாடல். 143. ஆங்கு - அங்கே என் வீட்டில்; அகப்பா - சிற்றின்பப் பாடல்.

அன்னையின் மிகுபுகழ் அறிவித் திறுதியில்,
உலகில் ஒருதாய் ஒருமக வினையே
இலகிட வளர்க்க இயலா நிலையில்
மும்மை யுலகையும் முன்னின்று காக்கும்
அம்மை யின்புகழ் அனைத்தும் என்றால்
செம்மையாய்ச் செப்ப வொல்லா தென்பதும்
கொற்றவன் என்னைக் கொல்லுவ தாகத்
தெற்றென விளங்கத் தெரிவித் திருப்பதால்
வெம்மைச் சாவினை விலக்கி யருள்கென
அம்மையை வேண்டி யிருப்பதும் அமைய
நூறும் பாடலை நுண்ணிதின் இயற்றினேன்.
ஈறும் அதனையின் றொருமுறை இசைப்பேன்.
"இம்மையில் ஒருதாய் ஈன்றவோர் மகவையும்
புரத்தல் எளிதிலை
மும்மை யுலகையும் முகிழ்வித் தோம்பும்
முழுமுதல் தேவிநீ!
அம்மையே உன்றன் அருள்முழு தியம்பும்
ஆற்றல் இல்லேன்
வெம்மைச் சாவினை விலக்கிக் காக்கென
வேண்டு வேனே".
என்னுமிப் பாடலில் ஈங்குள சூழ்நிலை
துன்னி யிருப்பது தோன்றக் காணலாம்;
இன்னுமோர் குறிப்பும் இயம்ப உள்ளது!
தொண்ணூற் றென்பது தூயபாக் களொடு
நூறும் பாவிற்கும் வரிசையெண் நூறு
மாறு தமைக்க மறக்க வில்லையான்.
'சற்றே பருத்த தனமே' எனும்பா
உற்றவிவ் வோலையில் நூறெனும் எண்ணுரு
இல்லை யென்பதை இயம்பக் கடவன்;

---

153. இலகிட - விளக்கமுற. *158.* தெற்றென - தெளிவாக. *162.* ஈறும் அதனை - கடைசிப் பாட்டாகிய அதனை. *168.* துன்னி - பொருந்தி. *174.* எண்ணுரு - எண்வடிவம்.

நல்லவிச் செய்தி நவிலுஞ் சான்று;
ஆகவே என்பா அகப்பொருள் இலாதது.
சாகவே என்னிடம் செய்யும் சழக்கு
கொடுமை யானது; கூர்த்த மதியினீர்
நடுவு நிலையொடு நவில்வீர் தீர்ப்பென
அம்பி வேண்ட, அரசன் கூறுவான்:
வெம்பி யின்னும் வேண்டுதல் வேண்டா.
விரைந்து முடிக்கும் வேணவா உந்த
வரைந்தெண் குறிக்க மறந்தனை நீயே.
ஒருபொய் மறைக்க ஒன்பது பொய்யா?
ஒருதலை கொலையொறுப் புனக்குக் கொடுத்தது;
தீர்ப்பு வேறிலை முடிந்த தீர்ப்பிது;
ஆர்ப்பரித் தழுவதால் ஆவதொன் றில்லை
என்று கூற, கம்பர் இறைஞ்சி,
கொலையொறுப் பென்பது கொடிய தீர்ப்பு;
இலையென் மகன்பால் எந்தக் குற்றமும்;
இருப்பினும் அவனை எனக்காப் பொறுத்து
வெறுப்பிலா தனுப்புக என்று வேண்ட,
கற்பழிக்க முயன்ற காமக் குற்றமோ
வெற்பினும் பெரியது வெறுப்புக் குரியது;
எனவே என்னை ஏய்க்கச் சிறிதும்
கனவுகா ணுதீர் கண்டிப் பேயிது
என்ற மன்னனை எதிர்த்திலர் கம்பர்.
மன்றம் அமர்ந்த மாபெரும் புலவராம்
ஒட்டக் கூத்தர் வேந்தற் குரைப்பார்:
மட்டிலாப் புகழுடை மன்ன ரேறே!
அம்பி காபதி அருந்தமிழ்ப் புலவன்
நம்பலாம் அவனால் நற்றமிழ் வளர்வதை;

---

178. சழக்கு-கீழான தன்மை. 183. வேணவா - பேராசை; உந்த-செலுத்த. 184. வரைந்து எண் குறிக்க - எழுதி எண் குறிப்பிட. 186. ஒருதலை - உறுதி. 192. எனக்கா - எனக்காக. 195. வெற்பினும் - மலையினும். 199. மன்றம் - அரச சபை. 201. ஏறே - ஆண் சிங்கமே.

மறுத்தல் இயலா மாண்பிதே யவனைப்
பொறுத்துக் கொள்ளப் போது மானது;
வீணாய்க் கொல்லலை விடுத்தே யவற்கு
வாணாள் ஒறுப்பு வழங்கலாம் என்றார்.
அரசன் நின்றே ஆசாற் றெழுது,
பரசும் பெரியரே! பாவலன் என்பதால்
குற்ற வாளியைக் கொல்லாது விடுதல்
உற்றவென் னாட்சிக் குகந்த தன்றால்;
இந்தத் தீர்ப்பே இறுதி யானது;
வந்தெனை மறிக்கா தீரென வணங்கி,
அங்கே யாரவர் அடைக இங்கெனத்
தங்களை வலரைத் தட்டி யழைத்தே,
அம்பிகா பதியை விலங்கிட் டழைத்துச்
சென்றே அடைப்பீர் சிறையில் இன்னே!
என்றானை யிட்டே இயம்புவான் மேலும்:
நாளை மறுநாட்கு மறுநாள் பிற்பகல்
வேளை தவறாதிவ் வெறியனை வல்லே
தூக்கி விட்டுத் தொலைக்கெனச் சொல்லி
நோக்கா தியாரையும் நொடியில் சென்றனனே.

---

204. மாண்பிதே - மாண்பு இதே - அம்பிகாபதி சபையில் உண்மையை நிலைநாட்டிய பெருமையாகிய இதுவே. (அல்லது) தமிழ் வளர்க்கும் புலவன் அவன் என்னும் சிறப்பாகிய இதுவே. 207. வாணாள் ஒறுப்பு - ஆயுள் தண்டனை. 209. பரசும் - போற்றற் குரிய. 215. தட்டி - கையால் தட்டி அல்லது வட்ட மணிக் கலத்தைக் குறுந்தடியால் தட்டி. 217. இன்னே - இப்போதே. 220. வல்லே - விரைந்து. 221. தொலைக்கென - தொலைக்க என - தொலைப்பீராக என்று.

27. அம்பிகாபதி சிறையில் அடைபட்ட காதை

சிறைதனில் அடைபட்ட செந்தமிழ்ப் புலவன்
சிறையினை யிழந்த சிறுபுள் ளானான்;
அடிமை யென்பதன் அடாத பொருளும்
உரிமை யென்பதன் உயரிய விலையும்
பட்டறிந் துணர்ந்தான்; பறவையைக் கூண்டுள்
விட்டடைப் போரை வெறுக்க லானான்;
படிமிசை யுள்ள பல்வகை உயிர்களின்
அடிமைத் தளையும் அகல வேண்டுமிக்
கொடுமைக் கிடமே கொடுத்தலா காதெனும்
விடுதலை யுணர்வால் வீறொடு பொருதுயிர்
விடுதலைச் செய்த வெற்றி மறவரின்
அடிதமைத் தன்னுடை அகத்தே தொழுதான்;
தன்னலத் திற்காத் தரையில் உள்ள
பன்னலம் ஈயும் பல்வகை விலங்கினைப்
பழக்கி வருத்திப் பயன்படுத் திக்கொளும்
சழக்கரைச் சொற்களால் சாடினான் கடிந்து.
மக்களை மக்களே மாடுபோல் வருத்திக்
கக்கக் குருதி கடுமையாய் நடத்தும்
ஆண்டான் அடிமை என்னும் அடாமுறை
வேண்டா வென்று வெறுக்க லானான்;
சிறையினில் புக்குச் செல்லல் உற்றதன்

---

2. சிறைதனை - இறக்கையினை; சிறு புள் - சிறிய பறவை. 5. பட்டறிந்து - அனுபவித்து. 7. படி - பூவுலகு. 8. தளை - விலங்கு, 10. பொருது - போரிட்டு. 11. விடுதலைச் செய்த - விட்ட. 13. தரை - பூவுலகு. 14. பன்னலம் - பலநன்மைகள். 16. சழக்கர் - கீழ் மக்கள். 18. குருதி - இரத்தம். 21. செல்லல் - துன்பம்.

குறையினை எண்ணியும் கூறுவான் அகத்துள் :
''பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்''என் பதுகுறள் ;
''யாதும் ஊரே யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா''
என்பது புறநானூற் றிரும்பெருங் கருத்திதை
மன்பதை யுணரின் மாசே யிராது.
யானை கொழுத்தால் யாங்குள மண்ணையும்
தானே வாரித் தலையில் போட்டிடும் !
யானே காரணம் எனது நிலைக்கே.
'குறிக்குத் தகுந்த இராமசரம்' என்பர் ;
முறைக்கு மீறி முயலல் தக்கதோ ?
மன்னன் மகளை மணக்க விரும்பியது
என்னுடைக் குற்றமே இதிலையம் இல்லை.
எந்தை எனக்கெடுத் தியம்பினர் அறிவுரை
சிந்தையில் அதனைச் சிறிதும் கொண்டிலேன் ;
குதிரையைத் திருடிக் கொண்டு போனபின்
கொட்டகை பூட்டும் கொள்கைய ரானேன்.
பட்டாலே தெரியும் பகுத்துண ரார்க்கே.
உலக மாந்தர்க் குரைப்பேன் ஒன்று :
கலகம் விளைக்கும் காதல் வேண்டா.
மேனி யழகின் மினுக்கால் அழிந்து
போனவர் அளவைப் புகல வொண் ணுது.
கொள்ளுங் காதல் கொள்ளுமா வெற்றியென
உள்ளிப் பார்க்க வேண்டும் உணர்ந்தே.
காதல் கொள்ளினும் கடிமணம் புரியுமுன்
தீதுடல் உறவு கொள்ளுதல் தெரிவீர்.
உடலுறவு கொண்டபின் உறவினர் மணத்தைத்

---

24. கருமம் - செயல்; கட்டளைக் கல் - உரைகல். 28. மன்பதை - மனித சமுதாயம்; மாசு - குற்றம். 32. குறி - இலக்கு. 46. உள்ளி - எண்ணி. 47. கடிமணம் - திருமணம். 48. உடல் உறவு - புணர்ச்சி.

திடமுடன் மறுத்தால் தெரிவு வேறிலை.
காதலில் தோல்வி கண்டு வீணே
சாதல் என்பது சரியிலை சிறிதும் ;
ஒருவரைப் புணர்ந்தபின் உவரை விட்டுமற்
றொருவரைப் புணர்தல் ஒழுங்கிலை ; இதனால்,
ஆடு மாடு போன்றவ ராவோம்
பீடுறு மக்களாய்ப் பீத்தவொண் ணாதே.
பொருந்தாக் காதல் பொல்லாங் குடைத்து
பொருந்திய மணமே புகழ்ச்சிக் குரியது.
என்றே பற்பல எண்ணி யிருக்கையில்,
கம்பரும் அன்னை கற்பகத் தாச்சியும்
வெம்பி வெதும்பும் தங்கை காவிரியும்
அரசன் இசைவொடு அம்பியைக் காணக்
கரிசனத் தோடு காவற் சிறைக்குள்
புக்கனர் அம்பியைக் கண்டு பொருமினர்
புக்கது விண்ணில் பொருமிய பேரொலி.
உம்பர் உலகுக் கியாமும் வருவமெனக்
கம்பர் அம்பியைக் கட்டிப் புரண்டார்.
கற்பகத் தாச்சி கண்ணீர் சொரிந்து
அற்புறு மகனே அம்பிகா பதியே
கண்ணே மணியே கன்னலே கண்டே !
என்னே எமைவிட் டேகுகின் றனையோ !
உன்னைப் பிரிந்திவ் வுலகில் வாழ்வனோ ?
என்றே அரற்றி எண்ணிலா முத்தம்
முகத்தில் மட்டுமா உடம்பு முழுதும்
உகுத்தகண் ணீரொடு ஒருங்கே பொழிந்தாள்.
தங்கை காவிரியோ தமையனை நோக்கி

50. தெரிவு - தேர்ந்து செய்யும் செயல். 53. உவரை - அன்னவரை. 56. பீத்தல் - பெருமை பேசுதல். 63. கரிசனம் - அன்பு. 64. பொருமினர் - தேம்பி யழுதனர். 66. உம்பர் உலகு - தேவர் உலகம். 69. அற்பு - அன்பு. 73. அரற்றி - அழுது. 75. உகுத்த - சிந்திய; ஒருங்கே - ஒரு சேர.

இங்குறேன் அண்ணா ! இனியவவ் வுலகுக்
குன்றொடு யானும் உறுவே னென்று
பன்னிப் பலப்பல கைகளைப் பற்றிக்
கண்ணில் ஒத்திக் கொண்டு கரைந்தாள்.
அம்பி காபதி அழுகையை நிறுத்தி
அவர்தமக் காறுதல் அறைய லானான் :
வெந்துளம் நொந்து வீரிட் டழூஉம்
தந்தையே தாயே தங்கையே அழாஅதீர்.
கோடி யாண்டாய்க் கூடினோ மல்லோம் ;
கூடிநாம் நால்வரும் குலவிய காலம்
அண்மையில் ஒருசில ஆண்டு களேயாம்.
உண்மையில் வாணாள் ஒருசிறி தேயாம்.
நூறாண்டு முன்னைய இடமெது நுதலுமின்
நூறாண்டு பின்னைய இடமெது நுவலுமின் ;
இடையில் கூடினோம் இடையில் பிரிகிறோம்
நடைமுறை யேயிது நமக்காப் புதிதில்லை.
உயிரழி வதில்லை உடம்பே யழியும்
உயிரது பிரிதல் என்பதே உண்மை.
உயிரிலா உடம்பை ஒருவரும் விரும்பார்.
உறக்கம் என்பது உயிரிலாமை போன்றதே.
உறக்கம் சிறிய இறப்பெனா உரைக்கலாம்.
உறக்கமே உண்மையில் சிற்றின்ப மாகும் ;
இறப்பே நனிபே ரின்ப மாகும்.
பிறப்ப துண்டேல் இறப்பும் உண்டு ;
பிறப்பெடுத் ததுமே இறப்புந் தொடங்கும்.
பிறப்பும் இறப்பும் ஒருநா ணயத்தின்
இருபக் கங்கள் போன்றவை எனலாம்.
அன்னையும் தங்கையும் அறியா திருக்கலாம்;
அப்பா அறியாத வல்ல இவையெலாம் ;

---

80. **கரைந்தாள்** - அழுதாள். 83. **வீரிடல்** - அழும் ஒலிக் குறிப்பு. 89. **நுதலுமின்** - கருதிப் பாருங்கள். 90. **நுவலுமின்** - சொல்லுங்கள்.

ஒப்பா திவற்றை மறுக்கவொண் ணாது.
நங்குடும் பத்தில் நான்முதற் பிரிந்து
அங்குச் செல்கிறேன் அழுகை யிதற்கேன் ?
இங்கிருந்த பின்னே எல்லாரும் வருவீர்.
பயிற்சிக்கு முன்யான் ஏற்கப் படுகிறேன்
பயிற்சி முடித்துநீர் பாரிற் பிரிவீர்.
அயலூ ருக்கோ அயல்நாட் டிற்கோ
உயச்சென் றியானும் உள்ளதாக் கொண்மின் ;
துளக்க மிலாதுநம் தூயவீ டேகுமின் ;
விளக்கம் இதற்குமேல் வேண்டா என்றே
அம்பி காபதி, அழாதழு துரைத்தான்.
காவலர் வந்து கம்பருள் ளிட்ட
மூவர் தம்மையும் முயன்று வெளியேற்றினர்.
திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே
அரும்புகண் ணீருடன் அனைவரும் பிரிந்தனர்.
கூடினோர் பிரிந்தால் கூற வேண்டுமோ!
நாடி தளர்ந்தே நடந்தனர் மனைக்கே.
அரசன் அன்றிரா அரசு வேலையாய்ப்
பரசுதஞ் சைக்குப் பயண மானதால்
அன்னையின் துணையோ டமரா வதியும்
துன்னினள் சிறையை ; தொழுதாள் அம்பியை.
அன்னை வெளியே அமர்ந்திருந் ததனுல்
கன்னி தன்னுறு காதல னுடனே
என்னவும் பேச இயல்வதா யிற்று.
காதலர் இருவரும் கட்டித் தழுவினர்
சாதலை எண்ணிச் சாய்த்தனர் கண்ணீர்.

---

111. பாரிற் - பாரின் - பூவுலகிலிருந்து. 113. உய - பிழைப்பதற்காக, வாழ்க்கை நடத்துவதற்காக. 114. துளக்கம் - நடுக்கம், அதிர்ச்சி. 124. பரசு தஞ்சை - போற்றுதற்கு உரிய தஞ்சாவூர். 131. சாய்த்தனர் - (குடத்திலிருந்து சாய்ப்பது போல்) கிறையக் கொட்டினர்.

(அம்பிகாபதி)

என்னுடை முடிவிற் கினைகிறே னல்லேன் !
உன்னுடை வாழ்வை உருக்குலைத் ததற்கே
பதைக்கிறேன் என்றே அம்பி பகர்ந்திட,

(அமராவதி)

வதைக்கச் செய்துமை மன்னர் வருத்த
யானே காரணம் யாது செய்வேன் !
தேனு யினித்த அன்று தெரிகிலேன்
வீணு யும்முயிர் விலகச் செய்துளேன்
பொறுத்தருள் கென்று பூவை பணிய,

(அம்பிகாபதி)

மறுத்து மொழிவான் அம்பி மற்றே !
நின்னை முதலில் நிலாவிற் கண்டே
என்னை மறந்தது என்குற் றமேயாம் ;
எனது செய்கையா லன்றோ இங்ஙனம்
நினதுள் ளத்தில் நிகழ்ந்தது மாற்றம் ;
உனது குற்றம் ஒன்று மில்லை
எனது குற்றமே எல்லாம் என்ன,

(அமராவதி)

'அமரு' அதனை அறுத்து மொழிவாள் !
அமர ஆயின், அரிவையர் ஆண்களை
மயக்கும் அளவில் மண்ணுதல் தகாது.
வியக்க மங்கையர் வேடிக்கைப் பொருளோ !

---

132. இனைகிறேன் - வருந்துகிறேன் 137. அன்று - அன்னைக்கு, அந்த நாள். 139. பூவை - அமராவதி. 141. நிலாவில் - நிலவொளியில். 144. மாற்றம் - (காதல் கொண்ட மாறுதல்). 147. அறுத்து - வெட்டி, மறுத்து. 148. அமர - அமைதியாக. 149. மண்ணுதல் - அலங்காரம் செய்தல்.

வண்ண மலரென வடிவம் புனைவதால்
கண்ணுறும் ஆடவர் கலக்கங் கொள்வர்.
விலைமகள் போல வீட்டுப் பெண்கள்
அலைதல் தகுமோ ஆண்களை மயக்கி!
மலர்கள் வண்டினால் மகரந்தச் சேர்க்கையாம்
கலவி பெற்றுக் கருக்கொடு காய்க்கவவ்
வண்டினை மயக்க வண்ணமும் மணமும்
கொண்டிருப் பதுபோல் குடும்பப் பெண்களும்
தகட்டுச் சேலையும் தங்க நகைகளும்
பகட்டா யணிவது பண்பா காதே.
அங்ஙன மேயான் அணிந்து மயக்க
இங்ஙனம் நீவிர் ஏமாந்து போனீர்;
எனவே குற்றம் என்பால் உள்ளது;
நினைவில் இதனை நிறுத்துக உலகம்.
உம்மைப் பிரிந்திங் கொருபோ துமிரேன்
உம்மை யுலகையான் உறுவ துறுதி;
என்றெலாம் பிதற்றி ஏந்திழை நைந்தாள்.
வெளியி லிருந்தவள் அன்னை விளிக்க,
ஒளிவு மறைவின்றி உள்ளந் திறந்தே
இருவரும் பேசினர்; இறுதி முத்தம்
ஒருவருக் கொருவர் ஓயாது பொழிந்தனர்.
பாழ்ங்கிணற் றுள்ளே பாம்புகட் கிடையே
வீழ்ந்த முடவன் மேனின்று வீழ்ந்து
சொட்டுந் தேனைச் சுவைத்தல் போன்றது
கட்டி முத்தமிக் காதலர் கொடுப்பதே!

---

156. கருக் கொடு - கரு (கர்ப்பம்) கொண்டு. 159. தகட்டுச் சேலை - (பொன்னிழை நெய்த) தகடு போன்ற சேலை. 166. உம்மை யுலகு - அந்த உலகம், மேலுலகம். 167. ஏந்திழை - அமராவதி. 168. வெளியிலிருந்தவள் - வெளியிலிருந்து அவளுடைய; விளிக்க - அழைக்க. 173. மேனின்று - மேலே நீட்டிக்கொண்டிருக்கும் மரக் கொம்பில் உள்ள தேனடையிலிருந்து.

காவலர் வரவே கதவைப் பூட்ட
ஆவதா குகவென் றலறிப் பிரிந்தனரே.
"முற்பகல் செய்வது பிற்பகல் உறும்" எனும்
பொற்புறு முதுமொழி பொய்யா கும்மோ!

---

176. காவலர் - காவலாளிகள். *179.* பொற்புறு - அழகான, நேர்த்தியான.

28. கடவுள் வழிபாட்டுக் காதை

அம்பிகா பதியைத் தூக்கிலிட் டழிக்க
இன்னும் இருநாள் இருக்கும் நிலையில்,
கடவுள் பூசனை கனிவொடு புரிந்து
விடவேண்டு மம்பியை வெஞ்சிறையி னின்றென
வேந்தனைக் கண்டு வேண்டும் நோக்கொடு
தீந்தமிழ்க் கம்பர் திட்டந் தீட்டி
மலர்வழி பாடு மாண்புறத் தொடங்கினர்;
மலர்நூற் றெட்டு மணத்தொடு கொணர்ந்தார்;
நூற்றெட்டுக் கடவுட் டிருப்பெயர் நுவன்று
நூற்றெட்டு மலர்தமை நோன்புகொள் உளத்தொடு
ஈசன் மேனியில் இட்டுப் பெரிய
பூசனை யன்பொடு புரிய லானார்:

(நூற்றெட்டுத் திருப்பெயர்கள்)

உலகம் யாவையும் உளவாக்கினோய் போற்றி
உலகம் யாவும் நிலைநிறுத்துவோய் போற்றி
ஆதி பகவனும் ஐயா போற்றி
வாலறி வுடைய வள்ளால் போற்றி
மலர்மிசை ஏகிய மாண்பினோய் போற்றி
வேண்டுதல் வேண்டாமை யிலாதோய் போற்றி
இருவினை சேரா இறைவா போற்றி
பொறிவாயில் ஐந்தவித்த புலவனே போற்றி
தனக்குவமை யில்லாத் தண்ணியோய் போற்றி
அறவாழி அந்தண அண்ணலே போற்றி

---

3. பூசனை - வழிபாடு. 7. மலர் வழிபாடு - அர்ச்சனை. 9. நூற்றெட்டுக் கடவுள் திருப்பெயர் - கடவுளின் நூற்றெட்டுத் திருப் பெயர்கள்; நுவன்று - சொல்லி. 16. வால் அறிவு - தூய அறிவு.

எண்குணம் இயைந்த ஏந்தலே போற்றி
எங்கும் மிளிர்ந்தே இருப்போய் போற்றி
எல்லாம் செய்ய வல்லோய் போற்றி
யாதும் அறிந்த எந்தாய் போற்றி
தன்வயம் உடைய தகையோய் போற்றி
தூய்மை நிறைந்த தொல்லோய் போற்றி
இயற்கை உணர்வுடை எம்பிரான் போற்றி
முற்றும் உணர்ந்த முதல்வா போற்றி
இயல்பாய்க் கட்டுகள் இரிந்தோய் போற்றி
பேரரு ளுடைய பெரியோய் போற்றி
முடிவில் ஆற்றல் உடையோய் போற்றி
வரம்பில் இன்பம் வாய்த்தோய் போற்றி
உயர்வற உயர்நலம் உடையோய் போற்றி
மயர்வற மதிநலம் அருள்வோய் போற்றி
பிறப்பினை அறுத்திடும் பெரியோய் போற்றி
ஆராத இன்பம் அருள்வோய் போற்றி
எண்ணிறந் தெல்லை யிலாதோய் போற்றி
இல்லா இடமே இல்லோய் போற்றி
தாயிற் சிறந்த தன்மையோய் வணக்கம்
மாசற்ற ஒளியாய் மலர்ந்தோய் வணக்கம்
அன்பருக் கன்பனாய் அருளுவோய் வணக்கம்
நோக்கரிய நுண்ணிய பொருளே வணக்கம்
போக்கும் வரவும் இலாதோய் வணக்கம்
அன்னையிற் சிறந்த அமிழ்தமே வணக்கம்
அனைத்து நுகர்வாயும் அமைந்தோய் வணக்கம்
பல்லுயி ரெல்லாம் பயின்றோய் வணக்கம்
வல்லிருள் ஓட்ட வல்லோய் வணக்கம்
அன்பு வலையில் அகப்படுவோய் வணக்கம்

---

24. மிளிர்ந்து - ஒளி வீசி. 31. கட்டுகள் - பாசங்கள்; இரிந்தோய் - நீங்கினவனே. 34. வரம்பு இல் - அளவில்லாத. 35. உயர்வு அற - தன்னினும் உயர்வு இல்லாதபடி. 36. மயர்வு - மயக்கம். 49. வல்லிருள் - அறியாமை, அஞ்ஞானம்.

சொற்பதங் கடந்த தொல்லோய் வணக்கம்
அணுவினுள் அணுவாய் அமைந்தோய் வணக்கம்
இயம்பரும் பெருமை இயைந்தோய் வணக்கம்
அரியதில் அரிய அருமையோய் வணக்கம்
மருவியெப் பொருளும் வளர்ப்போய் வணக்கம்
நூலுணர் வுணரா நுண்ணியோய் வணக்கம்
மேலொடு கீழாய் விரிந்தோய் வணக்கம்
தோற்றமும் முடிவும் இல்லோய் வணக்கம்
அச்சந் தவிர்க்கும் அருளோய் வணக்கம்
தொல்லைத் துன்பம் துடைப்போய் வணக்கம்
எய்ப்பினில் வைப்பாய் இருப்போய் வணக்கம்
பூவில் மணம்போல் பொலிவோய் வணக்கம்
விறகில் தீபோல் விளங்குவோய் வணக்கம்
பாலில் நெய்போல் படுவோய் வணக்கம்
ஒப்பிலா மணிபோல் உயர்ந்தோய் வணக்கம்.
மணியில் ஒளியாய் மன்னியோய் வணக்கம்
மாசில் வீணைநேர் மாண்பினோய் வணக்கம்
மாலை மதிய மானோய் வணக்கம்
வீசு தென்றலாய் விளங்குவோய் வணக்கம்
வீங்கிள வேனிலாய் விளைந்தோய் வணக்கம்
வண்டறை பொய்கையாய் வயங்குவோய் வணக்கம்
அம்மை யப்பனாய் அமைந்தோய் போற்றி
அன்பில் விளைந்த அமிழ்தே போற்றி
என்பெலாம் உருக்கும் இன்பமே போற்றி
வானாகி நின்ற வலிமையோய் போற்றி
காலா யிருக்குங் கடவுளே போற்றி
நெருப்பா யுள்ள நெடியோய் போற்றி

---

61. எய்ப்பினில் வைப்பு - இளைத்த ஏழ்மையில் கிடைத்த புதையல். 64. படுவோய் - தோன்றுவோய் 65. மணி - ஒன்பான் மணிகள், இரத்தினங்கள். 71. வண்டு அறை - வண்டு ஒலிக்கின்ற. 74. என்பு - எலும்பு. 76. கால் - காற்று.

நீரா யெங்கும் நிறைந்தோய் போற்றி
மண்ணு யமைந்த மன்னு போற்றி
ஊனுய் உயிராய் உற்ருேய் போற்றி
விரிமலர்க் காவாய் விளங்குவோய் போற்றி
பயன்மர மாகிப் பழுத்தோய் போற்றி
மருந்தாம் மரமாய் மன்னினேய் போற்றி
உதவிடும் ஊருணி போன்ருேய் போற்றி
கோடையைத் தணிக்கும் குளிர்மரமே போற்றி
வெய்யிலில் நிழலாய் விளங்குவோய் போற்றி
உயிருக் குயிராய் உற்றுளோய் போற்றி
உள்ளத் துள்ளே ஒளித்துளோய் போற்றி
முத்தொழில் புரியும் முதல்வா போற்றி
குறிஞ்சி மலையாய்க் குலவுவோய் வணக்கம்
முல்லைக் காடாய் முகிழ்த்தோய் வணக்கம்
மருத நாடாய் மன்னியோய் வணக்கம்
நெய்தல் நிலமாய் நிலவுவோய் வணக்கம்
கருமுகில் மழையாங் கடவுளே வணக்கம்
பரவையாங் கடலாய்ப் பரந்தோய் வணக்கம்
உருவாய் அருவாய் உற்ருேய் வணக்கம்
பெறலரும் பெரும்பெயர் பெற்ருேய் வணக்கம்
மணந்தரு மலராய் மலர்ந்தோய் வணக்கம்
இனிக்குங் கனியாய் இலங்குவோய் வணக்கம்
பருகும் நீராய்ப் பயப்போய் வணக்கம்
உண்ணும் உணவாய் உற்ருேய் வணக்கம்
வறுமை போக்கும் வளமே வணக்கம்
வினையினை விலக்கும் விறலோய் வணக்கம்
பகையினைத் தவிர்க்கும் பண்பினேய் வணக்கம்
அனைத்து நன்மையும் ஆனேய் வணக்கம்
ஒழுங்கிலா தோரை ஒறுப்போய் வணக்கம்

---

95. பரவை - பரந்த நீர், கடல். 96. அரு - உருவம் இல்லாதது. 99. இலங்குவோய் - விளங்குவோய். 100. பயப்போய் - பயன் அளிப்போய்.

அரும்பெரு மொழிகளாய் அமைந்தோய் வணக்கம்
நயந்தரு நூல்களாய் நயப்போய் வணக்கம்
பயன்தரும் பாக்களாய்ப் பயப்போய் வணக்கம்
ஏழிசை தாமாய் இலங்குவோய் வணக்கம்
இசையின் பயனும் இயைந்தோய் வணக்கம்
ஒளிதரு ஞாயிறும் ஒளிர்வோய் போற்றி
ஞாயிற் றொளியாய் நண்ணியோய் போற்றி
நிலவின் ஒளியாய் நிகழ்வோய் போற்றி
விண்மீன் தாமாய் விளங்குவோய் போற்றி
அளவில் கோள்களாய் ஆனோய் போற்றி
இயற்கைப் பொருளாய் இருப்போய் போற்றி
செயற்கை கடந்த செல்வா போற்றி
காலங் கடந்த கடவுளே போற்றி
புலவரைப் புரக்கும் புலவனே போற்றி
என்று கம்பர் இறைஞ்ச, அவர்தம்
உற்றார் உறவினர் உளத்தில் அன்புறு
சுற்றத்துப் பெண்டிர் அனைவருஞ் சூழ்ந்தே
முற்றத்தில் கூடி முன்நிலா ஒளியில்,
அம்பிகா பதியின் ஆருயிர் காக்கென
அம்பிகை முதலாம் அரிய கடவுளரை
வேண்ட லாயினர் விழா நன் கெடுத்தே.
ஈண்டவ் விழாச்சிறப் பியம்புதல் எளிதோ ?
மங்கையர் எழுவர் மாறிப் பாடி
அங்கை கோத்தே ஆடுவர் குரவை :

---

116. கோள்கள் - கிரகங்கள். 124. முன் நிலா ஒளி - இரவின் முன் நேரத்தில் உள்ள நிலா வெளிச்சம். 127. விழா எடுத்தல் - விழா செய்தல். 129. எழுவர் - ஏழு பேர் ; மாறிப்பாடுதல் - ஒருவர் ஒன்று சொல்ல, அதை ஒட்டியோ வெட்டியோ இன்னொருவர் இன்னொன்று சொல்ல, இவ்வாறு மாறி மாறிப் பாடுதல். 130. அங்கை - அழகிய கை; குரவை - பெண்கள் எழுவர் கைகோத்து, வந்த சொற்களே வரும்படி மாறி மாறிப் பாடி ஆடும் ஒருவகைக் கூத்து.

(அம்பிகைமீது பாடல்)

(1) “குமரியொடு இமயம்வரை கொல்படையொடு சென்றிட்டே
விமலையெனும் கயற்கண்ணி வென்றனள்காண்
என் தோழீ.
வென்றிடினே கைலைமலை வீற்றுளசிவன் எதிரினிலே
குன்றியதேன் குழைந்திட்டதேன் கூறிடுவாய்
பதில்தோழீ.
குன்றிடினும் குழைந்திடினும் கோன்மதுரை நகரினிலே
வென்றவட்கே முன்பூசனை விளங்கிடுவாய்
இதைத் தோழீ.
முன்பூசனை பெறுகின்ற முதல்வியவள் அம்பிகாபதி
தன்பூசனை பெற்றிடவும் தக்கவவற் காத்திடுக!”

(2) “உலகின்முதற் பெண்ணரசி ஒருத்தியைநீ அறிவாயோ?
உலகின்முதற் பெண்ணரசாய் உற்றவளை உரைத்திடுநீ.
அங்கயற்கண் ணம்மைமுதல் அரசியென்றே
அறிந்திடுவாய்.
அங்கயற்கண் ணம்மைதனை அரியசிவன் மணந்ததனுல்
அவர்தமையே அரசரென அறைந்திடலே முறையாகும்.
அவர்தமையே மணந்திடினும் ஆண்டவளங் கயற்கணியே.
உலகாண்ட அங்கயற்கண் உமையம்மை தண்ணருளால்
அலகில்புகழ்த் தமிழ்ப்புலவன் அம்பிகாபதி யைக்காக்க!”

(3) “கச்சியிலே காமாட்சி கனிவொடுமுப் பத்திரண்டு
மெச்சுமறம் செய்ததனை மேதினியோர் அறியாரோ?
மெச்சுமறம் செய்திடினும் மேதினியோர் சிவன்றனையே
நச்சுகின்றூர் முதல்வரென நானியம்ப வேண்டுமோடீ?
இத்தரையோர் சிவன்றனையே ஏற்றிடினும் முன்னவராய்ச்

---

136. வென்றவட்கே - வென்ற அங்கயற்கண்ணிக்கே; மதுரையில் சிவனுக்கு முன் அம்பிகைக்கே முதல் பூசனை நடைபெறும். 137 - 138. அம்பிகாபதிதன் - அம்பிகாபதியினுடைய; தக்கவவற் - தக்க அவன் - தகுந்த அவனுடைய. 147. கச்சி - காஞ்சிபுரம். 148. மெச்சு மறம் - மெச்சும் அறம்; மேதினியோர் - உலகத்தார்.

சத்தியின்றிச் சிவனென்றும் சாதிக்க முடியுமோடீ.
சத்தியவள் அருள்செய்து சால்புடனே வண்ணத்தமிழ்ப்
பித்துறுவம் பிகாபதியின் பீடுயிரைக் காத்திடுக !''

(சிவன் மீது பாடல்)

(4)"மதுரையிலே சிவபெருமான் மன்னுதமிழ்ப்
புலவரொடு மன்னி நீடு
மதுரத்தமிழ் ஆய்ந்திட்ட மாண்பினை நீ
அறிவையோடீ மானே நன்கு!
புலவருடன் ஆய்ந்தவர் புல்வர் மணி
கீரனைப் பொருஅது கொடுமை
நிலவுநெற்றிக் கண்ணினால் நெரித்திட்ட
தேனடிசொல் நீலி அதனை!
நெரித் திடினும் கீரனை, நீடுதமிழ்ப்
புலவராய நீள்புகழ் பெற்ற
அரியவிடைக் காடர்பின் அகன்றதை நீ
அறியாயோ அறைவாய் தோழீ !
தமிழ்வல்லிடைக் காடர்பின் தணந்துசென்ற
எம்பெருமான் தன்மை மேய
தமிழ்வல்லம் பிகாபதிமேல் தண்ணருள்செய்
துயிர்மீட்டுத் தருக நமக்கே''.

(5) "மறைக்காட்டில் கதவு மூட மறைஞான
சம்பந்தர் மாண்பு சான்ற
மறைத்தமிழ்பா டியவுடனே மன்னுசிவன்
மூடிட்டார் மாதே கதவை.
சொல்வேந்தர் திறக்கும்படி சொல்லிப்பா
பலபாடியும் சுருக்க அருளி

155. நீடு - நீண்ட காலம். 157. கீரனை - நக்கீரனை; பொரு அது - பொறுக்காமல். 160. அரிய இடைக்காடர்; இடைக்காடர் ஒரு புலவர். 161. தணந்து சென்ற - பிரிந்து சென்ற; மேய - பொருந்திய; பாண்டியன் புறக்கணித்ததால் வெளியேறிய இடைக்காடருடன் சிவனும் சென்றாராம். 164. மறைத் தமிழ் - வேதமாம் தமிழ், தேவாரம். 165. சொல்வேந்தர் - திருநாவுக்கரசர்; சுருக்க ; விரைந்து.

நல்வகையாய்த் திறக்காமல் நாழிதாழ்த்திய
தேனேநீ நவில்வாய் தோழீ !
நாழிதாழ்த்தக் காரணந்தான் நாவரசர்
பாக்கள்தமை நயந்து சால
ஆழியினும் அளவற்ற ஆர்வங்கொண்
டிருந்தமையே அன்றோ தோழீ ?
நாவரசர் பாக்களிலே நயங்கண்ட
சிவக்கடவுள் நந்தம் தமிழ்வல்
பாவரசன் அம்பிகாபதி பாச்சுவைக்கவும்
திருவருட்கண் பார்த்துக் காக்கவே !

(6) "உலகிலுள உயிர்களெலாம் உய்யும்படி
நம்பெருமான் உள்ளத் துள்ளே
அலகிலருள் கொண்டிட்டே ஆட்கொள்வ
தறிவாயோ அரிவை நீயே ?
அலகிலருள் செலுத்துபவர் அடியவரின்
அருமகவை அரிந்தே உண்ணும்
கறியாக்கிப் படைக்கும்படி கடாவியதின்
காரணத்தைக் கழறு வாயோ ?
கறியாக்கிப் படைத்தபின்னர்க் கனிவுடனே
அம் மகவைக் காக்கும் நோக்கால்
மறியுயிர்தந் தெழச்செய்த மாண்பினை நீ
அறியாயோ மகளே யின்னும் !
அம்மகவைக் காத்திட்ட அருட் சிவன்றான்
அம்புலவர் கம்பர் பெருமான்
தம்மகவாம் அம்பிகாபதி தன்னுடைநல்
லுயிர்மீட்டுத் தருக நமக்கே !"

---

168. ஆழியினும் - கடலினும். திருமறைக்காட்டிலே குறிப்பிட்ட ஓர் அறையின் கதவைத் திறக்கும்படி நாவுக்கரசர் பாடியதாகவும், மூடும்படி ஞானசம்பந்தர் பாடியதாகவும் புராண வரலாறு கூறும். 173. அடியவர் - சிறுத் தொண்டர். அரு மகவு - அரிய பிள்ளை; சிறுத் தொண்டரின் மகன். 174. படைக்கும்படி - பரிமாறும்படி. 176. மகளே - பெண்ணே. 177-178. கம்பர் பெருமான் தம் - கம்பர் பெருமானுடைய.

(திருமால்மீது)

(7) “காத்தற் கடவுளாம் மாலின் கழல்கள் தம்மைப் புகழ்ந்தே
ஏத்தி வணங்கிக் குரவை இனிதா டிடுவோம் பாடி !
காத்தற் கடவு ளென்னின் கருதரு இராம னாகிப்
பிறந்த பிறவியில் தன்னையே பேண வருந்திய தேனோ ?
பிறந்த பிறவிக் கேற்பப் பெருமான் கோலம் பூண்டு
சிறந்த நடிப்பை யுலகில் செய்திட் டாரென் றறிவாய் !
காக்குங் கடவு ளாய கரிய செம்மல் கனிவொடு
காக்குமா றம்பிகா பதியைக் கழலிணை போற்று வோமே!”

(8) “கண்ணனாய்ப் பிறப்பெ டுத்துக் காசினி புரந்த கரிய
வண்ணன் திருவடி மலரை வழுத்துதல் நங்கட னாமே !
காக்கும் மாலாங் கடவுள் கண்ணனாம் பிறவி தன்னில்
போர்க்குத் துணையாய் நின்ற பொல்லாங் கேனோ புகல்வாய் !
போரில் அர்ச்சுனன் றனக்குப் பொருவில் துணையாய் நின்றது
பாரில் அனைவரும் ஒன்றெனும் பான்மையைப் பரப்பு தற்கே.
கண்ணனாய்ப் பிறந்திட் டிந்தக் காசினி காத்த செம்மல்
திண்ணன் அம்பிகா பதியைத் தீமை யின்றிக் காக்கவே!”

(9)“கச்சியில் கோயில் கொண்டு காசினி புரக்கு மாலை
நச்சி யிணையடி பரவி நாந்தொழு திடுவம் நாளும்.
கச்சியில் கணிகண் ணன்றனைக் காவலன் பல்லவன் கடிந்தே
அச்சுறுத் தியகற் றியதேன் அறைக அதுமுறை யாமோ?

---

179. மால் - திருமால். *182.* பேண - காத்துக் கொள்ள. *187.* காசினி - உலகம். *190.* போர்க்குத் துணையாய் நிற்றல் - பாரதப் போரில் பாண்டவர்க்குத் துணையாயிருந்தது; போரில் அர்ச்சுனனுக்குத் துணையாய் நின்று தேரோட்டியது. *191-192.* எல்லா உயிர்களும் ஒத்தவையே; இன்னார் இனியார் என்று பாராமல் போர் புரி என்று கண்ணன் அர்ச்சுனனுக்கு அறிவுறுத்தினார். *196.* நச்சி - விரும்பி. *197.* கணி கண்ணன் - திருமழிசையாழ்வாரின் அடியவன்; காவலன் பல்லவன் - பல்லவ மன்னன்.

அகன்றிட, மழிசை யாழ்வார் அவன்பின் சென்றிடத் திருமால்
அகன்ற ஆழ்வார் பின்னே அகன்ற தறியா யோநீ!
வெம்பிய ஆழ்வார் அருளும் வியன்தமி ழின்பின் சென்றேன்
அம்பிகா பதியின் தமிழ்க்கா அவனையும் அருளொடு காக்கவே''

(முருகன்மீது)

(10) ''அரக்கரை வென்றே நல்ல
அன்பரைக் காத்த முருகா!
உருக்கமாய்ப் பாடிய கீரனின்
உயிரினைப் புரந்த புலவா!
மறுக்கமில் காதல் வள்ளியை
மணந்த காதல் மன்ஞ!
இரக்கமில் சோழனைத் திருத்தி
இனியவம் பிகாபதி காக்கவே!

என்று பாடியும் குரவை யாடியும்
மன்ருடி வேண்டினர் மன்னு கடவுளரை;
பல்வகை உண்டி படையல் செய்து
நல்வகை விழாவினை நடாத்தினர் சிறப்பொடு.
மன்னனைக் காண மறுநாட் காலை
பொன்னனை புலவர் கம்பர் போந்தார்;

---

199. அகன்றிட - கணிகண்ணன் கச்சியை விட்டு நீங்க; அவன் பின்-கணிகண்ணன் பின்னே; பல்லவ மன்னனால் விரட்டப் பட்டு அகன்ற கணிகண்ணன் பின்னே சென்ற திருமழிசை யாழ்வாரின் பின்னே திருமாலும் சென்றுவிட்டாராம். 201 வெம்பிய - கணிகண்ணனின் பிரிவால் வெம்பி வருந்திய. 204. திரு முருகாற்றுப்படை பாடிய நக்கீரன்; கொல்ல வந்த பூதத்தைக் கொன்று கீரனை முருகன் காத்தாராம். 205. மறுக்கம் - மாறுபாடு; காதல் மன்னனாகிய முருகன் காதல் கலைஞனாகிய அம்பிகாபதியைக் காத்தல் கடமையாகும். 212. பொன்னனை-பொன் அனை - பொன் போன்ற.

அம்பிகா பதியின் ஆருயிர் அருள்கென
வெம்பிப் புலம்பி வேண்டினார் வேந்தனை.

(அரசன்)

ஒருவரை யிப்போ துயிர்பிழைக் கச்செயின்
வருவர் மற்ற குற்றவா ளிகளும் ;
அனைவர்க்கும் விடுதலை அளிக்கின், பின்னர்
எனையெவர் மதிப்பர் ? என்னும் தீர்ப்பு ?
என்று மன்னன் எடுத்து மொழிய,

(கம்பர்)

அன்னை தமிழ்க்கா அரும்பணி புரியும்
என்னுறு மகனுக் கீயின் விடுதலை
மன்ன ரைத்தமிழ் மா நிலம் போற்றும்
என்று கூறி இறைஞ்சிக் கம்பர்
மகனது உயிர்க்கா மன்றாடிப் பார்த்தார்.
குகனே வரினும் கூறியது மாற்றேன்
என்றுரைத்து வேந்தன் எழுந்துசென் றனனே.
"முழவதிர் வேந்தனின் அரண்மனை முட்டை
உழவரின் அம்மியை உடைக்கும்" எனுமொழி
உண்மை யாமென உணர்ந்த கம்பர்
நன்மை பெறுஅமே நடைதளர்ந் தேகினரே.

---

225. குகன்-முருகன். 227. முழவதிர் - முழவு அதிர் - முழவு என்னும் இயம் (வாத்தியம்) முழங்குகின்ற. 227. முட்டை - கோழி முட்டை.

29. அனைவரும் ஆற்றாது அரற்றிய காதை

குறித்தநே ரத்தில் கொலைபுரி மாக்கள்
வருத்தி யம்பியை வலிந்து கொடுபோய்
தூக்கி லிட்டே உயிரது தொலைந்த
யாக்கையைக் கொணர்ந்தே யாருங் காணும்
மேடை யொன்றில் மெல்ல வைத்தனர்.
ஓடை நீர்போல் உகுத்துக் கண்ணீர்
மக்கள் பல்லோர் மாய்ந்த புலவனை
ஒக்க விளித்த ஓதை பரந்த
ஓத ஒலியை ஒடுங்கச் செய்தது.
வீத லுற்ற புலவனின் வியன்புகழ்
வாழ்க வாழ்கென வாழ்த்திய வாயால்
வீழ்க வேந்தனின் விழுப்புகழ் என்றனர்.

(அன்னையின் அரற்றல்)

அங்கே அம்பியின் அன்னை வந்தே
எங்கே எங்கே என்மகன் எங்கே?
இங்கே உளானோ இங்கே உளானோ?
இங்கே உளானெனின் இனிய பார்வை
எங்கே எங்கே? என்றன் கண்மணி
இங்கே உளானெனின் இனிய சொற்கள்
எங்கே எங்கே? என்மகன் அம்பி
இங்கே உளானெனின் இன்புன் முறுவல்
எங்கே எங்கே? என்மகன் ஒருகால்
இறந்துவிட் டனனோ? எம்மை விட்டுத்

---

2. கொடுபோய் - கொண்டுபோய். 4. யாக்கை - உடம்பு. 8. ஒக்க விளித்த ஓதை - ஒரு சேர அழைத்துக் கூவிய ஒலி. 9. ஓதம் - கடல். 10. வீதல் - இறத்தல். 12. விழுப்புகழ் - சிறந்த புகழ்.

துறந்துவிட் டனனோ? தூதூ இல்லை.
என்மகற் கிறப்போ இப்போழ் தில்லை
என்மகற் ககவை இருநூ றாகும்.
கண்மணி படுத்துக் கண்ணுறங் குகின்றான்;
உண்மை யிஃதே! உறங்கி விழித்தபின்
என்னைக் காண்பான் என்னொடு பேசுவான்
என்னைத் தழுவுவான் இன்முத் தீவான்.
எழுந்திரு மகனே இன்னுமா உறக்கம்?
கழிந்தது பொழுது கடிமனை செல்வோம்.
அடுத்து வரைந்த அரிய நூலினை
முடித்திட வேண்டுமே! முன்னம் புறப்படு.
படுத்தே யிருப்பது பழுதாம் உடற்கே.
இதோ கண்களில் ஈக்கள் மொய்த்திடும்
இதோ செவிகளை எறும்புகள் கடித்திடும்
கண்வலிக் காதோ? காதுநோ காதோ?
அன்னையான் இன்னே அவற்றை அகற்றுவேன்;
கையை நீட்டுக காலை உயர்த்துக;
பைய எழுந்து பார்க்க என்னை.
ஐயோ கண்மணி அப்படியே கிடக்கிறான்.
மெய்யோ காண்பதென் மெய்யது நடுங்குமால்;
பொய்யோ ஒருகால்; புரிய வில்லையே!
கொய்ய உயிரைக் கொல்லும் ஒறுப்பு
வஞ்ச மன்னன் வழங்கினான் என்பதை
நெஞ்சமிப் போதே நினைக்கத் தொடங்குமால்.
மாண்டவென் மகனே மாண்டனை யோநீ
ஈண்டினி எனக்கே என்ன வேலை?
நினது பேரிடத்தை நிரப்புவோர் யாரோ?

---

25. என்மகற்கு அகவை - என் மகனுக்கு வயது. 29. இன்முத்து - இனிய முத்தம். 32. அடுத்து வரைந்த - தொடர்ந்து எழுதிய. 38. இன்னே - இப்போதே. 40. பார்க்க - பார்ப்பாயாக. 47. மாண்ட என் மகனே - மாட்சிமை (சிறப்பு) உடைய என் மகனே; மாண்டனையோ - இறந்தனையோ.

எனதுயி ரினையும் இட்டுச் சென்றிடு;
என்றெலாம் புலம்பி இனிய அன்னை
தன்னுடல் முழுதும் தனயன் உடல்மேல்
இன்னு தெறிந்தே இழந்தனள் நினைவு.

(கம்பரின் கலக்கம்)

கண்டிக் காட்சியைக் கம்பர் கலக்கங்
கொண்டு குழறிக் கூறுவார் பற்பல:
நல்ல காரியஞ் செய்தனை நம்பீ!
பொல்லா உலகில் போதும் வாழ்வென
நில்லா திங்கே நீயகன் றனையோ?

''தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலின் இனிதாயிற் காண்பம் அகல்வானத்து
உம்பர் உறைவார் பதி''யெனும் நாலடிச்

செம்பா உண்மையைச் சிறக்க ஆய
அம்பிகா பதியே அருந்தமிழ்ப் புலவனே
உம்பர் உலகுக் கேகியுள் ளாயோ? அல்லது,
இம்பர் மட்டில் இன்றமிழ் பரப்புதல்
போதா தென்று புலவர் உலக

---

52. தனயன் – மகன். 53. இன்னுது - துன்புற்று. 55. குழறி - குளறி, குழம்பி. 56. நம்பீ - அம்பிகாபதியே. 59. தவல் அரும் - குற்றம் இல்லாத. 60 இகல் - பகை; எஃகு - புலமை வன்மை; குழீஇ - கூடி. 61. நகலின் - மகிழ்வதைக் காட்டிலும். 62. உம்பர் உறைவார் பதி - தேவர் உலகம்; நாலடி - நாலடியார் என்னும் நூல். இந்த நாலடியார்ப் பாடலின் கருத்தாவது: உயர்ந்த புலவர்கள் பலர் கூடித் தமிழ் ஆராய்ந்து பெறும் மகிழ்ச்சியைக் காட்டிலும் சிறந்த மகிழ்ச்சி தேவர் உலகத்தில் கிடைக்குமாயின் அங்குச் செல்லலாம்; அங்கே கிடைப்பது அரிது. 63. செம்பா - செம்மையான நாலடியார்ப் பாடல். 66. இம்பர் மட்டில் - இவ்வுலகில் மட்டும். 67. புலவர் உலகம் – தேவர் உலகம்.

மீதே சென்று மேன்மை யுறவே
அங்குளோர் ஆர அருந்தி மகிழப்
பொங்கு தமிழ்த்தேன் பொழிகின் றனையோ?
தமிழின் வளர்ச்சியைத் தடைசெயுங் கடையரும்
தமிழ்கற் ருேரைத் தாழ்த்தும் மடையரும்
இங்குள் ளமையை இம்மியும் பொருஅமே
அங்குசென் றனையோ? அறியேன் மகனே! அல்லது,

''வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே!
வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே!
ஏழ்கடல் வைப்பினும் தன்மணம் வீசி
இசைகொண்டு வாழிய வே!
வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழி யே!
வானம் அறிந்தது அனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழிய வே!''

என்றெலாம் பின்வரும் புலவர்கள் இசைக்கலாம்;
நன்றவர் மொழியென நானிலம் நம்ப
இன்றே வானில் இன்றமிழ் பரப்பச்
சென்றஃ தளக்கச் செய்கின் றனையோ!
உம்பர் இருந்துநீ உயர்தமிழ் வளர்த்திடு
இம்பர் இருந்தியான் இன்றமிழ் வளர்ப்பேன்; நிற்க,
புலிபசித் திடினே புல்தின் ஞமே
வலியுறு களிற்றையே வவ்வ முயலும்;
பன்னலக் கன்னியர் பல்லோர் இருக்க
மன்னன் மகளையே மணக்க விரும்பினை!

---

69. ஆர - நிறைய. 75-84. சுப்பிரமணிய பாரதியார் பாடல்; இவ்வாறு பின்வருவோர் பாடலாமென முன் கூட்டியே கம்பர் கற்பனை செய்துள்ளதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ளது 88. சென்றஃது - சென்று அஃது - சென்று அத்தமிழ்மொழி. 92. களிறு - யானை. 93. பன்னலம் - பல நன்மைகள், பல சிறப்புகள்.

"உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து"எனும் தகுதி
கொள்ளும் நினது குறிக்கோள் தோற்பினும்
உனது மறச்செயல் உலக வரலாற்றில்
இனிது தக்க இடம்பெறல் உறுதி;
என்றுகண் ணீரொடு இனைந்த கம்பர்
நின்றதன் கவலையை நீஇட விடாஅமே
திசைமாற்றம் செய்து திருப்பினர் உளத்தை.
இசைமிகு புலவர்க் கிஃதே யழகாம்.
வெளியில் காட்டா விடினும் வேதனை
உளியெனப் பொளிந்திடும் உளத்தை உள்ளே!

"அன்பிற்கும் உண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கணீர் பூசல் தரும்"எனல் பொய்யோ !

(புலவர்களின் பொருமல்)

உயிரது பிரிந்த அம்பியின் உடலை
உயரிய புலவோர் உற்றுச் சூழ்ந்தனர்;
பொருமித் தேம்பிப் புலம்பிய பேரொலி
உருமென, விண்மீன் உதிர எழுந்தது.
பலரும் பற்பல பகர லாயினர்:
மலரும் போழ்தே மாய்ந்த புலவனே!
யாமெதைக் கேட்பினும் எழுதித் தருவாய்.
ஆமெனும் முன்னே அலகில் பாக்கள்
தந்தையைப் போலவே தந்திடும் புலமை
மைந்துடை அறிஞனே மாண்டு போதியோ!

95—96 : குறள். *100.* இனைந்த - வருந்திய. *101.* நீ இட விடாஅமே - நீள விடாமல் (உயிரள பெடைகள்). *106.* அடைக்குந் தாழ் - அடைக்கும் தாழ்ப்பாள்; ஆர்வலர் - அன்புடையவர். *107* புன்கணீர் - சிறு கண்ணீரே; பூசல் தரும் - ஆரவாரப்படுத்தி அறிவித்துவிடும் (குறள்). *111.* உருமென - இடியென; விண்மீன் - நட்சத்திரங்கள். *116—117.* புலமை மைந்து - புலமையாற்றல்.

முதுக்குறை வுடைய முன்னணிப் பாவல!
முதுமையை வென்று முன்னே சென்றனை.
செம்பொருள் செறிதமிழ்ச் சீர்நலம் நுகர
உம்பர் உலகினர் உனையழைத் தனரோ!
வளருந் தமிழை வளர்க்க நினைப்போல்
தளரா துஞற்றும் தகைமையர் பின்பியார்?
வெண்கலக் கடையில் வேழம் புக்காற்போல்
நண்பமை புலவர் நடுவணீ போந்து
முரிப்பில் நகைச்சுவை மொழிகளை யுதிர்த்துச்
சிரிப்பு வெடியினைச் சிதற வெடிப்பாய்.
உன்னோ டிருப்பின் ஓடுங் காலம்
கொன்னே யாகாது குறியொடு கழியும்.
என்னே! பிரிந்துனை எவ்வா றிருப்போம்!
இனியவுன் தந்தைக் கீமச் செய்கை
தனியொரு மகனீ தகவாய்ச் செயாது,
நுந்தை யுனக்கு நொந்து செயும்படி
இந்த உலகினின் றேகினை முறையோ?
என்றுனைக் காண்போம் எங்குனைக் காண்போம்!
என்று பலரும் இனைந்து பொருமினர்.
உலைவில் புகழுறு அம்பியின் உடல்மேல்
மலைபோல் மலரணி மாலைகள் குவிந்தன.
மறக்க வொண்ணா மாண்புறு முறையில்
சிறக்க ஈமச் செய்கை முடிந்தபின்,

(காவிரியின் நிலை)

கம்பரும் கற்பகத் தாச்சியும் கவன்று
நம்மரு மகளிவண் நண்ணா ததேனோ?

118. முதுக் குறைவு - சிறு பருவத்திலேயே மிக்க அறிவுடைமை. 123. உஞற்றுதல் - முயன்று உழைத்தல் 126. முரிப்புஇல் - கெடுதியற்ற 129. கொன்னே - வீணே; குறி - குறிக்கோள். 131. ஈமச் செய்கை - இடுகாட்டில் செய்யும் இறுதிக் கருமம். 133. நுந்தை - நும் தந்தை. 137. உலைவு இல் - அழிவில்லாத. 141. கவன்று - கவலையுற்று.

முன்னே செல்கிறேம் கதவுகள் மூடிப்
பின்னே வருகெனப் பேதைக் குரைத்தோம்;
என்னே காவிரி இவண்வராக் காரணம்
என்பதை யறிய ஏகினர் விரைந்து;
துன்புறூஉம் உளத்தொடு துருவினர் வீட்டை;
காவிரி எங்கணும் காண வில்லை.
பூவிரி கருங்குழல் போன தெங்கென
அயர்ந்துநாற் காலியில் அமரச் செல்கையில்
உயர்நிலைப் பலகைமேல் ஒருமடல் கிடந்தது.
மடலைக் கம்பர் மயக்கொடு படித்தார்;
மடலில் காவிரி வரைந்தது வருக:
அன்னையே! அப்பா! அண்ணனைக் காண
முன்னுல் செல்கிறேம் கதவுகள் மூடிப்
பின்னுல் வருகெனப் பிரிந்துமுன் சென்றனிர்.
சென்ற பின்பியான் செல்ல லோடு
கன்றிக் கதவினை மூடிய காலை,
முந்தொரு நாளிவண் முறையிலா முறையில்
வந்தவிள வரசனும் வம்புடைக் கிள்ளி
வந்தெனை வலிந்து வம்புக் கிழுத்தான்.
அவற்குத் துணையாய் ஆட்கள் இருவர்
அவனொடு வந்தே அருகில் நின்றனர்.
கிள்ளி யென்னைக் கிள்ளு கீரையாய்
உள்ளி அவன்றன் உணர்ச்சிக் கிரையாய்
ஆக்க முயன்றுன்; அவன்றனை வெளியே
போக்க முயன்றியான் புகல லானேன்:
புறுவைக் காக்கப் பொன்னுர் உடலை
மறுஅது தந்த மன்னன் சிபியும்,

---

144. பேதை - பெண். 149 கருங்குழல் - காவிரி. 151. உயர்நிலைப் பலகை - மேசை; மடல் - கடிதம். 157. செல்லல் - துன்பம். 158 கன்றி - நைந்து. 159. முறையிலா முறையில் - ஒழுங்கில்லா வகையில். 105. உள்ளி - நினைத்து. 139. மறுஅது - மறுக்காது (அளபெடை).

கன்றினைக் கொன்ற காதல் மகனைக்
கொன்ற வத்தேர்க் காலால் கொன்ற
மன்னு புகழுறு மனுநீதி சோழனும்,
இளையன் என்றே எள்ளிய முதியோர்
உளைதல் இன்றி உவப்போ டேற்க
முதியவர் கோலம் முயன்று பூண்டு
பதியத் தீர்ப்பு பகர்ந்த மன்னனும்
கரிகால் வளவனும் தோன்றிக் காத்த
மரபில் வந்தும் மாண்பே யிலாதோய்!
குடிகளைக் காக்கும் கொற்றவன் மகனிப்
படிசெயல் முறையோ? பழியேற் காமே
அகன்றிடு இவணின்று, அரண்மனை ஏகெனப்
புகன்றதைக் கேளாதவன் புகல லானான் :
என்னுறு தங்கை அமரா வதிபால்
நின்னுறு தமையன் நினைத்ததை முடித்ததால்
நின்னையான் விரும்புதல் நீதி யாமென
என்னை நெருங்கி இழுக்க லானான்;
பின்னையான் கூக்குரல் எழுப்பவே, பேதை
மட்டி யாட்களின் துணைகொடென் வாயைக்
கெட்டியா யடைத்துக் கீழே கிடத்தினான் ;
நினைத்ததை முடித்தான் நெஞ்சம் இலாதான்.
எனையவன் விட்டே எழுந்து செல்கையில்
இங்கே யுள்ள இருப்புத் தடிகொடு
மங்கா தந்த மடையன் தலையைத்
தாக்குத் தாக்கெனத் தாக்கினேன் ; தலையைத்
தூக்க வியலாது, குருதி தோயத்

---

170. காதல் - அன்பு. *174.* உளைதல் - வருந்துதல். *179-180.* மகனிப்படி - மகன் இப்படி - மகன் இவ்விதமாய். *182.* கேளாதவன் - கேளாது அவன். *184.* தமையன் - அண்ணன். *187.* பேதை - அறிவிலி *188.* மட்டியாட்கள் - மதியிலா ஆட்கள் ; துணைகொடு - துணை கொண்டு. *192.* இருப்புத் தடிகொடு - இரும்புத் தடி கொண்டு. *193.* மங்காது - பலம் பின்னிடாமல்.

தள்ளாடி நடந்து தெருவில் தரையிலே
நில்லாது வீழ்ந்து நெட்டுடல் கிடத்திச்
சொல்லாது மாண்டான் சோழன் மகனே.
கற்பழிக்கப் பட்ட களங்கம் பொறுதியான்
பொற்புறு தமையனைப் பார்க்கவும் போகாது
தற்கொலை செய்து கொள்ளத் தலைப்பட்டேன்.
நீவிர் அறியவிந் நீண்ட மடலை
வேவ நெஞ்சம் விரைந்து வரைந்தேன்.
அதிர வேண்டா ! அறையில் கம்பங்
குதிருக் குள்ளே குதித்து மாள்வேன்.
மடலைப் படித்து மயங்கா துள்ளம்
திடமாய்க் குதிர்க்குள் தேடி என்னை
எடுத்தே எல்லா ஈமச் செயல்களும்
முடித்து நீவிர் முன்போல் வாழ்வீர்''
என்றம் மடலில் எழுதி யிருந்ததைக்
குன்றி யுள்ளங் கொதித்துப் படித்தபின்,
குதிரி லிருந்து குமரியை எடுத்தே
எதிரில் கிடத்தி இயம்பொணாத் துயரொடும்
அலைகடல் துரும்பென ஆலைவாய்க் கரும்பென
நிலைகொள் ளாத நெஞ்சொடுங் கலங்கிப்
பெற்றோ ரிருவரும் பேதுற லாயினர் ;
பற்றோடு வளர்த்த பாவை காவிரிமேல்
வீழ்ந்து புரண்டு விம்மி யழுதனர் ;
ஆழ்ந்த துயரதை ஆற்றாது மயங்கினர் ;
''பட்ட காலே பட்டிடும் ; அதுபோல்
கெட்ட குடியே கெட்டிடும்'' எனும்படி
இடிமேல் இடிவிழ ஏங்கிப் புலம்பினர்.

204-205. கம்பங் குதிர் - கம்பு கொட்டியுள்ள தொம்பை ; கம்புக் குதிருக்குள் குதித்தால், புதை மண்ணில் புதைவதுபோல, உடம்பு குதிரின் அடிக்குப் போய்விடும் ; தலைக்கு மேல் கம்பு இருப்பதால் மூச்சு விட முடியாமல் இறப்பு நேரும். *216.* பேதுறல் - மயங்குதல். *217.* பாவை - பெண்.

குடியைச் சேர்ந்தோர் குறுகி யங்கே
ஆறுதல் கூறி அவர்தமைத் தேற்றி
வீறுடன் மாண்ட வெற்றி மகளை
அடக்கம் செய்தனர். அதன்பின் கம்பர்
கடக்க எண்ணினர் காவிரி நாட்டை;
மக்களை யிழந்த மயக்கம் தாளாமே
தக்கதம் மனையாள் கற்பகத் தாச்சியொடு
புக்கனர் பாண்டியப் புலத்தி னுள்ளே.
கம்பர் மகளைக் கற்பழித் திட்ட
வம்புச் செயலால் வறிதே மாண்ட
தம்மகன் கிள்ளியின் தகையிலாச் செயற்கு
விம்மிச் சோழனும் தேவியும் வியர்த்து
வருந்தி யரற்றினர்; வருவரோ மாண்டவர்?
திருந்துமோ உலகமித் தீமைகள் கண்டுமே?
அனைவரும் ஆற்று தரற்றிய கொடுமையை
நினைவுறுங் காலை நெஞ்சம் நடுங்குமே!

---

223. குடியைச் சேர்ந்தோர் - குடும்பத்தைச் சார்ந்த உற்றார் உறவினர் நண்பர்கள். 225. வீறுடன் - வீரப் பெருமையுடன். 227. காவிரி நாடு - சோழ நாடு. 230. பாண்டியப்புலம் - பாண்டிய நாடு. 235. அரற்றினர் - அழுதனர்.

30. அமராவதி மணந்த அருமைக் காதை

வேந்தன் தன்னுறு தேவிபால் விளம்புவான் :
மாந்தர் நந்தம் மகளைப் பற்றி
ஒழுக்க மிலாளென உணரு முன்னர்
இழுக்கம் வராமே இனிய திருமணம்
சிம்மன் றனக்குச் செய்து கொடுப்போம் ;
சிம்மன் அமருவைத் திருமணங் கொள்ளக்
கருதுவ துண்மை காடவனும் ஒப்புவான் ;
தருதிநின் ஒப்புதல் தகவா யென்ன,

(சோழமா தேவி)

நம்மகன் கிள்ளி நமனுல கெய்தினன்
விம்மிநாம் வருந்துமிவ் வேளை தன்னில்
மகளது மணமோ மகிழ்ச்சிக் குரியதா ?
துகளது நம்பால் தோன்றுவ துறுதி ;
சின்னாள் சென்றபின் செய்யலாம் திருமணம்
என்னவே தேவி எடுத்து மொழிய,

(சோழன்)

மகனை யிழந்த மாத்துயர் மறக்கவே
மகளின் திருமணம் மாணத் தொடங்குவல்.
இப்போது சொல்லுன் இதயக் கருத்தைத்
தப்பாது கேட்பல் என்றவன் சாற்ற,

---

1. தேவி - மனைவியாகிய சோழ மாதேவி. 4. இழுக்கம் - இழிவு. 6. அமரு - அமராவதி. 12. துகள் அது ; துகள் - குற்றம் ; அது - பகுதிப் பொருள் விகுதி. 16. மாண - சிறப்புற. 18. கேட்பல் - கேட்பேன் ; என்றவன் - என்று அவன் ; சாற்ற - சொல்ல.

(தேவி)

உமது விருப்பமே உற்றவென் விருப்பமும்
அமருவை அவனுக் களித்தல் நன்றே!
எதற்கும் மகளையும் இசைவுகேட் டிடுவோம்
என்றவள் கூற, இருவரும் சென்று
கன்றும் மகளைக் கண்டு பேசுவர்:
முன்னர் அன்னை மொழிவாள் அவளிடம்;
உன்னைச் சிம்மனுக் குவப்போ டளிக்க
எண்ணுவம் உன்றன் இசைவு யாதென,
மன்னனும் அங்ஙனே மகளை வினவ,
பெற்றோர் விருப்பமே பேதையென் விருப்பமும்
மற்றுநான் இதற்கு மறுப்பு சொல்லேன்
என்றவள் மொழிய, இருவரும் மகளை
நன்றென வாழ்த்தி நனிமகிழ்ந் தனரே.
அரசன் அதன்பின் அமைச்சனை அழைத்தே
உரைசெய்வான்: அமைச்சரே உந்தம் மகற்கே
என்மகள் அமரா வதியை இனிதே
நன்மணம் முடிக்க நான்நனி விரும்புவல்;
உமது கருத்து யாதென உரைக்கென,
உமது கருத்தை ஒருபோதும் மறேஎன்
என்மகன் சிம்மனும் இதைவிரும் புகின்றான்
நன்மணம் ஒல்லே நடைபெறச் செய்குவம்
என்றவன் ஒப்புதல் ஈந்திட, வேந்தனால்
திருமண நாளும் தெரிவிக்கப் பட்டது;
அரண்மனை மணவிழா அணிபெற லானது.
பழமது நழுவிப் பாலில் விழுந்ததாய்
விழவொடு காடவன் வீடு சென்று
இந்தநற் செய்தியை இயம்பினான் மகற்கு;

---

23. **கன்றுதல்** - வருந்துதல், மனம் புழுங்குதல், 28. **பேதை** - பெண். 37. **மறேஎன்** - மறுக்கேன் (அளபெடை). 44. **விழவு** - மகிழ்ச்சி.

மைந்தன் இதுசெவி மடுத்து மகிழ்ந்தான்.
வாழைக்கனி வேண்டா வன்குரங் குண்டோ?
ஏழையின் இல்லம் இறையவன் திருமகள்
வாழ வருவது வரவேற்கப் பாலதே
என்றவன் குடும்பம் இன்பில் திளைத்தது.
அரசன் ஆணையால் ஆனைமீ தமர்ந்து
முரசறை மாந்தர் மூதூர் மக்கட்குத்
திருமணச் செய்தியைத் தெரிவித்து வந்தனர்.
வியனகர் மக்கள் விழாவணி பூண்டு
மயன்செய் ததுபோல் மாடம் புதுக்கினர்;
தெருக்கள் கூடும் திறந்த வெளியெலாம்
பரக்க முத்துப் பந்தர் வேய்ந்தனர்;
மலர்வகைத் தோரணம் மாவிலைத் தோரணம்
தெங்கின் ஓலை திகழும் தோரணம்
முத்துத் தோரணம் முதலிய பல்வகைத்
தோரணம் எங்கும் தொங்க விட்டனர்.
மணவிழாப் பந்தரிலும் மாடத் தூண்களிலும்
வாழை கமுகொடு வண்பனை தெங்கின்
காய்க்குலை பலவும் கட்டத் தொங்கின.
வஞ்சியும் கரும்பும் வாழை மரங்களும்
மஞ்சளும் தூண்களில் மன்னக் கட்டினர்.
பல்வகை மலர்க்கொடி பரவித் தோன்றின.
நல்லவர் வந்திடின் நல்வர வென்றும்
அல்லவர் வந்திடின் அகல்வீ ரென்றும்
சொல்லுதல் போலச் சுழன்றிடும் காற்றில்
முன்னும் பின்னுமாய் முறையே ஆடி
வண்ணத் துணிக்கொடி வகைபல பறந்தன.

---

48. இறையவன் - மன்னன். 50. இன்பு - இன்பம். 55. மயன் - தெய்வத் தச்சன், தெய்வ வினைஞன். 57. பந்தர் வேய்ந்தனர் - பந்தல் போட்டனர். 59. தெங்கு - தென்னை. 62. மாடம் - மாளிகை. 63. கமுகு - பாக்கு. 65. வஞ்சி - ஒருவகை மலர்க் கொடி. 69. அல்லவர் - நல்லவர் அல்லாதவர்; அகல்வீர் - நீங்குவீராக.

அரண்மனை முன்னரும் அருநகர் மறுகிலும்
மன்றங் களிலும் மாடங் களிலும்
பழமணல் நீக்கிப் புதுமணல் பரப்பினர்.
மங்கலக் குடங்கள் மணிபொதி விளக்குகள்
எங்கணும் காண இலங்கின பொலிவொடு.
வண்ண ஓவியம் வகைவகைச் சிலைகள்
விண்ணுலகை மிஞ்சும் விதத்தில் விளங்கின.
வாயில் களிலுள வளைவில் ஆன்றோர்
வாய்மொழி பற்பல வரையப்பட் டிருந்தன.
மங்கல இயங்களின் மாப்பே ரொலிகள்
எங்கணுங் கேட்க இசைக்கப் பெற்றன.
பொங்கும் மங்கலம் எங்கும் பொலிந்தது.
திருக்கோ யில்கள் திருவிழாக் கொண்டன
கல்விக் கூடங்கள் கலைவிழா நடத்தின
அறிஞர் மன்றங்கள் ஆய்வுரை வழங்கின
வறிஞர்க் குணவு வழங்கப் பட்டது.
சிறையுளோர் விடுதலை செய்யப் பட்டனர்
மறைவல் லோர்திரு முறைகள் ஓதினர்
கலைவல் லோர்பல் கலைவிருந் தளித்தனர்
அலையலையாய் மக்கள் அயலூர் களினின்று
தலைநகர்க்கு வந்து தங்க லாயினர்.
மைந்தரும் மகளிரும் மகிழ்ந்து சுற்றினர்;
மைந்துடை மாந்தர் மாவிளை யாட்டுகள்
மகிழ்வொடு நடத்தினர்; மக்கள் அனைவரும்
புகழுறு வண்ண உடையொடு பொலிந்தனர்.
ஒன்பான் மணிகளால் ஒளிபெறக் குயிற்றிய
இன்ப அணிகளை ஏற்பப் பூண்டு
மங்கையர் பலரும் மகிழ்ச்சியில் திளைத்தனர்.

---

73. மறுகு - தெரு. 76. பொதி - பதித்த. 82. இயங்கள் - வாத்தியங்கள். 95. மைந்துடை மாந்தர் - வலிமையுடைய விளையாட்டு வீரர்கள். 98. ஒன்பான் மணிகள் - நவ ரத்தினங்கள்; குயிற்றிய - செய்த.

மங்கல மணவிழா நடைபெறும் மணியை
எங்குள் ளோரும் எதிர்பார்த் திருந்தனர்.
இங்ஙனம் எங்கும் இன்பச் சூழ்நிலை
தங்கி யிருந்ததைத் தகுதிசால் புலவரும்
எங்ஙனம் முற்றும் இயம்ப வியலும்!

(சிம்மனின் செயல் நிலைமை)

மணமகன் சிம்மனோ மகிழ்ச்சியில் ஆழ்ந்தான்
மணமுடன் தன்னை மண்ணிக் கொண்டான்
ஒருதோள் இருதோள் ஆகவும் உற்ற
இருதோள் நான்குதோ ளாகவும் எண்ணினன்;
அற்பனுக் குவாழ்வு வந்திடின் அணுவும்
வெய்யிலோ மழையோ விரவா மையிருள்
இரவி லுங்குடை ஏந்திச் செலல்போல்
இனிப்புகள் பலப்பல எல்லார் தமக்கும்
முனைப்புடன் மணத்தின் முன்னே வழங்கினன்;
வெடிகள் பலவகை வெடிக்கச் செய்தான்
முடிபுனை விழாப்போல் முன்னிக் கூறுவான் :
அரச குமாரி என்பதற் காக
அமரா வதியையான் அடைய விரும்பிலேன்;
மற்றவள் இணையிலா வனப்பு மன்னப்
பெற்றுள் ளமைக்கே பெரிதும் விரும்பினேன்.
அமரா வதிநேர் அழகி யொருத்தியை
அமர மணக்கும் ஆண்மக னேதன்
பிறவிப் பயனைப் பெற்றவன்; மற்றவர்
பிறவி யெடுத்தது பெருஞ்சுமை; கிடக்க.

---

101. நடைபெறும் மணி - நடைபெறும் மணிநேரம். 107. மணமுடன் - நறுமணப் பொருள்களுடன்; மண்ணிக் கொண்டான் - அலங்கரித்துக் கொண்டான். 110. அணுவும் - சிறிதும். 111. விரவா - கலக்காத (இல்லாத); மை இருள் - கரிய இரவு. 116. முன்னி - கருதி. 119. மற்றவள் - மற்றபடி அவள்; வனப்பு - அழகு. 121. நேர் - போன்ற. 122. அமர - விரும்ப. 124. கிடக்க - அது கிடக்கட்டும்.

இரவே யின்னுமா இருக்கின் றனை நீ!
விடிந்ததும் திருமணம் விரைவில் நடைபெறும்.
கடந்திடு ஒல்லே! கடிமணம் எமக்கு
முடிந்திடும் நாளை யிரவே முதலிரவு
கடுங்கதிர் தோன்றக் காத்திருக் கின்றது;
அடுமுனை விரைவில் அகலா யாயின்.
இப்போது வல்லே ஏகு!முத லிரவாம்
அப்போ தகலா தமர்ந்திடு நிலையாய்!
இப்போது ஞாயிற்றுக் கிடங்கொடு உடனே
என்று கெஞ்சி இரவை வேண்டினன்
துன்று மகிழ்வால் துள்ளித் தாண்டினன்.
ஒண்ணுதல் உருவம் தீட்டிய ஓவியந்
தன்னை மகிழ்வு ததும்பப் பார்ப்பான்;
நாளை நேரில் நங்கையைப் பார்க்குங்
காலை அழகைக் களித்துப் பருகலாம்
என்றே வியத்தை இடுவான் பைக்குள்;
ஒன்றும் ஆவல் உந்த மீண்டும்
ஓவியம் எடுத்ததை உவந்து நோக்குவான்;
காவியம் இவளெனக் கரைந்து புகழ்வான்.
இங்ஙனம் களித்திவன் இருக்க ஒருபால்;
மங்கையின் நிலைமை மற்று வருக:—

(அமராவதியை அணிசெய்தல்)

மணநாள் முன்னாள் இரவு மணமகள்
அமரா வதிதனக் கணிபெற நலங்கிட

---

127. ஒல்லே - விரைவாய். 128. முதல் இரவு - மணமக்கள் முதல் முதலாக உடல் உறவு கொள்ளும் இரவு. 129. கடுங்கதிர் - ஞாயிறு. 130. அடும் - அழிக்கும் 131. வல்லே - விரைவில். 132. முதலிரவின்போது நீங்காது நிலையாய் இருட்டாகவே தங்கிவிடு. 135. துன்று - மிகுந்த. 136. ஒண்ணுதல் - அமராவதி. 143. கரைந்து - உருகி. 145 மங்கை - அமராவதி; மற்று வருக - அடுத்ததாக வருவதாகுக. 147. நலங்கு - திருமணத்துக்கு முன் செய்யும் ஒருவகைச் சடங்கு.

ஒப்பனைக் கலைவல் லொருசில மகளிர்
செப்பமாய் ஒப்பனை செய்ய லாயினர்:
முகத்தில் மஞ்சள் முன்னர்ப் பூசினர்.
அகத்தை எவ்வா றழகு செய்வர்?
கரும்பாம்பு திங்களைக் கவிந்த தென்ன
கருங்குழல் முகத்தைக் கவிந்துகொண் டிருக்க,
பின்னே தொங்குங் கூந்தலைப் பின்னி
முன்னம் ஒருத்தி முதுகில் விட்டிட,
கரியகட் செவியைக் கலந்து வெள்ளை
அரவ மொன்றுநன் கணைத்திருந் தலைபோல்
வெள்ளை மலர்களைப் பின்னலாய் வீக்கிக்
கூந்தற் பின்னல்மேல் குயிற்றினள் ஒருத்தி ;
புற்றரவு கக்கிய பொன்மணி மான
நெற்றிச் சுட்டியை நீள விட்டனர்;
காரிருள் நடுவண் கதிர்விடு மின்னென
நேருற உச்சந் தலையில் நின்றிட
சீருறு வில்லை செவ்வனே செருகினர்.
அரை நிலா நடுவண் அமைந்த கறைபோல்
புரையிலா நெற்றியில் பொட்டு வைத்தனர் ;
அழகுக் கழகு செயல்போல் கரிய
விழிகளில் கருமை விளங்கத் தீட்டினர் ;
முந்திரிக் கொட்டைபோல் முன்னே சுடர்விட
மூக்குமேல் வைர மூக்குத்தி யிட்டனர் ;
மூக்குமே விட்டதால் மூக்கின் இடைச்சுவர்

---

148. ஒப்பனைக் கலை - அலங்காரக் கலை. 152. திங்கள் - சந்திரன். 153. கருங்குழல் - கரிய கூந்தல். 156-157. கட்செவி, அரவம் - பாம்பு. 158. வீக்கி - கட்டி; பின்னல் - சடை. 159. குயிற்றினள் - பதித்தாள். 160. புற்றரவு - புற்றுப் பாம்பு. 161. சுட்டி - ஓரணி. 164. வில்லை - வட்டமாக உள்ள ஓரணி. 165. அரை நிலா - பாதி நிலா (பிறை); கறை - களங்கம். 166. புரை - குறை. 168. கருமை - கரிய மை. 171. மூக்கின் இடைச் சுவர் - மூக்கின் இரு துளைகட் கிடையே தடுப்புச் சுவர் போல் இருக்கும் பகுதி.

மூக்குமேல் மிகுசினம் முந்தக் கொண்டு
நோக்கிப் பொருமையால் நொந்திடும் என்று
முத்துப் பிலாக்கினை மூக்கிடைச் சுவரில்
தொத்திக் கீழே தொங்கிடச் செய்தனர் ;
கண்கட் கணிகலன் கண்ணோட்ட மாப்போல்
வெண்பல் தம்மை விளக்கும் அணிகலன்
முத்தை எள்ளி முகிழ்க்கும் முறுவலே
என்று சொல்லி இனிதவை அடக்கினர் ;
இதழ்கள் வாளா இருக்குமா என்ன ?
இதழ்களில் செங்குழம்பு இன்னும் இட்டுப்
பவளத்தை வீணே பழிக்கச் செய்தனர் ;
கேட்டலே செவிகட் கணியெனக் கிளப்பின்
கேட்குமா செவிகள் ? கேளாச் செவிகளில்
தோடுகள் பதித்துத் தொங்கலும் கீழே
ஆடிடச் செய்தனர் ; அவற்றின் மேலே
மாட்டல் எனுமணி மாண நீட்டி
மாட்டியும் மாறாச் செவிகளில் மன்னக்
கொப்பும் பொவுடும் குறையிலாது கோத்தனர் ;
தோளிலும் மார்பிலும் தொய்யில் எழுதினர் ;
ஆரக் குடங்களில் ஆரச்சாந் தப்பினர் ;

---

172. உலகியலில், கோபிப்பவரை, மூக்குமேல் கோபத்தை வைத்துக்கொண்டிருக்கிறார் என்பது மரபு; அதுபோல், மூக்கின் இடைச்சுவர், மூக்குமேல் கோபம் கொண்டுள்ளது எனும் மரபுப் பொருளும், மூக்கின் மேல் பகுதியில் மூக்குத்தி யிட்டதால் அதன்மேல் கோபம் கொண்டுள்ளது என்னும் பொருளும் உள்ளமை காண்க. 174. பிலாக்கு-மூக்கிடைச் சு ரணி. 180. இதழ் - உதடு. 185. தோடு - காதணி; தொங்கல் - தொங்கட்டான் என்னும் அணி. 188. மாறு - மாண்பு பெறுத. 189. கொப்பு, பொவுடு - காதணி வகைகள். 190. தொய்யில் - கோலம். 191. ஆரக் குடங்கள் - சந்தன மரத்தால் செய்த குடம் போன்ற சிறப்புடைய முலைகள்; ஆரச் சாந்து - சந்தனச் சாந்து.

அடங்கா முலைகளை அடங்கச் செய்ய
இடங்கொள் கச்சினை இறுக்கிக் கட்டினர் ;
பூட்டுமேல் பூட்டு பூட்டுதல் போலப்
பூட்டிய கச்சுமேல் பூட்டினர் கஞ்சுகம் ;
பட்டாம் பூச்சிபோல் பளபளத்து மின்னும்
பட்டில் பொன்னிழை பதித்துக் கொடிமலர்
வண்ணம் பலவகை வாய்ந்த புடவையை
நண்ணுள் ளாடைமேல் நயப்பா யுடுத்தினர் ;
தலையையும் உடலையும் தக்க பாலமாய்
இணைக்குங் கழுத்தினை ஏமாற்ற வியலுமோ ?
கழுத்தில் அட்டிகை கவின்பெற அணிந்தனர் ;
மார்பிலும் மாலைக்கு மட்டே யில்லை ;
"கல்லாதான் சொற்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற் றற்று"என் பதுகுறள் ;
பெண்ணுக்கு எடுப்பினைப் பேணித் தந்திடும்
வண்ண முலைமேல் வகைவகை யான
மணிமா லைகளொடு மலர்மா லைகளும்
அணிபெற அமைத்தே அகமிக மகிழ்ந்தனர் ;
இல்லையோ உண்டோ இடையெனும் ஐயம்
இல்லையா மாறே இடுப்பில் மேகலையாம்
ஒட்டி யாணம் ஒட்டப் பூட்டினர் ;
அப்போ தங்கே அருகில் நின்ற
இடுப்பில் மடிப்பு விழுந்த ஒருத்தியைக்
காட்டி யிவட்கு மேகலை கட்ட

---

192. அடங்காமுலை - சட்டைக்குள் அடங்காத முலை ; அடங்கச் செய்தல் - கச்சால் கட்டி அடங்கச்செய்தல் ; திமிரை அடங்கச் செய் தல் என்னும் குறிப்பும் காண்க. 93. கச்சு - முலையைக் கட்டும் உள் சட்டை. 195. கஞ்சுகம் - கச்சுமேல் அணியும் மேல் சட்டை. 199. நண்ணுள்ளாடை - நண் உள் ஆடை - பொருந்திய உள் பாவாடை. 203. மட்டு - அளவு. 206. எடுப்பு - எடுப்பான தோற்றப் பொலிவு. 210. இடை - இடுப்பு. 212. ஒட்டியாணம் - இடுப்பு அணி.

ஐம்பது பொன்செல வாகும் என்றனர்; பின்னர்,
பகைவரை வெல்லும் படைஞர் தோள்களில்
வகைபெற அணிமற வலயம் போல
மலர்க்கணை தொடுக்கும் மாரனை வெல்ல
வேயுறு தோள்களில் வீக்கிய தைப்போல்
காயும் ஒளியுறு கடகம் பூட்டினர்;
வணக்கமும் வரவேற்பும் வருவிருந் தோம்பலும்
இணக்கமாய்ப் புரியும் இருகை தமக்குப்
பேசும் வாயாய்ப் பெருந்துணை புரியும்
மாசில் வண்ண வளையல் வகைபல
கலகலெனப் பேசக் கைகளில் மாட்டினர்;
மோதிர விரல்கள், மோதிர விரலெனும்
பேர்தான் பெரிய பேராம், ஆனால்
மோதிரம் இலையென முணுமுணுக்கா வாறு
மோதிர விரல்களில் முழுதும் மணிபொதி
கணையா ழிகளைக் கவினுறச் செருகினர்;
கலீர்கலீர் கலீரெனும் கல்லொலி, காளை
இளைஞரை விலக்க எச்சரிக்கு மாறு
வளைவுறு சிலம்புகள் வனிதையின் கால்களில்
ஒளிபெறப் பூட்டி உவகை யுற்றனர்;
முன்னர்ப் பூண்ட அணிகள் முழுதையும்
பின்னர்ப் பெயர்த்திவ் வாறு புத்தம்
புதிய கலங்களைப் பூட்டினர் பொலிவொடு;
சுமையால் கழுத்து சோர்வுறும் வண்ணம்

---

218. மறவலயம் - படை வீரர்கள் தோளில் அணிவது 219. மலர்க்கணை - காம மயக்கந்தரும் மலர் அம்பு: மாரன் - மன்மதன் 220. வேயுறு - மூங்கில் போன்ற; வீக்குதல் - கட்டுதல். 221. காயும் ஒளி - வீசுகின்ற ஒளி; கடகம் - தோள் அணி. 222-226. வரும் விருந்தினரிடம் பேச முடியாத கைகள் பேசுவது போல வளையல்கள் ஒலி செய்து, கைகட்குப் பேசும் வாயாய் உள்ளனவாம். 230. மணி பொதி - ஒன்பது மணிகளும் பதித்த. 231. கணையாழி - மோதிரம். 232. கல்லொலி - சிலம்புக்குள் உள்ள பரல்கற்களின் ஓசை.

அமைவாய்க் கூந்தலில் அடர்மலர் செருகினர்;
இன்னும் எல்லாம் இனிது முடித்துக்
கன்னம் தடவிக் கண்ணேறு முரித்தனர்.
திருமண மகிழ்ச்சியால் திருமகள் உடம்பு
பெருமளவு பருத்துப் பெரியதாய் விட்டதால்
அணிகள் இறுக்கம் ஆயின என்று
துணிவுடன் ஒருத்தி சொல்ல, தோழியர்
நனிமிக நகைக்க, நாணங் கொண்ட
மணமகள் உதட்டில் மலர்ந்தது புன்னகை.
அணிகள் யாவும் அமரா வதிக்குநல்
லணிசெய் திலவே; அவளை அடைந்ததால்
அணிகளே முற்றும் அணிபெற் றனவே!
மேனி மினுங்க மேளதா ளத்தொடு
மானேர் விழியர் மங்கையர் பல்லோர்
அமரா வதிதனக் கழகாய் நலங்கிடும்
மரபினைத் தொடங்கி மகிழ்ந்து நடத்தினர்.
நலங்கிடும் போது நங்கை யொருத்தி
இலங்கிடு மணமகளை இன்புடன் நோக்கி,
பல்லாண்டு காலம் பாரில் வாழ்க!
நில்லா உலகில் நின்பெயர் நிற்க!
உன்றன் இல்வாழ்க்கை உயர்வு பெறுக!
என்று வாழ்த்த, இன்னொரு மங்கை,
நில்லா உலகில் பெயர்நிற்க என்பது
உயிர்நில்லா விடினும் உன்பெயர் நிலைக்கும்
என்று பொருள்படும், இதுநன் றில்லை;

---

240. அடர் மலர் - பூக்கற்றை. 242. கண்ணேறு - கண் திருஷ்டி; கண்ணேறு முரித்தல் - வயதான ஒருத்தி தன் இரு கைகளால் அமராவதியின் இரு கன்னங்களையும் தடவி, அந்தக் கைகளைத் தன் இரு கன்னங்களிலும், மடித்து வைத்து, ஒலி உண்டாகுமாறு விரல்களை இரட்டை முரித்தல்; இவ்வாறு செய்தால் கண்ணேறு கழியுமாம். 243. திருமகள் - அமராவதி. 251. அணி பெற்றன - அழகு பெற்றன. 253. மானேர் - மான் நேர் - மான்விழியை ஒத்த. 257. இலங்கிடு - அழகு விளங்குகின்ற. 259. நில்லா உலகு - நிலையில்லாத உலகம்.

‘இல் வாழ்க்கை’ என்பது ‘இல்லா வாழ்க்கை’
என்னும் பொருளையும் ஈயு மாதலின்
இன்னும் இவ்வா றியம்பா தேயெனச்
சொன்னபின் ஆமெனச் சொற்றனர் மற்றவர்;
முன்னிய செயலெலாம் முடித்தபின், ஒருத்தி,
கடிமணம் ஆனபின் காதலற் சேர்வாய்
அடிமையாம் எமையினி அறவே பிரிவாய்;
மணமகன் பெற்ற மாதவம் எமக்கிலை
எனக்கூ றியதை ஏற்கா தவள்போல்
அமரா வதிதலை யசைக்க, அனைவரும்
உண்டி கொண்டே உறங்கப் போயினர்.
பெண்டிர் அகன்றபின் பேதுற் றமராவதி
கள்ளக் காப்பறை புக்குக் கதவினை
மெள்ளக் காப்பிட்டு, மேனியில் பூட்டிய
ஒள்ளிய பூணெலாம் உதறி எறிந்தாள்.
அம்பிகாபதி கொலையுண் டழிந்த பின்னர்
அமராவதி கோயிலின் அகலலாம் என்றே
மன்னர் ஐயம் மனத்துள் கொண்டு
கன்னி மாடக் காவலை முடுக்கிட
இரியும் காலம் எதிர்பார்த் திருக்கையில்
வரையும் செய்தி வரவே மணக்க
இசையின் ஐயம் இராமே யாவரும்
அசைவின்றி வேலையில் ஆழ்வர் அஞ்ஞான்று

---

267. இன்னும் இனியும், இனிமேலும். 268. சொற்றனர் - சொன்னார்கள். 269. முன்னிய செயலெலாம் - செய்யக் கருதிய சடங்குகள் யாவும். 270. காதலற் - காதலன் - காதலனை, கணவனை. 271. அறவே பிரிவாய் - நாளையிலிருந்து முற்றும் பிரிந்து விடுவாய். 275. உண்டி - உணவு. 276. பேதுற்று - மதி மயங்கி. 278. காப்பு இட்டு - தாழ்ப்பாள் போட்டு. 279. ஒள்ளிய - ஒளி வீசுகின்ற; பூண் எலாம் - அணிகள் எல்லாவற்றையும். 281. கோயிலின் - அரண்மனையினின்றும். 284. இரியும் காலம் - பிரிந்து ஓடும் காலத்தை. 285. வரையும் செய்தி - திருமணச் செய்தி; வரைதல் - மணத்தல். 287. அசைவு இன்றி - சோர்வு இல்லாமல்; வேலையில் - திருமண வேலையில்.

அரண்மனை விட்டே அகலலாம் என்றே
திறன்மிகத் தீட்டிய திட்டப் படியே
அரண்மனை நீத்தே அகல லானுள் :
காப்பறை யினின்று கடிநகர் வெளியே
காப்பொடு செல்லக் கள்ளச் சுருங்கை
வழியொன் றுள்ளதவ் வழியாய் விளக்கு
வழிகாட்டச் சென்றவ் வழியைக் கடந்து
வெளியே போந்து விளக்கொடு நிலவின்
துணைகொடு, அம்பியின் அடக்கம் துன்னியம்
மனையில் நாட்டிய மறக்கல் மீதே
அம்பிகா பதிபெயர் பொறித்துள அடையாளம்
நம்பச் செய்யவந் நடுகலைத் தழுவி
வெம்பி வெதும்பி விம்மிப் புலம்புவாள்:

(1) "அம்பிகாபதி கோவையீந்த அண்ணலே அமுதே
அந்தமிழை வளர்த்திட்ட அறிஞ ரேறே!
கம்பரென்ன படுவாரோ கலங்கு வாரோ
கனிவுடைய நுந்தாயார் கதறு வாரோ!
உம்பருல கடைந்திட்ட உயர்ந்த தேவே
உமைப்பிரிந்தும் உண்டுகளித் துயிர்வாழ் வேனே!
நம்பியுமைக் கொன்றகுற்றம் நானே ஏற்பேன்
நமனுய்வந் துமைமுடித்தேன் நானுய் வேனோ?"

---

290. நீத்து - துறந்து, பிரிந்து. 292. காப்பொடு - பாதுகாப்போடு. சுருங்கை வழி - சுரங்க வழி. 296. துணைகொடு - துணைக் கொண்டு; அடக்கம் - சமாதி; துன்னி - அடைந்து: துன்னியம் - துன்னி அம் - துன்னி அந்த 297. மனை - சமாதியுள்ள நிலப் பகுதி; மறக்கல் - இறந்தவரின் அடக்கத்தின்மேல் நடும் வீர நடுகல். 298. நடு கல்லில். இறந்தவரின் பெயரைப் பொறித்து வைப்பது மரபு. 301. அம்பிகாபதி கோவை - அம்பிகாபதி இயற்றிய ஓர் அகப்பொருள் நூல். 304. நம்பி - ஆண்மக்களுட் சிறந்தவன்; நமன் - எமன்.

(2) "இன்றுமுழு நிலாநாளாம் எங்கே யுள்ளீர்?
எங்ஙனம்யான் உமையடைவேன் இயம்பு வீரோ?
சென்றமுழு நிலாநாளில் சேர்ந்தி ருந்தோம்
சென்றிடுவீர் எனைவிட்டெனச் சிறிதும் தேரேன்
அன்றுசொன்னீர் நாம்பிரிந்திட் டகல மாட்டோம்
அன்றில்போல் இணைபிரியா தணைவோம் என்றே!
ஒன்றியநல் லுயிர்பிரிந்த உடல தானேன்
ஒருபிறவி யிலுமெனக்கே உய்வே யில்லை."

(3) "கோவலனைக் கண்ணகியைக் குறிப்பிட் டொப்பு
கூறிட்டீர் உடனேயான் குறுக்கிட் டுரைத்தேன்:
கோவலனும் கண்ணகியும் குறையக வையிலே
கூற்றுவனால் கொலப்பட்டுக் கூடா தொழிந்தார்;
நாவதனால் அவர்தம்மை நமக்கொப் பாக
நவிலவேண்டா என்றுமக்கு நன்கு சொன்னேன்;
காவதனில் பேசிட்ட காட்சி என்றன்
கண்முன்னே நின்றிடவே கலங்கு கின்றேன்."

(4) "அந்தமுழு நிலாநாளில் ஆருயிர்த் தந்தை
அருபறம்பு மலையினிலே அமர்ந்தி ருந்தார்
இந்தமுழு நிலாநாளில் எந்தையும் மலையும்
இழந்துவிட்டோம் என்செய்வோம் என்று கூறி
நொந்தபாரி மகளிர்கதை நுணுகித் தேர்ந்து
நுவன்றிட்டீர் அப்போதே நொந்து கொண்டேன்
இந்தவரு மகளிர்போல் எனது வாழ்வும்
இன்னலுக்குள் ளாகிடுமோ என்றை யுற்றே."

(5) "அடுத்தமுழு நிலாநாளில் அரண்மனை விட்டே
அகன்றிடுவாய் ஐயமில்லை; அதற்குப் பின்பியான்
அடுத்திடுநல் லிடம்நீயும் அடைவா யென்றே
அன்றங்கே என்னிடம்நீர் அறைந்த போது

305. முழுநிலா நாள் - பௌர்ணமி நாள். 306. தேரேன் - அறியேன். 310. குறை அகவை - குறை வயது. 312. காவதனில் - சோலையில். 316. இன்னல் - துன்பம். 318. அன்று அங்கே - அன்றிரவு அச்சோலையில்.

விடுத்திடுமிவ் வுரையின்பொருள் விளங்ககில்லேன்
 விரித்துரைப்பீர் என்றேயான் வினவிய காலை,
எடுத்துரைத்தீர் மணந்திடுவோம் என்ற செய்தி;
 இந்தமுழு நிலாநாளில் இணைந்தே விட்டேன்.''

(வேறு)

(6) ''அருந்தினிய பாவமிழ்தம் ஆக்கிடுநல்
 லங்கை எங்கே?
விருந்தளிதத போதுகவி விருந்தளித்த
 வியன்வா யெங்கே?
இருந்தினிய முத்தங்கள் ஈந்திடுநல்
 லிதழ்கள் எங்கே?
பொருந்திடவே இறுகணைத்துப் புல்லியவன்
 பொன்மார் பெங்கே?''

(7) ''உள்ளிருந்திங் கெழுந்துவர ஒல்லாதோ
 ஒருசொல் கூறீர்?
பள்ளுப்பா யாழ்மீட்டிப் பாடிட்வா
 பகரும் வந்தே!
கள்ளிருக்கும் மலர்துறந்தேன் கதறுவது
 காதில் விழுமா?
எள்ளருபன் முத்தங்கள் ஈந்திடுவேன்
 எழுந்து வாரீர்!''

---

319. விடுத்திடும் - சொல்லுகின்ற. 321. அருந்தினிய - அருந்த இனிய (அ - தொகுத்தல் விகாரம்); பா அமிழ்தம் - பாட்டாகிய அமிழ்து. 322. கவி விருந்து - பாட்டாகிய விருந்து. 323. இதழ்கள் - உதடுகள். 324. இறுகணைத்து - இறுக அணைத்து; புல்லிய - தழுவிய; வன் - வலிமையுள்ள; பொன் மார்பு - அழகிய மார்பு. 325. ஒல்லாதோ - முடியாதோ? 326. பள்ளுப்பா - பள்ளு என்னும் ஒரு வகை நூல் பாட்டு; பகரும் - சொல்வீராக. 327. கள் - தேன். 328. எள்ள அருபன் - இகழ வியலாத பல (இனிமையான பல).

(வேறு)

(8) “என்னகுற்றம் செய்தேனியான் ஏனிந்த வாளாமை
எழுந்து கூறீர்!
மன்னர்மகள் எனுங்கசப்பா? மற்றென்னை நினைவினின்று
மறந்திட் டீரோ?
கன்னித்தமி ழில்பேசிக் கலந்திங்கே களித்திடவே
கடிய வாரீர்!
இன்னுந்தமிழ்ப் பணிகளுள இயற்றிட்டே வளர்த்தபின்னர்
ஏகு வோமே!”

(9) “செல்வர்தாம் வறியவரை சேரவொட்டார் எனுஞ்செய்தி
செவ்வ னறிந்தோம்
கொல்வதவர் குறி,மணந்து கொள்ளவரும் ஏழையரைக்
கொலையொ றுப்பால்;
சொல்வதுதான் பொதுவுடைமை சொந்தவாழ்வில் [வரும்போது
சோர்ந்து போவார்
வெல்வதெவ்வா றின்னவரை வெறும்பேச்சால் [இயன்றிடுமோ?
வெல்வது புரட்சியே!”

(வேறு)

(10) “உலகம் எம்கதை உணர்ந்து சால
உற்று ராய்ந்து
கலகம் இன்றிக் காதல் கொள்ளக்
கற்றுக் கொள்க!
அலகாய்க் காதல் அகத்தில் மட்டும்
அரும்ப வேண்டும்;
மலரைப் போல மணந்த பின்பே
மலர்தல் நன்றே.”

---

329 வாளாமை-பேசாமை (மௌனம்). 331. கடிய-விரைந்து. 333. செவ்வன் - நன்றாக. 334. குறி - குறிக்கோள்; கொலை ஒறுப்பு - கொலைத் தண்டனை. 339. அலகாய் - அளவாய்; அகத்தில்- மனத்தில்.

என்றெலாம் பிதற்றி ஏங்கி நைந்து
துன்றிய காதலரைத் தொடர எண்ணிக்
கொண்டு வந்த கொடிய நஞ்சை
உண்டிப் பொல்லா உலகை நீத்து,
தணந்தவர் உயிரைத் தன்னுயிர் மணக்க
அணைந்த கலைஇல ஆருடல் மணக்க
இணைந்தனள் இவ்வணம் இனியகா தலரொடு.
வீடுபே றெனவே விளம்பப் பெற்றிடும்
ஈடிலா ஒருபே றிருப்ப துண்டேல்,
அம்பிகா பதியும் அமரா வதியும்
இந்த உலகைவிட் டேகிய பின்னர்
அந்த வீடுபே றடைதல் உறுதியே!

(வாழ்த்து வெண்பா)

"சுந்தர சண்முகனின் சொல்லோ வியமான
செந்தமிழ் நன்னூலாம் சீரம் பிகாபதி
காதல் விளக்கிடும் காப்பியம் இன்பமாய்
ஓதுவோர் வாழ்க உயர்ந்து."

---

344. உண்டிப் பொல்லா - உண்டு இ பொல்லா - சாப்பிட்டு இந்தப் பொல்லாத; நீத்து - விட்டு நீங்கி. 345. தணந்தவர் - பிரிந்த காதலர், அம்பிகாபதி; மணக்க - கூட, சேர. "மணத்தல் கூடுதல்" என்பது சேந்தன் திவாகர நிகண்டு நூற்பா. 346. ஆருடல் - அரிய உடம்பு. 348. வீடு பேறு - மோட்சம் அடையும் பேறு. 349. பேறு - பாக்கியம்.

சொல்லோவியமான காப்பியம் - நன்னூலாம் காப்பியம் - அம்பிகாபதி காதல் விளக்கிடும் காப்பியம். 1. சொல் ஓவியம் - சொற்களால் வரைந்த சித்திரம். 2. நன்னூல் - நல்ல நூல். 4. ஓதுவோர் - கற்பவர்.